# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - ஜூலை 2021

**www.tnpscthervupettagam.com**












SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ........ 14
தமிழ்நாடு செய்திகள் ........ 24
தமிழ்நாடு காவல்துறையின் புதிய மற்றும் 30வது தலைமை இயக்குநர் (DGP) ........ 24
S. பீட்டர் அல்போன்ஸ் ........ 24
கூடங்குளம் – 5வது ஆற்றல் அலகு ........ 25
மாரியப்பன் தங்கவேலு – தேசியக் கொடியை ஏந்தி அணியை வழி நடத்தும் வீரர் ........ 25
காவல் துறையின் தலைமை இயக்குநரைத் தேர்வு செய்யும் முறை (தமிழ்நாடு) ........ 26
யானைகளின் வாழ்விடங்களை மேம்படுத்த புல்வெளிகள் மற்றும் மரங்கள் உள்ள பகுதிகளை அடையாளம் காணுதல் ........ 26
டோக்கியோ ஒலிம்பிக்ஸ் – தமிழக வீரர்கள் ........ 26
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் ........ 27
பயோனிச்சியரஸ் தமிழியன்சிஸ் ........ 27
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – புதிய உறுப்பினர்கள் ........ 28
களிமண் (டெரகோட்டா) கொள்கலன் – கீழடி ........ 28
நீரிழிவு மற்றும் ரத்த அழுத்தம் போன்றவற்றால் ஏற்படும் இறப்பைத் தடுக்க வீடு தேடி மருத்துவ வசதி வழங்கும் திட்டம் – தமிழ்நாடு ........ 28
AK. ராஜன் குழு அறிக்கை ........ 29
பாரதியார் பல்கலைக்கழகம் – இரண்டு காப்புரிமைகள் ........ 29
ஓலா ஸ்கூட்டர் தொழிற்சாலை – கிருஷ்ணகிரி ........ 30
2,300 ஆண்டுகள் பழமையான படிக்கிணறு ........ 30
ஃபேர்டிரேடு சான்றிதழ் – இன்ட்கோசெர்வ், நீல்கிரிஸ் ........ 31
28 கோடி மரக்கன்றுகள் ........ 31
மார்க்கண்டேய நதியின் குறுக்கே அணை ........ 32
தமிழ் வழியில் பயின்ற மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு ........ 32
தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணையம் ........ 33
ஹூண்டாய் நிறுவனத்தில் 1 கோடி மகிழுந்து உற்பத்தி ........ 33
ஜெர்மனியிலுள்ள கொலோன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை ........ 33
நிலைப்படுத்தப்பட்ட தொலைக் கட்டுப்பாட்டுத் துப்பாக்கி ........ 34
நீதிபதி முருகேசன் குழு ........ 34
அண்ணாமலை பல்கலைக்கழகம் ........ 35
முதலீட்டாளர்களின் முதல் முகவரி – முதலீட்டு மாநாடு ........ 35
வயலின் இசைக் கலைஞர் சிக்கல் R. பாஸ்கரன் ........ 36
கொற்கையில் துளையிடப்பட்ட சுடுமண் குழாய்கள் கண்டுபிடிப்பு ........ 37
நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிப்பதற்காக தனி நபர் மசோதா மாநிலங்களவையில் அறிமுகம் ........ 37
2500 ஆண்டுகள் பழமை வாய்ந்த வாள் மற்றும் மண்பானை ........ 37

சுபா வெங்கடேசன் மற்றும் தனலட்சுமி ஆகியோருக்கு அரசுப் பணி ........ 38
சுந்தரதேவன் குழு ........ 38
மைசூர் மற்றும் சென்னைக்கு இடையேயான 1892 ஒப்பந்தம் ........ 38
தேசியச் செய்திகள் ........ 39
சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் புதிய வரையறை ........ 39
தலைமை வழக்குரைஞர் K.K. வேணுகோபால் பதவிக் காலம் நீட்டிப்பு ........ 39
நாஷா முக்த் பாரத் அபியான் ........ 40
மத்தியப் புலனாய்வு அமைப்பு – புதிய சிறப்பு இயக்குநர் ........ 40
‘ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை’ திட்டம் ........ 40
மாடர்னா நிறுவனத்தின் கோவிட்-19 தடுப்பு மருந்து ........ 40
பனிப்பாறை ஏரிகளின் வரைபடம் ........ 41
சிபு லால் குழு ........ 42
‘Anomalies in Law and Justice’ – புத்தகம் ........ 42
மும்பை சமாச்சார் – 200வது ஆண்டு ........ 43
NATRAX – இந்தூர் ........ 43
இந்திரஜால் ........ 44
பசுமை சரக்கு வழித்தடம் – 2 – முதல் பயணம் ........ 44
உடல் பருமனைத் தடுப்பது குறித்த தேசிய மாநாடு – நிதி ஆயோக் ........ 44
பயிர் காப்பீட்டு விழிப்புணர்வுப் பிரச்சாரம் ........ 44
தொழில்துறை ஆராய்ச்சி ஈடுபாட்டு முன்னெடுப்பிற்கான நிதி ........ 45
புத்தாக்க ஊக்குவிப்பு நிறுவனம் – 2021 ........ 45
இந்தியப் பெருங்கடல் கடற்படைக் கருத்தரங்கம் ........ 46
UDISE + அறிக்கை ........ 46
முதல் ஆளில்லா விண்கலம் – இஸ்ரோ ........ 47
இந்தியா மற்றும் நீர்மின் நிலையத் திட்டங்கள் – 2030 ........ 47
அம்பேத்கர் நினைவு மற்றும் கலாச்சார மையம் ........ 48
மியாசாகி மாம்பழம் ........ 48
NIPUN பாரத் முன்னெடுப்பு ........ 48
தர்பார் முறைக்கு முடிவு ........ 49
நிலக்கரி உற்பத்தி – இந்தியா ........ 50
CoWin உலக மாநாடு ........ 50
புதிய ஆளுநர்கள் ........ 50
BOLD திட்டம் ........ 51
டிஜிட்டல் வர்த்தகத்திற்கான பரவலான பிணைய அமைப்பு ........ 51
மத்சய சேது செயலி ........ 52
அமைச்சரவை விரிவாக்கம் ........ 53
UPI அடிப்படையிலான வாகன நிறுத்த வசதி ........ 53
மத்திய நிதி அமைச்சகத்தின் கீழ் பொது நிறுவனங்கள் துறை ........ 54
ஆயுதப் பரிசோதனைத் தளம் - வித்யா பாலன் பெயர் ........ 54

**mRNA தடுப்பு மருந்து தொழில்நுட்பம் ........ 55**
**மோசடி ரீதியிலான குறுஞ்செய்திகள் மீதான அபராதம் ........ 55**
**மாம்பழ ராஜ தந்திரம் ........ 56**
**ஐ.என்.எஸ். தாபர் ........ 56**
**பாலியா கோதுமை ........ 56**
**GUAREX மற்றும் SOYDEX ........ 57**
**பிரையம் பாரதியென்சிஸ் ........ 58**
**ஸ்டோலிஸ்கியா வான்ஹுஊயிலியானாய் (Stoliczkia vanhnuailianai) ........ 58**
**கருஞ்சிறுத்தை ........ 59**
**சனோஃபி மற்றும் GSK – ஒப்புதல் ........ 59**
**"The Light of Asia – புத்தகம்" ........ 59**
**NISHTHA திட்டம் – ஜம்மு & காஷ்மீர் முதலிடம் ........ 60**
**ஜிகா வைரஸ் ........ 60**
**ஒருங்கிணைந்த கருப்பு கார்பன் வளாகம் ........ 61**
**காதி – வர்த்தகக் குறியீடு ........ 61**
**"The Ramayana of Shri Guru Gobind Singh Ji" – புத்தகம் ........ 62**
**இந்தியாவிற்கு ஆப்பிள் ஏற்றுமதி ........ 62**
**2வது வருடாந்திர மின்னல் அறிக்கை ........ 62**
**தேசிய ஓங்கில் ஆராய்ச்சி மையம் ........ 63**
**முதலாவது பசுமை ஹைட்ரஜன் இயங்கு திறன் திட்டம் ........ 63**
**பங்கபந்து இருக்கை ........ 64**
**வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் – ஜியார்ஜியா ........ 64**
**ஆப்கானிஸ்தானிலிருந்து இந்திய தூதரக அதிகாரிகள் வெளியேற்றம் ........ 65**
**ஃபசில் மாம்பழம் ........ 65**
**10வது P-8I ரக போர் விமானம் – போயிங் ........ 65**
**தேசிய ஆயுஷ் திட்டம் நீட்டிப்பு ........ 65**
**நிலக்கரி (Coking coal) மீதான புரிந்துணர்வு ஒப்பந்தம் – இந்தியா மற்றும் ரஷ்யா ........ 66**
**மாநிலங்களவைத் தலைவர் – பியூஷ் கோயல் ........ 67**
**இரயில் தண்டவாளத்தின் மேலே அமைந்த இந்தியாவின் முதல் 5 நட்சத்திர தங்கும் விடுதி ........ 67**
**இந்தியாவின் மிகப்பெரிய சூரிய சக்திப் பூங்கா – NTPC ........ 67**
**டோக்கியோ ஒலிம்பிக்ஸ் ஊக்கப்படுத்தும் பாடல் ........ 68**
**நாட்டின் முதல் தானிய ஏடிஎம் ........ 68**
**தேசியத் தடய அறிவியல் பல்கலைக்கழகம் ........ 69**
**தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 66A பிரிவின் கீழான முதல் தகவல் அறிக்கை ........ 69**
**லடாக் மற்றும் சிக்கிம் – புரிந்துணர்வு ஒப்பந்தம் ........ 70**
**UV – C தொழில்நுட்பம் ........ 70**
**மாவட்ட கனிம நிதி ........ 70**
**சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் மாநாட்டு மையம் ........ 71**
**மைன்வாக் நிறுவனத்தின் தடுப்பூசி ........ 71**

இந்தியாவின் முதல் பாட் டாக்சி சேவை ........ 72
இமாலய மலை எருதுகள் – காப்பீடு ........ 73
MH – 60R பல்பயன்பாட்டு ஹெலிகாப்டர்கள் ........ 73
கோவிஹோம் ........ 74
கிருஷ்ணா மற்றும் கோதாவரி நதி வாரியங்களின் அதிகார வரம்பு அறிவிப்பு ........ 74
கோவிட் டீக்கா சங் சுரக்சித் வன் தன் அவுர் உத்யம் ........ 74
இந்தியா – நேபாளம் நட்புறவு இரயில் பாதைத் திட்டம் ........ 75
NB Driver ........ 75
கிசான் சாரதி ........ 76
கூகுளின் புதிய மேகக் கணிமைப் பகுதி ........ 76
TTX – 2021 ........ 77
சிறந்த தேசிய தளவாடங்கள் விருது ........ 77
சமத்துவமின்மை அறிக்கை 2021 : இந்தியாவின் சமத்துவமற்ற சுகாதார நலத்தின் கதை ........ 77
பிளாக்செயின் தொழில்நுட்பம் – சான்றிதழ்கள் ........ 78
இந்தியப் பாரம்பரியக் கல்வி நிறுவனம் ........ 79
பள்ளிப் புதுமை தூதர் பயிற்சி திட்டம் ........ 79
பிணை ஆணைகளின் பாதுகாப்பான டிஜிட்டல் பரிமாற்றம் ........ 79
புதிய அமைச்சரவைக் குழுக்கள் ........ 80
NEIFM பெயர் மாற்றம் ........ 81
ஆபரேஷன் சாகர் ஆராக்சா II ........ 81
தொலைதூரச் சட்ட திட்டம் ........ 82
கலா விஸ்வா ........ 82
ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் ........ 82
கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்□□□□ □□□□□□□□□ ........ 83
97வது அரசியலமைப்புத் திருத்தம் குறித்து உச்ச நீதிமன்றம் ........ 84
விரைவான விசாரணை ........ 84
தேசியப் பாதுகாப்புச் சட்டம், 1980 ........ 85
SMILE திட்டம் ........ 85
வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகர்ப்புற இயற்கை அமைப்புத் திட்டம் ........ 85
H5N1 பறவைக் காய்ச்சல் ........ 86
உலக சுகாதார அமைப்பின் GMP/COPP சான்றிதழ் ........ 86
கமன் அமன் சேது ........ 87
புதிய ஆகாஷ் ஏவுகணை ........ 87
இயற்கைக் குறியீடு ........ 88
SKOCH விருது ........ 88
உலகப் பல்கலைக்கழகங்களின் உச்சி மாநாடு ........ 88
பால்பொருள் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு ........ 89
CAVACH திட்டம் ........ 89
ஆளில்லா விமான எதிர்ப்புத் தொழில்நுட்பங்களுக்கான தீர்வு ........ 90

‘இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களின் ஒருங்கிணைப்பு’ அறிக்கை ..... 90
எரிசக்தி தீவு அமைத்தல் ..... 90
ARMEX – 21 ..... 91
மாநிலங்களவை உறுப்பினர் இடைநீக்கம் ..... 91
வர்த்தக வசதி வழங்குதல் குறித்த மதிப்பீட்டு ஆய்வு – இந்தியா ..... 91
10 முன்னணி வேளாண் பொருள் ஏற்றுமதி நாடுகள் பட்டியலில் இந்தியா ..... 92
தோலாவீரா மற்றும் ராமப்பா ஆலயம் ..... 93
அசாம்-மிசோரம் எல்லைப் பிரச்சினை ..... 94
வாக்களிப்பு குறித்த ரகசியம் காத்தல் ..... 95
குஜராத்தின் கண்ட்லா – முதலாவது பசுமை சிறப்புப் பொருளாதார மண்டலம் ..... 96
தேசிய உணவுத் தொழில்நுட்பக் கல்விநிறுவனங்கள் மசோதா ..... 96
கட்லாஸ் எக்ஸ்பிரஸ் 2021 ..... 96
போல்டு திட்டம் – KVIC மற்றும் BSF ..... 97
உயிரோவியப் படம், காட்சிப் பதிவு முறைகள், விளையாட்டுச் செயலி மற்றும் நகைச்சுவை ஆகியவற்றிற்கான மையம் ..... 97
உயிரி வளங்கள் மற்றும் நிலையான மேம்பாட்டு மையம் ..... 97
இந்தியாவில் சைக்கிள் ஓட்டுதலில் முன்னோடியாக திகழும் 11 நகரங்கள் ..... 98
சர்வதேசச் செய்திகள் ..... 98
இன நீதி மற்றும் சமத்துவம் குறித்த அறிக்கை ..... 98
உலக கைபேசி மாநாடு ..... 98
உலகின் மிகப்பெரிய இணைய சங்கேதப் பணப் பரிவர்த்தனைக்குத் தடை – ஐக்கிய ராஜ்ஜியம் ..... 99
டெல்டா பகுதிகளை பாதுகாப்பதற்கான கணினி மாதிரிகள் ..... 100
ஐரோப்பிய ஒன்றியம் – பச்சை நிற அனுமதிச் சீட்டு ..... 100
சர்வதேச தொழிலாளர் அமைப்பின் புதிய தலைமை ..... 101
சர்வதேச சுற்றுலா குறித்த ஐ.நா அறிக்கை ..... 101
உலகளாவிய தொடக்க நிறுவனங்கள் சூழல் குறியீடு – 2021 ..... 102
ஸ்டார்லிங்க் – உலகளாவிய இணையச் சேவை ..... 103
மலேரியா அற்ற சீனா ..... 103
உலகளாவிய இணையவழிப் பாதுகாப்புக் குறியீடு ..... 104
இணையவழி திறன்கள் மற்றும் தேசிய திறன் அறிக்கை ..... 104
சர்வதேச புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் குறித்த அறிக்கை ..... 105
பழங்குடி மக்களின் உணவுமுறை குறித்த அறிக்கை ..... 105
பக்ராம் விமானப்படைத் தளம் - அமெரிக்க இராணுவம் ..... 106
சீன விண்வெளி வீரர்களின் முதல் விண்வெளிப் பயணம் ..... 106
எல்சா புயல் ..... 106
இஸ்தான்புல் உடன்படிக்கை – துருக்கி விலகல் ..... 106
சிறார் படை வீரர்கள் தடுப்புச் சட்டம் ..... 107
தால் எரிமலை ..... 107
மனிதர்களை கடத்துதல் குறித்த அறிக்கை 2021 ..... 108

உலகின் மிக உயரமான மணற்கோட்டை ........ 108
ஜோவெனல் மோயிஸ் ........ 109
வேளாண் கண்ணோட்ட அறிக்கை ........ 109
பசி எனும் வைரசின் பெருக்கம் குறித்த அறிக்கை – ஆக்ஸ்ஃபாம் ........ 110
நிலையான மேம்பாட்டு இலக்குகள் அறிக்கை 2021 ........ 110
அண்டார்டிக் உருகுநீர் ஏரிகள் ........ 112
விர்ஜின் கேலக்டிக் ராக்கெட் விமானம் – ரிச்சர்ட் பிரான்சன் ........ 112
உலகின் முதலாவது கோவிட்-19 இணைத் தடுப்பு மருந்து ........ 113
புளூ ஆரிஜின் விண்வெளிப் பயணத்திற்கு அமெரிக்கா ஒப்புதல் ........ 113
சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் சந்திப்பு – முக்கியத் தகவல்கள் ........ 114
உலகின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை – 2021 ........ 114
ஆழமான நீச்சல் குளம் – துபாய் ........ 116
G20 நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் சந்திப்பு ........ 116
உலகின் மிகச்சிறியப் பசு மாடு ........ 116
அருண் நதியின் தாழ்மட்டப் பகுதியில் அமைந்த நீர்மின் நிலையம் ........ 117
BP நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கை ........ 117
'Fit for 55' சட்டம் ........ 118
குழந்தைகளுக்கான தடுப்பு மருந்து வழங்குதல் குறித்த தரவு ........ 118
மிதக்கும் சூரியத் தகடு ஆற்றல் நிலையம் ........ 118
குரங்கம்மை நோய் ........ 119
OECD-FAO பருப்புகள் குறித்த கண்ணோட்ட அறிக்கை 2021 – 2030 ........ 119
நாற்கர அரசு முறைமை தளம் ........ 119
"The India Story" – புத்தகம் ........ 120
சிர்கான் ........ 120
இந்தியா – 5வது மிகப்பெரிய அந்நியச் செலாவணி இருப்பு ........ 121
திறன்பேசி தயாரிப்பாளர் ........ 121
கோவாக்ஸ் - இந்தியா ........ 122
சர்வதேச நிதிக் கழகம் ........ 122
உலகின் முதல் கார்பன் வரம்பு வரி ........ 122
சர்வதேச வான்வழிப் போக்குவரத்துச் சங்க விவகாரங்கள் ........ 123
சிரியாவில் அசாத் ........ 123
சீ பிரேக்கர் - இஸ்ரேல் ........ 124
EAGLE சட்டம் – அமெரிக்கா ........ 124
மத்திய-தெற்காசியா மாநாடு ........ 125
MAKS 2021 வானியல் சாகசம் ........ 125
யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளங்கள் - பட்டியலில் இருந்து நீக்கம் ........ 126
தாய்வான் எனும் பெயரைப் பயன்படுத்துதல் ........ 126
மெகாங் – கங்கை ஒத்துழைப்பு அமைப்பு ........ 127
திபெத்திய பனிப்பாறைகளில் பண்டையகால வைரசுகள் ........ 127

கேடட் உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி 2021 ..... 128
ஐக்கிய ராஜ்ஜியத்துடனான கடற்படைப் பயிற்சி ..... 128
தடுப்பு மருந்து உற்பத்தி ..... 128
மேக விதைப்பு – ஐக்கிய அரபு அமீரகம் ..... 129
நீரில் மூழ்குதலைத் தடுத்தல் குறித்த அறிக்கை ..... 129
உலகின் முதலாவது தூய்மையான அணு உலை ..... 130
தங்க அரிசி ..... 130
2008 GO20 குறுங்கோள் ..... 131
‘அனைவருக்குமான பார்வைத் திறன்’ - ஐக்கிய நாடுகள் அவை ..... 131
புதிய செயலிகள் – வங்காள தேசம் ..... 132
மாட்ரிட் நகரின் பேசியோ டெல் பிராடோ மற்றும் ரெட்டிரோ பூங்கா – உலகப் பாரம்பரியத் தள அந்தஸ்து ..... 132
இன்ட்ரின்சிக் ..... 132
ஹெப்படைட்டிஸ் C நோய்க்கான மலிவுவிலை மருந்து –மலேசியா ..... 133
INDRA 2021 ..... 133
பொருளாதாரச் செய்திகள் ..... 134
நிவாரண நடவடிக்கைகள் – நிதி அமைச்சகம் ..... 134
RBI அறிக்கை ..... 135
திரும்பப் பெறப்படாத காலவரம்பு முடிந்த வைப்புத் தொகை மீதான வட்டி – புதிய விதிமுறைகள் ..... 135
உலகப் பங்குச் சந்தை மூலதனத்தில் இந்தியாவின் பங்கு ..... 135
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி – இரண்டாவது மதிப்புமிக்க கடன் வழங்கும் நிறுவனம் ..... 136
அரசுப் பத்திரங்களின் ஏல முறையில் மாற்றம் ..... 136
நிதிநிலைத்தன்மை அறிக்கை ..... 137
பூடானில் BHIM UPI ..... 137
மாஸ்டர்கார்டு நிறுவனத்திற்குக் கட்டுப்பாடு – இந்திய ரிசர்வ் வங்கி ..... 138
இந்தியாவில் வாகன எரிபொருள் விற்பனை செய்யும் புதிய நிறுவனங்கள் ..... 138
இந்திய ரிசர்வ் வங்கியின் நேரடி சில்லறை வியாபாரத் திட்டம் ..... 139
தேசியச் சொத்து மறுசீரமைப்பு நிறுவனம் ..... 139
மின்சார வாகனக் கொள்கை ..... 139
வாகன எரிபொருள் மீதான கலால் வரி ..... 140
மத்திய வங்கியின் டிஜிட்டல் பணம் ..... 141
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 142
சுரபி மின்னணுக் குறியீடு ..... 142
சீ பிரேக்கர் – செயற்கை நுண்ணறிவு ஏவுகணை ..... 142
கொரோனாவைக் கண்டறியும் முகக் கவசம் ..... 143
ரியூகு குறுங்கோள் ..... 143
ஹரித் தாரா ..... 143
ஈர்ப்பு அலைகள் ..... 144
பிரபஞ்சத்தின் உண்மை வடிவம் ..... 144

அதிவேக சூரியப் புயல்........144
கோள்களின் இணைவு நிலை........145
மீவுளிர் விண்முகில் – இந்திய ஆராய்ச்சியாளர்கள்........145
VIPER திட்டம் – நாசா........146
லிங்லாங் ஒன் உலை........146
இந்தியாவின் முதல் ‘பசுமை ஹைட்ரஜன்’ ஆலை........147
திட்டம் 75 – இந்தியா........147
அதிசக்தி வாய்ந்த பீட்டா டைட்டானியம் உலோகக் கலவை – Ti-10V-2Fe-3Al........147
S-500 வான்வழிப் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பு........148
காந்தமிதவுந்து இரயில் – சீனா........148
விண்வெளிப் பயணம்........149
விகாஸ் இயந்திரம் (எஞ்ஜின்)........149
தானியங்கு செவித்திறன் மூளைத்தண்டு உணர்வு அமைப்பு........150
AMLEX சாதனம்........150
4வது தேசிய செரோ சர்வே........151
MiG-29 போர் விமானங்கள்........152
பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணை........153
புவிக்கு அருகில் உள்ள குறுங்கோள் சாரண விண்கலம்........153
உலகின் மிகப்பெரிய மிதக்கும் சூரியசக்தி நிலையம்........154
உயிரி டீசல் உற்பத்தியில் கோழி இறைச்சிக் கழிவுகளின் பயன்பாடு........154
நீராவி இருப்பு குறித்த முதல் ஆதாரம் – கனிமெடே........155
துணைக் கோளை உருவாக்கும் பகுதி........156
சுற்றுச்சூழல் செய்திகள்........156
LowCarbon.Earth........156
கருப்பு நிற வயிறுடைய பவளப் பாம்பு – உத்தரகாண்ட்........157
Last Ice Area........157
மின்னணுக் கழிவுகளிலிருந்துப் பதக்கம் தயாரித்தல்........157
உலகின் மிக அதிக வெப்பநிலை – ஜகோபாபாத்........158
வால்மீகி புலிகள் காப்பகம் – பீகார்........158
புலிகள் வழித் தடம் – ராஜஸ்தான்........158
மனித – வனவிலங்கு சகவாழ்வு குறித்த அறிக்கை........159
சீன பாண்டா கரடி........159
வாக்யூடா போர்போயிஸ்........160
கார்பன் சந்தை........160
டிஜிட்டல் நிலப் பயன்பாடு........161
உப்பு-சுரக்கும் சதுப்புநில இனங்கள் - அவிசென்னியா மரினா........162
பல்லுயிர் பற்றிய மூன்றாவது ஆசியான் மாநாடு........162
2020 ஆம் ஆண்டிற்குப் பிந்தைய உலகளாவியப் பல்லுயிர் கட்டமைப்பு........163
சுவிஸ் ஆல்ப்ஸில் 1,000 ஏரிகள்........163

கானமயில்........164
சைபீரிய நாட்டில் காட்டுத் தீ........165
பசுமை சோஹ்ரா – காடு வளர்ப்புப் பிரச்சாரம்........165
**மாநிலச் செய்திகள்........165**
SALT திட்டம்........165
மேகக்கணிமை சார்ந்த சுகாதார திட்டம் – டெல்லி........165
தகவல் தொழில்நுட்பக் கொள்கை – ஆந்திரப் பிரதேசம்........166
உத்தரகாண்டின் புதிய முதல்வர்........166
நிதி உதவித் திட்டம் – டெல்லி அரசு........166
சட்டமன்ற மேலவை – மேற்கு வங்காளம்........166
பசுமை இந்தியா சவால் – உலக சாதனை........167
மிஸ்ரி செர்ரி பழ ஏற்றுமதி........167
டெல்லியின் கலால் வரிக் கொள்கை 2021-22........168
சிலந்திகள் – அசாம்........169
நகரும் வகையிலான சுரங்கப்பாதை நன்னீர் வாழ் உயிரின காட்சியகம்........169
குஜராத் சர்வதேச கடல்சார் நடுவண் மையம்........170
டிஜிட்டல் கேந்திரா........170
பூமி பண்டுகா........170
இந்திய இரயில்வே வரைபடத்தில் மணிப்பூர்........171
2021-2030 காலகட்டத்திற்கான மக்கள்தொகை கொள்கை – உத்தரப் பிரதேசம்........171
இந்தியாவின் முதலாவது பூவாத தாவரச் செடித் தோட்டம்........172
இந்தியாவின் முதலாவது தனியார் திரவ இயற்கை எரிவாயு உற்பத்தி மையம் – நாக்பூர்........173
கட்ச் புத்தாண்டு........173
குன்வர் யாத்திரை........173
நீதிமன்ற வழக்காடுதல்களின் நேரடி ஒளிபரப்பு........174
மோங்க் பழம்........174
போனலு திருவிழா........175
‘ஒரே வட்டாரம், ஒரே உற்பத்திப் பொருள்’ திட்டம்........175
அகார் மரவளர்ப்பு........175
அசாம் விவகாரங்கள்........176
Scene of crime officers........176
செயற்கைக்கோளை உருவாக்கும் அரசுப் பள்ளி........176
ஆதர்ஷ் ஸ்மரக் திட்டம்........176
B.S. எடியூரப்பா பதவி விலகல்........177
கவிதா மலோத்........178
மொத்த சுற்றுச்சூழல் உற்பத்தி – உத்தரகாண்ட்........178
பசவராஜ் S. பொம்மை........178
**பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்........179**
சிறந்த கட்டடப் பொறியியல் சாதனை விருது........179

ஃபுகுயோகா கிராண்ட் பரிசு – 2021 ........ 179
"Decoding Shankar" – ஆவணப்படம் ........ 180
குவெம்பு ராஷ்ட்ரிய புரஷ்கர் ........ 180
K.V. சம்பத்குமார் காலமானார் ........ 181
ஐசியஸ் துகாரமி ........ 181
மூன்று புதிய குறுங்கோள்கள் கண்டுபிடிப்பு ........ 181
விண்வெளிக்குப் பயணிக்கும் இரண்டாவது இந்திய வம்சாவளிப் பெண் ........ 182
டயானா விருதுகள் 2021 – D. கவின் வேந்தன் ........ 182
கவிதா ராவின் புத்தகம் ........ 183
நடிகர் திலீப்குமார் காலமானார் ........ 184
உலகில் வாழும் வயதான நபர் ........ 184
பொருளாதாரத்திற்கான ஹம்போல்ட் ஆராய்ச்சி விருது ........ 184
கேப்டன் குர்ஜீந்தர்சிங் சூரி – போர் நினைவிடம் ........ 185
கஞ்சன் உகுர்சான்டி ........ 185
மனு சானே ........ 186
ஸ்கிரிப்ஸ் தேசிய ஸ்பெல்லிங் பீ போட்டி ........ 186
காமன்வெல்த் பாயின்ட்ஸ் ஆஃப் லைட் விருது ........ 186
யஷ்பால் சர்மா ........ 187
லியோனர்டோ டாவின்சியின் கரடி ஓவியம் ஏலம் ........ 187
The Great Big Lion ........ 188
2020 மில்லினியம் (ஆயிரமாண்டு) தொழில்நுட்பப் பரிசு ........ 188
டேனிஷ் சித்திக் ........ 188
டாக்டர் கடம்பினி கங்குலி ........ 189
கேன்ஸ் திரைப்பட விருதுவிழா ........ 189
ஈக்வேடர் பரிசு 2021 – இந்திய நிறுவனங்கள் ........ 190
ஒலிம்பிக் லாரல் - முஹமது யூனுஸ் ........ 190
சிவ் நாடார் ........ 191
கீரா சாராபாய் ........ 192
பாகீரதி அம்மா காலமானார் ........ 192
அலெக்சாண்டர் டால்ரிம்பிள் விருது ........ 192
ICAR நார்மன் போர்லாக் விருது 2020 ........ 193
விளையாட்டுச் செய்திகள் ........ 194
இளம் வயது செஸ் கிராண்ட் மாஸ்டர் ........ 194
WAKO இந்தியா குத்துச்சண்டை கூட்டமைப்பு ........ 194
டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்குத் தேர்வான முதல் இந்திய பெண் நீச்சல் வீரர் ........ 194
இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய கிரிக்கெட் மைதானம் ........ 195
மிதாலி ராஜ் – புதிய சாதனை ........ 195
புதிய உலக சாதனை – 400 மீ தடை தாண்டுதல் போட்டி ........ 195
இந்தியத் தேசியக் கொடியினை ஏந்தி அணியை வழி நடத்தும் வீரர்கள் ........ 196

ஜேம்ஸ் ஆன்டெர்சன் – 1000வது விக்கெட் ....197
ஹாக்கி ஜாம்பவான் கேசவ் ....197
ஆசியக் கால்பந்து கூட்டமைப்பு – மகளிர் ஆசிய கோப்பைப் போட்டி ....198
400மீ தடை தாண்டுதல் போட்டி – MP ஜபிர் ....198
இந்தியக் குழிப்பந்தாட்ட வீரர்கள் ....198
செர்பிய ஓபன் சதுரங்க சாம்பியன்சிப் போட்டி ....199
20வது கிராண்ட்ஸ்லாம் பட்டம் - நோவாக் ஜோக்கோவிச் ....199
கோபா அமெரிக்கா 2021 ....200
ஐரோப்பிய சாம்பியன்சிப் கோப்பைப் போட்டி ....201
முதல் இந்திய நடுவர் – டோக்கியோ ஒலிம்பிக்ஸ் ....201
விம்பிள்டன் ஒற்றையர் பிரிவு – ஆஷ்லீ பர்டி ....201
14,000 T20 ரன்கள் – கிறிஸ் கெய்ல் ....202
குரோசியா கிராண்ட் செஸ் போட்டி ....202
2026 உலக பாட்மிண்டன் சாம்பியன்சிப் – இந்தியா ....203
2032 கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் ....203
ருபினா பிரான்சிஸ் ....204
மீராபாய் சானு – வெள்ளிப் பதக்கத்தினை வென்றார் ....204
சுமித் நாகல் – ஒலிம்பிக்கின் டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் வெற்றி பெற்ற மூன்றாவது இந்தியர் ..205
உலக கேடட் மல்யுத்த சாம்பியன்சிப் போட்டி ....205
டோக்கியோ கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் ....206
ஜப்பானின் இளம் வயதில் தங்கப் பதக்கம் வென்றவர் ....206
2019 ஆம் ஆண்டின் சிறந்த மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர் – பிரமோத் பகத் ....207
ஒலிம்பிக் ஸ்கேட்போர்டிங் போட்டியில் முதல் தங்கப் பதக்கம் ....208
ரஷ்ய ஒலிம்பிக் குழு (ROC) ....208
முக்கிய தினங்கள் ....209
தேசியப் பட்டயக் கணக்காளர் தினம் – ஜூலை 01 ....209
தேசிய மருத்துவர்கள் தினம் – ஜூலை 01 ....209
தேசிய அஞ்சல் பணியாளர் தினம் – ஜூலை 01 ....210
பாரத ஸ்டேட் வங்கி தினம் – ஜூலை 01 ....210
சரக்கு மற்றும் சேவை வரி தினம் – ஜூலை 01 ....211
அடையாளம் காண முடியாத பறக்கும் பொருட்களுக்கான உலகளாவிய தினம் – ஜூலை 02 ....211
உலக விளையாட்டுத் துறை பத்திரிக்கையாளர் தினம் – ஜூலை 02 ....211
சர்வதேச கூட்டுறவு நிறுவனங்கள் தினம் – ஜூலை 03 ....212
சர்வதேச நெகிழிப்பை இல்லா தினம் – ஜூலை 03 ....212
அமெரிக்க சுதந்திர தினம் – ஜூலை 04 ....212
உலக விலங்கு வழி நோய்கள் தினம் – ஜூலை 06 ....213
உலகளாவிய மன்னிப்பு தினம் – ஜூலை 07 ....213
வன மகோத்சவ் 2021 – ஜூலை 01 முதல் ஜூலை 07 ....214
சர்வதேச மாம்பழத் திருவிழா - ஜூலை 09 முதல் 10 வரை ....215

தேசிய மீன்வளர்ப்பு விவசாயிகள் தினம் – ஜூலை 10 ....... 215
உலக மக்கள் தொகை தினம் – ஜூலை 11 ....... 215
உலக மலாலா தினம் – ஜூலை 12 ....... 216
NABARD தினம் – ஜூலை 12 ....... 216
பாஸ்டில் தினம் – ஜூலை 14 ....... 217
உலக இளைஞர்திறன் தினம் – ஜூலை 15 ....... 217
கல்வி வளர்ச்சி தினம் – ஜூலை 15 ....... 217
உலக ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை தினம் – ஜூலை 15 ....... 218
சர்வதேச நீதி தினம் – ஜூலை 17 ....... 218
நெல்சன் மண்டேலா தினம் - ஜூலை 18 ....... 219
வங்கி தேசியமயமாக்கல் நாள் - ஜூலை 19 ....... 219
சர்வதேச சதுரங்க விளையாட்டு தினம் - ஜூலை 20 ....... 220
அறிவியல் ஆய்வு நாள் - ஜூலை 20 ....... 220
பை (π) தினம் – ஜூலை 22 ....... 220
தேசிய மாம்பழ தினம் – ஜூலை 22 ....... 220
தேசிய ஒளிபரப்பு தினம் – ஜூலை 23 ....... 221
தேசிய வெப்பவியல் பொறியாளர் தினம் – ஜூலை 24 ....... 221
வருமான வரி தினம் – ஜூலை 24 ....... 221
உலக மூளை தினம் – ஜூலை 22 ....... 222
நீர்நிலைகளில் மூழ்குவதைத் தடுப்பதற்கான உலக தினம் – ஜூலை 25 ....... 222
தேசியப் பெற்றோர்கள் தினம் – ஜூலை 25 ....... 223
சதுப்பு நிலக் காடுகளின் சூழல் வளங்காப்பிற்கான சர்வதேச தினம் – ஜூலை 26 ....... 223
கார்கில் விஜய் திவாஸ் – ஜூலை 26 ....... 223
செயற்கைக் கருத்தரிப்பு முறை தினம் – ஜூலை 25 ....... 224
CRPF நிறுவன தினம் – ஜூலை 27 ....... 225
உலக கல்லீரல் அழற்சி நோய் தினம் – ஜூலை 28 ....... 225
உலக இயற்கை வளங்காப்பு தினம் – ஜூலை 28 ....... 226
சர்வதேச புலிகள் தினம் – ஜூலை 29 ....... 226
ஆட்கடத்தலுக்கு எதிரான உலக தினம் – ஜூலை 30 ....... 227
உலக வனப் பாதுகாவலர் தினம் – ஜூலை 31 ....... 227
இதரச் செய்திகள் ....... 228
Salute Doctors – ஐசிஐசிஐ வங்கி ....... 228
சலாம் தில்சே – HDFC வங்கி ....... 228
ஜேக்கப் ஜுமா - சிறைத் தண்டனை ....... 229
பஞ்ச்முலி ஏரி மற்றும் முதலைகள் ....... 229
சூரியச் சுடரொளி ....... 229
நியூஸ் ஆன் ஏர் ரேடியோ நேரலை – உலகளாவிய தரவரிசை ....... 230
பெகாசஸ் ஒற்றியறி மென்பொருள் ....... 230
முதலையின் மூதாதையர் மாதிரிகள் சிலியில் கண்டெடுப்பு ....... 231

# TNPSC துளிகள்

- உமேஷ் சின்ஹா அவர்களை துணைத் தேர்தல் ஆணையராக மறுநியமனம் செய்து அவரது பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கு அமைச்சரவையின் நியமனக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
    - இது ஓராண்டு காலத்திற்கான ஒரு ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டு இருக்கிறது.
- தீபிகா குமாரி, கோமாலிகா பாரி மற்றும் அங்கிதா பகத் ஆகியோர் அடங்கிய இந்திய மகளிர் வில்வித்தை அணியானது பாரீசில் நடைபெற்ற வில்வித்தை உலகக் கோப்பையின் மூன்றாம் கட்டப் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது.
    - இந்த அணியானது இறுதிப் போட்டியில் மெக்சிகோ அணியைத் தோற்கடித்தது.
- உக்ரைன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் கருங்கடலில் "சீ பிரீஸ் டிரில்ஸ்" எனப்படும் ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியைத் தொடங்கியுள்ளன.
    - இந்த 'சீ பிரீஸ் டிரில்ஸ்' பயிற்சியானது 1997 ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் 21 முறைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- கௌசிக் பாசு எழுதிய "Policymaker's Journal : From New Delhi to Washington, DC" என்று தலைப்பிடப்பட்ட ஒரு புத்தகமானது விரைவில் வெளியாக உள்ளது.
    - கௌசிக் பாசு அவர்கள் 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை உலக வங்கியின் தலைமைப் பொருளாதார நிபுணராகப் பணியாற்றிய ஒரு இந்தியப் பொருளாதார வல்லுநராவார்.
- பின்லாந்தில் நடைபெற்ற குர்தேன் விளையாட்டுப் போட்டியில் ஈட்டி எறிதல் என்ற வகை போட்டியில் நீரஜ் சோப்ரா வெண்கலப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
    - இவர் ஜெர்மனியின் ஜோஹன்சென்ஸ் வெட்டெர் மற்றும் திரிநாடு மற்றும் டொபாகோ நாட்டினைச் சேர்ந்த கெசோர்ன் வால்கோட் ஆகியோருக்கு அடுத்த நிலையில் உள்ளார்.
- மத்திய அரசானது 'ஆத்ம நிர்பர் கிருஷி' எனும் செயலியைச் சமீபத்தில் வெளியிட்டு உள்ளது.
    - இந்தச் செயலியானது நடவடிக்கை எடுக்கத் தகுந்த வேளாண் சார்ந்த நுண்ணறிவினையும் (மண் வகை மற்றும் மண் வளம் போன்றவை) வானிலை முன்னெச்சரிக்கைகளையும் விவசாயிகளுக்கு வழங்குகிறது.
- குஜராத் மாநில முதல்வர் விஜய் ரூபானி அவர்கள் அகமதாபாத்தின் வத்வா GIDC (Gujarat Industrial Development Corporation) என்ற பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நாட்டின் முதலாவது ஃபென்டன் வகை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினைத் திறந்து வைத்தார்.
    - ஃபென்டன் வினையூக்க உலையானது பசுமை சுற்றுச்சூழல் சேவைக் கூட்டுறவுச் சமுதாயம் எனும் ஒரு நிறுவனத்தினால் அமைக்கப் பட்டதாகும்.
- அன்சுலா ராவ் (மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆல் ரவுண்டர்) ஊக்கமருந்து பரிசோதனையில் தேர்ச்சி பெறாததால் நான்கு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்ட முதல் பெண் கிரிக்கெட் வீராங்கனை ஆவார்.
    - தேசிய ஊக்க மருந்துத் தடுப்பு அமைப்பினால் இவருக்குத் தடை விதிக்கப் பட்டு உள்ளது.

- நிதி ஆயோக்கின் தலைமை நிர்வாக அதிகாரி அமிதாப் காந்தின் பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீட்டித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.
    - நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் ஒப்புதலைப் பெற்ற பின்னர் பணியாளர் மற்றும் பயிற்சித் துறையினால் இந்த நீட்டிப்பு ஆணையானது பிறப்பிக்கப் பட்டது.
- கனடாவின் பிறந்த நாளாக அறியப்படும் கனடா தினமானது ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 01 ஆம் தேதியன்று கொண்டாடப்படுகிறது.
    - இந்த தினமானது கனடாவின் சுதந்திர நாளை நினைவு கூறவும் அதனைக் கொண்டாடுவதற்காகவும் வேண்டி கடைபிடிக்கப் படுகிறது.
- ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 01 ஆம் தேதியன்று சர்வதேச நகைச்சுவை தினம் கடைபிடிக்கப் படுகிறது.
    - இது அமெரிக்க நூலாசிரியரான வெய்னே ரெய்னகெல் என்பவரால் தொடங்கப் பட்டது.
- "Nathuram Godse : The True Story of Gandhi's Assassin" என்று தலைப்பிடப்பட்ட ஒரு புத்தகமானது மும்பையைச் சேர்ந்த பத்திரிக்கையாளர் தவால் குல்கர்னி என்பவரால் எழுதப் பட்டது ஆகும்.
    - இது 2022 ஆம் ஆண்டில் பான் மேக்மில்லன் இந்தியா என்ற பதிப்பகத்தினால் வெளியிடப் படும்.
- இந்தியாவின் வெளிநாட்டுக் கடனானது கடந்த ஆண்டிலிருந்து 11.5 பில்லியன் டாலர் அளவிற்கு உயர்ந்து 2021 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 570 பில்லியன் டாலராக உள்ளது.
    - கடந்த ஆண்டு 20.6 சதவீதமாக இருந்த வெளிநாட்டுக் கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கிடையேயான விகிதமானது 2021 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 21.1 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- ஐக்கிய நாடுகள் அவையின் உலக வானிலை அமைப்பானது அண்டார்டிகாவில் ஒரு புதிய அதிகபட்ச வெப்பநிலை அளவாக 18.3 டிகிரி செல்சியஸ் என்ற அளவில் வெப்பம் பதிவாகி உள்ளதாக தெரிவித்துள்ளது.
    - இந்த வெப்பநிலையானது எஸ்பெரான்சா என்ற ஒரு ஆராய்ச்சி நிலையத்தில் (அர்ஜென்டினா) பதிவு செய்யப் பட்டது.
- இந்தியா மற்றும் காம்பியா ஆகிய நாடுகளுக்கு இடையேயான ஆளுகை சீர்திருத்தங்கள் மீதான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை தனது ஒப்புதலை அளித்துள்ளது.
    - பணியாளர் நிர்வாகம் மற்றும் ஆளுகை (ஆட்சி முறை) சீர்திருத்தங்களில் இரு நாடுகளுக்கிடையேயான இருதரப்பு ஒத்துழைப்பினை நன்கு வலுப்படுத்தி மேம்படுத்துவதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.
- இத்தாலியின் கசீனோ எனும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்திய இராணுவ நினைவிடத்தினை இந்திய இராணுவத்தின் தலைமை தளபதி மனோஜ் நரவானே திறந்து வைக்க உள்ளார்.
    - இரண்டாம் உலகப் போரின் போதான மாண்டி கசினோ போரில் (Monte Cassino) பாசிசப் படைகளிடமிருந்து இத்தாலியைக் காப்பாற்றுவதற்காக 5000க்கும் மேற்பட்ட இந்திய வீரர்கள் தங்களது இன்னுயிரை இழந்தனர்.

- ஹைதராபாத்தைச் சேர்ந்த மருந்து உற்பத்தி நிறுவனமான லாவ்ரஸ் ஆய்வகமானது 2-டி ஆக்சி–டி–குளுக்கோஸ் (2–DG) எனும் கோவிட்-19 மருந்தின் உற்பத்தி மற்றும் விற்பனைக்கான உரிமத்தினைப் பெற்றுள்ளது.
    - லாவ்ரஸ் ஆய்வகத்திற்கான உரிமமானது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பினால் வழங்கப் பட்டுள்ளது.
- பனாசியா பயோடெக் என்ற நிறுவனமானது இமாச்சலப் பிரதேசத்திலுள்ள பாடியில் (Baddi) அமைந்துள்ள தனது மையத்தில் ஸ்புட்நிக் V கோவிட்-19 தடுப்பு மருந்தினைத் தயாரிப்பதற்கு வேண்டி இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு வாரியத்திடம் இருந்து உரிமத்தினைப் பெற்றுள்ளது.
    - புதுடெல்லியில் அமைந்துள்ள பனாசியா பயோடெக் நிறுவனமானது ரஷ்ய நேரடி முதலீட்டு நிறுவனத்துடன் இணைந்துச் செயலாற்றுகிறது.
- சரக்கு மற்றும் சேவை வரி வசூலானது ஜுன் மாதத்தில் 1 லட்சம் கோடி ரூபாய்க்கும் கீழ் சரிந்துள்ளது.
    - இதற்கு முன்பு இது தொடர்ந்து எட்டு மாதங்களாக ஒரு லட்சத்தைத் தாண்டியே இருந்தது.
- கொரியன் ஏர் எனும் விமானப் போக்குவரத்து நிறுவனமானது விமானப் போக்குவரத்துத் துறை எனும் ஊடகத்தின் "2021 ஆம் ஆண்டிற்கான சிறந்த ஏர்லைன் நிறுவனம்" என்ற நிலையைப் பெற்ற ஒரு நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- அமேசான் நிறுவனத்தின் நிறுவனரான ஜெஃப் பெசோஸ் தனது தலைமை நிர்வாகப் பொறுப்பினை ஆன்டி ஜெசி என்பவரிடம் ஒப்படைத்தார்.
    - இவர் வாசிங்டன் போஸ்ட், புளூ ஆரிஜின் எனும் விண்வெளி நிறுவனம் மற்றும் நன்கொடை சேவை போன்றவற்றில் அதிக நேரத்தைச் செலவிட விரும்பியுள்ளார்.
- உலக சாக்லேட் தினம் அல்லது சர்வதேச சாக்லெட் தினமானது ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 07 ஆம் நாளன்று கொண்டாடப்படுகிறது.
    - இது நமது வாழ்வில் அங்கம் வகிக்கும் சாக்லேட்டுகளைக் கொண்டாடும் வகையில் அனுசரிக்கப் படுகிறது.
- மத்திய அமைச்சர் நிதின் கட்கரி 'காதி பிரக்ரித் பெயிண்ட்' என்று பெயரிடப்பட்ட இந்தியாவிலேயே முதன்முறையாக மாட்டுச் சாணத்திலிருந்துத் தயாரிக்கப்பட்ட பெயிண்ட் (பூச்சு) வகையை காணொலி மூலம் வெளியிட்டார்.
    - மேலும், இந்தப் பூச்சு வகை பற்றி நாடு முழுவதும் அறியச் செய்வதற்காக தன்னை அந்தப் பூச்சு வகையின் விளம்பரத் தூதராகவும் அறிவித்தார்.
- இம்பால் மற்றும் அகர்தலா ஆகிய வடகிழக்கு மாநிலப் பகுதிகளில் மேலும் இரு சர்வதேச விமான நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.
    - அப்பகுதியில் போக்குவரத்து இணைப்பினை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த முடிவானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இங்கிலாந்தில் விதிக்கப்பட்டிருந்த முகக்கவசம் அணிதல், சமூக விலகல் மற்றும் வீட்டிலிருந்தே பணிபுரிதல் உள்ளிட்ட கோவிட்-19 ஊரடங்கு கட்டுப்பாடுகள் அனைத்தும் 2021 ஆம் ஆண்டு ஜூலை 19 ஆம் தேதியோடு முடிவடைகிறது.
    - பிரித்தானியப் பிரதமர் போரிஸ் ஜான்சன் அவர்களின் சமீபத்திய அறிவிப்பில் இது தெரிவிக்கப் பட்டுள்ளது.

- இந்திய இராணுவமானது '12 குறுகிய நெடுக்கமுடைய இணைப்பு அமைப்பு -10 மீ' என்பதின் முதலாவது உற்பத்தித் தளத்தினை அமைத்துள்ளது.
    - இது லார்சன் & டூப்ரோ லிமிடெட் என்ற நிறுவனத்துடன் இணைந்து பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பினால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப் பட்டதாகும்.
- சில திட்டங்களின் தரநிலைகள் மீதான பாதுகாப்பினைக் கருதி அதிஉயர் வகை வானளாவியக் கட்டிடங்களைக் கட்டமைப்பதற்கு சீனா தடை விதித்துள்ளது.
    - 500 மீட்டருக்கு மேல் உயரமுடைய கட்டிடங்களுக்கு இது பொருந்தும்.
- கேரள அரசானது தனது சொந்த இணையதள ஒளிபரப்பு சேவை வழங்கும் தளத்திற்கான (OTT - over-the-top) ஒரு திட்டத்தினை முன்மொழிந்துள்ளது.
    - நவம்பர் 01 ஆம் தேதிக்குள் இதனைத் தொடங்குவதற்கு அம்மாநில அரசு திட்டமிட்டுள்ளது.
- 'லாம்ப்டா' எனப்படும் ஒரு புதிய கோவிட்-19 வைரசானது டெல்டா மாற்றுருவை விட மிகவும் ஆபத்தானதாகும்.
    - ஐக்கிய ராஜ்ஜியத்தின் சுகாதார அமைச்சகம் இதனைத் தெரிவித்துள்ளது.
- dbGENVDC என்பது வாய்வழிப் புற்றுநோயில் ஏற்படும் மரபணு மாறுபாடுகள் குறித்த உலகின் முதலாவது தரவுத் தளமாகும்.
    - இது தேசிய உயிரி மருத்துவ மரபியல் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது.
- இந்திய நாட்டைச் சேர்ந்த ஹரிக்கா, மகளிருக்கான துரித சதுரங்க சாம்பியன்சிப் போட்டியில் இரண்டாமிடம் பெற்றுள்ளார்.
    - இறுதிப் போட்டியில் சீனாவின் ஹியு யிபான் (Hou Yifan) என்பவரிடம் இவர் தோல்வியுற்றார்.
- சுற்றுலாவை மேம்படுத்தும் முயற்சியில் 46 கெம்பேகௌடா பாரம்பரியத் தளங்களை உருவாக்குவதற்கு கர்நாடக மாநில அரசு முடிவெடுத்துள்ளது.
    - இந்தத் தளங்கள் பெங்களூரு நகர்ப்புறப் பகுதி, பெங்களூரு கிராமப்புறப் பகுதி, இராம்நகரா, சிக்பல்லபுரா மற்றும் தும்கூரு ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட உள்ளது.
- இந்தியத் தேசிய திரைப்பட ஆவணக் காப்பகமானது தனது ஆவணத் தொகுப்பில் 2014 ஆம் ஆண்டு வெளியான ராஜ்குமார் ஹிராணி இயக்கிய 'PK' எனும் திரைப் படத்தின் நிழற்பட மறுநிலைப் படிவத்தினை (camera negative) சேர்க்க உள்ளதாக அறிவித்துள்ளது.
    - இந்தியத் தேசிய திரைப்பட ஆவணக் காப்பகமானது 1964 ஆம் ஆண்டில் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தின் ஓர் ஊடக அமைப்பாக நிறுவப்பட்டது.
- நேபாளக் காங்கிரஸ் தலைவர் ஷேர் பகதூர் டியூபாவை (Sher Bahadur Deuba) நேபாளத்தின் பிரதமராக நியமனம் செய்வதற்கு நேபாள உச்சநீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது.
- மதுரை மல்லி மற்றும் பட்டன் ரோஸ், அல்லி, சாமந்தி மற்றும் துலுக்கச் சாமந்தி (செண்டுப் பூ) போன்ற பாரம்பரிய மலர்கள் அடங்கிய ஒரு பெட்டகமானது சமீபத்தில் தமிழ்நாட்டிலிருந்து அமெரிக்கா மற்றும் துபாய் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டது.
    - 2013 ஆம் ஆண்டில் மதுரை மல்லிக்குப் புவிசார் குறியீடு வழங்கப்பட்டது.

- 2100 ஆம் ஆண்டிற்குள் தொழில்துறைக் காலத்திற்கு முன்பு இருந்த வெப்ப நிலையிலிருந்து 3.7 டிகிரி செல்சியஸ் என்ற அளவிற்கு வெப்பநிலை அதிகரிக்கும் ஒரு நிகழ்வானது மலேரியா மற்றும் டெங்கு போன்றவற்றின் அபாயகரமான பெருந் தொற்றிற்கு வழி வகுக்கும்.
  - இது லேன்செட் பிளானிட்டரி ஹெல்த் எனும் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள ஒரு ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- நம்பர் 1 கோர்ட் எனும் அரங்கில் நடைபெற்ற விம்பிள்டன் இளையோர் ஆடவர் போட்டியில் இந்திய அமெரிக்கர் சமீர் பானர்ஜி வெற்றி பெற்றார்.
  - இவர் அமெரிக்காவின் விக்டர் லிவோவ் என்பவரைத் தோற்கடித்தார்.
- உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி R. சுப்பையா அவர்கள் சென்னையில் அமைந்துள்ள மாநில நுகர்வோர் குறைதீர்ப்பு ஆணையத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.
  - நீதிபதி சுப்பையா அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தனது பணிக்காலம் முடிந்ததை அடுத்து ஜுன் மாதத்தில் பணி ஓய்வு பெற்றார்.
- அனைத்துக் குடிமக்களுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் கோவிட்-19 தடுப்பூசியின் முதல் தவணையைச் செலுத்திய முதல் ஒன்றியப் பிரதேசமாக லடாக் உருவெடுத்து உள்ளது.
  - இதில் புலம்பெயர் தொழிலாளர்கள், தங்கும் விடுதி ஊழியர்கள் மற்றும் இப்பகுதியில் பணியாற்றும் நேபாளக் குடிமக்கள் ஆகியோரும் அடங்குவர்.
- போர்ச்சுக்கல் நாட்டுக் கால்பந்து அணியின் தலைவரான கிறிஸ்டியானோ ரொனால்டோ யுரோ 2020 போட்டியில் அதிக கோல்களைப் பெற்றதையடுத்து அந்த போட்டியின் தங்கக் காலணியினை (Golden Boot) வென்றுள்ளார்.
- கௌதம் அதானி தலைமையிலான அதானி குழுமமானது GVK குழுமத்தின் நிர்வாகத்திடமிருந்த "மும்பை சர்வதேச விமான நிலையத்தின்" நிர்வாகப் பொறுப்பைக் கையகப் படுத்தி உள்ளது.
  - இதன் மூலம் இந்தியாவிலுள்ள விமான நிலைய உட்கட்டமைப்பு நிறுவனங்களிலேயே ஒரு முன்னணி நிறுவனமாக அதானி குழுமம் உருவெடுத்து உள்ளது.
- தீபக் கப்ரா அவர்கள் ஒலிம்பிக் போட்டிகளுக்கான சீருடர் போட்டியில் (ஜிம்னாஸ்டிக்ஸ்) நடுவராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் எனும் பெருமையைப் பெற்றுள்ளார்.
- மனித மரபணு திருத்தியமைத்தலின் மேற்பார்வை மற்றும் ஆளுமை ஆகியவற்றிற்காக வேண்டிய உலகளாவிய தரநிலைகளை உருவாக்குவதற்கான உலக சுகாதார அமைப்பின் நிபுணர் ஆலோசகர் குழுவின் உறுப்பினராக மனீஷா S. இனம்தார் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - இவர் ஒரு இந்தியக் குருத்தணு (stem cell) மற்றும் மேம்பாட்டு உயிரியிலாளர் ஆவார்.
- இஸ்ரேல் நாட்டில் தூதரகத்தை அமைத்த முதல் வளைகுடா நாடு எனும் பெருமையை ஐக்கிய அரபு அமீரகம் பெற்றுள்ளது.
  - இந்தத் தூதரகமானது டெல் அவிவ் பங்குச் சந்தை வளாகத்தில் அமைந்துள்ளது.
- மண்டுவாதி இரயில் நிலையமானது வடகிழக்கு இரயில்வேயினால் பனாரஸ் இரயில் நிலையம் எனப் பெயர் மாற்றப்பட்டது.
- ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 16 அன்று உலகப் பாம்பு தினம் கடைபிடிக்கப்படுகிறது.
  - இது உலகம் முழுவதுமுள்ள சுமார் 3,500 பாம்பு இனங்கள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கில் கடைபிடிக்கப் படுகிறது.

- நேச்சர் எனும் அறிவியல் இதழில் வெளியான சில தகவல்களின்படி, அமேசான் மழைக் காடுகளின் சில பகுதிகளிலுள்ள மரங்கள், தான் உறிஞ்சும் கார்பன் டை ஆக்சைடை விட அதிக அளவு கார்பன் டை ஆக்சைடை வெளியிடுகின்றன.
  - ஒரு கார்பன் ஈர்ப்புப் பகுதியாக (கார்பன் மடு) அமேசான் மழைக்காடுகளின் பங்கு குறைந்து வருவது இதன் மூலம் தெரிய வருகிறது.
- கர்நாடக முதலமைச்சர் B.S. எடியூரப்பா கர்நாடக மின்சார இருசக்கர வாகன வாடகைத் திட்டம் 2021 என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
  - பேருந்து, இரயில் மற்றும் மெட்ரோ நிலையங்களை அடைவதில் உள்ள சிரமங்களைக் குறைத்தல் மற்றும் அதற்கான பயண நேரத்தைக் குறைத்தல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- "ஜம்மு & காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய ஒன்றியப் பிரதேசங்களுக்கான பொது உயர் நீதிமன்றம்" என்ற பெயரானது "ஜம்மு & காஷ்மீர் மற்றும் லடாக் உயர்நீதிமன்றம்" என மாற்றப் பட்டுள்ளது.
  - இதற்கான ஜம்மு & காஷ்மீர் மறுசீரமைப்பு (சிரமங்களை நீக்குதல்) ஆணை, 2021 என்ற ஒரு ஆணையில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் கையெழுத்திட்டார்.
- ஆசிய-பசிபிக் வர்த்தகக் குழுமத்தின் ஒரு சிறப்பு காணொலிச் சந்திப்பான "ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு" எனும் சந்திப்பிற்கு நியூசிலாந்து நாடு தலைமை ஏற்றது.
  - இந்த சந்திப்பின் போது, விரிவான கோவிட்-19 நோய்த் தடுப்பு என்பது உலகளவில் மக்களுக்கான ஒரு நன்மை என்றும் இந்த சுகாதார நெருக்கடி நிலையிலிருந்து மீண்டு வருவதற்குத் தடுப்பு மருந்துகளை விரைவாக அணுகச் செய்வது மிக அவசியம் என்றும் உலகத் தலைவர்கள் அனைவரும் குறிப்பிட்டுக் கூறினர்.
- ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படும் ஹஜ் புனித யாத்திரைக்கு ஆண் பாதுகாவலர் யாரும் இல்லாமல் பெண்கள் மட்டுமே இனி பதிவு செய்து கொள்ளலாம்.
  - சவுதி அரேபியாவின் ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சகமானது இதனைத் தெரிவித்து உள்ளது.
- ஜெர்மனியின் டார்ட்மண்ட் என்னுமிடத்தில் நடைபெற்ற ஸ்பார்கசென் டிராபி (Sparkassen Trophy) என்ற ஒரு செஸ் போட்டியில் ரஷ்யாவின் விளாடிமிர் க்ரம்னிக் என்பவரை வீழ்த்தி விஸ்வநாதன் ஆனந்த் வெற்றி பெற்றுள்ளார்.
- பொருளாதாரம் மற்றும் வர்த்தகப் பிரச்சினைகள் மீதான BRICS அமைப்பின் தொடர்பு குழுவின் ஒரு சந்திப்பிற்கு இந்தியா சமீபத்தில் தலைமை தாங்கியது.
- சர்வதேச கிரிக்கெட் மன்றமானது மங்கோலியா, தஜகிஸ்தான், மற்றும் ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளை தனது உறுப்பினராக சேர்த்துள்ளது.
  - சர்வதேச கிரிக்கெட் மன்றமானது தற்போது 106 உறுப்பினர்களுடன் 94 இணை உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.
- மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சரான பாஜகவின் முக்தார் அப்பாஸ் நக்வி மாநிலங்களவையின் துணைத் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- முன்னாள் இந்திய மற்றும் மோஹுன் பாகன் கிளப்பின் கால்பந்து கோல் கீப்பரான மறைந்த ஷிபாஜி பானர்ஜிக்கு மோஹன் பாகன் ரத்னா விருதானது வழங்கப் பட உள்ளது.

- o ஃபிஜிய நாட்டுக் கால்பந்தாட்ட வீரரான ராய் கிருஷ்ணா 2020-21 ஆம் ஆண்டின் சிறந்த கால்பந்து வீரராகத் தேர்வு செய்யப்பட்டார்.

❖ பாஜக தலைவர் சுதான்ஷு மிட்டல் அவர்களின் ராஷ்டிரிய சுயம்சேவக் சங்கம் (ஆர்எஸ்எஸ்) பற்றிய "RSS: Building India Through SEWA" என்ற புத்தகமானது இப்போது சீன மொழியில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது.

- o இது ஆர்.எஸ்.எஸ்ஸின் வரலாறு, சித்தாந்தம் மற்றும் கொள்கைகள் மற்றும் அவை நாட்டில் அடுத்தடுத்து ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றி பேசுகிறது.

❖ ஓய்வூதிய நிதி நிர்வாகத்தில் அந்நிய நேரடி முதலீட்டு வரம்பை தேசிய ஓய்வூதிய முறையின் கீழ் 49 சதவீதத்திலிருந்து 74 சதவீதமாக உயர்த்த அரசாங்கம் அறிவித்து உள்ளது.

- o தேசிய ஓய்வூதியத் திட்டமானது ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது.

❖ மத்திய மின்துறை அமைச்சர் P.K. சிங் அவர்கள் புதுடெல்லியில் மாநில மின் பகிர்வு மையத்திற்கான 9வது ஒருங்கிணைந்த மதிப்பீடுகளை வெளியிட்டார்.

- o இது 1986 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மின்சக்தி நிதியக் கழகத்தின் 36வது நிறுவன தினமான ஜூலை 17 அன்று வெளியிடப்பட்டது.

❖ காவல்துறையினர் அல்லது பிற அரசு அதிகாரிகளால் சிறைக் காவலில் இருப்பவர் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்படுவதைத் தடுப்பதற்காக வேண்டி அவற்றைக் குற்றமாக நிர்ணயிக்கும் ஒரு புதிய மசோதா ஒன்றினை பாகிஸ்தான் பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

❖ 2021 ஆம் ஆண்டு கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளானது 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடத்தப்படும் என ஹரியானா அரசு அறிவித்து உள்ளது.

- o இது 18 வயதிற்குட்பட்டவர்களுக்கான பிரிவில் நடத்தப்பட உள்ள ஒரு போட்டி ஆகும்.

❖ மாநிலத்தில் உள்ள அனைத்துக் கர்ப்பிணிப் பெண்களுக்கும் கோவிட்-19 தடுப்பு மருந்துகளை வழங்குவதற்காக 'மாத்ரூ கவசம்' எனும் ஒரு இயக்கத்தை கேரள அரசு தொடங்க உள்ளது.

❖ வேளாண் உள்கட்டமைப்பு நிதியானது மாநில நிறுவனங்கள் அல்லது வேளாண் பொருட்கள் சந்தைக் குழுக்கள், தேசிய மற்றும் மாநில கூட்டுறவுச் சங்கங்கள், சுய உதவிக் குழுக்களின் சங்கங்கள் மற்றும் விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்புகள் ஆகியவற்றிற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- o 1 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான வேளாண் உள்கட்டமைப்பு நிதியை விரிவுபடுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.

❖ இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் லிமிடெட் நிறுவனமானது உலகின் இலகுரக போர் செயல்பாடுகளுக்கான ஹெலிகாப்டர்களின் முதல் தொகுதியினை இந்திய விமானப் படையிடம் ஒப்படைக்க உள்ளது.

❖ இந்தியக் கடற்படையானது அமெரிக்க விண்வெளி நிறுவனமான போயிங் என்ற ஒரு நிறுவனத்திடமிருந்து பத்து P-8I ரக நீர்மூழ்கி எதிர்ப்பு போர் விமானங்களைப் பெற்று உள்ளது.

❖ உலகின் முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட முதல் எஃகு நடைபாலமானது நெதர்லாந்திலுள்ள ஆம்ஸ்டர்டாமில் திறக்கப்பட்டுள்ளது.

- மாநிலத்தில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோக முறையை மேம்படுத்தச் செய்வதற்காக வேண்டி இராஜஸ்தான் மாநில அரசானது இந்தியாவிலுள்ள ஐக்கிய நாடுகளின் உலக உணவு மேம்பாட்டுத் திட்ட அமைப்புப் பிரிவோடு கைகோர்த்து உள்ளது.
- உத்தரகாண்ட் மாநிலத்தின் குமாவோன் பகுதியில் புதிய அறுவடை மற்றும் பருவ மழைக் காலம் தொடங்கியதை நினைவு கூரும் வகையில் ஹரேலா என்ற பண்டிகை கொண்டாடப் படுகிறது.
- சுவிட்சர்லாந்தின் லாவ்சேன் என்னுமிடத்தை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் சர்வதேச ஒலிம்பிக் குழுவானது தனது முழக்கத்தை 'Faster, Higher, Stronger-Together' என மாற்றியுள்ளது.
  - 1894 ஆம் ஆண்டு முதல் 'Faster, Highter, Stronger' என்பதே ஒலிம்பிக் போட்டிகளின் முழக்கமாக இருந்து வந்தது.
- அஸ்ஸாம் மாநில முதல்வர் டாக்டர் ஹிமந்த பிஸ்வா சர்மா, தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற அசாமின் அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் மாநில அரசு வேலை வழங்கப் போவதாக உறுதியளித்துள்ளார்.
- வங்கி மற்றும் நிதிச் சேவை நிறுவனமான கோல்ட்மேன் சாக்ஸ், ஹைதராபாத்தில் ஒரு புதிய அலுவலகத்தைத் திறந்துள்ளது.
  - வங்கி மற்றும் நிதிச் சேவைக்கான முக்கிய முதலீட்டு மையமாக ஹைதராபாத் வளர்ந்து வருகிறது.
- கூகுள் இந்திய நிறுவனத்தின் துணைத் தலைவரும் நிர்வாக இயக்குநருமான சஞ்சய் குப்தா 2021-23 ஆம் காலகட்டத்திற்கான இந்திய இணையதளம் மற்றும் அலைபேசி கழகத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டதாக இந்திய இணையதளம் மற்றும் அலைபேசி கழகம் தெரிவித்துள்ளது.
  - அமேசான் இந்திய நிறுவனத்தின் மூத்த துணைத் தலைவரும், இந்திய நாட்டு மேலாளருமான அமித் அகர்வாலுக்குப் பின் அவர் இந்தப் பதவியை ஏற்கிறார்.
- மத்திய மின்சாரம், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ஆர்.கே. சிங் அவர்கள், BEE என்ற (Bureau of Energy Efficiency) எரிசக்திப் பாதுகாப்புக் கட்டிடக் குறியீடுகளுக்குக் இணங்க கட்டப்பட்ட கட்டிட வடிவமைப்புகளை ஊக்குவிக்கச் செய்வதற்காக NEERMAN விருதுகள் என்ற பெயரில் ஒரு முன்முயற்சியைத் தொடங்கி வைத்துள்ளார்.
  - NEERMAN ஆனது 'National Energy Efficiency Roadmap for Movement towards Affordable & Natural Habitat' என்பதைக் குறிக்கிறது.
- கொல்லம் மாவட்டத்தில் உள்ள பெரும்குளத்திற்கு கேரளாவின் முதல் 'புத்தகக் கிராமம்' என்ற அடைமொழி வழங்கப் பட்டுள்ளது.
- உத்தரகாண்ட் மாநிலத்தில் ஆறு நதிகள் புத்துயிர் பெறுவதற்காக வேண்டி சில புதிய திட்டங்களுக்கு தேசிய கங்கை நதி மீதான தூய்மைத் திட்டமானது ஒப்புதல் அளித்து உள்ளது.
- ஜூலை 22 அன்று உலக நலிந்த X குரோமோசோம் நோய் விழிப்புணர்வுத் தினமானது கடைபிடிக்கப்பட்டது.
  - இந்த நாளில் உலகின் வெவ்வேறு சமுதாயத்தினரால் உலகின் முக்கிய இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் ஆகியவை ஒளி விளக்குகளால் ஒளிரூட்டப்படும்.

- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தின் செயலாளர் அரமானே கிரிதர் (இந்திய ஆட்சிப்பணி அதிகாரி) அவர்களிடம் இந்திய நெடுஞ்சாலை ஆணையத்தின் தலைவர் பொறுப்பானது கூடுதல் பொறுப்பாக வழங்கப் பட்டுள்ளது.
- பல்கலைக்கழக சேர்க்கைகளில் திருநங்கைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த வயது வரம்பினை கேரள அரசு நீக்கியுள்ளது.
  - 2015 ஆம் ஆண்டில் திருநங்கைகளுக்கான கல்விக் கொள்கையை அறிவித்த முதல் இந்திய மாநிலம் கேரளாவாகும்.
- லடாக்கில் ஒரு மத்தியப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- நிதி அமைச்சகத்தின் இணைச் செயலாளர் ரஷ்மி ரஞ்சன் தாஸ், ஐ.நா.வின் வரிக் குழுவிற்கு வேண்டி 2021 முதல் 2025 வரையிலான காலகட்டத்திற்கு உலகம் முழுவதிலும் இருந்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 வரித்துறை நிபுணர்களுள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- அதிபர் ஜோவெனல் மோயிஸ் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஹைத்தி நாட்டில் நிலவி வரும் அரசியல் கிளர்ச்சிக்கு மத்தியில் ஹைத்தியின் புதியப் பிரதமராக ஏரியல் ஹென்றி (Ariel Henry) பொறுப்பேற்றுள்ளார்.
- சீனாவின் மத்திய ஹெனான் மாகாணத்தில் 1000 ஆண்டுகளில் இல்லாத அளவில் அதிக மழைப் பொழிவு ஏற்பட்டுள்ளது.
  - செங்க்சூவா நகரில் மூன்று நாட்களில் மட்டும் 617.1 மி.மீ. அளவிற்கு மழைப் பொழிவானது பதிவாகி உள்ளது.
- இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் M. வெங்கையா நாயுடு அவர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் யலமஞ்சிலி சிவாஜி என்பவர் எழுதிய 'பல்லேகு பட்டாபிசேகம்' எனும் ஒரு புத்தகத்தை வெளியிட்டார்.
  - இந்தப் புத்தகமானது இந்தியக் கிராமப் பகுதிகள் மற்றும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டதாகும்.
- திரைப்பட இயக்குநர் ராகேஷ் ஓம்பிரகாஷ் மேஹ்ரா தனது சுயசரிதையான "The Stranger in the Mirror" எனும் புத்தகத்தைப் பற்றி அறிவித்துள்ளார்.
  - புகழ்பெற்ற எழுத்தாளர் ரீட்டா ராமமூர்த்தி குப்தா என்பவருடன் இணைந்து இவர் இந்தப் புத்தகத்தை எழுதியுள்ளார்.
- இந்தியக் கடற்படையானது பணியிலுள்ள மற்றும் ஓய்வு பெற்ற தனது அனைத்துப் பணியாளர்களின் சம்பளக் கணக்கு வைப்பிற்காக கோடக் மஹிந்திரா வங்கியுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- G20 நாடுகளின் ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர்கள் இத்தாலி நாட்டின் தலைமையின் கீழ் நேபிள்ஸ் எனுமிடத்தில் நடைபெற்ற ஒரு பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர்.
- லடாக் ஒன்றியப் பிரதேசத்திற்காக வேண்டி ஒரு ஒருங்கிணைந்த பல்பயன்பாட்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தை நிறுவுவதற்கு மத்திய அமைச்சரவை தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
  - இந்தக் கழகமானது தொழில்துறை, சுற்றுலா, போக்குவரத்து மற்றும் உள்ளூர் தயாரிப்புப் பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்களின் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றிற்காகப் பணியாற்றும்.

- ஐக்கிய ராஜ்ஜியமானது தனது நாட்டில் நோரோவைரஸ் பெருந்தொற்று ஏற்பட்டு உள்ளதாக அறிவித்துள்ளது.
  - நோரோ வைரசினால் பாதிக்கப்பட்ட மக்கள் பில்லியன் கணக்கான வைரஸ் துகள்களைப் பரவச் செய்து இதனை ஒரு பெருந்தொற்றாக மாற்றக் கூடும்.
- இந்திய தேசிய மகளிர் கால்பந்தாட்ட அணியின் முன்கள வீரர் நங்கங்கோம் பாலா தேவி, 2020-21 ஆம் ஆண்டிற்கான அனைத்திந்தியக் கால்பந்தாட்ட கூட்டமைப்பின் சிறந்த கால்பந்தாட்ட வீராங்கனை என்று புகழாரம் சூட்டப்பட்டுள்ளார்.
  - இவர் தற்போது, ஸ்காட்லாந்தில் நடைபெற்று வரும் மகளிர் போட்டியில் ரேஞ்சர்ஸ் உமென் என்ற அணிக்காக (Rangers Women's) விளையாடி வருகிறார்.
- இந்தியக் கால்பந்து அணியின் மூத்த இந்தியத் தடுப்பாட்ட நிலை வீரர் (எதிரணி கோல்களை தடுக்கும் வீரர்) சந்தேஷ் ஜிங்கான் 2021-21 ஆம் ஆண்டிற்கான அனைத்திந்தியக் கால்பந்தாட்ட கூட்டமைப்பின் சிறந்த கால்பந்தாட்ட வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
  - இந்தியாவின் ஒரு மூத்த மத்தியத் தடுப்பாட்ட வீரர் ஒருவர் AIFF அமைப்பினுடைய ஆண்டின் சிறந்தக் கால்பந்தாட்ட வீரர் எனும் பட்டத்தினை பெறுவது இதுவே முதன்முறையாகும்.
- டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் நான்கு புதிய விளையாட்டுப் போட்டிகள் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளன.
  - அவை கராத்தே (தற்காப்புக் கலை), கடல் அலை சறுக்கு (surfing), ஸ்கேட்போர்டிங் மற்றும் உயரம் ஏறுதல் போட்டி (Sport Climbing) ஆகியனவாகும்.
- முன்னாள் தேர்தல் ஆணையர் அசோக் லவாசா, "An Ordinary Life : Portrait of an Indian Generation" எனும் ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
  - அசோக் லவாசா ஆசிய மேம்பாட்டு வங்கியின் துணைத் தலைவராக பொறுப்பபேற்பதற்காக வேண்டி 2020 ஆம் ஆண்டில் தனது தேர்தல் ஆணையர் பொறுப்பை ராஜினாமா செய்தார்.
- நவீன் பட்நாயக் தலைமையிலான ஒடிசா மாநில அரசானது இந்தியாவிலேயே நகரம் முழுவதும் பாதுகாப்பான குடிநீர் வசதியைக் கொண்ட முதல் நகரம் என்று பூரி நகரை அறிவித்துள்ளது.
- ரஷ்யாவில் நடைபெற உள்ள ஒரு விண்வெளிப் பயிற்சியில் பங்கேற்க வேண்டி அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ரக்சயா மற்றும் வேதஸ்ரீ ஆகியோர் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.
  - அவர்கள் திருமனூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் 11 ஆம் வகுப்பு படிக்கின்றனர்.
- ஸ்வீடன் நாடானது சர்வதேச சூரியசக்திக் கூட்டிணைவிற்கான கட்டமைப்பு மீதான ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் வழங்கி இந்த உலக அளவிலான அமைப்பின் உறுப்பினராகி உள்ளது.
  - சர்வதேச சூரியசக்திக் கூட்டிணைவானது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் நிலையான மேம்பாடு ஆகியவற்றை ஊக்கப்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்திய நாட்டினால் உருவாக்கப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு காவல்துறையின் புதிய மற்றும் 30வது தலைமை இயக்குநர் (DGP)

- டாக்டர் C. சைலேந்திரபாபு அவர்கள் தமிழ்நாடு காவல் துறையின் 30வது தலைமை இயக்குநராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இவர் 2021 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதி முதல் பொறுப்பேற்க உள்ளார்.
- இவர் இரண்டு ஆண்டுகள் என்ற ஒரு பதவிக் காலத்தை 2023 வரையில் வகிப்பார்.
- காவல்துறையின் நடப்புத் தலைமை இயக்குநரான J.K. திரிபாதி அவர்கள் 2021 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் தேதியன்று ஓய்வு பெற்றார்.
- சைலேந்திரபாபு இதற்கு முன்பு தமிழக இரயில்வே காவல்துறையின் தலைமை இயக்குநராகப் பணியாற்றினார்.
- மேலும் இவர் தமிழக தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையின் இயக்குநராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.
- தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், தற்போதைய டிஜிபி திரிபாதி, உள்துறைச் செயலாளர் பிரபாகர் மற்றும் தலைமைச் செயலாளர் இறையன்பு ஆகியோருடனான ஒரு ஆலோசனைக்குப் பிறகு சைலேந்திரபாபுவின் பெயரை அறிவித்தார்.



## S. பீட்டர் அல்போன்ஸ்

- தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநில சிறுபான்மை ஆணையத்தினைத் திருத்தி அமைத்துள்ளார்.
- இதன் தலைவராக முன்னாள் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் S. பீட்டர் அல்போன்சை நியமனம் செய்துள்ளார்.
- திரு. அல்போன்ஸ் அவர்கள் 1989 மற்றும் 1991 ஆகிய ஆண்டுகளில் தென்காசி தொகுதியின் சார்பாக மாநில சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- மாநில சிறுபான்மை ஆணையமானது சமயம் மற்றும் மொழிசார் சிறுபான்மையினரின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதற்காக வேண்டி அமைக்கப் பட்டது.
- மாநில சிறுபான்மை ஆணையத்தினை நிறுவுவதற்கான உத்தரவு 1989 ஆம் ஆண்டின் ஒரு அரசாணை மூலம் தெரிவிக்கப்பட்டது.

- இது அன்றைய முதலமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையிலான தி.மு.க அரசினால் அமைக்கப்பட்டது.
- இதனை ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக மாற்றுவதற்காக 2010 ஆம் ஆண்டில் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது.



## கூடங்குளம் – 5வது ஆற்றல் அலகு

- தமிழ்நாட்டின் கூடங்குளத்தில் (திருநெல்வேலி) அமைந்துள்ள அணு உலையின் 5வது ஆற்றல் அலகின் கட்டுமானப் பணிகளை ரஷ்யா தொடங்கியுள்ளது.
- கூடங்குளம் அணு உலையினைக் கட்டமைப்பதற்கு ரோசடோம் எனும் ரஷ்ய நிறுவனம் தொழில்நுட்பங்களை வழங்குகிறது.
- இந்த அணு உலையானது 1,000 MWe என்ற அளவிலான உற்பத்தித் திறனுடைய ஆறு அலகுகளைக் கொண்ட ஒரு உலையாக உருவாக்கப்பட திட்டமிடப்பட்டது.
- இது இந்தியாவின் முதலாவது மென்னீர் அணு உலையாகும் (light water reactor).
- கூடங்குளம் அணு உலையானது இந்தியாவின் மிகப்பெரிய அணு உலையாகும்.
- இதன் கட்டுமானப் பணிகள் 2002 ஆம் ஆண்டு மார்ச் 31 அன்று தொடங்கப்பட்டது.

## மாரியப்பன் தங்கவேலு – தேசியக் கொடியை ஏந்தி அணியை வழி நடத்தும் வீரர்

- டோக்கியோ பாராலிம்பிக்ஸ் போட்டியில் தேசியக் கொடியை ஏந்தி இந்திய அணியை வழி நடத்துவதற்கு முன்னணி பாரா உயரம் தாண்டுதல் வீரரான மாரியப்பன் தங்கவேலு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இது ஆகஸ்ட் 24 அன்று தொடங்க உள்ளது.
- 25 வயதான இவர் கேல் ரத்னா விருது பெற்றவராவார்.
- இவர் தமிழ்நாட்டிலுள்ள சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவராவார்.



## காவல் துறையின் தலைமை இயக்குநரைத் தேர்வு செய்யும் முறை (தமிழ்நாடு)

- சைலேந்திர பாபு, கரண் சின்கா மற்றும் சஞ்சய் அரோரா ஆகியோரின் பெயர்கள் அடங்கிய ஒரு பட்டியலுக்கு மத்திய குடிமைப் பணி ஆணையமானது ஒப்புதல் அளித்தது.
- அதன் பிறகு தமிழக அரசானது இந்த மூன்று நபர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- இதில் தேர்ந்தெடுக்கப்படும் காவல் துறையின் தலைமை இயக்குநரின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகளாகும்.
- காவல் துறையின் துணைத் தலைமை இயக்குநர் தகுதியிலுள்ள 30 ஆண்டு காலப் பணிச் சேவையை முடித்தவர்கள் காவல்துறையின் தலைமை இயக்குநர் பொறுப்பை பெற தகுதியுடையவராவர்.
- மத்திய குடிமைப் பணி ஆணையமானது இந்த தேர்வு முறைக்கு, 2006 ஆம் ஆண்டு பிரகாஷ்சிங் வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த ஒரு ஆணையைப் பின்பற்றுகிறது.

## யானைகளின் வாழ்விடங்களை மேம்படுத்த புல்வெளிகள் மற்றும் மரங்கள் உள்ள பகுதிகளை அடையாளம் காணுதல்

- தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை இணைந்து யானைகளின் வாழ்விடங்களை மேம்படுத்த அப்பகுதிகளின் புல்வெளிகள் மற்றும் மரங்கள் நிறைந்த பகுதிகளை அடையாளம் காணுவதற்கான ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளன.
- யானைகளுடைய வாழ்விடங்களின் புல்வெளிப் பகுதிகள் மற்றும் தீவன மரங்கள் உள்ள பகுதிகளை மீண்டும் உருவாக்கி அவற்றைச் சீரமைத்து அதன் தரத்தை உயர்த்துவதே இதன் நோக்கமாகும்.
- இந்தத் திட்டத்திற்காக எட்டு உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்றினை வனத்துறை அமைத்துள்ளது.
- இக்குழுவானது சமீபத்தில் ஓர் இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்தது.
- அதில் யானைகள் மற்றும் பிற தாவர உண்ணிகள் போன்றவையும் உண்ணக் கூடிய 29 வகை புல் இனங்கள் மற்றும் 14 தீவன மர இனங்கள் அடையாளம் காணப்பட்டு தெரிவிக்கப் பட்டுள்ளன.
- மேலும் இவற்றை வளர்ப்பதற்காக வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் வளாகத்தினுள்ளேயே ஒரு செடிகள் பண்ணை (வளர்ப்பிடம்) ஒன்றும் அமைக்கப் பட்டுள்ளது.

## டோக்கியோ ஒலிம்பிக்ஸ் – தமிழக வீரர்கள்

- முதன்முறையாக தமிழக தடகளச் சங்கத்திலிருந்து ஐந்து விளையாட்டு வீரர்கள் இந்திய ஒலிம்பிக் அணியில் இடம் பெற்றுள்ளனர்.
- அவர்கள் ஆரோக்கிய ராஜீவ், நாகநந்தன் பாண்டி (ஆடவர் 4 x 400 தொடர் ஓட்டம்), தனலட்சுமி சேகர், ரேவதி வீரமணி மற்றும் சுபா வெங்கடேசன் (கலப்பு 4 x 400 தொடர் ஓட்டம்) ஆகியோராவர்.




## தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர்



- ❖ திண்டுக்கல் ஐ. லியோனி அவர்கள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ இந்தக் கழகமானது, புத்தகங்களை அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு இலவசமாகவும் தனியார் பள்ளிகளுக்கு அரசு நிர்ணயித்த விலையிலும் அச்சிட்டு, வெளியிட்டு மற்றும் விற்பனை செய்யும் பொறுப்பினைக் கொண்டுள்ளது.
- ❖ இந்தக் கழகமானது ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலான பள்ளி மாணவர்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலப் பாடத் திட்டத்திற்கான புத்தகங்களைத் தயார் செய்கிறது.

## பயோனிச்சியரஸ் தமிழியன்சிஸ்

- ❖ ஊட்டியிலுள்ள அரசு கலைக்கல்லூரியின் விலங்கியல் மற்றும் வனவிலங்கு உயிரியல் துறையிலுள்ள மூலக்கூறு உயிரி பல்லுயிர்ப் பெருக்க ஆய்வகத்தின் ஆராய்ச்சியாளர்கள் நீலகிரியில் ஒரு புதிய சிறகுகள் அற்ற பூச்சியினம் ஒன்றைக் கண்டறிந்துள்ளனர்.
- ❖ 1 மி.மீ நீளமுடைய பறக்க இயலாத இந்தப் பூச்சியானது தமிழ்நாட்டில் கண்டறியப் பட்டுள்ளதால் பயோனிச்சியரஸ் தமிழியன்சிஸ் என்று இதற்கு பெயர் சூட்டப்பட்டது.
- ❖ உலகில் இதுவரை இந்த இனத்தின் கீழ் 6 சிற்றினங்கள் மட்டுமே இருப்பதாக பதிவாகி உள்ளது.
- ❖ இந்தச் சிற்றினங்கள் சுவிட்சர்லாந்து, சீனா மற்றும் கொரியா ஆகிய நாடுகளின் குளிர்வான உயர்மட்ட பகுதிகளில் மட்டுமே காணப்படுகின்றன.

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – புதிய உறுப்பினர்கள்

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு நான்கு புதிய உறுப்பினர்களை தமிழக அரசு நியமித்துள்ளது.
- ஆட்சிப்பணி அதிகாரி S. முனியநாதன், பேராசிரியர் K. ஜோதி சிவஞானம், K. அருள்மதி மற்றும் A. ராஜ் மரியசூசை ஆகியோர் தமிழக அரசால் நியமிக்கப் பட்ட புதிய உறுப்பினர்கள் ஆவர்.
- இவர்களின் பதவிக் காலமானது 6 ஆண்டுகள் வரை அல்லது அவர்கள் 62 வயதினை எட்டும் வரையிலாகும்.

## களிமண் (டெரகோட்டா) கொள்கலன் – கீழடி



- சிவகங்கையிலுள்ள கீழடியில் நடைபெற்று வரும் ஏழாம் கட்ட அகழாய்வின் போது அங்குள்ள ஓர் இடத்தில் டெரகோட்டா கொள்கலன் ஒன்று கண்டெடுக்கப்பட்டது.
- இது அதன் மேற்பரப்பினூடே செல்லும் ஒரு சிக்கலான வடிவமைப்புடன் கூடிய பட்டையைக் கொண்டுள்ளது.
- இது பல அடுக்குகளைக் கொண்டிருப்பதால் இது வளைய வடிவ கிணற்றின் ஒரு பகுதியா அல்லது தானியம் சேமிக்கும் ஒரு கலனா என்று தெரியவில்லை.
- இதில் கட்டை விரல் பதித்தது போன்ற குழிகளைக் கொண்ட ஒரு பட்டையையும் இடையிடையே ஆழமான கோடுகள் இடப்பட்ட சிறுசிறு சதுரங்களாகப் பிரிக்கப்பட்ட ஒரு பட்டையையும் கொண்டு காணப்படுகிறது.

## நீரிழிவு மற்றும் ரத்த அழுத்தம் போன்றவற்றால் ஏற்படும் இறப்பைத் தடுக்க வீடு தேடி மருத்துவ வசதி வழங்கும் திட்டம் – தமிழ்நாடு

- தமிழகம் முழுவதுமுள்ள மக்களின் இல்லங்களுக்கே சென்று மருத்துவ வசதியையும் நீண்டகாலமாக சிறுநீரகச் செயலிழப்பால் பாதிக்கப்பட்டிருக்கும் நபர்களுக்கு வீட்டிலேயே டயாலிசிஸ் வசதியையும் ஏற்படுத்தி தரும் வகையிலான திட்டத்தினைத் தொடங்குவதற்கு தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும் தொற்றாநோயின் காரணமாக நிகழும் 5 லட்சம் இறப்புகளை 50% வரை குறைப்பதை நோக்கமாகக் கொண்டு இது கொண்டு வரப்பட்டுள்ளது.
- வீடு தேடி மருத்துவ வசதி வழங்கும் திட்டத்திற்கு முன்னதாக 10 நாள் அளவிலான பரவலான சோதனை திட்டத்தைத் தொடங்கி மக்களின் இரத்தத்தில் சர்க்கரை அளவு மற்றும் இரத்த அழுத்தம் ஆகியவை பரிசோதிக்கப்படும்.

- 'மக்களை தேடி மருத்துவம்' திட்டத்தின் கீழ் நீரிழிவு நோய் (அ) உயர் இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் முதன்மைப் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டு, மருத்துவ ஆலோசனைகள் அவர்களுக்கு வழங்கப் படும்.




## AK. ராஜன் குழு அறிக்கை

- நீட் தேர்வு குறித்து மக்களின் கருத்து பற்றிய தமது அறிக்கையினை A.K. ராஜன் குழு சமர்ப்பித்துள்ளது.
- பெரும்பாலான மக்கள் நீட் தேர்விற்கு எதிராக கருத்து தெரிவித்துள்ளதாக நீதிபதி ராஜன் பத்திரிக்கையாளர்களிடம் கூறினார்.
- 2016 ஆம் ஆண்டில் மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நீட் தேர்வானது 2018 ஆம் ஆண்டு வரை நடைமுறைப் படுத்தப் பட வில்லை, ஆனால் அதன் பிறகு மருத்துவக் கல்லூரிகளில் சேர்வதற்கு இத்தேர்வு கட்டாயமாக்கப் பட்டது.
- கடந்த ஆண்டில் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த இடங்களில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீத சிறப்பு இட ஒதுக்கீட்டினை மாநில அரசு அறிமுகப் படுத்தியது.
- இத்திட்டத்தின் கீழ் சுமார் 300 மாணவர்கள் பயனடைந்தனர்.
- இந்த ஆண்டு செப்டம்பர் 12 அன்று நீட் தேர்வினை நடத்த மத்தியக் கல்வித் துறை அமைச்சகம் முன்மொழிந்துள்ளது.

## பாரதியார் பல்கலைக்கழகம் – இரண்டு காப்புரிமைகள்

- பாரதியார் பல்கலைக் கழகமானது இரண்டு செயல் முறைகளுக்காக வேண்டி காப்புரிமையினைப் பெற்றுள்ளது. அவை,
    - திடக்கழிவுகளிலிருந்து உலோகங்களைப் பிரித்தெடுத்தல் மற்றும்
    - நீரிழிவு நோய்க்குச் சிகிச்சையளிக்க ஒரு பழ மரத்தை (fruit tree) பயன்படுத்துதல்
- முதல் காப்புரிமையானது துணைப் பேராசிரியர் K. இராமச்சந்திரன் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் R. சரவணக் குமார் மற்றும் P.V. ஆனந்த பத்மநாபன் ஆகியோரால் உருவாக்கப்பட்ட "உலோகங்களுடன் கூடிய திடக்கழிவுகளிலிருந்து உலோகங்களைப் பிரித்தெடுத்தல்" என்ற முறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

- இரண்டாவது காப்புரிமையானது நீரிழிவு நோயைக் குணப்படுத்த சிசைஜியம் முன்டகம் (Syzygium mundagam - காட்டு நாவல் பழமரம்) எனும் பழத்தினைப் பயன்படுத்தும் முறைக்கு வழங்கப்பட்டுள்ளது.
- பேராசிரியர் T. பரிமேலழகன் மற்றும் ஆராய்ச்சியாளர் ராகுல் சந்திரன் உள்ளிட்டக் குழுவானது இந்தப் பழ மரம் குறித்த ஆராய்ச்சியை மேற்கொண்டு அதன் பட்டைகளிலிருந்து சில செயல்மிகு மூலக்கூறுகளைப் பிரித்தெடுத்து அதனைப் பல்வேறு சோதனைகளுக்கு உட்படுத்தினர்.

## ஓலா ஸ்கூட்டர் தொழிற்சாலை – கிருஷ்ணகிரி




- ஓலா நிறுவனமானது தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டு வரும் தனது மின்சார இருசக்கர வாகனத் தொழிற்சாலையின் முதல் கட்டப் பணிகளுக்கு நிதி திரட்டுவதற்காக பரோடா வங்கியுடன் 100 மில்லியன் மதிப்பிலான ஒரு 10 ஆண்டுகால கடன் வழங்குதல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இது இந்திய மின்சார வாகனத் தொழிற்துறையிலேயே மிகப்பெரிய நீண்டகால கடன் வழங்குதல் ஒப்பந்தம் ஆகும்.
- இந்த மின்சார வாகனத் தொழிற்சாலையானது கிருஷ்ணகிரியில் 500 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது.

## 2,300 ஆண்டுகள் பழமையான படிக்கிணறு

- கொடுமணல் தொல்லியல் ஆய்வு தளத்தில் முதல் முறையாக 2,300 ஆண்டுகள் பழமையான படிக்கிணறு ஒன்று கண்டறியப்பட்டுள்ளது.
- வசிப்பிடமாகவும் தொழிற்தளமாகவும் திகழ்ந்த இந்த இடமானது ஈரோடு மாவட்டத்தின் சென்னிமலை ஒன்றியப் பகுதியில் அமைந்துள்ளது.



- சென்னிமலையிலிருந்து 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இந்த இடமானது நொய்யலாற்றின் கரையில் உள்ளது.
- 1981 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட முந்தைய தொல்லியல் ஆய்வுகள், மணிகள் மற்றும் அரிய கற்கள் தயாரிக்கப்பட்ட ஒரு தொழிற்துறை வளாகம் இங்கு இருந்ததைத் தெளிவுபடுத்தியுள்ளன.

## ஃபேர்டிரேடு சான்றிதழ் – இன்ட்கோசெர்வ், நீல்கிரிஸ்

- இன்ட்கோசெர்வ் நிறுவனமானது ஜெர்மனியிலுள்ள FLOCERT என்ற அமைப்பிடமிருந்து ஃபேர்டிரேடு (Fairtrade certification - நியாயமான வர்த்தகம்) என்ற சான்றிதழைப் பெற்ற இந்தியாவின் முதலாவது கூட்டுறவு நிறுவனமாக மாறியுள்ளது.
- இன்ட்கோசெர்வ் என்பது நீலகிரியிலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளின் தொழில் துறைக் கூட்டுறவின் தலைமை அமைப்பாகும்.
- இன்ட்கோசெர்வ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சுப்ரியா சாஹூ, முதலமைச்சர் M.K. ஸ்டாலின் அவர்களிடமிருந்து சான்றிதழைப் பெற்றுக் கொண்டார்.
- ஃபேர்டிரேடு சான்றிதழ் என்பது சர்வதேச அளவில் புகழ்பெற்ற உற்பத்திப் பொருட்களுக்கான தரச் சான்றிதழ் முறையாகும்.
- ஜெர்மனியின் போன் (Bonn) எனும் ஒரு இடத்தினைத் தலைமையகமாகக் கொண்ட ஃபேர்டிரேடு இன்டர்நேசனல் அமைப்பானது 72 நாடுகளில் இயங்கி வருகிறது.
- இன்ட்கோசெர்வ் என்பது இந்தியாவின் மிகப்பெரிய தேயிலைக் கூட்டுறவு அமைப்பு ஆகும்.




## 28 கோடி மரக்கன்றுகள்

- வனப்பரப்பை அதிகரிப்பதற்காக 28 கோடி மரக்கன்றுகளை நடுவதற்கு தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
- 1,30,006 சதுர கி.மீ. புவிப் பரப்புடைய தமிழக மாநிலத்தில் தற்போது 23.8 சதவீதம் பரப்பளவிற்கு வனப்பகுதிகள் உள்ளன.
- இதன் பரப்பளவை 33 சதவீதமாக உயர்த்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.
- அடுத்த 10 ஆண்டுகளில் யூகலிப்டஸ் போன்ற மரங்களை அகற்றி 28 கோடி மரக் கன்றுகளை நடுவதற்கான இயக்கத்தில் அனைத்துத் துறை மற்றும் இதர சமூக நல மற்றும் தன்னார்வ (அரசு சாரா) அமைப்புகளும் பங்கேற்க உள்ளன.

## மார்க்கண்டேய நதியின் குறுக்கே அணை




- அண்டை மாநிலமான கர்நாடகாவில் யார்கோல் என்னுமிடத்தில், மார்க்கண்டேய நதியின் குறுக்கே கட்டப்படும் அணையானது மிகுந்த எதிர்பார்ப்புடன் எதிர்நோக்கப் படும் தென்பெண்ணை – பாலாறு நதிநீர் இணைப்புத் திட்டத்தின் மீது மிகுந்த எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.
- கர்நாடகாவானது யார்கோல் அணையில் நீரைத் தடுத்துச் சேமித்தால் பெண்ணை ஆற்றிற்கு வரும் நீர்வரத்து குறையும்.
- இதனால் பருவ மழைக்காலத்தின் போது ஏராளமான நீரைப் பெறும் கிருஷ்ணகிரி அணைக்கு வரும் நீர்வரத்து குறைக்கப்படும்.
- இது வட தமிழகத்தின் வடிநிலப் பகுதிகளில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

*குறிப்பு*

- தென்பெண்ணை – பாலாறு நதிநீர் இணைப்புத் திட்டம் மூலமாக திருப்பத்தூர் மாவட்டத்திலுள்ள வாணியம்பாடியில் பாயும் பாலாற்றிற்கு தென்பெண்ணை ஆற்றிலிருந்து 3 டிஎம்சி அளவு நீரானது கொண்டு வரத் திட்டமிடப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் மூலம் வேலூர், திருப்பத்தூர் மற்றும் ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்கள் பயன்பெறும்.

## தமிழ் வழியில் பயின்ற மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு

- தமிழக மாநில அரசுப் பணி நியமனங்களில் தமிழ் வழியில் பயின்ற மாணாக்கர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை அமல்படுத்துமாறு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையானது மாநில அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.
- ஒன்றாம் வகுப்பு முதல் கல்லூரி வரை (அ) குறிப்பிடப்பட்ட உயர்கல்வி வரை முழுவதும் தமிழ் வழியில் பயின்ற மாணாக்கர்கள் மட்டுமே இந்தச் சட்டத்தின் கீழான 20% இடஒதுக்கீட்டினைப் பெற தகுதியுடையவர்கள் என்பதையும் உயர்நீதிமன்றக் கிளை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.
- தமிழ்நாடு பொதுப்பணி தேர்வாணையத்தின் செயலாளர், 2020 ஆம் ஆண்டு குரூப் I பணி சேர்ப்பில் இந்த ஆணையை அமல்படுத்துவதிலிருந்து ஆணையத்திற்கு விலக்கு அளிக்குமாறு கோரினார்.

- ஏனெனில் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் குரூப் I பணி சேர்ப்பு அறிவிக்கப் பட்டதாக தமிழ்நாடு பொதுத் தேர்வாணையம் தெரிவித்துள்ளது.
- ஆனால் தற்போதைய குரூப் I பணி சேர்ப்பிலும் (2020) இந்த ஆணையை அமல்படுத்துமாறு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அறிவுறுத்தியுள்ளது.

## தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணையம்

- சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கிருபாகரன் அவர்கள் தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணையத்தின் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- அரசியலமைப்பின் 39A சட்டப்பிரிவானது, வறுமை அல்லது இதரக் குறைபாடுகளால் வாடும் குடிமக்களுக்கு இலவச சட்ட சேவையை வழங்குவதற்கு மாநில அரசுக்கு வலியுறுத்துகிறது.
- 1987 ஆம் ஆண்டு சட்டப் பணிகள் சட்டமானது சமுதாயத்தின் நலிவடைந்த சமூகத்தினருக்கு இலவசமான மற்றும் தரமான சட்ட சேவையை வழங்குவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஹூண்டாய் நிறுவனத்தில் 1 கோடி மகிழுந்து உற்பத்தி




- தென்கொரிய நாட்டின் மகிழுந்து வாகன உற்பத்தி நிறுவனமான ஹூண்டாய், 10 மில்லியன் வாகனங்களை உற்பத்தி செய்து ஒரு புதிய மைல்கல்லை அடைந்துள்ளது.
- அது இந்த நிறுவனம் சமீபத்தில் அறிமுகப் படுத்திய ஹூண்டாய் அல்கசார் (Hyundai Alcazar) எனும் மகிழுந்தாகும்.
- தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அந்த காரின் மீது கையெழுத்திட்டார்.
- சென்னைக்கு அருகிலுள்ள காஞ்சிபுரம் மாவட்டத்தின் இருங்காட்டுக்கோட்டை என்னுமிடத்தில் அமைந்துள்ள ஹூண்டாய் ஆலையானது 2021 ஆம் ஆண்டில் தனது 25வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.
- இது 1996 ஆம் ஆண்டில் கருணாநிதி அவர்களின் ஆட்சியின் போது தொடங்கப் பட்டது.

## ஜெர்மனியிலுள்ள கொலோன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை

- ஜெர்மனியிலுள்ள கொலோன் பல்கலைக்கழகத்தில் உள்ள தமிழ் இருக்கைக்கு 1.25 கோடி ரூபாய் என்ற அளவில் நிதி உதவி வழங்குவதற்கு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணை ஒன்றைப் பிறப்பித்தார்.

- இந்தப் பல்கலைக்கழகத்தின் தமிழ் இருக்கையானது 1963 ஆம் ஆண்டில் டாக்டர் கிளாஸ் லுட்விக் என்பவரால் நிறுவப்பட்டது.
- தமிழ்நாட்டிற்கு வெளியே உள்ள தமிழ்ப் புத்தகங்களின் மிகப்பெரிய தொகுப்புகளில் இதுவும் ஒன்றாகும்.




## நிலைப்படுத்தப்பட்ட தொலைக் கட்டுப்பாட்டுத் துப்பாக்கி

- திருச்சிராப்பள்ளியின் ஆயுதத் தொழிற்சாலையானது இந்தியக் கடற்படையிடம் 12.7 மி.மீ. M2 NATO என்ற வகையிலான நிலைப்படுத்தப்பட்ட 15 தொலைக்கட்டுப்பாட்டுத் துப்பாக்கிகளையும் இந்தியக் கடலோர காவற்படையிடம் அது போன்ற 10 துப்பாக்கிகளையும் வழங்கியுள்ளது.
- இவை இஸ்ரேலின் எல்பிட் சிஸ்டம்ஸ் எனும் ஒரு நிறுவனத்துடனான தொழில்நுட்பப் பரிமாற்ற ஒப்பந்தத்தின் மூலம் தயாரிக்கப் பட்டவையாகும்.



## நீதிபதி முருகேசன் குழு

- இக்குழுவானது தமிழக முதலமைச்சரிடம் தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.
- இக்குழு ஜுன் 15 அன்று அமைக்கப்பட்டது.
- தொழில்நுட்பப் பாடப்பிரிவுகளில் அரசுப் பள்ளி மாணாக்கர்களின் சேர்க்கை குறித்த ஆய்வினை இக்குழுவானது மேற்கொண்டது.

- எதனால் சுமார் 2 சதவீதத்திற்கும் குறைவான அரசுப் பள்ளி மாணாக்கர்கள் மட்டுமே அண்ணா பல்கலைக்கழகத்திலும் 10 சதவீதத்திற்கும் குறைவான மாணாக்கர்கள் மட்டுமே மாநில அரசின் கீழ் இயங்கும் பொறியியல் கல்லூரிகளிலும் சேர்க்கப் படுகின்றனர் என்பது குறித்து இந்த அறிக்கையில் விவாதிக்கப் பட்டுள்ளது.
- அரசுக் கல்லூரிகளில் தொழில்முறைப் பாடப்பிரிவுகளுக்கான (மருத்துவக் கல்வி தவிர) இட ஒதுக்கீட்டில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென இக்குழு பரிந்துரைத்துள்ளது.

## அண்ணாமலை பல்கலைக்கழகம்

- இது ஒரு இணைப் பல்கலைக்கழகமாக மேம்படுத்தப்பட உள்ளது.
- விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய 4 மாவட்டங்களிலுள்ள கல்லூரிகள் மற்றும் விழுப்புரத்திலுள்ள டாக்டர் J. ஜெயலலிதா சட்டப் பல்கலைக்கழகம் ஆகியவை அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட உள்ளது.

## முதலீட்டாளர்களின் முதல் முகவரி – முதலீட்டு மாநாடு

- 2030 ஆம் ஆண்டிற்குள் தமிழகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 1 லட்சம் கோடி டாலராக (அ) ஒரு டிரில்லியன் பொருளாதாரமாக மாறும் என தமிழக முதல்வர் இந்த மாநாட்டில் தெரிவித்தார்.
- 2030 ஆம் ஆண்டுக்குள் 23 லட்சம் கோடி ரூபாய் அளவிலான முதலீட்டினை ஈர்ப்பதற்குமான ஒரு இலக்கினையும் அவர் நிர்ணயித்துள்ளார்.
- சென்னையில் நடைபெற்ற முதலீட்டு மாநாட்டில் 35 புதிய திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசு கையெழுத்திட்டுள்ளது.
- இவை 17,000 கோடி ரூபாய் அளவிலான முதலீட்டினை உள்ளடக்கியதாகும்.
- தற்போதுள்ள மற்றும் புதிய முதலீட்டாளர்களுக்காக வேண்டி 24 துறைகளின் கீழ்வரும் 100க்கும் மேற்பட்ட சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்காக ஒற்றைச் சாளர தளத்தின் 2வது பதிப்பினையும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.
- தமிழ்நாட்டில் புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகிய துறைகளில் தொடக்க நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு முதலீட்டை ஊக்குவிப்பிதற்கான மாநிலத் தலைமை நிறுவனமான கைடன்ஸ் தமிழ்நாடு எனும் ஒரு நிறுவனமானது அமெரிக்க தமிழ் தொழில்முனைவோர் சங்கத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.
- டிஜிட்டல் உத்வேக திட்ட அமைப்பானது புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தொடக்க நிறுவனங்களுக்கு நிதி உதவியை வழங்கி உள்ளது.
- இந்தத் திட்டத்திற்காக மாநில அரசு 5 கோடி ரூபாய் நிதி வழங்கியுள்ளது.

### *சில முக்கிய முதலீட்டு ஒப்பந்தங்கள்*

- மகேந்திரா வேல்டு சிட்டியில் டென்மார்க் நாட்டு வாகன உதிரி பாகங்கள் உற்பத்தி நிறுவனமான டைநெக்சின் உற்பத்தி அலகும், ஈரோட்டில் கோரல் மேனுஃபேக்சரிங் ஒர்க்சின் உற்பத்தி அலகும் தொடங்கப் பட்டுள்ளன.
- ஒசூரில் INOX ஏர் பிராடக்ட்ஸ் (வாயு சாதனங்கள்) நிறுவனத்தின் திரவ ஆக்சிஜன்

ஆலைக்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

- தூத்துக்குடி, திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் JSW ரிநியூ எனர்ஜி டூ லிமிடெட் நிறுவனத்தின் ஒப்பந்தம்.
- ஒரகடத்திலுள்ள சிப்காட் வளாகத்தில் ஜெர்மன் நாட்டின் ZF வாப்கோ நிறுவனத்தின் ஒப்பந்தம்.
- அம்பத்தூரில் சிங்கப்பூர் நாட்டின் கேபிட்டா லாண்ட் நிறுவனம் மேற்கொண்டுள்ள ஒப்பந்தம்.
- கோயம்புத்தூரில் ஸ்ரீவாரு மோட்டார்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தம்.
- சிறுசேரி சிப்காட் IT பார்க் – TCS Phase III.




## வயலின் இசைக் கலைஞர் சிக்கல் R. பாஸ்கரன்



- புகழ்பெற்ற கர்நாடக மரபு வழி வயலின் இசைக்கலைஞர் ‘கலைமாமணி’ சிக்கல் R. பாஸ்கரன் சமீபத்தில் காலமானார்.
- திருவாரூர் சுப்பா ஐயர் என்பவரிடம் தனது 11வது வயதில் வயலின் இசையினைக் கற்றுக் கொண்ட இவர் பின்பு மாயவரம் கோவிந்தராஜன் பிள்ளையிடம் பயிற்சி பெற்றவராவார்.
- இவர் அனைத்திந்திய வானொலியின் ஒரு ‘A’ ரக கலைஞர் ஆவார்.
- இவர் 1976 முதல் 1994 வரையில் சென்னை வானொலி நிலையத்தில் கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் பணி புரிந்து வந்தார்.

## கொற்கையில் துளையிடப்பட்ட சுடுமண் குழாய்கள் கண்டுபிடிப்பு

- கொற்கையில் நடைபெற்ற தொல்பொருள் ஆராய்ச்சியின் போது ஒன்றன்மேல் ஒன்றாய் அடுக்கப்பட்ட 9 துளையிடப்பட்ட சுடுமண் குழாய்கள் கண்டெடுக்கப் பட்டு உள்ளன.
- கொற்கையானது தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஒரு பண்டையக் கால நகரமாகும்.
- இந்தக் குழாய்களின் விட்டம் மற்றும் உயரம் ஆகியவை முறையே 27 செ.மீ. அளவு உடையவை ஆகும்.



## நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிப்பதற்காக தனி நபர் மசோதா மாநிலங்களவையில் அறிமுகம்

- நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிப்பதற்காக வேண்டி மருத்துவக் கல்வி சட்டங்கள் (திருத்தம்) மசோதா 2021 என்ற ஒரு மசோதாவினை தி.மு.கவின் மாநிலங்களவை உறுப்பினர் P. வில்சன் அறிமுகம் செய்துள்ளார்.
- இந்தியாவில் மருத்துவக் கல்வி தொடர்பான சில குறிப்பிட்டச் சட்டங்களை இந்த மசோதா திருத்த உள்ளது.

## 2500 ஆண்டுகள் பழமை வாய்ந்த வாள் மற்றும் மண்பானை

- கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூரை அடுத்த மயிலாடும்பாறையில் நடத்தப்பட்ட ஒரு அகழாய்வில் 2 ஆயிரத்து 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த வாள் மற்றும் மண்பானை தோண்டி எடுக்கப்பட்டன.
- அந்த இரும்பு வாளானது 70 சென்டிமீட்டர் நீளம் கொண்டதாகும்.
- அந்த மண்பானையானது 50 சென்டி மீட்டர் அளவு கொண்டதாகும்.



## சுபா வெங்கடேசன் மற்றும் தனலட்சுமி ஆகியோருக்கு அரசுப் பணி

- ஒலிம்பிக்கில் பங்கேற்றுள்ள தமிழ்நாடு வீராங்கனைகள் சுபா வெங்கடேசன், மற்றும் தனலட்சுமி ஆகியோருக்கு மாநில அரசுப் பணி வழங்கப்படும் என்று தமிழ்நாட்டு விளையாட்டுத் துறை அமைச்சர் மெய்யநாதன் கூறியுள்ளார்.
- மேலும், தமிழ்நாட்டில் 4 இடங்களில் ஒலிம்பிக் அகாடமி தொடங்கப்பட்டு, சர்வதேச அளவில் தமிழ்நாட்டு வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்றும் அவர் கூறினார்.

## சுந்தரதேவன் குழு

- தமிழக அரசானது 13 உறுப்பினர்கள் கொண்ட நிபுணர் குழு ஒன்றை அமைத்துள்ளது.
- தமிழக அரசின் தொழில்துறையின் முன்னாள் செயலாளர் N. சுந்தரதேவன் இக்குழுவிற்குத் தலைமை தாங்குகிறார்.
- இக்குழுவானது தமிழகத்திலுள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை எதிர்கொள்ளும் சவால்களை ஆராய்ந்து, அத்துறையின் மீள்விற்கு அவசியமான உடனடி, இடைக்கால மற்றும் நீண்டகால நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கும்.

## மைசூர் மற்றும் சென்னைக்கு இடையேயான 1892 ஒப்பந்தம்

- ஆறுகளின் குறுக்கே புதிய பாசனத் திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்து மைசூர் மற்றும் மதராஸ் மாநிலங்களுக்கிடையே (தற்போதைய கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு) 1892 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.
- இதன் படி, ஒரு புதிய நீர்த்தேக்கம் அல்லது ஒரு அணையை மைசூரு அரசு கட்ட விரும்பினால், அதன் முழுத் திட்டத்தையும் சென்னை அரசுக்கு அனுப்பி அதன் ஒப்புதலைப் பணி தொடங்குவதற்கு முன்பே பெற வேண்டும்.
- அதே சமயம், தனது உரிமையைப் பாதுகாப்பதற்குத் தவிர வேறு எந்த ஒரு காரணத்திற்காகவும் ஒப்புதல் அளிக்க சென்னை அரசு மறுக்கக் கூடாது.



# தேசியச் செய்திகள்

## சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் புதிய வரையறை

- பெறுநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகமானது சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வரையறையை விரிவுபடுத்தியுள்ளது.
- விரிவுபடுத்தப்பட்ட இந்த வரையறையின்படி ஒரு சிறு மற்றும் நடுத்தர நிறுவனம் என்பது 250 கோடி ரூபாய் வரை விற்பனை செய்யக் கூடிய மற்றும் 50 கோடி ரூபாய் வரை கடன்பெறும் ஒரு பட்டியலிடப்படாத நிறுவனம், வங்கி, காப்பீட்டு (அ) நிதி நிறுவனமாகும்.
- இதற்கு முந்தைய வரம்பானது விற்பனைக்கு 50 கோடி ரூபாயும் கடன் பெறுதலுக்கு 10 கோடி ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.
- தற்போது 2021 ஆம் ஆண்டு நிறுவன (கணக்கீட்டுத் தர நிலைகள்) விதிகளின் கீழ் பல்வேறு விலக்குகளைப் பெறுவதற்கு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.
- இது சிறிய நிறுவனங்களுக்கான ஒழுங்குமுறை சார்ந்த சிக்கல்களைக் குறைக்கும்.

## தலைமை வழக்குரைஞர் K.K. வேணுகோபால் பதவிக் காலம் நீட்டிப்பு



- தலைமை வழக்குரைஞர் K.K. வேணுகோபால் அவர்களின் பதவிக் காலத்தினை மேலும் ஒரு வருடத்திற்கு அரசு நீட்டித்து உத்தரவிட்டுள்ளது.
- திரு. வேணுகோபால் அவர்கள் 2022 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் தேதி வரை அரசின் தலைமை சட்ட அதிகாரியாகப் பணியாற்றுவார்.
- மத்திய அரசினால் இவரது பதவிக் காலம் நீட்டிக்கப்படுவது இது இரண்டாவது முறை ஆகும்.
- திரு. வேணுகோபால் அவர்கள் 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தலைமை வழக்குரைஞராக ஒரு மூன்றாண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டார்.
- 2020 ஆம் ஆண்டில் முதன்முறையாக இவரது பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டது.
- 89 வயதான இவர் 15வது தலைமை வழக்குரைஞராக பொறுப்பேற்றார்.

## நாஷா முக்த் பாரத் அபியான்

- மத்திய அரசானது நாஷா முக்த் பாரத் அபியான் எனும் திட்டத்திற்கான ஒரு வலைதளத்தைத் தொடங்கியுள்ளது.
- இது போதைப்பொருள் பயன்பாடு மற்றும் அதன் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினத்தைக் குறிக்கும் வகையில் தொடங்கப்பட்ட ஒரு போதைப் பொருள் பயன்பாட்டிற்கு எதிரான பிரச்சாரமாகும்.
- இந்த வலைதளமானது சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்பு அமைச்சர் தாவர்சந்த் கெலாட் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

## மத்தியப் புலனாய்வு அமைப்பு – புதிய சிறப்பு இயக்குநர்

- பிரவீன் சின்ஹாவை மத்தியப் புலனாய்வு அமைப்பின் சிறப்பு இயக்குநராக நியமிப்பதற்கு அமைச்சரவையின் நியமனக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- இயக்குநர் பதவியை அடுத்து இந்த அமைப்பின் இரண்டாவது மூத்த நிலைப் பதவியாகக் கருதப் படுவது சிறப்பு இயக்குநர் பதவியாகும்.
- இந்தப் பதவியானது கடந்த மூன்று ஆண்டுகளாக காலியாக இருந்தது.
- இதற்கு முன்பு ராகேஸ் அஸ்தனா என்பவர் இந்தப் பதவியினை வகித்திருந்தார்.
- அமைச்சரவையின் நியமனக் குழு இந்தியப் பிரதமரைத் தலைமையாகவும் உள்துறை அமைச்சரையும் உள்ளடக்கி இருக்கின்றது.

## 'ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை' திட்டம்

- ஒரே நாடு ஒரே குடும்ப அட்டைத் திட்டத்தை அமல்படுத்துமாறு அனைத்து மாநில மற்றும் ஒன்றியப் பிரதேச அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கப்பட்டது.
- இது 2013 ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டது.
- நான்கு மாநிலங்கள் இன்னும் இந்தத் திட்டத்தில் இணையவில்லை.
- அவை அசாம், சத்தீஸ்கர், டெல்லி மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவனவாகும்.

## மாடர்னா நிறுவனத்தின் கோவிட்-19 தடுப்பு மருந்து

- இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பானது மாடர்னா நிறுவனத்தின் கோவிட்-19 தடுப்பு மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக சிப்லா நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.
- சிப்லா மும்பையில் அமைந்துள்ள ஒரு மருந்து உற்பத்தி நிறுவனமாகும்.
- இது நாட்டில் அவசரகாலப் பயன்பாட்டிற்கு அனுமதி வழங்கப்படும் நான்காவது தடுப்பு மருந்தாகும்.
- தற்போது இந்தியாவில் கோவாக்சின், கோவிசீல்டு மற்றும் ஸ்புட்நிக் ஆகிய மூன்று கோவிட் தடுப்பு மருந்துகள் பயன்பாட்டில் உள்ளன.




## பனிப்பாறை ஏரிகளின் வரைபடம்




- ❖ ஜல்சக்தி அமைச்சகமானது கங்கை ஆற்றுப் படுகையின் அங்கமான பனிப்பாறை ஏரிகளுடைய புதுப்பிக்கப்பட்ட வரைபடத்தினை வெளியிட்டுள்ளது.
- ❖ கங்கை ஆற்றுப் படுகையில் சுமார் 4,707 பனிப்பாறை ஏரிகள் வரைபடமிடப் பட்டு உள்ளன.

- 0.25 ஹெக்டேர் என்ற அளவிற்கும் மேலான நீர்ப்பரப்புடைய பனிப்பாறை ஏரிகளானது ரிசோர்ஸ்சாட் – 2 நேர்க்கோட்டு புகைப்பட சுய ஆய்வு உணர்வு – IV என்ற செயற்கைக் கோளின் தரவினைப் பயன்படுத்தி வரைபடமாக்கப்பட்டுள்ளன.
- இந்த வரைபடமானது இஸ்ரோவின் தேசிய தொலைதூர உணர்வு மையத்தின் புவன் தளத்தில் கிடைக்கப் பெறுகிறது.

## சிபு லால் குழு

- இன்ஃபோசிஸ் நிறுவனத்தினுடைய முன்னாள் தலைமை நிர்வாக இயக்குநரான S.D. சிபு லால் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பணிக்குழுவின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்தப் பணிக்குழுவானது அரசின் 'கர்மயோகி திட்டத்தின்' மூலம் முக்கிய ஆட்சிப் பணி சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு வேண்டி அரசிற்கு உதவி வழங்கச் செய்வதற்காக அமைக்கப் பட்டுள்ளது.
- சிக்சா லோகம் எனும் ஒரு அமைப்பின் நிறுவனரும் இன்ஃபோசிஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரியுமான சிபு லாலைத் தவிர கோவிந்த் ஐயர் மற்றும் பங்கஜ் பன்சால் ஆகியோரும் இந்தப் பணிக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.
- மத்திய அரசானது தேசிய ஆட்சிப்பணி திறன் மேம்பாட்டுத் திட்டமான கர்மயோகி திட்டத்திற்குச் சமீபத்தில் ஒப்புதல் அளித்தது.
- நாட்டின் அனைத்து ஆட்சிப் பணிகளுக்குமான விதிமுறை அடிப்படையிலான பயிற்சிக்குப் பதிலாக பணிசார்ந்த பயிற்சிமுறையை கையாளுவதற்கான ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவே இந்த திட்டமானது தொடங்கப் பட்டுள்ளது.

## 'Anomalies in Law and Justice' – புத்தகம்



- இந்தியத் தலைமை நீதிபதி N.V. ரமணா அவர்கள் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி R.V. ரவீந்திரனுடைய 'Anamalies in Law and Justice' எனும் புத்தகத்தை வெளியிட்டார்.
- சட்டம் மற்றும் ஒழுங்குமுறையானது இன்னும் வளர்ந்து வருகிறது என்பதைப் பற்றியும் நீண்ட காலமாக நீடித்து வரும் சிக்கல்களுக்குத் தீர்வு காண அதிக மாற்று சிந்தனை தேவை என்பதைப் பற்றியும் சாதாரண மக்களுக்குப் புரிய வைப்பதே இந்தப் புத்தகத்தின் நோக்கமாகும்.

## மும்பை சமாச்சார் – 200வது ஆண்டு

- இந்தியாவின் பழமை வாய்ந்த மற்றும் தற்போதும் இயங்கி வரும் செய்தித்தாளான மும்பை சமாச்சார் ஆனது ஜூலை 01 அன்று தனது 200வது ஆண்டில் அடி பதித்தது.
- இந்த குஜராத்திய மொழிப் பத்திரிக்கையானது முதன்முதலில் 1822 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டது.
- இது பார்சி அறிஞரான ஃபர்தூன்ஜி முரஷ்பென் (Fardoonji Murazban) என்பவரால் நிறுவப் பட்டது.




## NATRAX – இந்தூர்

- கனரகத் தொழில்துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் என்ற துறைக்கான அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேகர் இந்தூரில் அமைக்கப்பட்டுள்ள NATRAX (தேசிய வாகன சோதனைத் தடங்கள் – National Automotive Test Tracks) எனும் அதிவேக தடத்தினைத் தொடங்கி வைத்தார்.
- இது ஆசியாவின் மிக நீளமான அதிவேக தடமாகும்.
- இது உலகின் 5வது மிக நீளமான அதிவேக தடமாகும்.
- இதன் நீளம் 11.3 கி.மீ. ஆகும்.
- இது இருசக்கர வாகனம் முதல் கனரக இழுபொறி இயந்திர இணைப்பு ஊர்தி வரையிலான அனைத்து உலக அதிவேக வாகனங்களின் சோதனைக்குமான ஒரே தீர்வாக அமையும்.



## இந்திரஜால்

- ஹைதராபாத்தில் அமைந்துள்ள தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமான க்ரீன் ரோபோட்டிக்ஸ் (Grene Robotics) என்ற நிறுவனமானது இந்தியாவில் முதல் முறையாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 'இந்திரஜால்' எனப் படும் ஆளில்லா ஒரு விமான எதிர்ப்புக் கவச அமைப்பினை வடிவமைத்துக் கட்டமைத்துள்ளது.
- இந்தக் கவச அமைப்பானது 1000 முதல் 2000 ச.கி.மீ. வரையிலான பரப்பளவை தனித்துப் பாதுகாக்கும் திறனைக் கொண்டுள்ளது.
- வான்வழி ஆபத்துகளை ஆராய்ந்து அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலம் வான்வழி தாக்குதல்களிலிருந்து இது பாதுகாப்பு அளிக்கிறது.
- ஆளில்லா வான்வழி விமானங்கள், வெடிபொருள் ஆயுதங்கள், மற்றும் குறைந்த ரேடார் வரம்புடைய குறுக்கு வெட்டு இலக்குகள் போன்றவை வான்வழியிலான ஆபத்துகளாகும்.

## பசுமை சரக்கு வழித்தடம் – 2 – முதல் பயணம்

- கடல்வழி சரக்குப் போக்குவரத்து அமைச்சகமானது பசுமை சரக்கு வழித்தடம் – 2 வழியிலான முதல் பயணத்தைத் தொடங்கி வைத்துள்ளது.
- புதிதாக தொடங்கப்பட்டுள்ள இந்த சேவையின் முதல் கட்டமானது கொச்சினை பேய்ப்பூர்-ஆழிக்கல் ஆகியவற்றுடன் இணைக்கும், பிந்தையக் காலகட்டங்களில் கேரளாவிலுள்ள கொல்லம் துறைமுகமும் இணைக்கப்படும்.
- கடல்சார் வர்த்தகத்தினை மேம்படுத்துவதன் மூலம் முக்கிய மற்றும் இதர துறைமுகங்களுக்கிடையேயான இணைப்பு மற்றும் இணைதிறனையும் இது மேம்படுத்தும்.

## உடல் பருமனைத் தடுப்பது குறித்த தேசிய மாநாடு – நிதி ஆயோக்

- தாய்வழி, இளம்பருவ மற்றும் குழந்தைப் பருவ உடல் பருமனைத் தடுப்பது குறித்த ஒரு தேசிய மாநாடானது நிதி ஆயோக் அமைப்பினால் நடத்தப்பட்டது.
- இந்த மாநாட்டின் தலைவர் டாக்டர் V.K. பால் மற்றும் துணைத் தலைவர் டாக்டர். R. ஹேமலதா ஆகியோர் ஆவர்.
- நிதி ஆயோக் அமைப்பானது உடல்பருமனை ஒரு "அரவமற்ற தொற்றுநோய்" (silent epidemic) என விவரித்துள்ளது.

## பயிர் காப்பீட்டு விழிப்புணர்வுப் பிரச்சாரம்

- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சர் நரேந்திர சிங் தோமர் ஃபசல் பீம யோஜனா திட்டத்திற்கான பயிர் காப்பீட்டு விழிப்புணர்வுப் பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்தார்.
- இது பயிர் காப்பீட்டு வாரத்தின் போது தொடங்கப்பட்டது (ஜூலை 1 முதல் ஜூலை 7 வரை).
- பிரதான் மந்திரி ஃபசல் பீம யோஜனா திட்டமானது 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 அன்று தொடங்கப் பட்டது.
- ஒவ்வொரு விவசாயிக்கும் காப்பீட்டு வசதியை வழங்கும் நோக்கில் இந்த திட்டமானது தொடங்கப் பட்டது.

- கடந்த வருட மகசூல் தரவுகளில் இருக்கும் வருடாந்திர வணிக (அ) தோட்டப் பயிர்கள் உட்பட உணவு மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களுக்கும் இத்திட்டம் மூலம் காப்பீடு வழங்கப் படும்.




## தொழில்துறை ஆராய்ச்சி ஈடுபாட்டு முன்னெடுப்பிற்கான நிதி

- அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியமானது இன்டெல் இந்தியா நிறுவனத்துடன் இணைந்து இம்மாதிரியான முதல் வகையிலான ஆராய்ச்சி முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இது "தொழில்துறை ஆராய்ச்சி ஈடுபாட்டிற்கான நிதி" (Fund for Industrial Research Engagement – FIRE) எனப்படும்.
- இது இந்தியாவில் மேம்பட்ட தொழில்நுட்பம் சார்ந்த உள்ளார்ந்த ஆராய்ச்சிகளில் உதவும்.
- இது உள்ளார்ந்த தொழில்நுட்பப் பகுதிகளில் (செயற்கை நுண்ணறிவு, இயந்திர கற்றல் போன்ற) தொழில்துறை சார்ந்த வாய்ப்புகளைக் கைப்பற்றுவதற்கு இந்திய ஆராய்ச்சியாளர்களுக்கு உறுதுணையாக இருக்கும்.
- அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியமானது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் ஒரு சட்டரீதியிலான அமைப்பாகும்.
- FIRE முன்னெடுப்பானது கூட்டு நிதி வழங்கீட்டு முறையுடன் கூடிய அரசு மற்றும் தொழில்துறை ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.

## புத்தாக்க ஊக்குவிப்பு நிறுவனம் – 2021

- இன்வெஸ்ட் இந்தியா நிறுவனத்திற்கு 2021 ஆம் ஆண்டிற்கான உலகின் புத்தாக்க ஊக்குவிப்பு நிறுவனம் எனும் ஒரு பெருமை 'OCO குளோபல்' என்ற நிறுவனத்தால் வழங்கப் பட்டுள்ளது.

- ❖ இன்வெஸ்ட் இந்தியா நிறுவனமானது இந்திய தேசிய முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் செயலாக்க நிறுவனம் ஆகும்.
- ❖ இது 2009 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- ❖ இது வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையின் கீழ் ஓர் இலாப நோக்கமில்லா அமைப்பாக நிறுவப் பட்டது.
- ❖ இந்தியா முழுவதும் நிலையான முதலீடுகளைச் செயல்படுத்துவதற்கான புதிய கூட்டிணைவுகளைக் கண்டறிந்து அதனை மேம்படுத்துவதில் உதவும் துறைசார்ந்த முதலீடுகளில் இது ஈடுபாடு செலுத்துகிறது.

## இந்தியப் பெருங்கடல் கடற்படைக் கருத்தரங்கம்

- ❖ 7வது இந்தியப் பெருங்கடல் கடற்படைக் கருத்தரங்கமானது பிரான்சு நாட்டின் கடற்படையினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- ❖ இது இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் நிகழ்வாகும்.
- ❖ இது 2008 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தொடங்கப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச கடல்சார் பாதுகாப்பு முன்னெடுப்பாகும்.
- ❖ பிராந்திய கடல்சார் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கவும் உறுப்பினர் நாடுகளுக்கிடையேயான நட்புறவினை மேம்படுத்துவதற்குமான ஒரு மன்றமாக இது திகழ்கிறது.
- ❖ இந்தக் கருத்தரங்கில் இந்தியப் பெருங்கடலில் நிரந்தரமான நிலப் பிராந்தியத்தைக் கொண்டுள்ள 24 நாடுகள் மற்றும் 8 பார்வையாளர் நாடுகள் ஆகியவை பங்கேற்கின்றன.



## UDISE + அறிக்கை

- ❖ மத்திய கல்வித்துறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் நிசாங் அவர்கள் 2019-2020 ஆம் ஆண்டிற்கான கல்விக்கான ஒருங்கிணைக்கப்பட்ட மாவட்ட அளவிலான தகவல் அமைப்பு பிளஸ் அறிக்கையினை (Unified District Information System for Education Plus – UDISE +) வெளியிட்டுள்ளார்.

- இந்த அறிக்கையானது இந்தியப் பள்ளிக்கல்வி முறை குறித்த நேர்மறை மற்றும் எதிர்மறையான சில சுவாரஸ்யம் மிக்க உண்மைத் தகவல்களை எடுத்துரைத்து உள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 2019-20 ஆம் ஆண்டில் ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் மொத்த மாணாக்கர் சேர்க்கையானது 13.01 கோடியாகவும் மாணவிகள் சேர்க்கையானது 12.08 கோடியாகவும் இருந்தது.




## முதல் ஆளில்லா விண்கலம் – இஸ்ரோ

- முதலாவது ஆளில்லா விண்கலமானது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலும், இரண்டாவது ஆளில்லா விண்கலமானது 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலும் மற்றும் கடைசி ஆளில்லா விண்கலமானது 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலும் விண்ணில் ஏவப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.
- ஆனால் கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக இந்த தேதிகள் ஒத்தி வைக்கப் பட்டன.
- விண்வெளிக்கு வீரர்களை அனுப்பும் திட்டத்தைத் தொடர்ந்து, 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் முதல் ஆளில்லா விண்கலமும் 2022-23 ஆம் ஆண்டில் இரண்டாவது ஆளில்லா விண்கலமும், அதைத் தொடர்ந்து மனித விண்வெளிப் பயணம் திட்டமிடப் பட்டுள்ளது.
- இஸ்ரோவினுடைய அதிகன எடை சுமக்கும் ஏவுகலமான ஜிஎஸ்எல்வி MK-III என்ற ஏவுகலமானது இந்தத் திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட உள்ளது.
- ககன்யான் எனப்படும் இந்த திட்டத்தின் வெற்றியுடன் சேர்த்து, அமெரிக்கா, சீனா மற்றும் ரஷ்யா ஆகியவற்றையடுத்து விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பிய நான்காவது வெற்றி நாடாக இந்தியா உருப்பெறும்.

## இந்தியா மற்றும் நீர்மின் நிலையத் திட்டங்கள் – 2030

- இந்திய நாடானது 2030 ஆம் ஆண்டுக்குள் 26 GW திறனுடைய (அல்லது 26,000 MW) நீர்மின் நிலையங்களை நிறுவும் என கணிக்கப் பட்டுள்ளது.
- சர்வதேச எரிசக்தி முகமையினால் வெளியிடப்பட்ட “நீர்மின் நிலைய சிறப்புச் சந்தை அறிக்கை – 2030 ஆம் ஆண்டுக்கான பகுப்பாய்வு மற்றும் முன்கணிப்பு” எனும் அறிக்கையில் இது கூறப்பட்டுள்ளது.
- தற்போது இந்தியாவில் இயங்கி வரும் 207 நீர்மின் நிலையங்களின் ஒட்டு மொத்த திறன் ஆனது 46,209 MW ஆகும்.

- 2021 மற்றும் 2030 ஆகிய ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் உலகளாவிய நீர்மின் நிலையங்களின் திறனானது 17% வரை (அ) 230 GW திறன் வரை உயரும்.
- 2030 ஆம் ஆண்டில் நீர்மின் ஆற்றல் துறையில் உலகளாவிய திறன் வளர்ச்சியில் 40 சதவீதத்துடன் சீனா மிகப்பெரிய நீர்மின்னாற்றல் சந்தையாக திகழும்.
- உலகின் மிகப்பெரிய நீர்மின் நிலையமானது சீனாவில் உள்ள த்ரீ கார்ஜஸ் என்ற அணையாகும்.

## அம்பேத்கர் நினைவு மற்றும் கலாச்சார மையம்

- லக்னோவில் அமைக்கப்பட உள்ள அம்பேத்கர் நினைவு மற்றும் கலாச்சார மையத்திற்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.
- இந்தக் கலாச்சார மையமானது லக்னோவிலுள்ள ஐஷ்பாக் ஈத்கா என்ற பள்ளி வாசலின் முன்னே நிறுவப்பட உள்ளது.
- இந்த மையத்தில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 25 அடி உயர உருவச் சிலையானது நிறுவப் பட உள்ளது.

## மியாசாகி மாம்பழம்

- இந்தப் பழமானது ஜப்பான் நாட்டில் உள்ள கியூஷூ எனும் தீவின் தலைநகரான மியாசாகி நகரில் முதன்மையாக வளர்க்கப் பட்டது.
- இது உலகின் விலையுயர்ந்த மாம்பழமாகக் கருதப் படுகிறது.
- இவை 350 கிராம் வரை எடையுள்ளதாக இருக்கும்.
- இவற்றுள் எதிர் ஆக்சிகரணிகள், பீட்டா-கரோட்டின் மற்றும் ஃபோலிக் அமிலம் போன்ற ஊட்டச் சத்துகள் நிறைந்துள்ளன.
- சமீபத்தில் இந்தப் பழவகையானது ஜபல்பூரைச் சேர்ந்த ராணி மற்றும் பரிஹர் என்ற தம்பதியினரால் வளர்க்கப் பட்டு வருவது கண்டறியப்பட்டது.



## NIPUN பாரத் முன்னெடுப்பு

- மத்திய அரசு 2021 ஆம் ஆண்டு ஜூலை 05 ஆம் தேதியன்று "NIPUN பாரத் முன்னெடுப்பு" எனும் புதிய ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளது.
- NIPUN என்பதன் விரிவாக்கம் "National Initiative for Proficiency in reading with Understanding and

Numeracy” (புரிதல் மற்றும் எண்ணறிவு ஆகியவற்றுடன் கூடிய படிப்பாற்றலைப் பெறச் செய்வதற்கான ஒரு தேசிய முன்னெடுப்பு) என்பதாகும்.

- ❖ பொதுவான கல்வியறிவு மற்றும் எண்ணறிவு ஆகியவற்றைப் பெறுதலை உறுதி செய்வதற்கான ஒரு முயற்சியில் அதற்குத் தக்க சூழ்நிலைகளை இந்த திட்டமானது வழங்கும்.
- ❖ 2026-27 ஆம் ஆண்டுக்குள் ஒவ்வொரு குழந்தையும் தனது 3 ஆம் வகுப்பு படிப்பினை முடிக்கும் போது படிப்பாற்றல், எழுத்தாற்றல் மற்றும் எண்ணறிவு ஆகியவற்றில் போதுமான கற்றல் திறன்களை அடைவதை இது உறுதி செய்யும்.
- ❖ இந்த முன்னெடுப்பானது சமக்ரா சிக்சா (Samagra Shiksha) எனும் பள்ளிக் கல்வித் திட்டத்தின் ஒரு அங்கமாகச் செயல்படும்.
- ❖ இது ஐந்து அடுக்கிலான அமலாக்கச் செயல்முறையாகும்.
- ❖ இது அனைத்து மாநில மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிலும் தேசிய, மாநில, மாவட்ட, வட்டார மற்றும் பள்ளி நிலைகளில் அமைக்கப்படும்.
- ❖ இது புதிய கல்விக் கொள்கையைத் தொடர்ந்து அதற்கேற்ப உருவாக்கப்பட்டதாகும்.




## தர்பார் முறைக்கு முடிவு

- ❖ கோடைகாலத் தலைநகரான ஸ்ரீநகர் மற்றும் குளிர்கால தலைநகரான ஜம்மு ஆகியவற்றுக்கு இடையே இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அலுவலகங்களை மாற்றியமைக்கும் 149 வருட பாரம்பரிய முறையை துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா முடிவுக்கு கொண்டு வந்துள்ளார்.
- ❖ ஜம்மு & காஷ்மீரில் தர்பார் இடமாற்றத்தின் போதான ஊழியர்களுக்கான குடியிருப்பு வசதிகளை நிர்வாகம் ரத்து செய்துள்ளது.
- ❖ அம்மாநில ஊழியர்கள் இனிமேல் ஜம்மு அல்லது காஷ்மீர் மாநிலத்தில் நிலையாகக் குடியிருப்பர் என்பதை இது குறிக்கிறது.
- ❖ டோக்ரா வம்ச மன்னர் மகாராஜா குலாப் சிங் 1872 ஆம் ஆண்டில் தலைநகரை மாற்றும் இந்தப் பாரம்பரிய முறையைத் தொடங்கி வைத்ததாக நம்பப்படுகிறது.
- ❖ 1947 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஜம்மு & காஷ்மீரின் அரசியல் வர்க்கத்தினரால் இந்த முறை தொடரப் பட்டது.




## நிலக்கரி உற்பத்தி – இந்தியா

- இந்தியாவின் மொத்த நிலக்கரி உற்பத்தியானது கடந்த நிதி ஆண்டில் 716.084 மில்லியன் டன்களாக குறைந்து 2.02% என்ற அளவிற்குச் சரிவினைக் கண்டுள்ளது.
- சத்தீஸ்கரில் அதிகபட்சமாக 158.409 மில்லியன் டன் நிலக்கரி உற்பத்தியானது பதிவாகியுள்ளது.
- இதனையடுத்து ஒடிசா (154.150 MT), மத்தியப் பிரதேசம் (132.531 MT) மற்றும் ஜார்க்கண்ட் (119.296 MT) ஆகியவை உள்ளன.

## CoWin உலக மாநாடு

- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி CoWin உலக மாநாட்டினைத் தொடங்கி வைத்து அதில் உரையாற்றினார்.
- இந்த உலக மாநாட்டில் 142 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றனர்.
- இந்த மாநாடானது சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம், வெளியுறவு விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் தேசிய சுகாதார ஆணையம் ஆகியவற்றால் இணைந்து நடத்தப்பட்டது.
- இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட தனது CoWin தளத்தினை அனைவருக்குமான ஒரு தளமாக மாற்றுவதற்கு இந்தியா முன்வந்துள்ளதால், இதன் மூலம் அனைத்து (எந்தவொரு) நாடுகளும் இதனைப் பயன்படுத்த இயலும்.

## புதிய ஆளுநர்கள்

- இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் எட்டு மாநிலங்களுக்குப் புதிய ஆளுநர்களை நியமித்துள்ளார்.
- அரசியலமைப்பின் 155 என்ற விதியின்படி, ஒரு மாநிலத்தின் ஆளுநர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவார்.
- ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஆளுநர்களை நியமனம் செய்வது ஒன்றிய அரசினுடைய பொறுப்பாகும்.

| Sl.no | State | New Governor |
|---|---|---|
| 1. | Karnataka | Thawarchand Gehlot |
| 2. | Madhya Pradesh | Mangubhai Chhaganbhai Patel |
| 3. | Mizoram | Dr. Hari Babu Kambhampati |
| 4. | Himachal Pradesh | Rajendra Vishwanath Arlekar |
| 5. | Goa | P.S. Sreedharan Pillai |
| 6. | Tripura | Satyadev Narayan Arya |
| 7. | Jharkhand | Ramesh Bais |
| 8. | Haryana | Bandaru Dattatraya |

## BOLD திட்டம்

- இந்தத் திட்டமானது காதி மற்றும் கிராமத் தொழில்துறை ஆணையத்தினால் ராஜஸ்தானின் உதய்ப்பூரில் உள்ள நிச்லா மண்ட்வா எனும் ஒரு பழங்குடியினக் கிராமத்தில் தொடங்கப் பட்டது.
- இந்தத் திட்டத்தின் கீழ் அந்த பகுதியிலுள்ள காலியான, வறண்ட கிராமப் பஞ்சாயத்து நிலத்தில் 5000 சிறப்பு வகை மூங்கில் செடிகள் நடப்பட்டன.
- பாம் பூசாதுல்டா மற்றும் பாம்பூசா பாலிமார்பா எனும் இந்தச் சிறப்பு வகை மூங்கில் செடிகள் அசாமிலிருந்து கொண்டு வரப்பட்டன.
- ஒரே இடத்தில் ஒரே நாளில் அதிக எண்ணிக்கையிலான மூங்கில் செடிகளை நடச் செய்து காதி மற்றும் கிராமத் தொழில்துறை ஆணையமானது (Khadi and Village Industries Commission – KVIC) உலக சாதனையைப் படைத்துள்ளது.
- BOLD என்பதன் விரிவாக்கம் Bamboo Oasis on Lands in Drought (வறட்சியான நிலங்களில் அமைந்த மூங்கில் சோலை) என்பதாகும்.
- இது KVIC அமைப்பினால் தொடங்கப் பட்டது.
- இந்த முன்னெடுப்பானது சுதந்திர தினத்தின் 75வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவதற்காக வேண்டி (அசாதி கா அம்ரித் மகோத்சவ் என்ற பெயரில்) KVIC அமைப்பினால் நடத்தப்பட்ட “காதி மூங்கில் திருவிழாவின்” ஓர் அங்கமாக தொடங்கப் பட்டது.
- பாலைவனமாக்கலைக் குறைப்பதற்காக வறண்ட மற்றும் பகுதியளவு வறட்சியுடைய பகுதிகளில் மூங்கில்கள் நிறைந்த பசுமை பகுதியினை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

## டிஜிட்டல் வர்த்தகத்திற்கான பரவலான பிணைய அமைப்பு

- வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையானது டிஜிட்டல் வர்த்தகத்திற்கான பரவலான பிணைய அமைப்பு திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.

- இந்தப் பணியானது இந்திய தரங்கள் மன்றத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.
- பரவலான அம்சங்கள் மற்றும் பரவலான பிணைய விதிமுறைகளைக் கொண்டு பரவலான மூலங்கள் கொண்ட ஒரு செயல்முறையில் உருவாக்கப்பட்ட பரவலான பிணைய அமைப்புகளை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

## மத்சய சேது செயலி

- மத்திய மீன்வளத் துறை, கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால் வளத்துறை அமைச்சர் கிரிராஜ் சிங், இணையவழிக் கல்விப் படிப்பிற்காக வேண்டி 'மத்சய சேது' எனும் ஒரு கைபேசி செயலியை வெளியிட்டார்.
- இந்த செயலியானது புவனேஷ்வரிலுள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் மத்திய நன்னீர் மீன்வளர்ப்பு நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது.
- இதற்கான நிதி உதவியினை ஹைதராபாத்திலுள்ள தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் வழங்கியது.
- நாட்டின் மீன்வளர்ப்பு விவசாயிகளுக்கு சமீபத்திய நன்னீர் மீன்வளர்ப்புத் தொழில் நுட்பங்களை வழங்குவதே இந்த செயலியின் முதன்மை நோக்கமாகும்.



## அமைச்சரவை விரிவாக்கம்

- மத்திய அமைச்சரவையின் மறுசீரமைப்பு மற்றும் விரிவாக்கம் இதர பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் மற்றும் பட்டியலினச் சாதியினர் போன்ற சமுதாயத்தினர் ஒரு வரலாற்றுச் சாதனை அளவில் சேர்க்கப் பட்டுள்ளதைக் கண்டுள்ளது.
- 43 அமைச்சர்களின் பதவியேற்பு பிரமாணமானது பிரதமர் மோடி அவர்கள் மேற்பார்வையில் நடந்தேறியது.
- முன்பு 12 அமைச்சர்கள் (7 அமைச்சரவை உறுப்பினர்கள் மற்றும் 5 இணை அமைச்சர்கள்) ராஜினாமா செய்தனர்.
- தற்போது இந்திய அரசில் பட்டியலினச் சாதியினர் சமுதாயத்தைச் சேர்ந்த 12 அமைச்சர்களும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த 27 அமைச்சர்களும் இடம் பெற்றுள்ளனர்.
- மேலும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் வகுப்பினைச் சேர்ந்த 8 அமைச்சர்களும் ஒரு இஸ்லாமியர், ஒரு கிறித்துவர், ஒரு சீக்கியர் மற்றும் இரண்டு புத்த மதத்தவர் உள்ளிட்ட சிறுபான்மையினச் சமூகத்தைச் சேர்ந்த 5 அமைச்சர்களும் இடம் பெற்று உள்ளனர்.
- அமைச்சரவையில் 11 பெண் அமைச்சர்களும் இடம் பெற்றுள்ளனர், அவர்களுள் 2 உறுப்பினர்கள் காபினெட் அமைச்சர்களாகவும் மற்றும் இதர உறுப்பினர்கள் இணை அமைச்சர்களாகவும் பொறுப்பேற்றனர்.




## UPI அடிப்படையிலான வாகன நிறுத்த வசதி

- டெல்லி மெட்ரோ ரயில் கார்ப்பரேஷன் நிறுவனமானது இந்தியாவின் முதலாவது FASTag குறியீட்டு (அ) ஒருங்கிணைக்கப்பட்ட பணவழங்கீட்டு இடைமுகச் செயலி (Unified Payments Interface – UPI) அடிப்படையிலான ஒரு வாகன நிறுத்த வசதியினைத் தொடங்கியுள்ளது.
- இந்த வசதியானது நுழைவுப் பதிவு மற்றும் கட்டணம் செலுத்துதல் ஆகியவற்றிற்கு ஆகும் நேரத்தினைக் குறைப்பதற்காக தொடங்கப்பட்டுள்ளது.

- இந்த வசதியானது காஷ்மீரி கேட் மெட்ரோ இரயில் நிலையத்தில் தொடங்கப் பட்டு உள்ளது.



## மத்திய நிதி அமைச்சகத்தின் கீழ் பொது நிறுவனங்கள் துறை

- மத்திய அரசானது கனரகத் தொழில்துறை மற்றும் பொது நிறுவனங்கள் அமைச்சகத்தைப் பிரித்து பொது நிறுவனங்கள் துறையினை மத்திய நிதி அமைச்சகத்தினுடைய நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது.
- மத்திய அரசின் தனியார் மயமாக்கல், சொத்துக்களைப் பணமாக்குதல் மற்றும் அரசிற்குச் சொந்தமான நிறுவனங்களின் மூலதன செலவினத் திட்டங்கள் போன்றவை சீரமைக்கப்பட்டு ஒருங்கிணைக்கப் படுவதை உறுதி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- பொது நிறுவனங்கள் துறையானது நிதி அமைச்சகத்தின் ஆறாவது துறையாக மாறியுள்ளது.




## ஆயுதப் பரிசோதனைத் தளம் - வித்யா பாலன் பெயர்

- இந்திய ராணுவமானது குல்மார்க்கிலுள்ள ஆயுதப் பரிசோதனைத் தளத்திற்கு இந்தியத் திரைப்பட நடிகை வித்யா பாலனுடைய பெயரைச் சூட்டியுள்ளது.
- சின்னத்திரையில் தனது திரைப்பயணத்தை தொடங்கிய இவர் 20 வருடங்களுக்கும் மேலாக இந்தியத் திரைத்துறையில் பணியாற்றி வருகிறார்.
- திரைத்துறைக்கு அவர் ஆற்றியப் பங்களிப்பிற்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் இந்த ஆயுதப் பரிசோதனைத் தளத்திற்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.




## mRNA தடுப்பு மருந்து தொழில்நுட்பம்

- mRNA தடுப்பு மருந்து தொழில்நுட்பத்தை உருவாக்குவதற்காக பணியாற்றி வரும் இந்திய ஆராய்ச்சியாளர்கள் குழுவிற்கு இக்னைட் லைஃப் சைன்ஸ் என்ற அறக்கட்டளையானது நிதி உதவியினை வழங்கியுள்ளது.
- mRNA தடுப்பு மருந்துகள் கோவிட்-19 தொற்றுக்கு எதிராக குறிப்பாக அதன் தீவிரமான தொற்றிற்கு எதிராக சிறப்பான முறையில் செயல்திறன் கொண்டுள்ளதாக கருதப் படுகின்றது.
- பைசர் மற்றும் மாடெர்னா ஆகிய இரு கோவிட்-19 தடுப்பு மருந்துகளும் mRNA தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி SARS-Cov-2 வைரசிற்கு எதிரான பாதுகாப்பினை வழங்குகின்றன.

## மோசடி ரீதியிலான குறுஞ்செய்திகள் மீதான அபராதம்




- தொலைத்தொடர்பு துறையானது மோசடி அழைப்பு விடுக்கும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு மோசடி ரீதியிலான குறுஞ் செய்திகள் மீது 10,000 ரூபாய் அபராதத்தினை விதித்துள்ளது.
- இந்த புதிய அபராத விதிமுறைகள்,

- 0 முதல் 10 வரையிலான விதிமீறலுக்கு ரூ.1000 என்றும்,
- 10-50 வரையிலான விதிமீறலுக்கு ரூ.5000 என்றும்,
- 50 முறைக்கு மேலான விதிமீறலுக்கு ஒரு முறைக்கு ரூ.10,000 என்றும் அபராதம் விதிக்கப் பட்டுள்ளன.

## மாம்பழ ராஜ தந்திரம்

- ❖ வங்காளதேச பிரதமர் ஷேக் ஹசீனா இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு 2600 கிலோ கிராம் எடை அளவிலான ஹரிபங்கா வகை மாம்பழத்தினைப் பரிசாக வழங்கியுள்ளார்.
- ❖ இந்த மாம்பழங்களைச் சுமந்து வரும் வாகனமானது ஜெசோரிலுள்ள பெனபோலி துறைமுகம் வழியே வங்காள தேச – இந்திய எல்லையைக் கடந்துள்ளது.
- ❖ மாம்பழங்கள் இரு நாடுகளுக்கிடையேயான “நட்பின் சின்னமாக” விளங்குகின்றன.
- ❖ இந்த ஹரிபங்கா வகை மாம்பழமானது வங்காளதேசத்தின் ரங்க்பூர் பகுதியில் வளர்க்கப் படுகின்றன.

## ஐ.என்.எஸ். தாபர்

- ❖ இந்தியக் கடற்படைக் கப்பலான தாபர், இத்தாலியக் கடற்படையின் ஒரு முதன்மைப் போர்க் கப்பலுடன் இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டது.
- ❖ ஐ.என்.எஸ். தாபர் கப்பலானது இத்தாலியக் கடற்படையுடன் இணைந்து, மத்தியத் தரைக்கடலில் அப்போது நடைபெற்று வந்த பயிற்சியின் ஓர் அங்கமாக நேப்பில்ஸ் துறைமுகத்திற்குள் நுழைந்தது.
- ❖ திரும்பி வரும் போது டைர்ஹெனியன் கடலில் ITS அன்டோனியோ மார்சக்லியா (ITS Antonio Marceglia) எனும் கப்பலுடன் இணைந்து கடல்சார் கூட்டிணைவுப் பயிற்சியிலும் ஈடுபட்டுள்ளது.

## பாலியா கோதுமை

- ❖ புவிசார் குறியீடு பெற்ற பாலியா வகை கோதுமை அடங்கிய முதல் சரக்குப் பெட்டகமானது கென்யா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு குஜராத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது.
- ❖ இந்த வகை கோதுமையில் புரதச்சத்து நிறைந்துள்ளதோடு, இது மிகுந்த இனிப்புச் சுவையையும் கொண்டுள்ளது.
- ❖ இந்த வகை கோதுமையானது பெரும்பாலும் குஜராத்தின் பால் (Bhal) எனும் பகுதியில் பயிரிடப் படுகிறது.
- ❖ இந்தப் பயிரானது நீர்ப்பாசன வசதியின்றி மழைநீரைக் கொண்டு குஜராத்தில் சுமார் 2 லட்சம் ஹெக்டேர் அளவிலான வேளாண் நிலத்தில் பயிரிடப்படுகிறது.
- ❖ பாலியா வகை கோதுமைக்கு 2011 ஆம் ஆண்டு ஜூலையில் புவிசார் குறியீடு வழங்கப் பட்டது.
- ❖ புவிசார் குறியீட்டிற்காக பதிவு செய்த அதன் உரிமையாளர் குஜராத்திலுள்ள ஆனந்த் வேளாண் பல்கலைக்கழகம் ஆகும்.

## GUAREX மற்றும் SOYDEX

- ❖ தேசியப் பண்டக வகையீட்டுப் பரிமாற்றமானது (NCDEX - National Commodity and Derivatives Exchange) வேளாண் பொருட்கள் பிரிவில் இந்தியாவிலேயே முதன்முறையாக துறை சார்ந்த குறியீடுகளை வெளியிட்டுள்ளது.
- ❖ NCDEX ஆனது இந்தியாவின் வேளாண் பொருட்கள் பரிமாற்ற அமைப்பாகும்.
- ❖ இந்தக் குறியீடுகளானது GUAREX மற்றும் SOYDEX ஆகியனவாகும்.
- ❖ இந்தக் குறியீடுகளானது குவார் வகை மற்றும் சோய் வகை ஆகியவற்றின் செயல்திறனைக் குறிக்கும்.
- ❖ GUAREX என்பது வருவாய் அடிப்படையிலான ஒரு குறியீடாகும்.
- ❖ இது நிகழ்நேர அடிப்படையில் குவார் விதை, சுத்திகரிக்கப்பட்ட மற்றும் பிளவுப் படுத்தப்பட்ட குவார் கம் விதைகள் ஆகியவற்றிற்காக வருங்கால ஒப்பந்தங்களின் விலைகளில் ஏற்படும் மாற்றத்தைக் கண்காணிக்கிறது.
- ❖ SOYDEX எனும் குறியீடும், சோயாபீன் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட சோயா எண்ணெய் ஆகியவற்றிற்கான வருங்கால ஒப்பந்தங்களின் மீதான விலைமாற்றத்தைக் கண்காணிக்கிறது.
- ❖ இந்த இரு குறியீடுகளும் விலை குறைந்த பொருட்களை அடையாளம் காண்பதற்கு கொள்முதல் செய்வோருக்கு (hedgers) உதவியாக இருக்கும்.
- ❖ மேலும் இவை வர்த்தக உத்திகளையும் இடர் மேலாண்மை நடவடிக்கைகளையும் வழங்குகிறது.
- ❖ வருங்கால ஒப்பந்தங்கள் என்பது வருங்காலத்தில் ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு முன்பே நிர்ணயிக்கப்பட்ட விலையில் ஒரு பொருளை வாங்குவதற்காகவோ அல்லது விற்பதற்காகவோ தரநிலைப்படுத்தப் பட்ட ஒரு சட்ட ரீதியிலான ஒப்பந்தமாகும்.
- ❖ கொள்முதல் செய்வோர் (hedger) என்றால் உற்பத்திப் பொருட்களை வாங்கும் அல்லது விற்கும் ஒரு தனிநபர் அல்லது நிறுவனமாகும்.



## பிரையம் பாரதியென்சிஸ்

- பஞ்சாபின் பத்தின்டாவிலுள்ள மத்தியப் பல்கலைக்கழகத்தின் தாவரவியலாளர் குழு ஒன்று கிழக்கு அண்டார்டிகாவில் ஒரு புதிய வகை தாவர இனப் பாசி ஒன்றைக் கண்டறிந்து உள்ளது.
- இந்தப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஃபெலிக்ஸ் பாஸ்ட் என்பவர் 2016/17 ஆம் ஆண்டில் இந்திய அண்டார்டிக் திட்டத்திற்கான தனது ஆய்வின் போது அதன் லார்செமான் மலைகளிலுள்ள பாரதி ஆராய்ச்சி மையத்தின் அருகே உள்ள பாறைகளின் மீது இந்த பாசிகள் இருப்பதைக் கண்டறிந்தார்.
- தாவரவியலாளர்கள் இதற்கு 'பிரையம் பாரதியென்சிஸ்' எனப் பெயரிட்டுள்ளனர்.
- இந்திய அண்டார்டிக் திட்டத்தில் இதுவரை கண்டறியப்பட்ட முதல் மற்றும் ஒரே ஒரு தாவர இனம் 'பிரையம் பாரதியென்சிஸ்' என டாக்டர் பாஸ்ட் தெரிவித்துள்ளார்.



## ஸ்டோலிஸ்கியா வான்ஹூஐயிலியானாய் (Stoliczkia vanhnuailianai)

- மிசோரம் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் ஸ்டோலிஸ்கியா (Stoliczkia) குடும்பத்தின் புதிய இனம் மற்றும் இந்தியாவின் மூன்றாவது ஸ்டோலிஸ்கியா இனம் ஒன்றைக் கண்டறிந்துள்ளனர்.
- இக்குழுவானது இதற்கு 'ஸ்டோலிஸ்கியா வான்ஹூஐயிலியானாய்' எனப் பெயரிட்டு உள்ளது.
- புகழ்பெற்ற மிசோரம் மாநில வீரரான வான்ஹூஐயிலியானாய் ஸ்டோலிஸ்கியா என்பவரைக் கௌரவப்படுத்தும் வகையில் இதற்கு இவ்வாறு பெயரிடப்பட்டுள்ளது.
- இவர் லூசாய் மலைப் பகுதியில் அதிகாரமிக்க தலைவர்களில் ஒருவராக திகழ்ந்தவர் ஆவார்.



## கருஞ்சிறுத்தை

- தடோபா அந்தேரி புலிகள் காப்பகம் நவேகாவோன் நக்சிரா புலிகள் காப்பகம் மற்றும் மகாராஷ்டிராவிலுள்ள பெஞ்ச் புலிகள் காப்பகம் ஆகியவற்றில் ஒரு அரிதான கருஞ்சிறுத்தை தென்பட்டுள்ளது.
- இவை பெரும்பாலும் தென்மேற்கு சீனா, பர்மா, நேபாளம், தெற்கு இந்தியா, இந்தோனேசியா மற்றும் மலேசியாவின் தெற்குப் பகுதி ஆகிய பகுதிகளிலேயே காணப் படுகின்றன.
- இந்தியாவில் இவை தென்னிந்தியாவின் அடர்ந்த வனப்பகுதியில் குறிப்பாக கர்நாடக மாநிலத்தில் காணப்படுகின்றன.
- இது சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு அமைப்பின் சிவப்புப் பட்டியலில் 'எளிதில் பாதிக்கக் கூடிய உயிரினங்கள்' என்ற பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது.



## சனோஃபி மற்றும் GSK – ஒப்புதல்

- சனோஃபி மற்றும் கிளாக்சோஸ்மித்க்லைன் (GSK) ஆகிய நிறுவனங்கள் இந்தியாவில் தங்களது கோவிட்-19 தொற்றுக்கான தடுப்பு மருந்துகளின் மூன்றாம் கட்ட மருத்துவப் பரிசோதனையை மேற்கொள்வதற்கான ஒப்புதலைப் பெற்றுள்ளன.
- சனோஃபி என்பது பிரான்சு நாட்டின் ஒரு மருந்து உற்பத்தி நிறுவனமாகும்.
- கிளாக்சோஸ்மித்க்லைன் ஆனது பிரித்தானிய நாட்டின் ஒரு மருந்து உற்பத்தி நிறுவனமாகும்.

## "The Light of Asia – புத்தகம்"

- "The Light of Asia" எனும் புத்தகத்தை ஜெய்ராம் ரமேஷ் எழுதியுள்ளார்.
- இது புத்தரைக் குறித்த ஒரு காவியக் கவிதையின் கதையைப் பற்றி கூறும் புத்தகம் ஆகும்.
- இவர் 1879 ஆம் ஆண்டில் சர் எட்வின் அர்னால்டு எழுதிய "The Light of Asia" எனும் காவியக் கவிதையின் சுவாரஸ்யமிக்க பின்னணியினைப் பற்றி இப்புத்தகத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.




## NISHTHA திட்டம் – ஜம்மு & காஷ்மீர் முதலிடம்

- ❖ பள்ளித் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்களின் முழு அளவிலான முன்னேற்றத்திற்கான முன்னெடுப்பு (NISHTHA - National Initiative for School Heads and Teachers Holistic Advancement) என்ற திட்டத்தில் ஜம்மு & காஷ்மீர் முதலிடத்தில் உள்ளது.
- ❖ 80600 ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு DIKSHA தளத்தினைப் பயன்படுத்தி இணைய வழியில் பயிற்சி அளிக்கப்பட்டது.
- ❖ NISHTHA திட்டமானது ஒருங்கிணைந்த ஆசிரியர் பயிற்சி மூலம் பள்ளிக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக கொண்டு வரப்பட்ட ஒரு திறன் மேம்பாட்டுத் திட்டம் ஆகும்.
- ❖ ஆரம்பக் கல்வி நிலையில் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பள்ளித் தலைவர்களின் திறன்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.




## ஜிகா வைரஸ்

- ❖ கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் சமீபத்தில் ஜிகா வைரஸ் தொற்றுகள் பதிவாகியுள்ளன.
- ❖ ஜிகா வைரசானது, ஏடிஸ் இனத்தை சேர்ந்த வைரஸ் தொற்று ஏற்பட்ட கொசுக்களால் குறிப்பாக ஏடிஸ் எஜிப்தி கொசுக்களால் பெரும்பாலும் பரப்பப்படுகிறது.

- ஏடிஸ் கொசுக்கள் டெங்கு, சிக்குன்குன்யா மற்றும் மஞ்சள் காய்ச்சல் போன்ற நோய்களையும் பரப்புகின்றன.
- இவை வழக்கமாக பகல் நேரங்களில் கடிக்கின்றன, அதிலும் பெரும்பாலும் அதிகாலை (அ) பிற்பகல் நேரங்களில் கடிக்கின்றன.
- தொற்று ஏற்பட்ட நபராலும் இந்த வைரஸ் பரவுகிறது.
- இந்த வைரசானது 1947 ஆம் ஆண்டில் உகாண்டா நாட்டில் உள்ள குரங்குகளில் முதன் முறையாக கண்டறியப்பட்டது.
- இது 1952 ஆம் ஆண்டில் உகாண்டா மற்றும் ஐக்கிய தான்சானியக் குடியரசு ஆகிய நாடுகளில் மனிதர்களில் கண்டறியப்பட்டது.

## ஒருங்கிணைந்த கருப்பு கார்பன் வளாகம்

- கர்நாடகா மாநிலத்திலுள்ள பெல்லாரியில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதலாவது ஒருங்கிணைந்த கருப்பு கார்பன் வளாகமானது வெற்றிகரமாக செயல்படத் தொடங்கியது.
- இது எப்சிலான் கார்பன் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தினால் அமைக்கப் பட்டுள்ளது.
- இது எஃகு ஆலையின் கல்கரி உலையிலிருந்து வெளியாகும் தேவையற்ற வாயுக்களை (waste coke oven gas) பயன்படுத்தும் வகையில் இந்தியாவின் முதல் இம்மாதிரியான வகையிலான உற்பத்தி மையமாகும்.

## காதி – வர்த்தகக் குறியீடு




- காதி மற்றும் கிராமத் தொழில்துறை ஆணையமானது 'காதி' எனும் தனது முத்திரைப் பெயருக்கு மெக்சிகோ, பூடான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளில் வர்த்தகக் குறியீட்டினை (trademark registration) பெற்றுள்ளது.
- காதி மற்றும் கிராமத் தொழில்துறை ஆணையமானது (Khadi and Village Industry Commission – KVIC) ஜூலை 09 அன்று பூடானில் வர்த்தகக் குறியீட்டினைப் பெற்றது.
- 2021 ஆம் ஆண்டு ஜூன் 28 அன்று ஐக்கிய அரபு அமீரகத்தில் இதற்கு வர்த்தகக் குறியீடானது வழங்கப்பட்டது.

- இவ்வாறாக KVIC முதன்முறையாக வளைகுடா நாட்டில் தனது வர்த்தகக் குறியீட்டை வெற்றிகரமாக பெற்றுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மெக்சிகோ நாட்டில் இதற்கு வர்த்தகக் குறியீடு வழங்கப் பட்டது.
- KVIC என்பது 1957 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நிறுவப்பட்ட ஒரு சட்ட ரீதியிலான அமைப்பாகும்.
- இது 1956 ஆம் ஆண்டு காதி மற்றும் கிராமத் தொழில்துறை ஆணைய சட்டத்தின் கீழ் 2வது ஐந்தாண்டு திட்டத்தின் போது நிறுவப்பட்டது.
- இது சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது.
- இதன் தலைமையகம் மும்பையில் உள்ளது.
- இது ஆறு மண்டல அலுவலகங்களைக் கொண்டு இயங்குகிறது.

## "The Ramayana of Shri Guru Gobind Singh Ji" – புத்தகம்

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் "The Ramayana of Shri Guru Gobind Singh Ji" (ஸ்ரீகுரு கோவிந்த் சிங் அவர்களின் ராமாயணம்) எனும் புத்தகத்தின் முதல் நகலைப் பெற்று உள்ளார்.
- இப்புத்தகமானது புகழ்பெற்ற வழக்கறிஞரான KTS துளசி அவர்களின் தாயாரான பல்ஜித் கௌர் துளசி (மறைவு) என்பவரால் எழுதப்பட்டது.
- இது இந்திரா காந்தி தேசியக் கலை மையத்தினால் வெளியிடப்படுகிறது.

## இந்தியாவிற்கு ஆப்பிள் ஏற்றுமதி

- ஐக்கிய ராஜ்ஜியமானது 50 ஆண்டுகளில் முதல்முறையாக இந்தியாவிற்கு ஆப்பிள்களை ஏற்றுமதி செய்துள்ளது.
- ஒரு மேம்படுத்தப்பட்ட வர்த்தகக் கூட்டிணைவின் கீழ் ஆப்பிள்கள் தற்போது ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன.
- இது 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில் இரு நாட்டு பிரதமர்களாலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- மேம்படுத்தப்பட்ட வர்த்தகக் கூட்டிணைவானது ஒரு விரிவான தடையில்லா வர்த்தக ஒப்பந்தத்தின் முன்னோடியாகக் கருதப்படுகிறது.

## 2வது வருடாந்திர மின்னல் அறிக்கை

- இந்தியாவின் 2வது வருடாந்திர மின்னல் அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- இந்த அறிக்கையின்படி, இந்தியாவில் மின்னலானது இயற்கைச் சக்திகளால் ஏற்படும் உயிரிழப்பிற்கு ஒரு மிகப்பெரிய காரணியாக உள்ளது.
- இந்த அறிக்கையின்படி, மின்னல் காரணமாக பீகாரில் அதிக உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.
- இதனைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் உள்ளது.

- உத்தரப் பிரதேசத்தைத் தொடர்ந்து மத்தியப் பிரதேசம், ஒடிசா மற்றும் ஜார்க்கண்ட் ஆகியவை உள்ளன.




## தேசிய ஓங்கில் ஆராய்ச்சி மையம்

- பாட்னாவில் ஒரு தேசிய ஓங்கில் ஆராய்ச்சி மையமானது விரைவில் அமைக்கப்பட உள்ளது.
- இந்த மையத்தை அமைப்பது அருகி வரும் கங்கை ஆற்று ஓங்கில்களைப் பாதுகாப்பதற்கான ஒரு மிகப்பெரிய முதற்படியாக இருக்கும்.
- இந்தியாவில் உள்ள 3,000 கங்கை ஆற்று ஓங்கில்களில் பாதியளவு பீகாரில் காணப் படுகின்றன.

## முதலாவது பசுமை ஹைட்ரஜன் இயங்கு திறன் திட்டம்

- NTPC புதுப்பிக்கத்தக்க ஆற்றல் லிமிடெட் நிறுவனமானது (NTPC Renewable Energy Ltd – NTPC REL) லடாக்கில் நாட்டின் முதலாவது ஹைட்ரஜன் இயங்குதிறன் திட்டத்தை அமைக்க உள்ளது.

- NTPC REL என்பது தேசிய அனல்மின் கழகத்தின் (National Thermal Power Corporation – NTPC) 100 சதவீத துணை நிறுவனமாகும்.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்தி மின்னாற்பகுப்பு முறை (electrolysis) மூலம் உற்பத்தி செய்யப்படும் ஹைட்ரஜனானது பசுமை ஹைட்ரஜன் எனப்படுகிறது.
- இது கார்பன் தடம் அறவே அற்றது ஆகும்.
- இந்தியாவில் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு இலக்குகளை அடைவதற்கு பசுமை ஹைட்ரஜன் ஆற்றல் ஆனது முக்கியமான ஒன்றாகும்.
- மேலும் இது வட்டார மற்றும் தேசிய அளவில் ஆற்றல் பாதுகாப்பினையும் ஆற்றலினை அணுகுந் தன்மை மற்றும் கிடைக்குந் தன்மை ஆகியவற்றையும் உறுதி செய்கிறது.

## பங்கபந்து இருக்கை

- வங்காள தேசத்தின் வளர்ச்சிகள் பற்றி நன்கு புரிந்து கொள்ளச் செய்வதற்காக வேண்டி டெல்லி பல்கலைக்கழகத்தில் பங்கபந்து இருக்கை ஒன்று நிறுவப்பட உள்ளது.
- இதனை அமைப்பதற்காக டாக்காவில் டெல்லி பல்கலைக்கழகம் மற்றும் இந்தியக் கலாச்சார உறவுகள் மன்றம் ஆகியவை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.
- இது இரு நாடுகளின் பொதுவான மரபுகள் மீது கவனம் செலுத்தும்.
- இது வங்காளதேசத்தின் நிறுவனரான ஷேக் முஜிபூர் ரஹ்மான் அவர்களைக் கௌரவிக்கும் வகையில் அமைக்கப்பட உள்ளது.
- மேலும் அந்நாட்டின் 50வது சுதந்திரப் போர் நிறைவு நாளினையும் டாக்காவுடனான இந்தியாவின் அரசுமுறை உறவுகளையும் நினைவு கூறும் வகையிலும் இது அமைக்கப் பட உள்ளது.

## வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் – ஜியார்ஜியா

- வெளியுறவுத் துறை அமைச்சர் S. ஜெய்சங்கர் அவர்கள் ஜியார்ஜியாவிலுள்ள புகழ் பெற்ற திபிலிசி பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தி சிலையைத் திறந்து வைத்தார்.
- ஜியார்ஜியாவிற்கான இரண்டு நாள் பயணத்தின் போது, ஜெய் சங்கர் அவர்கள் அந்த நாட்டின் முன்னணித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.
- மேலும் அவர் 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புனித ராணி கெட்டீவா (St. Queen Keteva) அவர்களின் நினைவுச் சின்னங்களையும் அங்கு ஒப்படைத்தார்.
- ஜியார்ஜியா நாடானது கிழக்கு ஐரோப்பா மற்றும் மேற்கு ஆசியா ஆகியவற்றின் இடைப்பகுதியில் அமைந்துள்ள இராஜதந்திர ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாடாகும்.

*குறிப்பு*

- புனித ராணி கெட்டீவா அவர்கள் தியாகி நிலையை அடைந்த 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜியார்ஜியா நாட்டு ராணி ஆவார்.
- இவரது நினைவுச் சின்னங்கள் பழைய கோவா மாநிலப் பகுதியிலுள்ள புனித அகஸ்டைன் பள்ளியில் 2005 ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்டன.

## ஆப்கானிஸ்தானிலிருந்து இந்திய தூதரக அதிகாரிகள் வெளியேற்றம்

- ஆப்கானிஸ்தானின் கந்தஹார் பகுதியில் பாதுகாப்பு நிலைமைகள் மோசமடைந்து வருவதன் காரணமாக இந்திய தூதரகத்தின் ஊழியர்கள் சிலர் வெளியேற்றப் பட்டு உள்ளனர்.
- அதே சமயம் அங்குள்ள இணைத் தூதரகத்தின் அவசரகாலச் சேவையானது தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.
- கந்தஹார் மற்றும் மசார் ஆகிய பகுதிகளிலுள்ள 2 இணைத் தூதரங்களுடன் காபூலில் ஒரு தூதரகத்தை இந்தியா கொண்டிருக்கின்றது.
- ஹெராத் மற்றும் ஜலாலாபாத் ஆகிய இடங்களில் அமைந்த இரு இணைத் தூதரகங்களும் முன்பே தமது செயல்பாட்டை நிறுத்தி விட்டன

## ஃபசில் மாம்பழம்

- மேற்கு வங்காளத்தின் மால்டா மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் புவிசார் குறியீடு பெற்ற ஃபசில் வகை மாம்பழங்கள் அடங்கிய பெட்டகமானது பஹ்ரைன் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.
- இந்தப் பெட்டகமானது APEDA அமைப்பில் பதிவு செய்யப்பட்ட கொல்கத்தாவின் DM எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்தினால் ஏற்றுமதி செய்யப்பட்டது.
- இது பஹ்ரைன் நாட்டின் அல் ஜசீரா குழுமத்தினால் இறக்குமதி செய்யப்பட்டது.
- இந்தியாவில் மாம்பழங்கள் "பழங்களின் ராஜா" (king of fruits) என்று குறிப்பிடப் படுகின்றன.
- மேலும் இது பண்டையகால வேதங்களில் "கல்பவிருக்சா" (வரமளிக்கும் மரம்) என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது

## 10வது P-8I ரக போர் விமானம் – போயிங்

- இந்தியக் கடற்படையானது போயிங் நிறுவனத்திடமிருந்து 10வது P-8I ரக நீர்மூழ்கி எதிர்ப்பு போர் விமானத்தைப் பெற்றுள்ளது.
- போயிங் என்பது அமெரிக்காவிலுள்ள ஒரு விமானத் தயாரிப்பு நிறுவனமாகும்.
- இந்தியக் கடற்படையில் பல ஆண்டுகளாக உள்ள டியூபோலெவ் Tu-142 ரக விமானங்களுக்குப் பதிலாக P-8I ரக விமானங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 8 P-8I ரக போர் விமானங்களை வாங்குவதற்கான ஒப்பந்தமானது 2009 ஆம் ஆண்டில் பாதுகாப்பு அமைச்சகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டில் மேலும் 4 P-8I ரக விமானங்களை வாங்குவதற்கான ஒப்பந்தமும் கையெழுத்தானது.

## தேசிய ஆயுஷ் திட்டம் நீட்டிப்பு

- தேசிய ஆயுஷ் திட்டத்தைத் தொடர்வதற்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டமானது 01-04-2021 முதல் 31-03-2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

- தேசிய ஆயுஷ் திட்டமானது மத்திய அரசின் நிதியுதவி பெறும் ஒரு திட்டமாகும்.
- இது ஆயுஷ் அமைச்சகத்தினால் அமல்படுத்தப்படுகிறது.
- இந்தியா முழுவதும் ஆயுஷ் சுகாதார சேவை (அ) மருத்துவக் கல்வியை வழங்குவதற்கு முயற்சிக்கும் மாநில (அ) ஒன்றியப் பிரதேச அரசுகளுக்கு உதவி வழங்குவதன் மூலம் சுகாதாரச் சேவையிலுள்ள குறைகளை இத்திட்டம் நிவர்த்தி செய்கிறது.




## நிலக்கரி (Coking coal) மீதான புரிந்துணர்வு ஒப்பந்தம் – இந்தியா மற்றும் ரஷ்யா

- இந்தியா மற்றும் ரஷ்யா இடையே நிலக்கரித் துறையில் ஒத்துழைப்பினை மேற் கொள்ளச் செய்வதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- நிலக்கரியானது எஃகு உற்பத்தியில் பயன்படுத்தப்படுகிறது.
- எஃகு அமைச்சகம் (இந்தியா) மற்றும் ஆற்றல் அமைச்சகம் (ரஷ்யா) ஆகியவற்றுக்கு இடையே இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- எஃகு தொழில்துறையின் உள்ளீட்டுச் செலவினத்தைக் குறைப்பதன் மூலம் ஒட்டு மொத்த எஃகு தொழில்துறைக்கும் இந்த ஒப்பந்தம் பயனளிக்க உள்ளது.
- இது எஃகுகளின் விலையைக் குறைத்து அத்துறையின் சம பங்கு மற்றும் உள்ளடக்கத்தையும் மேம்படுத்துகிறது.
- நிலக்கரித் துறையில் ஒத்துழைப்பிற்கான ஒரு நிறுவன அளவிலான செயல்முறை ஒன்றையும் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் வழங்கப்படும்.

***நிலக்கரி***

- இது உலோக நிலக்கரி எனவும் அழைக்கப்படுகிறது.
- இது நல்ல தரமான கற்கரியை தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது.
- கற்கரி என்பது முதல் தர எஃகு உற்பத்திக்கான ஊது உலை (blast furnace) செயல்முறையில் பயன்படுத்தப்படும் ஒரு அத்தியாவசியமான எரிபொருள் மற்றும் வினைபடு (reactant) பொருளாகும்.

## மாநிலங்களவைத் தலைவர் – பியூஷ் கோயல்

- மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் அவர்கள் மாநிலங்களவையின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- தற்போது கர்நாடகாவின் ஆளுநராகப் பொறுப்பேற்றுள்ள தாவர் சந்த் கெலாட்டை அடுத்து இவர் மாநிலங்களவைத் தலைவராகப் பொறுப்பேற்க உள்ளார்.
- வழக்கமாக மூத்தத் தலைவர்களால் மேற்கொள்ளப்படும் இந்த பதவியில் ஒரு இளைய தலைவர் சேர்க்கப் படுவதை இந்தப் பதவி நியமனம் குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- பியூஷ் கோயல் வணிகம், நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் உணவு & நெசவுத் தொழில்துறை அமைச்சராகப் பணியாற்றி வருகிறார்.
- அரசுக் கூட்டங்களையும் அவையின் செயல்பாடுகளையும் ஏற்பாடு செய்வது அவைத் தலைவரின் பொறுப்பாகும்.

## இரயில் தண்டவாளத்தின் மேலே அமைந்த இந்தியாவின் முதல் 5 நட்சத்திர தங்கும் விடுதி

- புனரமைக்கப்பட்ட காந்தி நகர் இரயில் நிலையத்தின் மேல்பகுதியில் புதிதாக கட்டப் பட்டுள்ள ஒரு 5 நட்சத்திர தங்கும் விடுதியினைப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.
- இந்தத் திட்டமானது 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்திய இரயில்வே நிலையங்கள் மேம்பாட்டுக் கழகத்தினால் தொடங்கப்பட்டது.
- இந்தத் தங்கும் விடுதியானது மகாத்மா மந்திரில் நடைபெறும் கருத்தரங்கம் மற்றும் மாநாடுகள் ஆகியவற்றில் பங்கேற்க வருகை தரும் தேசிய மற்றும் பன்னாட்டு விருந்தினர்களுக்குத் தங்கும் இட வசதியை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும்.
- மகாத்மா மந்திரானது இந்த விடுதிக்கு எதிரே அமைந்துள்ள ஒரு மாநாட்டு மையம் ஆகும்.



## இந்தியாவின் மிகப்பெரிய சூரிய சக்திப் பூங்கா – NTPC

- தேசிய அனல்மின் கழகமானது (National Thermal Power Corporation – NTPC) குஜராத்தின் காவடாவிலுள்ள கட்ச் பகுதியில் இந்தியாவின் மிகப்பெரிய சூரியசக்தி ஒளி மின்னழுத்த மையத்தை அமைக்க உள்ளது.

- இந்த சூரிய ஒளி மின் உற்பத்திப் பூங்காவானது 4.75 ஜிகாவாட் /4750 MW திறனுடையதாக அமைக்கப் பட உள்ளது.
- இந்த மையமானது NTPCயின் ஒரு துணை நிறுவனமான NTPC புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட உள்ளது.

## டோக்கியோ ஒலிம்பிக்ஸ் ஊக்கப்படுத்தும் பாடல்




- பாடகி அனன்யா பிர்லா புகழ்பெற்ற இசை வல்லுநரான A.R. ரஹ்மானுடன் இணைந்து டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தயாராகும் இந்திய விளையாட்டு வீரர்களுக்கான உற்சாகமூட்டும் ஒரு பாடலை வெளியிட்டுள்ளார்.
- "இந்துஸ்தான் வே" என்று தலைப்பிடப்பட்ட இந்தப் பாடலை ரஹ்மானின் இசையமைப்பில் அனன்யா பாடியுள்ளார்.
- தகவல் மற்றும் ஒளிப்பரப்பு அமைச்சர் அனுராக் தாகூரும் இந்தப் பாடலின் வெளியீட்டு விழாவில் பங்கேற்றார்.

## நாட்டின் முதல் தானிய ஏடிஎம்




- நாட்டின் முதல் தானிய ஏடிஎம் ஆனது ஹரியானாவின் குருகிராமில் ஒரு முதன்மைத் திட்டமாக நிறுவப்பட்டுள்ளது.

- இது ஒரு வங்கி ஏடிஎம் இயந்திரம் போன்றதே ஆகும்.
- இந்த இயந்திரமானது ஐக்கிய நாடுகள் அவையின் 'உலக உணவுத் திட்டத்தின்' கீழ் நிறுவப் பட்டுள்ளது.
- இது "தானியங்கு, பல்பொருள், தானிய வழங்கீட்டு இயந்திரம்" என அழைக்கப் படுகிறது.
- கோதுமை, அரிசி மற்றும் சிறுதானியங்கள் ஆகியவை இந்த இயந்திரத்தின் மூலம் வழங்கப் படும்.
- தற்போது ஃபருக் நகரில் அமைக்கப்பட்டுள்ள 'தானிய ஏடிஎம்" இயந்திரத்தின் மூலம் கோதுமை விநியோகம் தொடங்கப் பட்டுள்ளது.

## தேசியத் தடய அறிவியல் பல்கலைக்கழகம்

- குஜராத்திலுள்ள காந்திநகரில் அமைந்துள்ள தேசியத் தடய அறிவியல் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி அடிப்படையிலான சிறப்பு மையத்தினை உள்துறை அமைச்சர் அமித்ஷா திறந்து வைத்துள்ளார்.
- இந்த மையமானது நாட்டின் பல்வேறு பகுதிகளில் கைப்பற்றப்பட்ட மருந்துகள் மற்றும் போதைப் பொருள் ஆகியவற்றைப் பற்றிய ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்விலும் அவை எங்கிருந்து கிடைக்கப் பெறுகின்றன என்று கண்டறிவதிலும் உதவும்.
- மேலும் இந்தியக் காவல்துறைக்காக வேண்டி, பெண்களுக்கு எதிராக நடைபெறும் குற்றங்களை விசாரிப்பதற்கான ஒரு காணொலிப் பயிற்சி மாதிரி ஒன்றையும் உள்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

## தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 66A பிரிவின் கீழான முதல் தகவல் அறிக்கை

- தனது அதிகார வரம்பின் கீழ் உள்ள காவல் நிலையங்களில் 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில் நுட்பச் சட்டத்தின் 66A பிரிவின் கீழ் பதிவான அனைத்து முதல் தகவல் அறிக்கையினையும் திரும்பப் பெற கோருமாறு அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.
- மேலும் நீக்கப்பட்ட 66A பிரிவின் கீழ் வழக்குப் பதிவு எதுவும் செய்யக்கூடாது எனவும் அரசு அறிவித்துள்ளது.
- தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 66A பிரிவானது, கணினி (அ) கைபேசி அல்லது வரைப்பட்டிகை போன்ற வேறு பிற தொலைத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி "அவமதிப்பு" குறுஞ்செய்திகளை அனுப்பும் நபர்களுக்கு அதிகபட்சம் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கிறது.
- இது "தெளிவற்றது மற்றும் ஆதிக்கம் மிக்கது" என்று குறிப்பிடப்பட்டதையடுத்து 2015 ஆண்டு மார்ச் 24 அன்று 66A பிரிவினை ரத்து செய்து உச்சநீதிமன்றம் ஆணையிட்டது.
- பல குற்றமற்றவர்களை கைது செய்ய நேர்வதன் காரணமாக இது கடுமையான சட்டம் என்று கூறப் படுகிறது.
- இது 2015 ஆம் ஆண்டு மார்ச் 24 அன்று ஸ்ரேயா சிங்கால் Vs இந்திய ஒன்றியம் என்ற வழக்கில் அரசியலமைப்பிற்குப் புறம்பானது என தீர்ப்பளிக்கப்பட்டது.

## லடாக் மற்றும் சிக்கிம் – புரிந்துணர்வு ஒப்பந்தம்

- லடாக் பகுதியில் 'பரம்பராகத் கிரிஷி விகாஷ் யோஜனா' மற்றும் இயற்கை முறை மேம்பாட்டு முன்னெடுப்புத் திட்டம் ஆகியவற்றை அமல்படுத்துவது தொடர்பாக லடாக் ஒன்றியப் பிரதேச நிர்வாகமானது சிக்கிம் மாநில இயற்கைமுறை சான்றிதழ் வழங்கும் நிறுவனத்துடன் ஒரு முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டு உள்ளது.
- 2025 ஆம் ஆண்டுக்குள் லடாக் பகுதியை இயற்கைமுறைச் சான்றிதழ் பெற்ற ஒரு ஒன்றியப் பிரதேசமாக மாற்றுவதே இதன் நோக்கமாகும்.
- மூன்று கட்டங்களின் மூலம் இயற்கைமுறைச் சான்றிதழ் நிலையை (organic status) பெற ஒன்றியப் பிரதேச அரசு திட்டமிட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் அவையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பினால் உலகின் முதலாவது 100 சதவீத இயற்கை முறை மாநிலமாக சிக்கிம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## UV – C தொழில்நுட்பம்

- புறஊதா – C அல்லது UV – C தொற்றுநீக்க தொழில் நுட்ப அமைப்பானது விரைவில் இந்தியப் பாராளுமன்றத்தில் அமைக்கப்பட உள்ளது.
- SARS – COV – 2 வைரஸ் காற்று வழியே பரவுதலை தடுப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது.
- இந்த UV – C காற்று குழாய் தொற்று நீக்க அமைப்பானது அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில் துறை தொழில்நுட்ப மன்றத்தின் மத்திய அறிவியல் உபகரணங்கள் அமைப்பினால் உருவாக்கப் பட்டுள்ளது.

## மாவட்ட கனிம நிதி

- மாநிலங்களிடமிருந்த மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியின் முழுக் கட்டுப்பாட்டையும் மத்திய அரசு கையகப்படுத்தியுள்ளது.
- சுரங்கக் குத்தகைதாரர்கள் வழங்கும் கட்டாயப் பங்கீடுகளிலிருந்துப் பெறப்படும் நிதிகளிலிருந்து எந்தவொருச் செலவினத்திற்காகவும் வேண்டிய நிதியைப் பெறுவதற்கான ஒப்புதலை வழங்குவதற்கான உரிமையை மாநிலங்களிடமிருந்து மத்திய அரசு திரும்பப் பெற்றுள்ளது.

*குறிப்பு*

- 2015 ஆம் ஆண்டு சுரங்கம் மற்றும் கனிமங்கள் மேம்பாட்டு மற்றும் ஒழுங்குமுறை (திருத்தம்) சட்டமானது சுரங்கம் தொடர்பான செயல்பாடுகளினால் பாதிப்பு அடைந்தவர்களின் நலனுக்காக அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியினை நிறுவுவதை மாநில அரசுகளுக்குக் கட்டாயமாக்கியுள்ளது.
- குத்தகைதாரர்கள் மாநில அரசுகளுக்கு உரிமத் தொகை செலுத்துவதோடு மட்டுமல்லாது அந்த உரிமத் தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதத் தொகையை இந்த இலாப நோக்கமற்ற அறக்கட்டளைகளுக்கு வழங்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- இந்த மாவட்ட கனிம அறக்கட்டளைகளானது சுரங்கம் தொடர்பான செயல்முறைகளினால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் பகுதிகளின் நலனுக்காக இந்த நிதிகளைப் பயன்படுத்த வேண்டும்.

- பழங்குடியின மக்களே இதன் முதன்மைப் பயனாளிகளாவர்.
- இந்தத் திட்டமானது "பிரதான் மந்திரி கானிஜ் சேத்ரா கல்யாண் யோஜனா" எனவும் அழைக்கப் படுகிறது.

## சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் மாநாட்டு மையம்

- ருத்ராக்ஸ் எனப் பெயரிடப்பட்ட இந்த மையமானது வாரணாசியில் அமைக்கப் பட்டு உள்ளது.
- இது ஜப்பானின் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் உதவியைக் கொண்டு கட்டமைக்கப் பட்டுள்ளது.
- மக்களிடையே சமூக மற்றும் கலாச்சாரத் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.



## மைன்வாக் நிறுவனத்தின் தடுப்பூசி

- பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனமானது (Indian Institute of Science – IISC) வெப்பத்தைத் தாங்கக் கூடிய கோவிட் – 19 தடுப்பு மருந்தின் செயல்முறையை உருவாக்கியுள்ளது.
- விலங்குகள் மீது பரிசோதிக்கப்பட்ட போது தற்போது உள்ள SARS – COV – 2 வைரசின் அனைத்து மாற்றுருக்களுக்கும் எதிராக சிறப்பான செயல்திறனை இது கொண்டு உள்ளது எனக் கண்டறியப் பட்டது.
- இந்த ஆராய்ச்சி பற்றிய அறிக்கையானது ACS தொற்றுநோயியல் பத்திரிக்கையில் வெளியானது.
- இந்தத் தடுப்பு மருந்தானது IISC நிறுவனத்தின் உதவி பெற்ற உயிரித் தொழில்நுட்பப் புத்தாக்க நிறுவனமான மைன்வாக்சினால் உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்தத் தடுப்பு மருந்தினை 37 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையில் ஒரு மாதம் வரை வைத்துப் பயன்படுத்தலாம்.
- இதனை 100 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் 90 நிமிடங்கள் வரை வைத்துப் பயன்படுத்தலாம்.




## இந்தியாவின் முதல் பாட் டாக்சி சேவை



- ஜேவரிலுள்ள நொய்டா விமான நிலையம் முதல் பிலிம் சிட்டி வரையில் பாட் டாக்சி (pod taxi) சேவையைத் தொடங்குவதற்கான விரிவான திட்ட அறிக்கையை இந்தியன் போர்ட் இரயில் மற்றும் ரோப்வே கார்ப்பரேஷன் லிமிடெட் (Indian Port Rail and Ropeway Corporation Ltd) என்ற நிறுவனமானது தயாரித்துள்ளது.
- இந்த இரு பகுதிகளுக்கிடையே வாகன ஓட்டுநர் இல்லாத டாக்சி சேவையை இயக்குவதற்கான திட்டங்கள் இதில் இடம் பெற்றுள்ளன.
- இது 14 கி.மீ. தூரத்திற்கான போக்குவரத்துச் சேவை ஆகும்.
- இது இந்தியாவின் முதல் பாட் டாக்சி சேவையாக விளங்கும்.

## இமாலய மலை எருதுகள் – காப்பீடு

- யாக் எனப்படும் இமாலய மலை எருதுகளுக்குக் காப்பீடு பதிவு செய்வதற்காக அருணாச்சலப் பிரதேசத்தின் மேற்கு காமெங் மாவட்டத்திலுள்ள தேசிய இமாலய மலை எருது ஆராய்ச்சி மையமானது தேசியக் காப்பீட்டு நிறுவனக் கழகத்துடன் கூட்டிணைவு ஒன்றை மேற்கொண்டுள்ளது.
- இந்தக் காப்பீட்டுக் கொள்கையானது வானிலையால் ஏற்படும் பேரிடர்கள், நோய்கள், போக்குவரத்தின் போது ஏற்படும் விபத்துகள், அறுவைச் சிகிச்சைகள் மற்றும் வேலை நிறுத்தம் (அ) கலவரங்கள் போன்றவற்றால் ஏற்படும் அபாயங்களிலிருந்து இமாலய மலை எருதினை வைத்திருக்கும் உரிமையாளர்களுக்குப் பாதுகாப்பினை வழங்கும்.
- லடாக் மற்றும் ஜம்மு & காஷ்மீர் ஆகிய ஒன்றியப் பிரதேசங்களில் இமாலய மலை எருதுகள் அதிக எண்ணிக்கையில் உள்ளன.



## MH – 60R பல்பயன்பாட்டு ஹெலிகாப்டர்கள்

- அமெரிக்கக் கடற்படையானது முதல் இரண்டு MH-60R பல்பயன்பாடு ஹெலிகாப்டர்களை இந்தியக் கடற்படையிடம் ஒப்படைத்தது.
- இந்தியக் கடற்படையானது லாக்ஹீடு மார்டின் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட 24 MH-60R ஹெலிகாப்டர்களை வாங்குகிறது.
- இவை உலகின் மிகவும் மேம்படுத்தப்பட்ட கடல்சார் ஹெலிகாப்டர் என கருதப் படுபவையாகும்.



## கோவிஹோம்

- ஹைதராபாத்திலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் "கோவிஹோம்" எனப்படும் விரைவு மின்னணு மற்றும் செயற்கை நுண்ணறிவு முறையினால் இயங்கும் கோவிட்-19 சோதனைக் கருவியை உருவாக்கியுள்ளனர்.
- இந்தச் சோதனையை மலிவான விலையில் வீட்டிலேயே செய்ய இயலும்.
- இந்தச் சோதனைக் கருவியானது அறிகுறியல்லாத மற்றும் அறிகுறியுடன் கூடிய இரண்டு வகைத் தொற்றினையும் 30 நிமிடங்களுக்குள் கண்டறிந்து விடும்.

## கிருஷ்ணா மற்றும் கோதாவரி நதி வாரியங்களின் அதிகார வரம்பு அறிவிப்பு

- கிருஷ்ணா மற்றும் கோதாவரி நதி மேலாண்மை வாரியங்களின் அதிகார வரம்பினை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் அவை உருவாக்கப்பட்ட ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- வாரியங்கள் நிறுவப்பட்டதோடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களிலுள்ள இரு நதிகளின் படுகைகளிலும் அமைக்கப்படும் நீர்மின் ஆற்றல் நிலையம் உள்ளிட்ட அனைத்துத் திட்டங்களின் செயல்பாட்டு அதிகாரத்தையும் இந்த வாரியங்களுக்கு மத்திய அரசு மாற்றியுள்ளது.
- இது 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 14 முதல் நடைமுறைக்கு வர உள்ளது.
- இதற்கான அறிவிப்பானது ஜல்சக்தி அமைச்சகத்தினால் வெளியிடப்பட்டது.
- இந்த அறிவிப்பானது கிருஷ்ணா நதிப் படுகையில் அமைந்த 35 நீர்மின் திட்டங்கள் மற்றும் கோதாவரி நதிப் படுகையில் அமைந்த 71 நீர்மின் திட்டங்கள் ஆகியவற்றை இந்த வாரியங்களின் அதிகார வரம்பிற்குள் கொண்டு வந்துள்ளது.

## கோவிட் டீக்கா சங் சுரக்சித் வன் தன் அவுர் உத்யம்

- பழங்குடியினர் நலத்துறை விவகாரங்கள் அமைச்சர் அர்ஜுன் முண்டா இந்தப் பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார்.

- கொரோனா வைரஸ் தடுப்பு மருந்திற்கு எதிரான "பொய்த் தகவல்களை" ஒழிக்கவும், பொய்த் தகவல்களில் மேன்மேலும் கூறப்படும் கட்டுக்கதைகள், வதந்திகள் தேவையற்ற மற்றும் தவறான தகவல்களை ஒழிக்கவும் இந்தப் பிரச்சாரம் உதவும்.
- இது பழங்குடியினர் பகுதிகளில் 'ஆரோக்கியமுடன் கூடிய வாழ்வாதாரங்களை' மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் உறுதித்தன்மை, பெருமை மற்றும் சுயதிறன் ஆகியவற்றை மேம்படுத்துதல் போன்றவற்றில் ஈடுபாடு செலுத்துகிறது.
- இந்த பிரச்சாரமானது யுனிசெஃப் மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றால் இணைந்து தொடங்கப்பட்டுள்ளது.
- இது மூன்று முக்கிய முழக்கங்களை வழங்கியுள்ளது. அவை,
  - ஜீவன் – வாழ்க்கை
  - ஜீவிகா – வாழ்வாதாரம்
  - ஜக்ரூக்தா – விழிப்புணர்வு

## இந்தியா – நேபாளம் நட்புறவு இரயில் பாதைத் திட்டம்

- 2021 ஆம் ஆண்டு ஜூலை 18 அன்று இந்தியாவின் ஜெய்நகருக்கும் நேபாளத்தின் குர்தா பகுதிக்கும் இடையேயான இரயில் பாதையின் சோதனை ஓட்டமானது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.
- இந்த இரயில் பாதையின் மொத்த நீளம் 34.50 கிமீ ஆகும்.
- இது இரு நாடுகளுக்கிடையேயான முதல் இரயில் பாதை இணைப்பாகும்
- இது நேபாளத்தின் மஹோத்தாரி மாவட்டத்திலுள்ள குர்தா என்ற பகுதியினை பீகாரின் மதுபானி மாவட்டத்திலுள்ள ஜெய்நகருடன் இணைக்கின்றது.
- இந்தியா-நேபாளம் நட்புறவு இரயில்பாதைத் திட்டத்தின் கீழ் ஜெய்நகர்-குர்தா இரயில்பாதையை IRCON நிறுவனம் அமைக்கிறது.
- இதற்கு இந்திய அரசு நிதியுதவி அளிக்கிறது.
- 17 கி.மீ. நீளம் கொண்ட இரண்டாவது இரயில்பாதை இணைப்பானது குர்தா பகுதியை பங்கஹா என்ற பகுதியுடன் இணைக்க உள்ளது.
- 17 கி.மீ. நீளமான மூன்றாவது இரயில்பாதை இணைப்பானது பங்கஹா பகுதியினைப் பர்திபாஸ் என்ற பகுதியுடன் இணைக்க உள்ளது.

## NB Driver

- சென்னையின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள், NB Driver (அண்மைய இயக்கி – Neighbourhood Driver) எனப்படும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான ஒரு கணித மாதிரியை உருவாக்கியுள்ளனர்.
- இது செல்களில் புற்றுநோயை உருவாக்கும் சில மாற்றங்களைக் கண்டறிய வேண்டிப் பயன்படுத்தப் படுகிறது.
- புற்றுநோயின் வளர்ச்சிக்கு காரணமான அந்த மரபணு மாற்றங்களைத் துல்லியமாக அறிய டிஎன்ஏ அமைப்பினை ஆராயும் தொழில்நுட்பத்தை (இதுவரை பயன்படுத்தப் படாத) இந்த வழிமுறை பயன்படுத்துகிறது.

## கிசான் சாரதி

- ‘கிசான் சாரதி’ எனும் ஒரு டிஜிட்டல் தளமானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இது விவசாயிகளுக்குத் தாங்கள் விரும்பும் மொழியில் ‘சரியானத் தகவல்களை சரியான நேரத்தில்’ பெற உதவும்.
- இந்த முன்னெடுப்பானது தொலைதூரப் பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்குத் தொழில் நுட்ப வசதிகளை வழங்கி அவர்களுக்கான உரிமையை வழங்குகிறது.




## கூகுளின் புதிய மேகக் கணிமைப் பகுதி

- கூகுள் நிறுவனமானது தேசியத் தலைநகரப் பகுதியான டெல்லியில் தனது புதிய மேகக் கணிமைப் பகுதியை (Cloud Region) தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- இது மும்பையை அடுத்து இந்தியாவில் அமைக்கப்படும் இரண்டாவது கூகுள் மேகக் கணிமைப் பகுதியாகும்.
- மேலும் இது ஆசிய பசிபிக் பகுதியில் அமைந்த 10வது மேகக் கணிமைப் பகுதியாகும்.
- உலகம் முழுவதும் மொத்தம் 26 கூகுள் மேகக் கணிமைப் பகுதிகள் உள்ளன.



## TTX – 2021

- இந்தியா, இலங்கை மற்றும் மாலத்தீவு ஆகிய நாடுகளின் முன்னணிப் பாதுகாப்பு அதிகாரிகள் 'TTX – 2021' எனப்படும் முத்தரப்பு டேபிள்டாப் என்ற ஒரு பயிற்சியில் காணொலி மூலம் பங்கேற்றனர்.
- இந்தப் பயிற்சியானது போதைப்பொருள் தடுப்பு போன்ற கடல்சார் குற்றங்கள், கடல்சார் ஆய்வு மற்றும் கடல்பகுதியில் நடைபெறும் மீட்புப் பணி போன்றவற்றில் உதவுதல் ஆகியவை குறித்து மேற்கொள்ளப் பட்டது.
- இந்த இரண்டு நாள் பயிற்சியானது மும்பையிலுள்ள கடல்சார் போர் மையத்தினால் ஒருங்கிணைந்து நடத்தப்பட்டது.

## சிறந்த தேசிய தளவாடங்கள் விருது

- இந்திய அரசானது ஒரு புதிய வகை விருதுகளை வழங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- முதல் பிரிவில் சேவை வழங்குநர் மற்றும் தளவாட உள்கட்டமைப்புகளுக்கும் இரண்டாம் பிரிவில் பல்வேறு பயணர் தொழில் துறைகளுக்கும் விருதுகள் வழங்கப் படும்.

## சமத்துவமின்மை அறிக்கை 2021 : இந்தியாவின் சமத்துவமற்ற சுகாதார நலத்தின் கதை

- இது ஆக்ஸ்ஃபாம் நிறுவனத்தின் ஒரு அறிக்கையாகும்.
- இந்த அறிக்கையானது பொதுச் சுகாதார முறையில் செய்யப்படும் குறைவானச் செலவினமானது சுகாதார நலனை அணுகுவதில், குறிப்பாக தொற்றுநோய் காலங்களில் எவ்வாறு சமத்துவமின்மைக்கு வழிவகுத்தது என்பதைப் பற்றி எடுத்துரைக்கிறது.
- கோவிட்-19 பெருந்தொற்றினைச் சிறப்பாகக் கையாள்வதில் கேரள மாநிலத்தை ஒரு வெற்றிகரமான மாநிலமாக இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.
- தெலங்கானா, இமாச்சலப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் உறுதிப்படுத்தப்பட்ட கோவிட்-19 தொற்றுகள் குறைவான அளவே பதிவாகியுள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- அந்த மாநிலங்கள் கடந்த சில வருடங்களில் பட்டியலினப் பிரிவினர், பட்டியலினப் பழங்குடியினர் மற்றும் பொதுப் பிரிவு மக்கள்தொகையினர் ஆகியோரிடையே சுகாதாரத் துறையில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து வருகின்றன.
- அதே சமயம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுகாதாரத்திற்கு அதிக செலவினத்தை ஒதுக்கியுள்ள அசாம், பீகார் மற்றும் கோவா போன்ற மாநிலங்களில் கோவிட் தொற்றிலிருந்து மீள்பவர்கள் எண்ணிக்கை வீதம் அதிகமாக உள்ளது எனவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- நாட்டின் மொத்த குடும்பங்களில் மூன்றில் ஒரு பங்கிற்கும் குறைவான குடும்பங்களே அரசின் காப்பீட்டுத் திட்டத்தினால் பயன் பெற்று வருகின்றனர்.
- இந்தியாவில் சுகாதாரத்திற்காக தனிநபர் ஒருவர் தமது கையில் இருந்து செய்யும் செலவு வீதமானது (64.2%) உலகச் சராசரியை விட அதிகமாகும்.




## பிளாக்செயின் தொழில்நுட்பம் – சான்றிதழ்கள்




- பிளாக்செயின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கல்வி ஆவணங்களை வெளியிடும் நாட்டின் முதல் மாநிலமாக மகாராஷ்டிரா உருவெடுக்கவுள்ளது.
- இதன் மூலம் இந்திய நாடானது இவ்வாறு செயல்படுத்தும் உலகின் நான்காவது நாடாக மாறவுள்ளது.
- தற்போது கல்வி ஆவணங்களுக்காக பிளாக்செயின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் நாடுகள் பஹ்ரைன், மால்டா மற்றும் சிங்கப்பூர் ஆகியனவாகும்.
- பிளாக்செயின் என்பது பரவலாக விநியோகிக்கப்பட்ட ஒரு டிஜிட்டல் பரிவர்த்தனை பேரேடாகும் (distributed digital transaction ledger).
- பல்வேறு கணினி அமைப்புகளில் தரவு அல்லது பதிவுகளின் ஒரே மாதிரியான நகல்களைப் பராமரிக்க இது அனுமதிக்கிறது.
- ஆவணங்களை மோசடி செய்வது என்பது பல்வேறு கல்வி மற்றும் இதர பிற நிறுவனங்களுக்குக் கடுமையான ஒரு சிக்கலாக உள்ளது.

## இந்தியப் பாரம்பரியக் கல்வி நிறுவனம்

- இது உத்தரப் பிரதேச மாநிலத்தின் நொய்டாவில் உள்ள கௌதம புத்தர் நகரில் கலாச்சாரத் துறையின் கீழ் ஒன்றிய அரசால் அமைக்கப்பட உள்ளது.
- இந்த வகையில் அமைக்கப்பட்டு நாட்டில் தனித்து இயங்கும் ஒரு கல்வி நிறுவனமாக இது இருக்கும்.
- இந்தியாவின் தொட்டுணர முடியாதப் பாரம்பரியத்தின் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சியின் மீது கவனம் செலுத்தும் வகையில் இது ஓர் உலகத் தரம் வாய்ந்த பல்கலைக் கழகமாக இருக்கும்.




## பள்ளிப் புதுமை தூதர் பயிற்சி திட்டம்

- மத்தியக் கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் மற்றும் மத்தியப் பழங்குடியினர் நலன் அமைச்சர் திரு அர்ஜுன் முண்டா ஆகியோர் இணைந்து இந்தத் திட்டத்தைத் துவக்கி வைத்துள்ளனர்.
- தொழில்முனைதல், புதுமைகள், தனிநபர் அறிவுசார் சொத்துரிமை, வடிவமைப்புச் சிந்தனை, பொருள் உருவாக்கம் ஆகியவற்றில் 50,000 பள்ளி ஆசிரியர்களுக்கு இது பயிற்சி அளிக்கும்.

## பிணை ஆணைகளின் பாதுகாப்பான டிஜிட்டல் பரிமாற்றம்

- இந்திய உச்சநீதிமன்றமானது இந்தியா முழுவதுமுள்ள சிறைச்சாலைகளுக்குத் தனது பிணை ஆணைகளைப் பாதுகாப்பாக டிஜிட்டல் முறையில் பரிமாற்றம் செய்வதற்கான ஓர் அமைப்பினைச் செயல்படுத்த உள்ளதாக அறிவித்துள்ளது.
- இதனால் அதிகாரிகள் சிறைக் கைதிகளை விடுவிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட காகித முறை ஆணைகளுக்காக காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

❖ இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதில் உதவுவதற்காக மூத்த வழக்குரைஞர் துஸ்யந்த் தவே (Dushyant Dave) அவர்கள் நீதிமன்ற உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ எந்தவொரு வழக்கிலும் அது தொடர்பான தகவல், நிபுணத்துவம் (அ) நுண்ணறிவு ஆகியவற்றை வழங்குவதன் மூலம் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணையில் உதவும் வகையில் வழக்கோடு தொடர்பில்லாத ஒருவர் "நீதிமன்ற உதவியாளர்" எனப் படுகிறார்.

❖ "நீதிமன்ற உதவியாளர்" (அமிக்கஸ் கியூரி) என்பது "நீதிமன்றத்தின் நண்பன்" என்ற பொருள் கொண்ட ஒரு லத்தீன் சொற்கூறாகும்.

## புதிய அமைச்சரவைக் குழுக்கள்




❖ பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவையானது வெவ்வேறு அமைச்சரவைக் குழுக்களை மாற்றியமைத்துள்ளது.

❖ முக்கியமான அரசியல், பொருளாதார, பாதுகாப்பு மற்றும் முதலீட்டு விவகாரங்கள் குறித்து இறுதி முடிவினை மேற்கொள்ளும் அமைப்பாக செயல்படும் வகையில் எட்டு அமைச்சரவைக் குழுக்கள் உள்ளன.

❖ எனினும் முக்கிய அமைச்சர்களின் அதிகாரப் படிநிலையில் எந்தவொரு மாற்றமும் இல்லை.

❖ பிரதமர் நரேந்திர மோடிக்கு அடுத்த நிலையில் அரசின் இரண்டாவது அதிக அதிகாரமிக்க நபராக உள்துறை அமைச்சர் அமித் சா தொடர்ந்து செயல்படுவார்.

❖ இவர் எட்டு அமைச்சரவைக் குழுக்களிலும் உறுப்பினராக உள்ளார்.

❖ பிரதமர் நரேந்திர மோடி எட்டுக் குழுக்களில் ஆறு குழுக்களுக்கு தொடர்ந்து தலைமை தாங்குவார்.

❖ அவை, நியமனங்கள், பொருளாதார விவகாரங்கள், அரசியல் விவகாரங்கள், பாதுகாப்பு, முதலீடு மற்றும் வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு ஆகியனவாகும்.

## NEIFM பெயர் மாற்றம்

- அருணாச்சலப் பிரதேசத்தின் பாசிகாட்டில் உள்ள வடகிழக்கு நாட்டு மருத்துவக் கல்வி நிறுவனமானது (NEIFM - North Eastern Institute of Folk Medicine) வடகிழக்கு ஆயுர்வேத மற்றும் நாட்டு மருத்துவ ஆராய்ச்சிக் கல்வி நிறுவனம் (NEIARMR - North Eastern Institute of Ayurveda & Folk Medicine Research) எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.
- இது ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு தன்னாட்சி நிறுவனமாகும்.




## ஆபரேஷன் சாகர் ஆராக்சா II

- இலங்கை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து, கொழும்பில் இருந்து கிளம்பிய MV X-Press Pearl என்ற கண்டெய்னர் கப்பலில் ஏற்பட்ட பெரும் தீ விபத்தை எதிர்த்து இந்தியக் கடலோரக் காவற்படையினர் போராடினர்.
- தெற்காசியக் கூட்டுறவு சுற்றுச்சூழல் திட்டத்தில் (SACEP - South Asia Co-operative Environment Programme) உறுப்பினராக உள்ள இந்தியக் கடலோரக் காவல்படையானது இந்தப் பிராந்தியத்தில் கடல் சூழலைப் பாதுகாக்கும் பொறுப்பில் உறுதியாக உள்ளது.



## தொலைதூரச் சட்ட திட்டம்

- ❖ அண்மையில், நீதித்துறை தனது தொலைதூரச் சட்ட திட்டத்தின் கீழ் பொதுச் சேவை மையங்கள் மூலம் 9 லட்சம் பயனாளிகளைக் கடந்த தன் சாதனையை நினைவு கூர்ந்துள்ளது.
- ❖ வழக்காடுதலுக்கு முந்தைய நிலையில் இருக்கும் வழக்குகளுக்குத் தீர்வு காண 2017 ஆம் ஆண்டில் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்துடன் இணைந்து சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்தினால் இது தொடங்கப்பட்டது.




- ❖ நேரத்தையும் பணத்தையும் வீணாக்காமல் யார் வேண்டுமாயினும் சட்ட ஆலோசனை பெற இது உதவுகிறது.
- ❖ சட்ட சேவைகள் ஆணையச் சட்டம், 1987 என்ற சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடி இலவச சட்ட உதவிக்குத் தகுதியானவர்களுக்கு இந்த சேவை இலவசமாகும்.
- ❖ பொதுச் சேவைகள் மையத் திட்டமானது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் ஒரு முன்னெடுப்பாகும்.
- ❖ இது இந்தியாவின் கிராமங்களுக்குப் பல்வேறு மின்னணுச் சேவைகளை வழங்கச் செய்வதற்கான அணுகல் மையங்களாகச் செயல்படுகிறது.

## கலா விஸ்வா

- ❖ இந்தியக் கலாச்சார உறவுகள் மன்றமானது ‘கலா விஸ்வா’ என்ற புதிய ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- ❖ பாரம்பரிய நாட்டுப்புறக் கலைஞர்கள், உள்ளூர் கலைஞர்கள் / கிராமப்புறங்களில் இருந்து வரும் கைவினைஞர்களை தொடர்பு கொள்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்தியக் கலாச்சார உறவுகள் மன்றமானது வெளியுறவு விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஒரு தன்னாட்சி அமைப்பு ஆகும்.

## ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம்

- ❖ ‘ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டத்தின்’ (Stand Up India Scheme) கால அளவை 2025 ஆம் ஆண்டு வரை இந்திய அரசு நீட்டித்துள்ளது.

- இது பட்டியல் இனத்தோர், பழங்குடியினர் மற்றும் பெண்கள் ஆகியோருக்கு கடன் வழங்கச் செய்வதற்கும், அவர்களிடையேத் தொழில்முனைவோரை ஊக்குவிக்கச் செய்வதற்கும் வேண்டி 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பிரதமரால் தொடங்கப் பட்டது.
- 'கிரீன்ஃபீல்ட் நிறுவனத்தை' (greenfield enterprise) அமைப்பதில் அவர்களை ஊக்குவிக்கச் செய்வதற்காக இந்தத் திட்டம் வங்கிக் கடன்களை வழங்குகிறது.
- இங்கே கிரீன்ஃபீல்ட் என்பது பண்ணைத் துறை அல்லாமல் உற்பத்தி, சேவைகள் அல்லது வர்த்தகத் துறை என்று மட்டுமே பொருள்படும்.




## கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள்

- இந்த விளையாட்டின் இரண்டாவது பதிப்பு மார்ச் 2022 முதல் பெங்களூரில் நடைபெறும்.
- இதன் முதல் பதிப்பு 2020 ஆம் ஆண்டில் ஒடிசாவில் நடத்தப் பட்டது.
- இது இந்தியாவின் பல்கலைக்கழகங்கள் அளவிலான மட்டத்தில் மிகப்பெரிய விளையாட்டுப் போட்டியாகும்.
- இதை இந்திய விளையாட்டு ஆணையம் மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம், இந்திய பல்கலைக்கழகங்களின் சங்கம், இந்திய ஒலிம்பிக் சங்கம் மற்றும் தேசிய விளையாட்டுக் கூட்டமைப்பு ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்கின்றன.
- இது 2018 ஆம் ஆண்டில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டியானது வெற்றிகரமாக நிறைவேற்றப் பட்ட பின்னர் தொடங்கப்பட்டது.
- அந்த விளையாட்டுகள் அதன் மூன்றாவது பதிப்பை 2020 ஆம் ஆண்டில் முடித்தன.
- அதன் நான்காவது பதிப்பு 2021 ஆம் ஆண்டில் ஹரியானாவில் நடத்தப் பெறும்.




## 97வது அரசியலமைப்புத் திருத்தம் குறித்து உச்ச நீதிமன்றம்

- 97வது அரசியலமைப்புத் திருத்தத்தின் செல்லுபடித் தன்மையை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.
- ஆனால் அது 97வது திருத்தத்தால் சேர்க்கப்பட்ட ஒரு பகுதியை நீக்கியுள்ளது.
- குஜராத் உயர்நீதிமன்றத்தின் 2013 ஆம் ஆண்டின் தீர்ப்பை ஆதரிக்கும் வகையில் 97வது அரசியலமைப்புத் திருத்தத்தின் சில விதிகளை உச்ச நீதிமன்றம் நீக்கி உள்ளது.
- கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலப் பட்டியலில் இருப்பதால், அவை தொடர்பாக நாடாளுமன்றம் சட்டங்களை இயற்ற முடியாது என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- இந்தத் திருத்தமானது கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான சட்டங்களை இயற்றுவதற்காக மாநிலங்களுக்குப் பிரத்தியேக அனுமதியை அளிக்கிறது.
- கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தில் சீரான தன்மையைக் கொண்டு வருவதற்காக இந்தத் திருத்தம் இயற்றப்பட்டதாகவும், அது மாநிலங்களின் அதிகாரங்களைப் பறிக்க வில்லை என்றும் மத்திய அரசு கூறியது.
- ஆனால் மத்திய அரசானது இந்த விவகாரத்தில் சீரான தன்மையை அடைய விரும்பினால், அரசியலமைப்பின் 252வது சட்டப் பிரிவின் கீழ் இதை அணுகுவதே ஒரு சிறந்த வழியாகும்.
- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு வேண்டி அதன் ஒப்புதலின் மூலம் சட்டமியற்றும் அதிகாரத்தை அரசியலமைப்பின் 252வது பிரிவு பாராளுமன்றத்திற்கு வழங்குகிறது.

## விரைவான விசாரணை

- பீமா கோரேகான் சாதி வன்முறை வழக்கில், "விரைவான விசாரணை ஓர் அடிப்படை உரிமை" (speedy trial is a fundamental right") என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- இந்தியாவில், "சட்டத்தால் வகுக்கப்பட்ட நடைமுறையைத் தவிர வேறு எந்த முறையிலும் எந்தவொரு நபரின் வாழ்க்கை அல்லது தனிப்பட்டச் சுதந்திரம் பறிக்கப் படக் கூடாது" என்று இந்திய அரசியலமைப்பின் 21வது சட்ட பிரிவின் கீழ் உள்ளது என்று உச்ச நீதிமன்றம் கூறுகிறது.

## தேசியப் பாதுகாப்புச் சட்டம், 1980




- ❖ மணிப்பூரைச் சேர்ந்த சமூக ஆர்வலர் எரேந்திர லெய்சொங்போம் (Erendra Leichongbom) என்பவரைச் சிறையிலிருந்து விடுவிக்க உச்சநீதிமன்றம் உத்தரவு இட்டுள்ளது.
- ❖ அவர் தனது சமூக ஊடகப் பதிவுகளுக்காக வேண்டி தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டார்.
- ❖ அவரைத் தொடர்ந்து காவலில் வைத்திருப்பது அவரது வாழ்க்கைக்கான அடிப்படை உரிமையின் மீறல் மற்றும் சட்ட முறை சார்ந்த மீறல் என்று நீதிமன்றம் கூறி உள்ளது.
- ❖ சாதாரணத் தண்டனைப் பிரிவுகள் கூட பொருந்தாத வழக்குகளில் தடுப்புக் காவல் சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்துவதாக நீதிமன்றம் கவலை தெரிவித்துள்ளது.
- ❖ தேசியப் பாதுகாப்புச் சட்டமானது ஒரு தடுப்புக் காவல் சட்டம் ஆகும்.

## SMILE திட்டம்

- ❖ சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்பு அமைச்சகமானது SMILE எனும் (விளிம்பு நிலையில் உள்ளவர்களுக்கான வாழ்வாதாரம் மற்றும் நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் திட்டம்) ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- ❖ இதில் பிச்சை எடுக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கச் செய்வதற்கான மத்திய அரசின் விரிவான ஒரு திட்டமும் அடங்கும்.
- ❖ இந்தத் திட்டமானது பிச்சை எடுக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான நலத் திட்டங்கள் உள்ளிட்ட பரவலான நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும்.

## வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகர்ப்புற இயற்கை அமைப்புத் திட்டம்

- ❖ மத்தியப் பிரதேச அரசானது குவாலியர் மற்றும் ஓர்ச்சா ஆகிய நகரங்களில் யுனெஸ்கோவின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகர்ப்புற இயற்கை அமைப்புத் திட்டத்தை தொடங்கியுள்ளது.
- ❖ இந்த இடங்களானது அவற்றின் வரலாறு மற்றும் கலாச்சார மேம்பாடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு யுனெஸ்கோ, இந்திய அரசு மற்றும் மத்தியப் பிரதேச மாநில அரசு ஆகியவற்றால் இணைந்து மேம்படுத்தப்படும்.

- மத்தியப் பிரதேசத்தின் குவாலியர் மற்றும் ஓர்ச்சா ஆகிய நகரங்கள் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் யுனெஸ்கோவின் நகர்ப்புற இயற்கை அமைப்புத் திட்டத்தின் கீழ் உலகப் பாரம்பரியத் தளங்களாக அறிவிக்கப்பட்டன.

## H5N1 பறவைக் காய்ச்சல்

- இந்தியாவில் H5N1 பறவைக் காய்ச்சலின் காரணமாக ஏற்பட்ட இந்த ஆண்டின் முதல் உயிரிழப்பானது பதிவாகியுள்ளது.
- இது உலகெங்கிலும் உள்ள காட்டுப் பறவை இனங்களில் இயற்கையாகவே காணப் படும் A வகை பறவைக் காய்ச்சல் வைரசினால் ஏற்படுத்தப்படும் நோயாகும்.
- A வகை பறவைக் காய்ச்சல் வைரசானது அதன் மேற்பரப்பிலுள்ள இரு புரதங்களின் அடிப்படையில் வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- அவை, ஹெமாக்குளுட்டினின் (HA- Hemagglutinin) மற்றும் நியூராமினிடேஸ் (NA - Neuraminidase) ஆகும்.
- இந்திய நாடானது 2019 ஆம் ஆண்டில் பறவைக் காய்ச்சல் அற்ற (H5N1) ஒரு நாடாக அறிவிக்கப் பட்டது.
- இந்த நிலையானது மற்றுமொரு தொற்று ஏற்படும் வரை மட்டுமே நீடித்தது.




## உலக சுகாதார அமைப்பின் GMP/COPP சான்றிதழ்

- இந்திய மருத்துவ மருந்து உற்பத்திக் கழக நிறுவனமானது தனது 18 ஆயுர்வேத மருந்துகளுக்காக வேண்டி உலக சுகாதார அமைப்பின் GMP/COPP சான்றிதழைப் பெற விண்ணப்பித்துள்ளது.
- GMP என்றால் நல்லமுறையிலான ஒரு உற்பத்திச் செயல்முறை (Good Manufacturing Practice – GMP) என்று பொருளாகும்.
- பெரும்பாலான உலக மருந்து நிறுவனங்களுக்கு தனது மருந்துகளை விற்பனை செய்வதற்கு உலக சுகாதார அமைப்பின் GMP சான்றிதழ் அவசியமாகும்.
- மருந்து உற்பத்திப் பொருள் சான்றிதழானது (Certificate of Pharmaceutical Product – CPP or COPP) உலக சுகாதார அமைப்பினால் பரிந்துரைக்கப்பட்ட வடிவில் வழங்கப்படும் ஒரு சான்றிதழாகும்.

## கமன் அமன் சேது

- இந்திய மற்றும் பாகிஸ்தான் நாட்டு இராணுவப் படைகள் கமன் அமன் சேது பாலத்தில் ஒரு கொடி சந்திப்பு நிகழ்வினை நடத்தி இனிப்புகளைப் பரிமாறிக் கொண்டன.
- கமன் அமன் சேது வடக்கு காஷ்மீரின் உரி என்னுமிடத்தில் அமைந்துள்ளது.
- கமன் அமன் சேது என்பது இந்தியா-பாகிஸ்தான் இடையேயான நட்புறவுப் பாலமும், உரி மாவட்டத்திலுள்ள இந்திய-பாகிஸ்தான் எல்லையின் கடைசி இடமும் ஆகும்.




## புதிய ஆகாஷ் ஏவுகணை

- இது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் உருவாக்கப்பட்டு உள்ளது.
- இது ஒடிசாவின் கடற்கரைக்கு அருகிலுள்ள ஒருங்கிணைந்த சோதனைத் தளத்தில் வெற்றிகரமாக பரிசோதனை செய்யப் பட்டது.
- இது நிலத்திலிருந்து வானில் பாயக்கூடிய ஒரு ஏவுகணை ஆகும்.
- இது 60 கி.மீ. தொலைவிலுள்ள இலக்கையும் தாக்கி அழிக்கக் கூடியதோடு, இதன் வேகம் 2.5 மேக் என்ற அளவிலும் உள்ளது.



## இயற்கைக் குறியீடு

- ❖ பெங்களூருவின் ஜவஹர்லால் நேரு மேம்படுத்தப் பட்ட அறிவியல் ஆராய்ச்சி மையமானது மதிப்பு மிக்க இயற்கைக் குறியீட்டுப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.
- ❖ இது பொருள்வள அறிவியலில் மேம்பாட்டிற்கான உலகின் 50 முன்னணி கல்வி நிறுவனங்கள் என்ற ஒரு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தப் பட்டியல் அந்த நிறுவனத்தை இயற்கைக் குறியீட்டுப் பட்டியலின் 50 உயர்ந்து வரும் நிறுவனங்கள் பட்டியலில் 23வது இடத்தில் வைத்துள்ளது.
- ❖ இந்தப் பட்டியலில் இடம் பெற்ற ஒரே இந்திய நிறுவனம் இதுவே ஆகும்.
- ❖ இந்தப் பட்டியலில் சீனாவின் 18 நிறுவனங்கள், அமெரிக்காவின் 12 நிறுவனங்கள் மற்றும் ஐக்கிய ராஜ்ஜியத்தின் 2 நிறுவனங்கள் ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.

## SKOCH விருது




- ❖ கச்சார் துணை ஆணையர் கீர்த்தி ஜல்லி என்பவருக்கு SKOCH தேசிய வெள்ளி விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- ❖ தினாத்பூர் பகிச்சா என்ற கிராமத்திலுள்ள வீடுகளில் ஊட்டச்சத்து நிறைந்த தாவரத் தோட்டங்களை அமைப்பதற்கான மாற்றம் மற்றும் மேம்பாடு குறித்த ஒரு ஒருங்கிணைந்தத் திட்டமான "புஷ்தி நிர்போர்" (ஊட்டச்சத்து சார்ந்த) எனும் அவரது திட்டத்திற்காக வேண்டி இந்த விருதானது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தக் கிராமமானது இந்திய வங்காளதேச எல்லைக்கு அருகே உள்ள கச்சார் எனும் மாவட்டத்தின் கட்டிகோரா என்ற வட்டத்தில் அமைந்துள்ளது.
- ❖ 2003 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட SKOCH விருதானது, இந்தியாவை ஒரு சிறந்த நாடாக உருமாற்றப் பாடுபடும் மக்கள், திட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியோருக்கு ஒரு கௌரவத்தை அளிக்கிறது.

## உலகப் பல்கலைக்கழகங்களின் உச்சி மாநாடு

- ❖ இந்த உச்சி மாநாடானது ஹரியானாவின் சோனிபட் என்னுமிடத்தில் அமைந்துள்ள O.P. ஜிந்தால் உலகப் பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

- இந்த உச்சி மாநாட்டின் கருத்துரு, "Universities of the Future : Building Institutional Resilience, Social Responsibility and Community Impact" (வருங்காலத்தின் பல்கலைக்கழகங்கள் : நிறுவனங்களின் நெகிழ்திறன், சமூகப் பொறுப்பு மற்றும் சமூக தாக்கங்கள் ஆகியவற்றை உருவாக்குதல்) என்பதாகும்.
- இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் M. வெங்கையா நாயுடு அவர்கள் இந்த உச்சி மாநாட்டின் சிறப்பு விருந்தினராக அந்த மாநாட்டினைத் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

## பால்பொருள் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு




- இந்திய அரசின் கால்நடை வளர்ப்பு மற்றும் பால்பொருள் அமைச்சகமானது இந்த அமைப்பை நிறுவியுள்ளது.
- இந்திய நாட்டின் பால்பொருள் தொழில்துறையில் முதலீட்டுகளை ஊக்குவித்தல் மற்றும் அதற்கான வசதியை ஏற்படுத்துதல் போன்றவற்றிற்கான ஒரு பிரத்தியேக கவனத்தை வழங்கும் நோக்கில் இந்த அமைப்பானது நிறுவப்பட்டுள்ளது.

## CAVACH திட்டம்

- இந்தியத் தேசியப் பங்குச் சந்தை நிறுவனத்தின் துணை நிறுவனமான NSE என்ற அறக்கட்டளையானது இத்தகையப் புதுமைமிக்க திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தியாவின் தொலைதூர 'உயர்நோக்கு இலட்சிய மாவட்டங்களில்' தடுப்பூசி வழங்கும் வசதியை அதிகரிப்பதற்காக அடிமட்ட பங்குதாரர்கள் மற்றும் உள்ளாட்சி நிர்வாக அமைப்பு ஆகியவை மேற்கொள்ளும் முயற்சிகளை இந்தத் திட்டம் ஒருங்கிணைக்கும்.
- இத்திட்டமானது மகாராஷ்டிராவில் நந்தூர்பர் மற்றும் உஸ்மானாபாத், ராஜஸ்தானில் கரௌலி, தமிழ்நாட்டில் ராமநாதபுரம் மற்றும் நாகலாந்தில் கிப்பைர் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப் படுகிறது.
- CAVACH என்றால் சுகாதாரத்திற்கான கோவிட்-19 உதவி மற்றும் தடுப்பு மருந்து உதவி வழங்கும் பிரச்சாரம் (Covid-19 and Vaccination Assistance Campaign for Health) என்று பொருளாகும்.

## ஆளில்லா விமான எதிர்ப்புத் தொழில்நுட்பங்களுக்கான தீர்வு

- கான்பூரின் இந்திய தொழில்நுட்பக் கல்வி கழகமானது ஊடுருவலைக் கண்டறியும் அமைப்பு, ஆளில்லா விமான எதிர்ப்புத் தொழில்நுட்பங்கள், இணைய அமைப்பு முறை மற்றும் பிளாக் செயின் ஆகியவற்றிற்காக வேண்டி இணையவழி பாதுகாப்பு தீர்வு முறைகளைக் கண்டறிவதற்காக ஒரு தொழில்நுட்பப் புத்தாக்க முனையம் ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- கான்பூரின் இந்திய தொழில்நுட்பக் கல்வி கழகத்தின் இந்த C3i முனையமானது கடினமான உள்கட்டமைப்பு உள்ளிட்ட இணையப் பகுதிகளை பாதுகாப்பதில் ஈடுபடும்.
- இந்திய அரசானது அண்டை நாடுகளிடமிருந்து, குறிப்பாக சீனாவிடமிருந்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்காக இந்தியாவில் தயாரிக்கப்படும் இணையவழி பாதுகாப்பு தீர்வுமுறைகளை ஊக்குவித்து வருகிறது.

## 'இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களின் ஒருங்கிணைப்பு' அறிக்கை

- 'இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களின் ஒருங்கிணைப்பு 2021' என்று தலைப்பிடப்பட்ட ஒரு அறிக்கையினை நிதி ஆயோக் மற்றும் சர்வதேச எரிசக்தி முகைமை ஆகியவை இணைந்து வெளியிட்டுள்ளன.
- இந்த அறிக்கையானது கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய அரசுகளுடன் மூன்று மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்ட கருத்தரங்குகளின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளம் நிறைந்த இந்த மாநிலங்களால் எதிர்கொள்ளப்படும் ஆற்றல் மாற்ற சவால்களை புரிந்து கொள்வதற்காக இந்த அறிக்கையானது தயார் செய்யப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, இந்தியாவில் ஆற்றல் அமைப்பானது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களை ஆக்கப்பூர்வமாக ஒருங்கிணைக்க வல்லது (2022 ஆம் ஆண்டுக்குள் 175GW மற்றும் 2030 ஆம் ஆண்டுக்குள் 450 GW).

## எரிசக்தி தீவு அமைத்தல்

- இந்திய அரசானது நாட்டின் பல்வேறு நகரங்களில் எரிசக்தி தீவு அமைப்புகளை உருவாக்க திட்டமிட்டு வருகிறது.
- நாட்டின் மின்சார முறைமை மீதான தாக்குதல்களிலிருந்து முக்கியத்துவம் மிகுந்த மின்சார உள்கட்டமைப்பை பாதுகாப்பதற்காக இந்த திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.
- இந்தியாவின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைந்துள்ள பெங்களூரு மற்றும் ஜாம்நகர் ஆகியவையும் இதனுள் அடங்கும்.
- ஏற்கனவே இத்தகைய அமைப்பு முறையைக் கொண்டுள்ள மும்பை மற்றும் புதுடெல்லி ஆகிய நகரங்கள் புனரமைக்கப்படும்.
- இந்த எரிசக்தி தீவு அமைப்பானது உற்பத்தித் திறனையும், செயலிழப்பு ஏற்படும்போது பிரதான முறைமையிலிருந்து தாமாகவே விடுபடும் அம்சமும் கொண்டதாக இருக்கும்.




## ARMEX – 21

- பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், இந்திய இராணுவத்தின் பனிச்சறுக்குப் பயணத்தைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- இப்பயணமானது இமாலய மலைத்தொடர் பகுதிகளில் நடத்தப்பட்டது.
- ARMEX – 21 எனப்படும் இந்தப் பயணமானது மார்ச் 10 அன்று லடாக்கிலுள்ள காரகோரம் கணவாயில் கொடியசைத்துத் தொடங்கப்பட்டு 119 நாட்களில் 1,660 கி.மீ. தூரம் கடந்து ஜூலை 06 அன்று உத்தரகாண்ட்டிலுள்ள மலரியில் முடிவடைந்தது.
- இந்திய நாட்டிலும் இந்திய இராணுவத்திலும் சாகச செயல்முறைகளை ஊக்குவிப்பதற்காக இமாலயப் பகுதியின் மலைத் தொடர்களில் ARMEX-21 பயணம் மேற்கொள்ளப்பட்டது.

## மாநிலங்களவை உறுப்பினர் இடைநீக்கம்

- திரிணாமுல் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தனு சென் மீதமுள்ள மழைக் கால கூட்டத் தொடரில் பங்கேற்பதிலிருந்து இடைநீக்கம் செய்யப் பட்டு உள்ளார்.
- புதிதாக நிர்ணயிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஷ்வனி வைஷ்ணவ், பெகாசஸ் உளவு தொடர்பான அறிக்கையை வாசித்துக் கொண்டிருந்த போது அவரிடமிருந்து ஆவணங்களைப் பறித்து கட்டுக்கடங்காத முறையில் நடந்து கொண்டதன் காரணமாக இவர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.
- 256(2) என்ற விதியின் கீழ் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரை இடை நீக்கம் செய்ய அரசு கோரியது.

## வர்த்தக வசதி வழங்குதல் குறித்த மதிப்பீட்டு ஆய்வு – இந்தியா

- ஐக்கிய நாடுகள் அவையினால் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக வசதி வழங்குதல் குறித்த ஆய்வில் இந்தியாவின் மதிப்பானது கணிசமான அளவில் மேம்பட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் அவையின் ஆசியா மற்றும் பசிபிக் பகுதிக்கான பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தினால் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட டிஜிட்டல் மற்றும் நிலையான

வர்த்தக வசதி வழங்குதல் குறித்த உலகளாவிய மதிப்பீட்டில் இந்தியா 90.32 சதவீத மதிப்பினைப் பெற்றுள்ளது.

- 2019 ஆம் ஆண்டில் இருந்த 78.49 சதவீதத்திலிருந்து இந்தியா தற்போது முன்னேறி உள்ளது.
- 143 நாடுகள் மதிப்பிடப்பட்ட இந்த ஆய்வில் (2021) அனைத்து ஐந்து குறிகாட்டிகளிலும் இந்தியாவின் மதிப்பு முன்னேற்றம் கண்டுள்ளது.
- அந்த ஐந்து குறிகாட்டிகள் வெளிப்படைத்தன்மை, முறைமைகள், நிறுவனம் சார்ந்த ஏற்பாடுகள் மற்றும் ஒத்துழைப்பு, காகிதமில்லா வர்த்தகம் மற்றும் எல்லைகளுக்கிடையில் காகிதமில்லா வர்த்தகம் ஆகியனவாகும்.
- 2021 ஆம் ஆண்டில் வெளிப்படைத் தன்மை என்ற குறிகாட்டியில் இந்தியா 100 சதவீத மதிப்பைப் பெற்றுள்ளது.
- இந்த மதிப்பீட்டு ஆய்வானது ஆசியா மற்றும் பசிபிக் பகுதிக்கான ஐ.நா.வின் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தினால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப் படுகிறது.
- ஒரு நாடு பெறும் அதிக மதிப்பானது அதன் முதலீட்டு முடிவுகளில் வணிகர்களுக்கு உதவும்.




## 10 முன்னணி வேளாண் பொருள் ஏற்றுமதி நாடுகள் பட்டியலில் இந்தியா

- உலக வர்த்தக அமைப்பின் அறிக்கையானது கடந்த 25 ஆண்டுகளில் உலக வேளாண் வர்த்தகத்தில் நிலவி வரும் போக்கின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டிற்கான 10 முன்னணி வேளாண் பொருள் ஏற்றுமதி நாடுகள் பட்டியலில் இந்தியாவும் இடம் பெற்றுள்ளது.
- இந்தியா மற்றும் மெக்சிகோ ஆகியவை முறையே 3.1% மற்றும் 3.4% என்ற அளவில் உலக வேளாண் ஏற்றுமதியின் பங்கோடு உலகின் மிகப்பெரிய ஏற்றுமதி நாடுகளாக திகழ்ந்த நியூசிலாந்து (9வது) மற்றும் மலேசியா (7வது) ஆகியவற்றைப் பின்னுக்குத் தள்ளியுள்ளன.

- 2019 ஆம் ஆண்டில் இந்திய நாடானது மூன்றாவது மிகப்பெரியப் பருத்தி ஏற்றுமதி நாடாகவும் (7.6%), 4வது மிகப்பெரிய இறக்குமதி நாடாகவும் (10%) திகழ்ந்தது.
- எனினும் உலக வேளாண் ஏற்றுமதியில் மதிப்பு கூட்டப்பட்ட பங்களிப்பு (value-added contributor) நாடாக இந்தியா பின் தங்கியுள்ளது.
- 1995 ஆம் ஆண்டில் இந்தப் பட்டியலில் முன்னணியில் இருந்த அமெரிக்காவினை (22.2%) 2019 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியம் (16.1%) முந்தியுள்ளது.
- 1995 ஆம் ஆண்டில் 6வது இடத்திலிருந்த சீனா (4%) 2019 ஆம் ஆண்டில் 4வது இடத்திற்கு (5.4%) முன்னேறியுள்ளது.
- 10 முன்னணி ஏற்றுமதி நாடுகளும் 1995 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கிடையே 96 சதவீதத்திற்கும் மேலான ஏற்றுமதிகளை மேற்கொண்டுள்ளன.




## தோலாவீரா மற்றும் ராமப்பா ஆலயம்

- குஜராத்திலுள்ள ஹரப்பா காலத்துப் பெருநகரமான தோலாவீரா யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளங்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.
- தற்போது குஜராத் மாநிலத்தில் 3 உலகப் பாரம்பரியத் தளங்கள் உள்ளன.




- அவை பாவகத் அருகே உள்ள சம்பானீர், பதானிலுள்ள ராணி கி வாவ் மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க அகமதாபாத் நகரம் ஆகியனவாகும்.
- தோலாவீராவானது இந்தியாவின் 40வது உலகப் பாரம்பரியத் தளமாகும்.

- தற்போது நடைபெற்றுவரும் யுனெஸ்கோவின் 44வது உலகப் பாரம்பரியத் தளக் குழுவின் சந்திப்பில் ஏற்கனவே தெலுங்கானாவிலுள்ள ராமப்பா / ருத்ரேஸ்வரா ஆலயத்திற்கு உலகப் பாரம்பரியத் தள அந்தஸ்து ஆனது வழங்கப்பட்டுள்ளது.
- காகாதீய மன்னர்களால் கட்டப்பட்ட இந்த ஆலயமானது 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும்.
- உலகப் பாரம்பரியத் தளக் குழுவின் சந்திப்பானது சீனாவின் தலைமையில் அந்நாட்டின் புசூவோ நகரில் நடத்தப் பட்டது.




## அசாம்-மிசோரம் எல்லைப் பிரச்சினை

- 1972 ஆம் ஆண்டில் அசாம் மாநிலத்திலிருந்து மிசோரம் ஒரு ஒன்றியப் பிரதேசமாக பிரிக்கப் பட்டது.
- 1987 ஆம் ஆண்டில் அதற்கு முழு அளவிலான மாநில அந்தஸ்து வழங்கப்பட்டது.
- இரு மாநிலங்களுக்கிடையேயான 164.6 கி.மீ. நீள எல்லை மீதான சிக்கலானது சில நேரங்களில் மோசமான வன்முறைக்கும் வழி வகுத்துள்ளது.
- பிரித்தானிய சகாப்தத்தின் போது வெளியிடப்பட்ட இரண்டு அறிவிப்புகளிலிருந்து இந்தப் பிரச்சினை தொடங்கியது.
- முதலில் கச்சார் சமவெளியிலிருந்து லுசாய் மலைப்பகுதியை வேறுபடுத்திக் கூறிய 1875 ஆம் ஆண்டின் அறிவிப்பு.
- இரண்டாவதாக லுசாய் மலை மற்றும் மணிப்பூர் இடையேயான எல்லையை வரையறுத்த 1933 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிவிப்பு.
- 1873 ஆம் ஆண்டு வங்காள கிழக்கத்திய எல்லை ஒழுங்குமுறைச் சட்டத்தின் வாயிலாக வெளியிடப்பட்ட 1875 ஆம் ஆண்டு அறிவிப்பின் அடிப்படையில் அந்த நிலம் தங்களுக்குச் சொந்தம் என மிசோரம் மாநிலம் கோருகிறது.

- அசாம் மாநிலம் தனது பங்கிற்கு, அந்த நிலம் தன்னுடையது எனக் கோருகிறது.
- மணிப்பூர் மாகாணத்திலிருந்து முன்னதாக லுசாய் மலைப்பகுதி என்று அறியப்பட்ட மிசோரம் பகுதியை வரையறுத்த மாநில அரசின் 1933 ஆம் ஆண்டின் அறிவிப்பினை இது முன் வைக்கிறது.
- காலனித்துவ ஆட்சியின் போது மிசோரமானது அசாமின் ஒரு மாவட்டமாக லுசாய் மலைப்பகுதி என அழைக்கப்பட்டது.




## வாக்களிப்பு குறித்த ரகசியம் காத்தல்

- பாராளுமன்றத் தேர்தலோ (அ) மாநில சட்டமன்றத் தேர்தலோ என எதுவாயினும் அதில் வாக்களிப்பு குறித்த ரகசியம் காப்பது அவசியமானது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- 2013 ஆம் ஆண்டின் குடிமக்கள் சுதந்திரத்திற்கான வழக்கு (2013 Civil Liberties case) என்ற வழக்கின் தீர்ப்பை மீண்டும் அது வலியுறுத்தி கூறியுள்ளது.
- ரகசியம் காப்பது என்பது கருத்துச் சுதந்திரம் எனும் அடிப்படை உரிமையின் ஓர் அங்கம் எனவும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.
- மேலும் ஜனநாயகம் மற்றும் சுதந்திரமான தேர்தல் ஆகியவை அரசியலமைப்பின் அடிப்படை அமைப்பினுடைய அங்கங்கள் எனவும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.
- அடிப்படை அமைப்பு எனும் கொள்கையானது 1973 ஆம் ஆண்டின் கேசவானந்தா பாரதி எதிர் கேரள மாநில அரசு என்ற வழக்கின் தீர்ப்பில் உருவாக்கப்பட்டது.
- வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுதல் அல்லது கள்ள ஓட்டு போன்றவை ஜனநாயகத்திற்கு எதிரான குற்றங்கள் எனவும் நீதிமன்றம் கூறியுள்ளது.

## குஜராத்தின் கண்ட்லா – முதலாவது பசுமை சிறப்புப் பொருளாதார மண்டலம்

- கண்ட்லா நகரானது இந்தியப் பசுமைக் கட்டமைப்பு மன்றத்தின் (Indian Green Building Council – IGBC) பிளாட்டின தரநிலையைப் பெற்றதைத் தொடர்ந்து IGBC அமைப்பின் பசுமை நகரங்களுக்கான பிளாட்டின தரநிலையைப் பெற்ற முதலாவது பசுமை சிறப்புப் பொருளாதார மண்டலமாக (Special Economic Zone – SEZ) உருவெடுத்துள்ளது.
- IGBC குழுவின் பசுமை நகரங்களுக்கான பிளாட்டின தரநிலையானது ஆசாதி கா அம்ருத் மகோத்சவ் எனப்படும் இந்தியா@75 என்ற ஒரு கொண்டாட்டத்தின் பசுமை சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டத்திற்கான அரசின் உறுதிப்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் ஓர் அங்கமாகும்.

## தேசிய உணவுத் தொழில்நுட்பக் கல்விநிறுவனங்கள் மசோதா

- 2021 ஆம் ஆண்டு தேசிய உணவுத் தொழில்நுட்பக் கல்வி தொழில்முனைவு மற்றும் மேலாண்மை நிறுவனங்கள் மசோதாவினைப் பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதாவானது மக்களவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.
- இது ஏற்கனவே மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டு விட்டது.
- உணவுப் பதப்படுத்துதல் மற்றும் தொழில்துறை அமைச்சர் பசுபதி குமார் பராஸ் என்பவர் இந்த மசோதாவினை முன்வைத்தார்.
- இந்த மசோதாவானது உணவுத் தொழில்நுட்பம், மேலாண்மை மற்றும் தொழில் முனைவு கல்வி நிறுவனங்களுக்கு வேண்டிய பல்வேறு விதிமுறைகளை வழங்கச் செய்கிறது.
- இந்த மசோதாவானது அறிமுகப்படுத்தப்பட்டு 8 நிமிடங்களில் நிறைவேற்றப்பட்டு சாதனை ஒன்றைப் படைத்துள்ளது.
- மேலும் தஞ்சாவூரிலுள்ள இந்திய உணவுப் பதப்படுத்துதல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் மற்றும் கண்ட்லியில் (ஹரியானா) அமைந்துள்ள தேசிய உணவுத் தொழில் நுட்ப தொழில்முனைவு மற்றும் மேலாண்மை கல்வி நிறுவனம் ஆகியவற்றைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களாகவும் அறிவிக்க இந்த மசோதா முனைகிறது.

## கட்லாஸ் எக்ஸ்பிரஸ் 2021

- கட்லாஸ் எக்ஸ்பிரஸ் 2021 என்னும் ஒரு கடல்சார் பயிற்சியில் ஐ.என்.எஸ் தால்வார் எனும் கப்பல் பங்கேற்றது.
- இந்த கடற்படைப் பயிற்சியானது ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரையினூடே நடத்தப் படுகிறது.
- இது ஆண்டிற்கு ஒரு முறை நடத்தப்படும் கடற்படைப் பயிற்சியாகும்.
- மேற்கு இந்தியப் பெருங்கடல் மற்றும் கிழக்கு ஆப்பிரிக்க ஆசியப் பகுதிகளில் வட்டார மற்றும் தேசியக் கடல்சார் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக வேண்டி இந்தப் பயிற்சியானது மேற்கொள்ளப்படுகிறது.




## போல்டு திட்டம் – KVIC மற்றும் BSF

- காதி மற்றும் கிராமத் தொழில்துறை ஆணையமானது (Khadi and Village Industries Commission – KVIC) எல்லைப் பாதுகாப்புப் படையுடன் (Border Security Force – BSF) இணைந்து போல்டு (BOLD – Bamboo Oasis on Lands in Drought) எனப்படும் வறண்ட நிலங்களில் மூங்கில் சோலையை அமைத்தல் என்ற ஒரு திட்டத்தினைத் தொடங்கி உள்ளது.
- ராஜஸ்தானிலுள்ள இந்தியப் பாலைவனத்தில் பசுமைப் பரவலை அதிகரிப்பதே இதன் முதன்மை நோக்கமாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் KVIC மற்றும் BSF ஆகியவை இணைந்து 1000 மூங்கில் கன்றுகளை நட்டுள்ளன.
- இந்த மரக்கன்றுகள் ஜெய்சால்மீரின் தனோத் கிராமத்தில் நடப்பட்டுள்ளன.

## உயிரோவியப் படம், காட்சிப் பதிவு முறைகள், விளையாட்டுச் செயலி மற்றும் நகைச்சுவை ஆகியவற்றிற்கான மையம்

- உயிரோவியப் படம், காட்சிப்பதிவு முறைகள், விளையாட்டுச் செயலிகள் மற்றும் நகைச்சுவை ஆகியவற்றிற்கான ஒரு சிறப்பு தேசிய மையத்தினை உருவாக்குவதற்கு மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- இந்திய மற்றும் உலகளாவியத் தொழில்துறைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்தியாவில் ஓர் உலகத் தரம் வாய்ந்த திறன் கட்டமைப்பை உருவாக்குவதற்காக இந்த மையமானது அமைக்கப்பட உள்ளது.
- இது மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்துடன் இணைந்து நிறுவப் பட உள்ளது.

## உயிரி வளங்கள் மற்றும் நிலையான மேம்பாட்டு மையம்

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகமானது வடகிழக்கு மாநிலத்தில் முதல்முறையாக இத்தகைய ஒரு சிறப்பு மையத்தை நிறுவ உள்ளது.
- உயிரி வளங்கள் மற்றும் நிலையான மேம்பாட்டு மையத்தினை ஒரு சிறப்பு மையமாக நிறுவுவதற்கான இந்த சிறந்த திட்டத்திற்கு உயிரித் தொழில்நுட்பத் துறை அனுமதி அளித்துள்ளது.

- இந்த மையமானது அருணாச்சலப் பிரதேசத்தின் பப்பும் பாரே மாவட்டத்திலுள்ள கிமின் (Kimin in district Papum Pare) என்னுமிடத்தில் நிறுவப்பட உள்ளது.

## இந்தியாவில் சைக்கிள் ஓட்டுதலில் முன்னோடியாக திகழும் 11 நகரங்கள்

- இந்தியாவின் 11 நகரங்களுக்கு இந்தியாவில் சைக்கிள் ஓட்டுதலில் முன்னோடியாகத் திகழ்வதற்கான மதிப்புமிக்க பட்டமானது வழங்கப்பட்டுள்ளது.
- இது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தினால் அறிவிக்கப் பட்டுள்ளது.
- அந்த நகரங்கள் பெங்களூரு, புவனேஷ்வர், சண்டிகர், கொஹிமா, நாக்பூர், கொல்கத்தா, பிம்ப்ரி சிஞ்ச்வாத், ராஜ்கோட், சூரத், வடோதரா மற்றும் வாரங்கல் ஆகியனவாகும்.
- சைக்கிள் ஓட்டுதல் குறித்தச் சவால்களின் முதல் முன்னெடுப்புகளை மேற்கொள்ளசி செய்வதற்கு வேண்டி நான்கு நகரங்கள் (ஔரங்காபாத், குருகிராம், ஜபல்பூர் மற்றும் சில்வாசா) ஆற்றிய முயற்சிகளுக்காக இந்தத் தேர்வு மன்றமானது அவற்றிற்கு என்று ஒரு சிறப்புப் பட்டத்தினை வழங்கியுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## இன நீதி மற்றும் சமத்துவம் குறித்த அறிக்கை

- ஐக்கிய நாடுகள் அவையானது இன நீதி மற்றும் சமத்துவம் குறித்த தனது அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ஜார்ஜ் ஃப்ளாய்டு கொல்லப்பட்டது போன்ற அட்டூழியங்கள் திரும்பத் திரும்ப நிகழாமல் தடுப்பதற்கு வேண்டி உலகம் முழுவதுமுள்ள கருப்பின மக்களுக்கு எதிரான உள்ளார்ந்த இனவெறியினை உடனடியாக அகற்றுவதற்கு இது அழைப்பு விடுத்துள்ளது.
- ஃப்ளாய்டு என்பவரின் மரணத்தின் விளைவாக ஐ.நா.வின் இந்த அறிக்கையானது வெளியிடப் பட்டுள்ளது.
- இவர் டெரக் சாவின் எனும் அமெரிக்க காவல் துறை அதிகாரியால் கொலை செய்யப் பட்டார்.

## உலக கைபேசி மாநாடு

- உலக கைபேசி மாநாடானது 2021 ஆம் ஆண்டின் உலகின் ஒரு மிகப்பெரிய கைபேசி சார்ந்த நிகழ்வாகும்.
- இது ஜுன் 28 அன்று ஸ்பெயினின் பார்சிலோனாவில் தொடங்கப் பட்டது.
- உலக கைபேசி மாநாடு என்பது தொலைதொடர்பு தொழில்துறையில் புத்தாக்கத்தினை மையமாகக் கொண்ட ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.
- இது 'குளோபல் சிஸ்டம்ஸ் ஃபார் மொபைல் அசோசியேஷன்' எனும் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப் படுகிறது.

- இந்த நிகழ்வில் உலகெங்கிலும் உள்ள முக்கிய தொலைதொடர்பு அமைப்புகள், உபகரண உற்பத்தியாளர்கள், ஸ்மார்ட்போன் நிறுவனங்கள், வர்த்தக உள்ளீட்டாளர்கள், ஊடகம் மற்றும் தொலைதொடர்பு அமைச்சகத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்றனர்.




## உலகின் மிகப்பெரிய இணைய சங்கேதப் பணப் பரிவர்த்தனைக்குத் தடை – ஐக்கிய ராஜ்ஜியம்




- பிரிட்டனின் நிதியியல் செயல்பாட்டு ஆணையமானது பைனான்சு (Binance) எனப் படும் உலகின் மிகப்பெரிய இணைய சங்கேதப் பணப் பரிவர்த்தனை நிறுவனத்திற்குத் தடை விதித்துள்ளது.
- பைனான்சு என்பது கேமேன் தீவுகளில் மேற்கொள்ளப் படும் ஒரு இணைய சங்கேதப் பண பரிவர்த்தனையாகும்.
- இது 2017 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- இது பல்வேறு இணைய சங்கேதப் பண பரிவர்த்தனைக்கான தளங்களை உருவாக்கி உள்ளது.
- இது சாங்க்பெங்ச் ஜாவோ என்பவரால் நிறுவப்பட்டது.
- இதன் தலைமையகம் முதலில் சீனாவில் அமைந்திருந்தது.
- சீனாவில் அதிகரிக்கப்பட்ட இணைய சங்கேதப் பணம் மீதான கட்டுப்பாடுகளின் காரணமாக இதன் தலைமையகமானது பின்பு சீனாவிலிருந்து இடம் மாற்றப்பட்டது.

## டெல்டா பகுதிகளை பாதுகாப்பதற்கான கணினி மாதிரிகள்

- காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட கடல் அரிப்பு, நிலப்பகுதி மூழ்குதல் மற்றும் கடல் மட்ட உயர்வு ஆகியவை லூசியானா காடுகளை அழிக்கின்றன.
- லூசியானா காடுகள் அமெரிக்காவின் மிசிசிபி நதியின் டெல்டா (ஆற்றிடைப்பகுதி) பகுதிக்கு அருகில் அமைந்துள்ளது.
- நாசாவின் அறிவியலாளர்கள் மற்றும் போஸ்டன் முதல் கலிஃபோர்னியா வரையிலான பல்கலைக் கழகங்களின் அறிவியலாளர்கள் இதற்காக வேண்டி கணினி மாதிரிகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளனர்.
- இந்த கணினி மாதிரிகள் செயற்கைக் கோள் தரவுகளைக் கொண்டு குறைந்து வரும் டெல்டாக்களின் எந்த பகுதிகளை உயர்த்தலாம் என்றும் எந்தப் பகுதியானது அந்த நிலையைக் கடந்து விட்டது என்றும் அறிந்து கொள்ள உதவும்.

## ஐரோப்பிய ஒன்றியம் – பச்சை நிற அனுமதிச் சீட்டு

- ஜூலை 01 முதல் பயன்பாட்டிற்கு வந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் பச்சை நிற அனுமதிச் சீட்டைப் பெறுவதற்கு கோவிசீல்டு தடுப்பு மருந்து செலுத்திக் கொண்ட பயணிகளுக்கு அனுமதி மறுக்கப் படலாம்.
- தற்போது வரை, நான்கு தடுப்பு மருந்துகளுக்கு மட்டுமே ஐரோப்பிய மருந்து நிறுவனமானது ஒப்புதல் வழங்கியுள்ளது.




- அவை,
  - கோமிர்னாட்டி (ஃபைசர் / பயோன்டெக்)
  - மாடர்னா
  - வாக்ஸ்செர்வ்ரியா (ஆஸ்ட்ராசெனிகா)
  - ஜான்சன் (ஜான்சன் & ஜான்சன்)

## சர்வதேச தொழிலாளர் அமைப்பின் புதிய தலைமை

- சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஆளுகை அமைப்பிற்கு இதுவரை தலைமை வகித்த இந்திய நாட்டின் பதவிக் காலம் சமீபத்தில் முடிவடைந்தது.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பினுடைய ஆளுகை அமைப்பின் தலைவராகப் பணியாற்றிய செயலாளர் (தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு) அபூர்வா சந்திராவினுடைய பதவிக் காலம் (அக்டோபர் 2020 – ஜுன் 2021) நிறைவடைந்தது.
- 35 ஆண்டு காலம் என்ற நீண்ட இடைவெளிக்குப் பிறகு சர்வதேச தொழிலாளர் அமைப்பினுடைய ஆளுகை அமைப்பின் தலைமைப் பொறுப்பினை இந்தியா ஏற்றுக் கொண்டிருந்தது.



From left to right, Ms Renate Hornung Draus, Ambassador Anna Jardfelt (Sweden), Ms Catelene Passchier

*குறிப்பு*

- ஸ்வீடன் நாட்டுத் தூதரான அன்னா ஜார்ட்ஃபெல்ட் மெல்வின் (Anna Jardfelt Melvin) என்பவர் இந்த அமைப்பின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- ரெனேட் ஹார்னுங்-டிராஸ் (Renate Hornung-Draus of Germany) என்பவர் பணி அளிப்பவர்களுக்கான பிரிவின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- கேட்டலின் பாஷியர் (Catelene Passchier) என்பவர் தொழிலாளர் பிரிவுக்கான துணைத் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பின் வரலாற்றில் முதன்முறையாக அதன் ஆளுகை அமைப்பில் மூன்று பெண் தலைவர்களைக் கொண்டு அது இயங்க உள்ளது.

## சர்வதேச சுற்றுலா குறித்த ஐ.நா அறிக்கை

- 2021 ஆம் ஆண்டில் சில மேற்கத்திய நாடுகள் தவிர பிற பகுதிகளில் சர்வதேச சுற்றுலா வருகையானது தேக்கமடைந்துள்ளது.
- இது ஐக்கிய நாடுகள் வர்த்தகம் மற்றும் வளர்ச்சி மாநாட்டு அமைப்பு மற்றும் ஐ.நா.வின் உலக சுற்றுலா அமைப்பு ஆகியவற்றின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- இந்த தேக்க நிலையானது 2.4 டிரில்லியன் டாலர் அளவிலான வருமான இழப்பிற்கு வழி வகுக்கும் என இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

- ஐ.நா.வின் உலக சுற்றுலா அமைப்பானது பொறுப்புமிக்க, நிலையான மற்றும் உலகளவில் எளிதில் அணுகக் கூடிய வகையிலான சுற்றுலாவினை மேம்படுத்தச் செய்வதற்கான ஐ.நா.வின் சிறப்பு அமைப்பாகும்.
- இதன் தலைமையகம் ஸ்பெயினிலுள்ள மேட்ரிட்டில் (Madrid) அமைந்துள்ளது.

## உலகளாவிய தொடக்க நிறுவனங்கள் சூழல் குறியீடு – 2021




Top 25 countries globally

| Global Rank | Country | Rank change from 2020 |
|---|---|---|
| 1 | US | - |
| 2 | UK | - |
| 3 | Israel | - |
| 4 | Canada | - |
| 5 | Germany | - |
| 6 | Sweden | +4 |
| 7 | China | +7 |
| 8 | Switzerland | - |
| 9 | Australia | -2 |
| 10 | Singapore | +6 |
| 11 | The Netherlands | -5 |
| 12 | France | - |
| 13 | Estonia | -2 |
| 14 | Finland | -1 |
| 15 | Spain | -6 |
| 16 | Lithuania | -1 |
| 17 | Russia | - |
| 18 | Ireland | - |
| 19 | South Korea | - |
| **20** | **India** | **+3** |
| 21 | Japan | - |
| 22 | Denmark | - |
| 23 | Belgium | +1 |
| 24 | Brazil | -4 |
| 25 | UAE | +18 |

Top 25 cities globally

| Global Rank | City | Rank change from 2020 |
|---|---|---|
| 1 | San Francisco Bay, US | - |
| 2 | New York, US | - |
| 3 | Beijing, China | +3 |
| 4 | Los Angeles Area, US | +1 |
| 5 | London, UK | -2 |
| 6 | Boston Area, US | -2 |
| 7 | Shanghai, China | +3 |
| 8 | Tel Aviv Area, Israel | -1 |
| 9 | Moscow, Russia | - |
| **10** | **Bangalore, India** | **+4** |
| 11 | Paris, France | +1 |
| 12 | Seattle, US | -1 |
| 13 | Berlin, Germany | -5 |
| **14** | **New Delhi, India** | **+1** |
| 15 | Tokyo, Japan | +1 |
| **16** | **Mumbai, India** | **+6** |
| 17 | Chicago, US | -4 |
| 18 | Austin, US | -1 |
| 19 | Washington DC Area, US | +11 |
| 20 | Sao Paulo, Brazil | -2 |
| 21 | Shenzhen, China | +12 |
| 22 | San Diego, US | +6 |
| 23 | Seoul, South Korea | -2 |
| 24 | Stockholm, Sweden | +5 |
| 25 | Singapore City, Singapore | +1 |

Source: Global Startup Ecosystem Index 2021, StartupBlink

- 2021 ஆம் ஆண்டு உலகளாவிய தொடக்க நிறுவனங்கள் சூழல் குறியீட்டில் இடம் பெற்றுள்ள முதல் 100 நாடுகளில் இந்தியா 20வது இடத்தைப் பெற்றுள்ளது.
- இந்தக் குறியீடானது ஸ்டார்ட் அப் பிளிங்க் (Startup Blink) எனும் அமைப்பினால் வெளியிடப் படுகிறது.
- தற்போது இந்தியாவில் 43 நகரங்கள், உலகளவிலான முதல் 1000 இடங்களில் இடம் பெற்றுள்ளன.
- பெங்களூரு (10வது), புதுடெல்லி (14வது) மற்றும் மும்பை (16வது) ஆகியவை முதல் 20 இடங்களில் உள்ளன.
- அமெரிக்கா, ஐக்கிய ராஜ்ஜியம், இஸ்ரேல், கனடா மற்றும் ஜெர்மனி ஆகியவை இந்த ஆண்டும் முதல் ஐந்து இடங்களைப் பெற்றுள்ளன.

## ஸ்டார்லிங்க் – உலகளாவிய இணையச் சேவை




- எலான் மஸ்கினுடைய ஸ்டார்லிங்க் திட்டமானது உலகளாவிய இணையச் சேவையை வழங்க தயாராக உள்ளது.
- தற்போது 12 நாடுகளில் ஸ்டார்லிங்க் இணையச் சேவை பயன்பாட்டில் உள்ளது.
- ஸ்டார்லிங்க் என்பது ஒரு செயற்கைக் கோள் வழி இணையத் தொகுப்பாகும்.
- இது உலகம் முழுவதும் செயற்கைக் கோள் வழியான இணையச் சேவையினை வழங்குவதற்காக ஸ்பேஸ்–X நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்டதாகும்.

## மலேரியா அற்ற சீனா




- 2021 ஆம் ஆண்டு ஜுன் 30 அன்று சீனாவிற்கு மலேரியா அல்லாத நாடு என உலக சுகாதார அமைப்பினால் சான்றளிக்கப்பட்டுள்ளது.
- கடந்த நான்கு ஆண்டுகளாகவே தொடர்ச்சியாக சீனாவின் உள்நாட்டுப் பகுதியில் மலேரியா எதுவும் பதிவாகவில்லை.

- குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து நோய் பதிவாகாத நிலையை எட்டிய நாடுகள் உலக சுகாதார அமைப்பின் மலேரியா அல்லாத நாடு எனும் சான்றிதழைப் பெற விண்ணப்பிக்கலாம்.
- உலக சுகாதார அமைப்பின் மலேரியா அற்ற நாடு சான்றிதழைப் பெற்ற 40வது நாடு சீனாவாகும்.
- 2021 ஆம் ஆண்டில் எல்சால்வெடார் நாடும் இந்தச் சான்றிதழைப் பெற்றுள்ளது.

## உலகளாவிய இணையவழிப் பாதுகாப்புக் குறியீடு




- உலகளாவிய இணையவழிப் பாதுகாப்புக் குறியீட்டில் இந்திய நாடானது 10வது இடத்தில் உள்ளது.
- இது ஐ.நாவின் சர்வதேசத் தொலைதொடர்பு ஒன்றியத்தின் உலகளாவிய இணைய வழிப் பாதுகாப்புக் குறியீட்டின் அடிப்படையில் கூறப் பட்டுள்ளது.
- இந்திய நாடானது 47வது இடத்திலிருந்து 10வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.
- ஐக்கிய ராஜ்ஜியம் மற்றும் சவுதி அரேபியா ஆகியவை இரண்டாம் இடத்தில் உள்ளன.

## இணையவழி திறன்கள் மற்றும் தேசிய திறன் அறிக்கை

- இந்த அறிக்கையானது சர்வதேச உத்திசார் ஆய்வுகளுக்கான கல்வி நிறுவனத்தினால் சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- ஒவ்வொரு நாட்டினுடைய இணைய வழி சூழல் அமைப்பினையும், நாட்டின் சர்வதேசப் பாதுகாப்பு, பொருளாதாரப் போட்டித் தன்மை மற்றும் இராணுவ விவகாரங்களில் அது எவ்வாறு தலையிடுகிறது என்பதையும் இந்த அறிக்கையானது பகுப்பாய்வு செய்கிறது.
- இந்த அறிக்கையானது உலக நாடுகளை இணையவழி திறன்களின் (அதிகாரங்கள்) அடிப்படையில் மூன்று அடுக்குகளாகப் பிரித்துள்ளது.

- முதல் அடுக்கு – முறைமைகளின் (methodology) அனைத்துப் பிரிவுகளிலும் உலக அளவில் முன்னணி பலம் கொண்ட நாடுகள்.
- இந்த அடுக்கிலுள்ள ஒரே நாடு அமெரிக்கா ஆகும்.
- இரண்டாம் அடுக்கு – சில பிரிவுகளில் மட்டும் உலகளவில் முன்னணி பலங்களை கொண்ட நாடுகள்.
- ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்சு, இஸ்ரேல், ரஷ்யா மற்றும் ஐக்கிய ராஜ்ஜியம் ஆகியவை இந்த அடுக்கில் இடம் பெற்றுள்ளன.
- மூன்றாம் அடுக்கு – சில பிரிவுகளில் பலத்தினையும் இதர சில பிரிவுகளில் குறிப்பிடத்தக்க பலவீனத்தினையும் கொண்டுள்ள நாடுகள்.
- இந்தியா இந்த அடுக்கில் உள்ளது.




## சர்வதேச புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் குறித்த அறிக்கை

- சர்வதேச தொழிலாளர் அமைப்பானது சர்வதேச புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் குறித்த தனது அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, சர்வதேச புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை உலகளவில் 169 மில்லியனாக உயர்ந்துள்ளது.
- இதன் எண்ணிக்கையானது 2017 ஆம் ஆண்டிலிருந்து தற்போது 3% வரை உயர்ந்து உள்ளது.
- 2017 ஆம் ஆண்டிலிருந்து இளம்வயது புலம்பெயர் தொழிலாளர்களின் (15-24 வயது) பங்கும் கிட்டத்தட்ட 2% வரை உயர்ந்துள்ளது.
- ஒட்டு மொத்த புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் எண்ணிக்கையில் ஐரோப்பா, மத்திய ஆசியா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றின் பங்கு 63.3% ஆகும்.

## பழங்குடி மக்களின் உணவுமுறை குறித்த அறிக்கை

- ஆர்க்டிக் முதல் அமேசான் வரையில் நிலவும் பருவநிலை மாற்றம் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக பழங்குடி சமுதாயத்தினரின் பாரம்பரிய உணவு சேகரிக்கும் நுட்பங்களானது அபாயநிலைக்கு உள்ளாகின்றன.
- ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் அறிக்கையில் இது கூறப்பட்டுள்ளது.

*குறிப்பு*

- பல்வேறு பழங்குடியின மக்களால் உபயோகிக்கப்படும் உணவு முறையானது செயல் திறன் அடிப்படையில் உலகின் மிகவும் நிலையான உணவு முறை என உணவு மற்றும் வேளாண் அமைப்பு கூறுகிறது.
- இது உணவுச் சேதமின்றி பல பருவங்களுக்கு ஏற்ற வகையிலானதாகும்.

## பக்ராம் விமானப்படைத் தளம் - அமெரிக்க இராணுவம்

- கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளுக்குப் பிறகு ஆப்கானிஸ்தானின் பக்ராம் விமானப் படைத் தளத்தை விட்டு அமெரிக்க ராணுவம் வெளியேறியுள்ளது.
- பக்ராம் விமானப்படைத் தளமானது தற்போது ஆப்கானிஸ்தான் நாட்டுத் தேசியப் பாதுகாப்புப் படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- இந்தத் தளமானது தாலிபான் மற்றும் அல்கொய்தா தீவிரவாத அமைப்புகளுக்கு எதிரான அமெரிக்க இராணுவத்தின் ஒரு போர்த் தளமாக இருந்தது.

## சீன விண்வெளி வீரர்களின் முதல் விண்வெளிப் பயணம்

- சீனாவின் விண்வெளி வீரர்கள் தியாங்காங் விண்வெளி நிலையத்தில் சீனாவின் முதல் விண்வெளிப் பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளனர்.
- அவர்கள் பூமியைச் சுற்றியுள்ள சுற்றுவட்டப் பாதையில் புதிதாக அமைக்கப்பட்ட தியாங்காங் விண்வெளி நிலையத்திற்கு வெளியே ஏழு மணிநேரம் வேலை செய்து உள்ளனர்.
- 2021 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் தியாங்காங் விண்வெளி நிலையத்தின் முதல் குழுவினராக மூன்று விண்வெளி வீரர்கள் ஒரு ராக்கெட் மூலம் விண்வெளி நிலையத்திற்கு அனுப்பப் பட்டனர்.

## எல்சா புயல்

- ஒரு வெப்பமண்டலப் புயலான எல்சா சமீபத்தில் மிகவும் வலுவடைந்து அதன் மையப் பகுதியானது தென்-மத்திய கியூபாவினை அடைந்துள்ளது.
- இது கரீபிய மற்றும் தென்கிழக்கு அமெரிக்காவின் சில பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தி அபாயத்தை உண்டாக்கக் கூடிய வகையில் இருக்கும் ஒரு வெப்ப மண்டலப் புயலாகும்.
- பெயரிடப் பட்ட வகையில் இது 5வது புயலாக இருப்பதோடு 2021 ஆம் ஆண்டிற்கான அட்லாண்டிக் சூறாவளிப் பருவத்தின் முதல் சூறாவளியாகவும் இது உள்ளது.
- 2005 ஆம் ஆண்டில் ஏற்பட்ட எமிலி சூறாவளிக்குப் பிறகு கிழக்கு கரீபியன் கடலில் உருவான வலுவான ஜூலை மாத சூறாவளி இதுவேயாகும்.

## இஸ்தான்புல் உடன்படிக்கை – துருக்கி விலகல்

- பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்த ஒரு உடன்படிக்கையிலிருந்து துருக்கி விலகியுள்ளது.

- ❖ இந்த உடன்படிக்கையானது பாரம்பரியக் குடும்ப முறையை இழிவுபடுத்தி, விவாகரத்துகளை ஊக்குவித்து, சமுதாயத்தில் LGBTQ சமுதாயத்தினரை ஏற்றுக் கொள்ளச் செய்வதை ஊக்குவிப்பதாக துருக்கி கூறுகிறது.
- ❖ அது தவிர பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் போதுமான சட்டங்கள் தனது நாட்டிலேயே உள்ளதாகவும் துருக்கி கூறுகிறது.
- ❖ இஸ்தான்புல் உடன்படிக்கையானது பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்து அதனை எதிர்கொள்வதற்கான உலகின் முதலாவது பிணை ஒப்பந்தமாகும்.
- ❖ இந்த உடன்படிக்கையானது 2011 ஆம் ஆண்டில் ஐரோப்பிய அமைச்சர்கள் குழு ஒன்றியத்தினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

*குறிப்பு*

- ❖ 2011 ஆம் ஆண்டில் இந்த உடன்படிக்கைக்கு ஒப்புதல் வழங்கிய முதல் நாடு எனும் பெருமையை துருக்கி பெற்றது.
- ❖ 2012 ஆம் ஆண்டு மார்ச் 08 அன்று தனது உள்நாட்டுச் சட்டத்தில் இஸ்தான்புல் உடன்படிக்கையை துருக்கி இணைத்தது.

## சிறார் படை வீரர்கள் தடுப்புச் சட்டம்

- ❖ அமெரிக்கா தனது சிறார் படைவீரர்கள் தடுப்புச் சட்டத்தின் பட்டியலில் இதர 14 நாடுகளுடன் பாகிஸ்தானையும் சேர்த்துள்ளது.
- ❖ இந்தப் பட்டியலானது சிறார் படை வீரர்களை படையில் நியமித்துப் பயன்படுத்தும் அரசின் ஆதரவு பெற்ற ஆயுதக் குழுக்களைக் கொண்டுள்ள வெளிநாட்டு அரசுகளை அடையாளம் கண்டு அவற்றைச் சில கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்துகிறது.
- ❖ சிறார் படைவீரர்கள் என்ற சொற்கூறானது தீவிரவாத நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்கேற்கும் அல்லது அரசு ஆயுதப் படைகள், காவல்துறை (அ) இதர பாதுகாப்புப் படைகளில் கட்டாயமாக நியமிக்கப்படும் 18 வயதிற்கும் குறைவான வயதுடைய நபர்களைக் குறிக்கிறது.

## தால் எரிமலை



- மணிலாவிற்குத் தெற்கேயுள்ள தால் எரிமலையானது எப்போது வேண்டுமானாலும் மீண்டும் வெடிக்கக் கூடும் என பிலிப்பைன்ஸ் நாட்டு அறிவியலாளர்கள் எச்சரித்து உள்ளனர்.
- இதன் காரணமாக பாதிப்பை எதிர் கொள்ள இருக்கும் அப்பகுதி சமுதாயத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் தங்களது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.
- இந்த எரிமலையானது கடந்த ஒரு வாரமாக சல்பர் டை ஆக்சைடை உமிழ்ந்து வருகிறது.
- இதற்கு முன்பு, இந்த தால் எரிமலையானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வெடித்தது.

## மனிதர்களை கடத்துதல் குறித்த அறிக்கை 2021

- மனிதர்களை கடத்துதல் குறித்த அறிக்கையானது அமெரிக்க அரசுத் துறையினால் சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- கோவிட்-19 பெருந்தொற்றானது மனிதர்கள் கடத்தப்படுவதற்கான அபாயத்தை அதிகரித்துள்ளதோடு, தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கடத்தலுக்கு எதிரான முயற்சிகளிலும் அது இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளது.
- மனிதர்களைக் கடத்தும் குற்றங்களை ஒழிப்பதற்காக மேற்கொள்ளப்படும் குறைந்த பட்ச தரநிலைகளைப் பூர்த்தி செய்ய மேற்கொள்ளப் படும் முயற்சிகளின் அடிப்படையில் நாடுகள் வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- அவை மொத்தமாக மூன்று அடுக்குகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- கடத்தலால் பாதிக்கப் பட்டவர்களைப் பாதுகாக்கும் சட்டத்தின் (Trafficking Victims Protection Act – TVPA) குறைந்தபட்ச தரநிலைகளுக்கு முழுவதுமாக இணங்காத நாடுகள் இரண்டாம் அடுக்கில் (Tier-II) வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- இந்திய நாடானது இந்த அடுக்கில் இடம் பெற்றுள்ளது.
- TVPA என்பது அமெரிக்க நாட்டினுடைய மனித கடத்தல் மீதான ஒரு சட்டம் ஆகும்.

## உலகின் மிக உயரமான மணற்கோட்டை

- டென்மார்க்கில் அமைக்கப்பட்டுள்ள மணற்கோட்டையானது உலகின் மிக உயரமான மணற்கோட்டையாக புதிய கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்று உள்ளது.
- டச்சு நாட்டு (நெதர்லாந்து) புதுமைப் படைப்பாளரான வில்ஃப்ரெடு ஸ்டிஜ்கெர் (Wilfred Stijger) என்பவர் உலகின் 30 சிறந்த மணற்சிற்பிகளின் உதவியுடன் இதனைக் கட்டமைத்தார்.
- முக்கோண வடிவிலான இந்த மணற்கோட்டை டென்மார்க்கிலுள்ள புளோக்கஸ் எனும் நகரில் கட்டமைக்கப் பட்டுள்ளது.
- இதன் உயரம் 21.16 மீட்டர் (69.4 அடி) ஆகும்.
- இதற்கு முன்பு 2019 ஆம் ஆண்டில் ஜெர்மனியில் 17.66 மீட்டர் உயரத்தில் ஒரு மணற் கோட்டை அமைக்கப்பட்டுச் சாதனை படைக்கப்பட்டு இருந்தது.



## ஜோவெனல் மோயிஸ்

- ஹைத்தி நாட்டு அதிபர் ஜோவெனல் மோயிஸ் அவரது வீட்டில் படுகொலை செய்யப் பட்டார்.
- இந்த நிகழ்வானது ஏற்கனவே மோசமான சூழ்நிலையில் உள்ள அந்த கரீபியன் நாட்டில் மேலும் குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது.
- ஹைத்தியின் இடைக்கால பிரதமர் கிளாட் ஜோசப் (Claude Joseph), அதிபர் கொல்லப் பட்டதை உறுதி செய்தார்.
- ஹைத்தி நாடானது வட அமெரிக்காவின் மிக ஏழ்மையான நாடாகும்.

## வேளாண் கண்ணோட்ட அறிக்கை

- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பு மற்றும் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் வேளாண் கண்ணோட்ட அறிக்கையானது அடுத்து வரவிருக்கும் பத்தாண்டுகளுக்கான உற்பத்தி, நுகர்வு, வர்த்தகம் மற்றும் விலை ஆகியவற்றின் போக்கினைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- ஐக்கிய நாடுகளின் நிலையான மேம்பாட்டுக் குறியீட்டினை அடைவதற்காக வேண்டி உலகளாவிய உணவுப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் இலக்குகளை அடைவதற்கான அரசின் முயற்சிகளை துரிதப்படுத்த வேண்டும் என இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- வரவிருக்கும் பத்தாண்டுகளில் வேளாண் பொருட்களுக்கான உலகளாவியத் தேவையானது ஆண்டிற்கு 1.2 சதவீதமாக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.
- 2030 ஆம் ஆண்டில் 8.5 பில்லியனாக உயரும் என எதிர்பார்க்கப்படும் வளர்ந்து வரும் மக்கள்தொகைக்கு நிலையான முறையில் உணவு வழங்குவதற்கு உற்பத்தித் திறன் மேம்பாடுகள் (Productivity improvements) முக்கியமான ஒன்றாகும்.
- அடுத்த பத்தாண்டில் உலகளாவிய ஒட்டுமொத்த உணவு இருப்பானது 4 சதவீதம் வரை உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- குறைவான வருமானமுடைய நாடுகளில் உணவு இருப்பானது 3.7% வரை உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது.




## பசி எனும் வைரசின் பெருக்கம் குறித்த அறிக்கை – ஆக்ஸ்ஃபாம்

- முரண்பாடு, கோவிட்-19 மற்றும் பருவநிலை நெருக்கடி (3C's : Conflict, Covid-19 & Climate Crisis) ஆகிய மூன்று காரணங்களால் ஒவ்வொரு நிமிடமும் 11 பேர் தீவிரப் பசி மற்றும் பட்டினிக்குப் பலியாகின்றனர் என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- பசியால் ஏற்படும் இறப்பு வீதமானது ஒரு நிமிடத்திற்கு 7 பேர் என்ற வீதத்திலுள்ள கோவிட்-19 பெருந்தொற்றின் இறப்பு வீதத்தை விஞ்சியுள்ளது.
- உலகெங்கிலும் 155 மில்லியன் மக்கள் உணவுப் பாதுகாப்பின்மை (அ) மோசமான உணவு நிலை போன்ற நெருக்கடி நிலைகளில் வாழ்கின்றனர் என்று இந்த அறிக்கை குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 20 மில்லியன் வரை உயர்ந்துள்ளது.
- 155 மில்லியன் மக்களில் மூன்றில் இரு பங்கினர் தங்களது நாடு இராணுவ மோதலில் ஈடுபட்டுள்ளதன் காரணமாக பசி மற்றும் பட்டினி நிலையை எதிர்கொள்கின்றனர்.

## நிலையான மேம்பாட்டு இலக்குகள் அறிக்கை 2021

- இது ஐக்கிய நாடுகள் அவையின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறையினால் சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இது நிலையான மேம்பாட்டு இலக்குகள் (Sustainable Development Goals – SDG) மீதான உயர்மட்ட அரசியல் மன்றத்தின் 2021 ஆம் ஆண்டு மாநாட்டில் வெளியிடப்பட்டது.

***முக்கியத் தகவல்கள்***

- 2016 ஆம் ஆண்டில் உலகளாவிய SDG தரவுத்தளத்தில் 115 ஆக இருந்த குறிகாட்டிகளின் எண்ணிக்கையானது 2021 ஆம் ஆண்டில் 211 ஆக உயர்ந்துள்ளது.
- இருப்பினும், கோவிட்–19 பெருந்தொற்றானது உலகளவில் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு போன்ற செயல்பாடுகளில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.
- SDG 1 : உலகளாவிய ஏழ்மை வீதம் ஆனது 2030 ஆம் ஆண்டில் 7% ஆக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது.

- SDG 2 : 5 வயதிற்குட்பட்ட 22% குழந்தைகள் பசியினாலும் 6.7% குழந்தைகள் உணவு வீண் ஆவதினாலும், 5.7% குழந்தைகள் அதிக எடையினாலும் அவதிப்படுகின்றனர்.




- SDG 3 : கோவிட்-19 பெருந்தொற்றானது சுகாதார முன்னேற்றத்தை நிறுத்தியுள்ளது அல்லது மாற்றியமைத்துள்ளது. மேலும் அது ஆயுட்காலத்தையும் குறைத்துள்ளது.
- SDG 4 : 2020 ஆம் ஆண்டில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளில் 9 சதவீதத்தினர் குறைந்தபட்ச வாசிப்புத் திறன் நிலைக்குக் கீழ்நிலையில் உள்ளனர்.
- SDG 5 : தேசியப் பாராளுமன்ற உறுப்பினர்களில் 25.6 சதவீதத்தினர் பெண்கள், அதில் 36.3 சதவீதத்தினர் உள்ளாட்சி அரசுப் பிரதிநிதிகள் பொறுப்பினையும் மற்றும் 28.2 சதவீதத்தினர் நிர்வாகப் பொறுப்பினையும் வகிக்கின்றனர்.
- SDG 6 : 2 பில்லியன் மக்கள் பாதுகாப்பான குடிநீர் வசதி இல்லாதவர்களாகவும் 3.6 பில்லியன் மக்கள் பாதுகாப்பான துப்புரவு வசதியற்றவர்களாகவும் உள்ளனர்.
- SDG 7 : 2.6 பில்லியன் மக்கள் அபாயகரமான மற்றும் செயல்திறனற்ற சமையல் முறையினால் பாதிக்கப்படக் கூடியவர்களாக உள்ளனர்.
- SDG 8 : கோவிட்-19 தொற்றானது 255 பில்லியன் அளவிலான முழுநேர வேலை இழப்பு ஏற்பட வழிவகுத்துள்ளது.
- SDG 9 : நடுத்தர மற்றும் உயர்தர தொழில்நுட்பப் பொருட்களின் உற்பத்தியானது 2020 ஆம் ஆண்டில் பொருளாதார மீள்விற்கு உதவியுள்ளது.
- SDG 10 : 2020 ஆம் ஆண்டில் ஒவ்வொரு 100,000 நபர்களுள் 311 பேர் அகதிகளாக உள்ளனர்.
- SDG 11 : உலகின் நகர்ப்புற மக்கள்தொகையில் பாதிக்கும் மேலானோர் பொதுப் போக்குவரத்து வசதியைப் பெற்றுள்ளனர்.
- SDG 12 : 2000 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலங்களில் உலகளாவிய பருப்பொருள் தடமானது 70% வரை உயர்ந்துள்ளது.
- SDG 13 : 2020 ஆம் ஆண்டில் உலகளாவிய சராசரி வெப்பநிலையானது 1.2 டிகிரி செல்சியசாக உள்ளது.
- SDG 14 : 2008 ஆம் ஆண்டில் 400 ஆக இருந்த உயிரற்றப் பகுதிகளின் எண்ணிக்கையானது 2019 ஆம் ஆண்டில் 700 ஆக அதிகரித்துள்ளது.
- SDG 15 : 2000 முதல் 2020 வரையிலான காலகட்டத்தின் போது 100 மில்லியன் ஹெக்டேர் அளவிலான வனப்பகுதிகள் அழிந்துள்ளன.

- SDG 16 : 2020 ஆம் ஆண்டில் குழந்தைத் தொழிலாளிகளின் எண்ணிக்கை 160 மில்லியனாக உயர்ந்துள்ளது. இது இருபது ஆண்டுகளில் இல்லாத அளவிலான ஒரு உயர்வாகும்.
- SDG 17 : சுமார் 3.7 பில்லியன் மக்களுக்கு (உலக மக்கள் தொகையின் பாதியளவு) இன்னும் இணைய வசதி கிடைக்கப் பெறவில்லை.

## அண்டார்டிக் உருகுநீர் ஏரிகள்

- அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசாவின் ICESat-2 எனும் செயற்கைக் கோளானது சமீபத்தில் அண்டார்டிக் உருகுநீர் ஏரிகளை கண்டறிந்துள்ளது.
- பனிப்பாறை நிபுணரான ஹெலென் அமென்டா ஃபிரிக்கர் 2007 ஆம் ஆண்டில், ஒன்றோடொன்று இணைந்த ஒரு ஏரியானது அண்டார்டிக்காவின் அடர்ந்த பனி படிவுகளுக்குக் கீழே மறைந்துள்ளதைக் கண்டறிந்தார்.
- இவர் இதற்காக நாசாவின் ICEsat செயற்கைக்கோளின் தரவுகளைப் பயன்படுத்தி உள்ளார்.
- ICEsat 2 என்ற செயற்கைக் கோள் 2018 ஆம் ஆண்டில் நாசாவினால் விண்ணில் ஏவப் பட்டது.
- ICEsat 2 செயற்கைக்கோள் தரவுகளைப் பயன்படுத்தி ஃபிரிக்கர் தற்போது அண்டார்டிகா பனிப்பாறைகளுக்கு அடியிலுள்ள இரண்டு புதிய உருகுநீர் ஏரிகளைக் கண்டறிந்துள்ளார்.



## விர்ஜின் கேலக்டிக் ராக்கெட் விமானம் – ரிச்சர்ட் பிரான்சன்

- பிரித்தானிய நாட்டைச் சேர்ந்த கோடீஸ்வரரான ரிச்சர்ட் பிரான்சன் தனது விர்ஜின் கேலக்டிக் ராக்கெட் விமானத்தில் நியூ மெக்சிகோ பாலைவனத்திற்கு மேலே 50 மைல்கள் வரை உயர்ந்து விண்ணிற்குப் பறந்தார்.
- மேலும் சோதனை ஓட்டத்திற்காக மனிதர்களுடன் விண்வெளிக்குச் செலுத்தப்பட்ட அந்த முதல் விண்கலமானது பாதுகாப்பாக புவிக்குத் திரும்பியது.
- இதன் மூலம் ரிச்சர்ட் பிரான்சன் தனது சொந்த விண்கலத்தில் விண்வெளிக்குப் பறந்து சென்ற முதல் கோடீஸ்வரர் எனும் பெருமையைப் பெற்றுள்ளார்.



## உலகின் முதலாவது கோவிட்-19 இணைத் தடுப்பு மருந்து

- கியூபா நாடானது சோபெர்னா 2 (காவெரைன் 2) எனப்படும் உலகின் முதலாவது கோவிட்-19 இணைத் தடுப்பு மருந்தினை உருவாக்கியுள்ளது.
- சோபெர்னா 2 தடுப்பு மருந்தானது மூன்று தவணைகளில் செலுத்தப்படுகிறது.
- இது சோபெர்னா 2 தடுப்பு மருந்தின் இரண்டு தவணைகளையும் சோபெர்னா பிளஸ் தடுப்பு மருந்தின் ஒரு தவணையையும் கொண்டது.
- சோபெர்னா 2 தடுப்பு மருந்தினை சோபெர்னா பிளஸ் எனும் ஒரு உந்து மருந்துடன் செலுத்தும் போது அறிகுறிகளுடைய கோவிட்-19 பாதிப்புகளுக்கு எதிராக அது 91 சதவீதச் செயல்திறனை வழங்கும்.
- இதற்கு ஒப்புதல் வழங்கப் பட்டால் கோவிட்-19 தொற்றுக்கு எதிரான தடுப்பு மருந்தினைத் தயாரித்த முதல் லத்தீன் அமெரிக்க நாடாக கியூபா உருப் பெறும்.
- சோபெர்னா 2 மருந்தானது மூலக்கூறு நோயெதிர்ப்பு மையம் மற்றும் தேசிய உயிரி பொருள் உற்பத்தி மையம் ஆகியவற்றுடன் இணைந்து ஃபின்லே நிறுவனத்தினால் (Finlay Institute) உருவாக்கப்பட்டது.
- இணைத் தடுப்பு மருந்து (conjugate vaccine) என்பது ஒரு பலவீனமான ஆன்டிஜனை வலுவான ஆன்டிஜனோடு சேர்த்து அதனை ஒரு வைரஸ் தாங்கியாக அமைக்கிறது.
- இதனால் உடலின் நோயெதிர்ப்பு அமைப்பானது பலவீனமான ஆன்டிஜனுக்கு எதிராக வலுவான முறையில் செயல்படுகிறது.

## புளூ ஆரிஜின் விண்வெளிப் பயணத்திற்கு அமெரிக்கா ஒப்புதல்

- அமெரிக்க விமானப் போக்குவரத்து நிர்வாக அமைப்பானது (Federal Aviation Administration) நியூ செபர்டு ஏவுகல அமைப்பில் விண்வெளிக்கு மனிதர்களை ஏற்றிச் செல்வதற்கான புளூ ஆரிஜின் நிறுவனத்தின் உரிமத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- அமேசான் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாகி ஜெஃப் பேசோஸ், ஜூலை 20 அன்று புளூ ஆரிஜினின் முதல் விண்வெளிப் பயணத்தின் மூலம் விண்வெளிக்குக் செல்ல உள்ளார்.
- இந்த உரிமமானது ஆகஸ்ட் வரையில் செல்லுபடியாகும் நிலையில் விண்வெளிக்கு மனிதர்களை ஏற்றிச் செல்வதற்கு புளூ ஆரிஜின் நிறுவனத்திற்கு அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளது.

- இந்தப் பயணத்தை அது டெக்சாசில் உள்ள ஒன் ஃபெசிலிட்டி எனும் தனது ஏவுதளத்திலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கப் பட்டுள்ளது.
- விண்வெளிச் சுற்றுலாத் துறையில் ஒரு போட்டியாளராக திகழும் விர்ஜின் கேலக்டிக் தனது விண்வெளி வீரர்களை வெற்றிகரமாக விண்வெளிக்கு அனுப்பியதைத் தொடர்ந்து இந்தப் பயணமானது மேற்கொள்ளப்பட உள்ளது.
- விர்ஜின் கேலக்டிக், புளூ ஆரிஜின், ஸ்பேஸ் எக்ஸ் ஆகியவை வழக்கமான வணிக ரீதியிலான விண்வெளிப் பயண முறையில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கப் பணியாற்றி வருகின்றன.
- விண்வெளிப் பயணமானது "கோடீஸ்வரர்களின் விண்வெளிப் பந்தயம்" (billionaire space race) எனவும் குறிப்பிடப்படுகிறது.

## சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் சந்திப்பு – முக்கியத் தகவல்கள்

- சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (Shanghai Cooperation Organisation – SCO) சந்திப்பானது தஜகிஸ்தானின் தலைநகர் துசான்பேயில் நடைபெற்றது.
- இந்தச் சந்திப்பில் ஆப்கானிஸ்தானில் தற்போது நிலவி வரும் பாதுகாப்பின்மைப் பற்றிய விவாதங்கள் பெருமளவில் இடம் பெற்றன.
- SCO மற்றும் SCO உறுப்பினர் நாடுகளின் பார்வையாளர் நிலையைப் பெற்ற நாடுகளின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.
- இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் S. ஜெய்சங்கர் அவர்கள் SCO உறுப்பினர் நாடுகளின் சக அமைச்சர்களை சந்தித்த போது இந்தப் பிரச்சினை பற்றி தமது கருத்துகளை முன்வைத்தார்.
- SCO உறுப்பினர்கள் நாடுகளின் சந்திப்பில் ஆப்கானிஸ்தான், பொது சுகாதாரம் மற்றும் பொருளாதார மீட்சி போன்ற மூன்று முக்கியப் பிரச்சினைகள் விவாதிக்கப் பட்டன.

### *இந்தியா விடுத்துள்ள அழைப்பு*

- தீவிரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் டிஜிட்டல் வசதி வழங்குதல் போன்றவற்றை நிறுத்துவதற்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது.
- மேலும் இந்தியாவானது கோவிட்-19 தொற்றுக்கு எதிரான ஆரம்ப நிலையிலேயே உலகளாவிய அளவில் தடுப்பூசி வழங்குவதற்கான அவசியத்தையும் வலியுறுத்தி உள்ளது.
- சீர்திருத்தப்பட்ட பன்முகத் தன்மை (reformed multilateralism) குறித்தும் இந்திய அமைச்சர் உரையாற்றினார்.

## உலகின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை – 2021

- இந்த அறிக்கையானது உணவு மற்றும் வேளாண் அமைப்பினால் சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- உணவுப் பாதுகாப்பில் கோவிட்-19 பெருந்தொற்று ஏற்படுத்திய தாக்கத்தை பற்றிய நினைவூட்டலை இந்த அறிக்கை வழங்குகிறது.
- இந்த ஆய்வானது 62 குறைவான மற்றும் நடுத்தர வருமானமுடைய நாடுகளில் மேற் கொள்ளப் பட்டது.

- வருமான இழப்பு காரணமாக ஆரோக்கியமான உணவை வாங்கும் திறனில் குறைவு ஏற்பட்டுள்ளதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக ஏற்பட்ட வருமான இழப்பு மற்றும் உணவு விலை உயர்வு ஆகியவற்றினால் கூடுதலாக 141 மில்லியன் மக்களால் ஆரோக்கியமான உணவைப் பெற முடியவில்லை.
- ஆரோக்கியமான உணவின் விலையானது அத்தியாவசிய ஊட்டச்சத்துகள் நிறைந்த உணவின் விலையை விட 60% அதிகமாகும்.
- 2020 ஆம் ஆண்டில் 2.37 பில்லியன் மக்களால் போதுமான உணவைப் பெற இயலாத நிலை நிலவியது.
- 2020 ஆம் ஆண்டில் உலகளவில் மூன்றில் ஒருவருக்குப் போதுமான உணவைப் பெற இயலாத நிலையில் இருந்தனர்.
- உலகின் 12 சதவீத மக்கள் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையினை எதிர் கொண்டனர்.



## ஆழமான நீச்சல் குளம் – துபாய்

- உலகிலேயே மிகவும் ஆழமான நீச்சல் குளமானது துபாயில் அமைக்கப்பட்டுள்ளது.
- டீப் டைவ் துபாய் எனும் நிறுவனமானது இதில் ஆய்வாளர்களை 60 மீ (196 அடி) வரை கொண்டு செல்ல வழி செய்துள்ளது.
- இந்தக் குளமானது ஆய்வாளர்கள் ஆய்வு மேற்கொள்ளக் கூடிய ஒரு “மூழ்கிய நகரை” (sunken city) ஒத்துள்ளது.



## G20 நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் சந்திப்பு

- G20 நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் மூன்றாவது அரசு முறைச் சந்திப்பானது இத்தாலியின் வெனீசில் நடைபெற்றது.
- இந்தச் சந்திப்பானது G20 அமைப்பிற்கான இத்தாலிய நாட்டின் தலைமையில் நடத்தப் பட்டது.
- 2020 ஆம் பிப்ரவரி மாதத்திற்குப் பிறகு நடைபெற்ற முதலாவது நேர்முக நிதிக் கண்காணிப்புக் கூட்டம் இது ஆகும்.
- G20 உறுப்பினர்கள் பின்வரும் பிரச்சினைகள் குறித்து விவாதங்களைத் தொடங்கினர். அவையாவன
    - உலகளாவியப் பொருளாதாரம் மற்றும் சுகாதாரம்
    - பொருளாதார மீட்சியை மேம்படுத்துவதற்கான முயற்சி மற்றும்
    - பசுமை மற்றும் அதிகளவில் நீடித்த மற்றும் நிலையான பொருளாதாரத்தினையும் சமுதாயத்தினையும் நோக்கிய மாற்றம்.

## உலகின் மிகச்சிறியப் பசு மாடு

- வங்காளதேசத்திலுள்ள ஒரு சிறியப் பண்ணையில் உலகின் மிகச்சிறியப் பசுமாடு வளர்க்கப் படுகிறது.
- இது வெறும் 20 அங்குலம் உயரமே உடையது.
- இதன் பெயர் ராணி ஆகும்.
- ராணி, 23 மாதமே ஆன குள்ளமான ஒரு பசுமாடு ஆகும்.
- இந்த சிறியப் பசுவின் நீளம் 26 அங்குலம் மற்றும் அதன் எடை 57 பவுண்டுகள் மட்டுமேயாகும்.



## அருண் நதியின் தாழ்மட்டப் பகுதியில் அமைந்த நீர்மின் நிலையம்

- நேபாள நாடானது இந்தியாவின் சட்லஜ் ஜல் வித்யுத் நிகாம் எனும் நிறுவனத்துடன் 1.3 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இது கிழக்கு நேபாளத்தில் 679 மெகாவாட் திறனுடைய நீர்மின் நிலையத்தினை அமைப்பதற்கான ஒரு ஒப்பந்தமாகும்.
- இது நேபாள நாட்டில் இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இரண்டாவது பெரிய திட்டமாகும்.
- இது ஒரே திட்டத்திலான மிகப்பெரிய வெளிநாட்டு முதலீட்டுத் திட்டமாகும்.
- இந்த நீர்மின் நிலையமானது கட்டமைப்பு, உரிமம், இயக்கம் மற்றும் பரிமாற்றம் எனும் மாதிரியின் கீழ் கட்டமைக்கப்பட உள்ளது.
- நேபாள நாட்டில் இந்தியாவால் மேற்கொள்ளப்பட்ட முதல் திட்டம் 1.04 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான 900 மெகா வாட் திறனுடைய அருண் 3 நீர்மின் நிலையமாகும்.
- அருண் நதியானது நேபாளம் வழியே பாயும் மிகப்பெரிய இமாலய நதி ஆகும்.
- இந்த நதி சப்த கோசி நதியமைப்புடன் இணைகிறது.

## BP நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கை

- 2020 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு அதிகளவில் கச்சா எண்ணெய் விற்பனை செய்யும் நான்காவது மிகப்பெரிய நாடாக அமெரிக்கா உருவெடுத்துள்ளதாக BP எனும் எண்ணெய் நிறுவனத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- ஈராக், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவற்றை அடுத்து அமெரிக்கா உள்ளது.
- அமெரிக்கா நாடானது 2017 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு எண்ணெய் ஏற்றுமதியைச் செய்யத் தொடங்கியது.
- மேலும் இந்தியாவிற்கு அதிகளவில் இயற்கை எரிவாயு விற்பனை செய்யும் 4வது மிகப்பெரிய நாடாகவும் அமெரிக்கா உருவெடுத்துள்ளது.

## 'Fit for 55' சட்டம்

- ❖ ஐரோப்பிய ஒன்றியத்தின் நிர்வாக அமைப்பானது ஒரு புதிய சட்டத்தை இயற்றி உள்ளது.
- ❖ உலக வெப்பமயமாதலை உருவாக்கும் வாயுக்களின் உமிழ்வை 55% வரை குறைத்தல் எனும் தனது உறுதிப்பாட்டினை நிறைவேற்றும் வகையில் இந்தச் சட்டம் ஆனது இயற்றப்பட்டுள்ளது.
- ❖ ஐரோப்பிய ஒன்றியத்தின் 'Fit for 55' எனும் இந்தச் சட்டத்தில் வெளிநாட்டு நிறுவனங்களால் ஏற்படுத்தப்படும் மாசுபாட்டிற்கு வரி விதிக்கும் சர்ச்சைக்குரிய ஒரு திட்டமும் அடங்கும்.
- ❖ மேலும் 2035 ஆண்டிற்குள் பெட்ரோல் மற்றும் டீசல் கார்களைப் பயன்பாட்டு வழக்கத்திலிருந்து வெளியேற்றுவதையும் இந்தச் சட்டம் முன்மொழிகிறது.




## குழந்தைகளுக்கான தடுப்பு மருந்து வழங்குதல் குறித்த தரவு

- ❖ குழந்தைகளுக்கான தடுப்பு மருந்து வழங்குதல் குறித்த தரவுகளானது உலக சுகாதார அமைப்பு மற்றும் UNICEF ஆகியவற்றால் சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- ❖ 2020 ஆம் ஆண்டில் வழக்கமாக குழந்தைகளுக்கு வழங்கப்படும் தடுப்பு மருந்து வழங்கும் வழங்கீட்டு வீதத்தில் இந்தியா வீழ்ச்சியடைந்துள்ளதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- ❖ இந்தியாவை அடுத்து பாகிஸ்தான் மற்றும் இந்தோனேசியா ஆகியன உள்ளன.
- ❖ இந்தியாவின் டிப்தீரியா, டெட்டனஸ் மற்றும் பெர்ட்டுசிஸ் தடுப்பு மருந்து – 3 ஆகிய மருந்துகளின் வழங்கீடானது 91 சதவீதத்திலிருந்து 85 சதவீதமாகக் குறைந்துள்ளது.

## மிதக்கும் சூரியத் தகடு ஆற்றல் நிலையம்

- ❖ சிங்கப்பூர் நாடானது உலகின் மிகப்பெரிய மிதக்கும் சூரியத் தகடு ஆற்றல் நிலையத்தைத் தொடங்கியுள்ளது.

- இந்தத் திட்டமானது 2025 ஆம் ஆண்டிற்குள் நாட்டின் சூரிய சக்தி உற்பத்தியினை நான்கு மடங்காக்கும் குறிக்கோளை நிவர்த்தி செய்யும் முயற்சியின் ஓர் அங்கமாகும்.
- இது மேற்கு சிங்கப்பூரிலுள்ள ஒரு அணைக்கட்டில் அமைக்கப் பட்டுள்ளது.
- 60 மெகாவாட் திறனுடைய இந்த சூரிய ஒளிமின்னழுத்த நிலையமானது செம்ப்கார்ப் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் ஒரு துணை நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்டுள்ளது.

## குரங்கம்மை நோய்

- அமெரிக்காவின் டெக்சாசில் அரிதான மனித குரங்கம்மை நோய் பதிவாகியுள்ளது.
- நைஜீரியாவிலிருந்து அமெரிக்காவிற்குத் திரும்பிய அமெரிக்க குடிமகன் ஒருவருக்கு குரங்கம்மை நோய் இருந்தது கண்டறியப்பட்டுள்ளது.
- அமெரிக்காவின் நோய்க் கட்டுப்பாட்டு மற்றும் தடுப்பு மையம் அளித்த தகவலில் இவ்வாறு கூறப்பட்டு உள்ளது.
- குரங்கம்மை வைரசானது விலங்கு வழியே பரவுக் கூடிய இரட்டைப் பட்டையுடைய டிஎன்ஏ கொண்ட வைரசாகும்.
- இது பாக்சிவிரிடே (Poxviridae) என்ற குடும்பத்தைச் சேர்ந்த ஆர்த்தோபோ வைரஸ் (Orthopoxvirus) என்ற இனத்தைச் சேர்ந்ததாகும்.

## OECD-FAO பருப்புகள் குறித்த கண்ணோட்ட அறிக்கை 2021 – 2030

- இது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பு மற்றும் உணவு மற்றும் வேளாண் அமைப்பு ஆகியவற்றால் வெளியிடப் படுகிறது.
- உலகளாவிய பருப்பு விற்பனையில் இந்தியா ஒரு முக்கியமான நாடாக உள்ளது.
- இந்தியா இதுநாள் வரை இந்த புரதச் சத்துமிக்க பருப்பு வகைகளின் உலகின் மிகப்பெரிய உற்பத்தியாளர், பதப்படுத்துதல், இறக்குமதி மற்றும் நுகர்வு நாடாக திகழ்வதே இதற்குக் காரணமாகும்.
- 2030 ஆம் ஆண்டுக்குள் உலகின் பருப்பு வகைகள் வழங்கீடானது 22 மில்லியன் டன்களாக உயரும் என்றும் அதில் பாதியளவு ஆசியாவிலிருந்தும் குறிப்பாக இந்தியாவிலிருந்தும் கிடைக்கப் பெறும் என இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## நாற்கர அரசு முறைமை தளம்



- அமெரிக்கா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் ஒரு புதிய நாற்கர அரசுமுறைமை தளத்தினை அமைப்பதற்காக ஒரு தலைமை ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன.
- பிராந்திய இணைப்பு வசதியை மேம்படுத்துவதே இதன் முதன்மை நோக்கமாகும்.
- இந்த நாற்கரக் குழுமமானது பிடென் நிர்வாகத்தினால் அறிவிக்கப்பட்டது.

## "The India Story" – புத்தகம்




- இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் பீமல் ஜலன் அவர்கள் "The India Story" என்ற புதிய புத்தகத்தை எழுதியுள்ளார்.
- இந்தப் புத்தகமானது இந்தியப் பொருளாதாரத்தின் வரலாறு பற்றி கூறுவதோடு இந்திய அரசியல் பொருளாதாரத்தின் வருங்காலத்திற்கான படிப்பினையை வழங்கச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டது.
- இவர் "India Then and Now" மற்றும் "India Ahead" போன்ற புத்தகங்களையும் எழுதி உள்ளார்.

## சிர்கான்



- ரஷ்யா தனது சிர்கான் எனும் ஒரு அதிநவீன ஹைபர்சோனிக் ஏவுகணையை வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.
- சிர்கான் என்பது ரஷ்யாவின் புதிய ஆயுதப் படைக் களஞ்சியத்தின் ஒரு பகுதியாகும்.
- இது மேக் 9 வேகம் மற்றும் 1,000 கிலோ மீட்டர் வரம்பு என்ற அளவில் கடல் மற்றும் நிலத்தில் இருக்கும் இலக்குகளைத் தாக்கக் கூடும்.

## இந்தியா – 5வது மிகப்பெரிய அந்நியச் செலாவணி இருப்பு

- இந்திய நாடானது 608.99 பில்லியன் டாலர் மதிப்பிலான அந்நியச் செலாவணி இருப்புகளோடு ஜப்பான், சீனா, ரஷ்யா மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளுக்குப் பிறகு உலகின் 5வது மிகப்பெரிய அந்நியச் செலாவணி இருப்பினைக் கொண்ட ஒரு நாடாக உருவெடுத்துள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டில் மூலதனம் மற்றும் நடப்புக் கணக்குகளில் இந்தியாவின் வரவுச் செலவு சமநிலையானது அதிகரித்துள்ளது.
- நாட்டின் அந்நியச் செலாவணி உயர்விற்கு இவையே பெரும் பங்காற்றின.
- இந்தியாவின் தற்போதைய அந்நியச் செலாவணி இருப்புகளானது 18 மாதங்களுக்கும் மேல் என்ற அளவில் இறக்குமதிகளுக்குக் கொடுப்பனவுகளை வழங்க போதுமானதாகும்.
- அந்நியச் செலாவணி இருப்புகளானது பத்திரங்கள், வெளிநாட்டுப் பணங்கள், தங்கம், வங்கி வைப்புத் தொகைகள், நிதிச் சொத்துகள் மற்றும் சிறப்பு கடன் வாங்கும் உரிமைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

## திறன்பேசி தயாரிப்பாளர்

- சீனாவின் Xiaomi நிறுவனமானது ஆப்பிள் நிறுவனத்தை (இரண்டாமிடம்) பின்னுக்குத் தள்ளி முதல் முறையாக உலகின் இரண்டாவது பெரிய திறன்பேசி (ஸ்மார்ட்போன்) தயாரிப்பாளராக உருவெடுத்துள்ளது.
- Xiaomi நிறுவனமானது இந்த வரிசையில் தென் கொரியாவின் சாம்சங் கைபேசி நிறுவனத்தினை அடுத்து உள்ளது.
- சீன நாட்டின் இதர பிற திறன்பேசி தயாரிப்பு நிறுவனங்களான ஒப்போ மற்றும் விவோ ஆகியவை அதற்கு அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.



## கோவாக்ஸ் - இந்தியா

- கோவாக்ஸ் உலகளாவிய தடுப்பூசி விநியோகத் திட்டத்தின் மூலம் இந்தியாவுக்கு 7.5 மில்லியன் என்ற அளவில் மாடர்னாவின் கோவிட்-19 தடுப்பூசிகள் வழங்கப் பட உள்ளன.
- மும்பையைச் சேர்ந்த மருந்து நிறுவனமான சிப்லா நிறுவனத்திற்கு மாடர்னாவின் கோவிட்-19 தடுப்பூசியை இறக்குமதி செய்ய இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநரகம் அனுமதி அளித்துள்ளது.
- கோவாக்ஸ் என்பது தடுப்பூசிகள் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துகளுக்கான உலகளாவியக் கூட்டமைப்பு, தொற்றுநோய்த் தயாரிப்பு கண்டுபிடிப்புகளுக்கானக் கூட்டமைப்பு மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவை இணைந்து செயல்படுத்தும் ஒரு உலகளாவிய தடுப்பூசி விநியோகத் திட்டமாகும்.

## சர்வதேச நிதிக் கழகம்

- சர்வதேச நிதிக் கழகமானது 'மெட்ஜீனோம்' எனப்படும் மரபியல் சோதனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் 16.5 மில்லியன் டாலர் மதிப்பிலான ஒரு முதலீட்டினை மேற்கொள்ள உள்ளது.
- இந்தியாவில் கோவிட்-19 சோதனையை எளிதில் அணுகச் செய்வதை அதிகரிக்கும் நோக்கில் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- சர்வதேச நிதிக் கழகமானது வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள தனியார் துறைகள் மீது ஈடுபாடு செலுத்தும் ஒரு முன்னணி உலக மேம்பாட்டு நிறுவனமாகும்.
- 1956 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த நிறுவனம் உலக வங்கி குழுமத்தின் ஓர் உறுப்பினராகும்.
- இந்த நிறுவனமானது பொருளாதார மேம்பாட்டினை முன்னேற்றி மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துகிறது.

IFC
International Finance Corporation
WORLD BANK GROUP

## உலகின் முதல் கார்பன் வரம்பு வரி

- ஐரோப்பிய ஒன்றியமானது 2026 ஆம் ஆண்டு முதல் உலகில் முதன்முதலாக கார்பன் வரம்பு வரியை விதிக்க உள்ளதற்கான ஒரு முன்மொழிதலை வெளியிட்டுள்ளது.
- இது கார்பன் வரம்பினை சரி செய்தல் முறையின் மூலம் கார்பன் உமிழ்வின் மீதான செலவைக் கண்காணிக்கும்.

- இந்த முறையானது இறக்குமதி செய்யப்பட்ட எஃகு, அலுமினியம், உரம் மற்றும் சிமெண்ட் போன்ற தயாரிப்புப் பொருட்கள் மீதான கார்பன் விலைக்கான வரியினை விதிக்கும்.
- இந்தக் கொள்கையானது நாடுகளை இலக்காகக் கொள்ளாமல் நிறுவனங்களை இலக்காகக் கொண்டு வரி விதிக்க உள்ளது.
- ஆனால் இக்கொள்கையானது ரஷ்யா போன்ற தனது முக்கிய வர்த்தகப் பங்கு தாரர்களிடமிருந்து வலுவான பதிலடியைத் தூண்டியுள்ளது.
- ரஷ்ய நாடானது நிலக்கரி, எண்ணெய், சுருள் எஃகு (rolled steel) மற்றும் அலுமினியம் போன்ற கார்பனை அதிகமாகக் கொண்ட பொருட்களை ஐரோப்பிய நாட்டிற்கு அதிகளவில் வழங்கி வரும் ஒரு நாடாக திகழ்கிறது.

## சர்வதேச வான்வழிப் போக்குவரத்துச் சங்க விவகாரங்கள்

IATA

International Air Transport Association

(IATA)

- சர்வதேச வான்வழிப் போக்குவரத்துச் சங்கமானது, சக்கர நாற்காலிகள் போன்ற இயங்குதிறன் உதவி சாதனங்களை ஆய்வு செய்து அவற்றின் போக்குவரத்தினை மேம்படுத்தும் முயற்சியில், உலகளாவிய இயங்குதிறன் உதவி சாதனங்கள் நடவடிக்கை குழு (Global Mobility Aids Action Group) என்ற ஒன்றினைத் தொடங்கியுள்ளது.
- இந்த நடவடிக்கையானது உலகின் இது போன்ற முதல் குழுவாகும்.
- கத்தார் ஏர்வேஸ் நிறுவனமானது சர்வதேச வான்வழிப் போக்குவரத்துச் சங்கத்தின் காற்றுக் கொந்தளிப்பு எச்சரிக்கை தளத்தில் (IATA's Turbulence Aware Platform) இணைகிறது.
- இந்தத் தளத்தில் இணைந்த முதல் மத்திய கிழக்கு நாட்டின் விமானப் போக்குவரத்து நிறுவனம் இதுவேயாகும்.

## சிரியாவில் அசாத்

- சிரியாவின் அதிபர் பஷர் அசாத் நான்காவது முறையாக ஏழு ஆண்டு கால அதிபர் பதவியை ஏற்றுள்ளார்.
- இவர் சிரியாவில் 2000 ஆம் ஆண்டு முதல் ஆட்சியில் இருக்கிறார்.
- உள்நாட்டு யுத்தம் சார்ந்த பெரும்பாலான கொடுஞ்செயல்களுக்கு வேண்டி அவர் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க அரசாங்கங்களால் குற்றம் சாட்டப் பட்டுள்ளார்.
- ஆனால் ஈரான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் அவருக்கு ஆதரவாக உள்ளன.



## சீ பிரேக்கர் - இஸ்ரேல்

- இஸ்ரேலியப் பாதுகாப்பு நிறுவனமான ரஃபேல் மேம்பட்ட பாதுகாப்பு அமைப்பானது 'சீ பிரேக்கர்' (Sea Breaker) என்ற ஒரு விமானத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது முக்கியமான கடல் மற்றும் நில இலக்குகளைத் தாக்கப் பயன்படுத்தப் படும்.
- இது நீண்ட தூர இலக்குகளைத் தாக்குவதோடு மட்டுமல்லாமல் இது தானாக இயங்கி துல்லியமாக வழி நடத்தப்படும் ஒரு ஏவுகணை அமைப்பாகும்.
- இது அனைத்து வானிலை நிலைகளிலும், உலகளாவிய இடஞ்சுட்டி செயற்கைக்கோள் அமைப்பு அணுகாத இடங்களிலும் தனது முழு செயல்பாட்டுத் திறனைக் கொண்டு உள்ளது.




## EAGLE சட்டம் – அமெரிக்கா

- இது "சட்டரீதியான வேலைவாய்ப்புகளுக்குப் பச்சை அட்டைகளுக்கான சம அணுகல் சட்டம்" (Equal Access to Green cards for Legal Employment Act) என்று அழைக்கப்படுகிறது.
- இது வேலைவாய்ப்பு அடிப்படையிலான பச்சை அட்டையில் ஒரு நாட்டிற்கான வரம்பை (country cap) அகற்றுவதற்காகக் கொண்டு வரப்பட்டுள்ளது.
- பச்சை அட்டைகளுக்காக வேண்டி பல ஆண்டுகளாக காத்திருக்கும் இந்தியத் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்குப் பயனளிப்பதற்காக இது அறிமுகப் படுத்தப்பட்டு உள்ளது.
- வேலைவாய்ப்பு அடிப்படையில், கிடப்பில் கிடக்கும் 75 சதவிகித விசாப் பயணச் சீட்டுக்கள் (பயண அனுமதிச் சீட்டு) இந்தியர்களுடையதாகும்.
- இது அமெரிக்க நாட்டின் பணியளிப்பவர்கள் புலம்பெயர்ந்தோரை அவர்களின் பிறப்பிடம் கருதாமல் அவர்களின் தகுதியின் அடிப்படையில் பணியமர்த்துவதில் கவனம் செலுத்த அனுமதிப்பதன் மூலம் இது அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு மிகுந்த அளவில் பயனளிக்கும்.

## மத்திய-தெற்காசியா மாநாடு

- ❖ உஸ்பெகிஸ்தான் தனது தலைநகர் தாஷ்கண்டில் இந்த உயர்மட்டக் கூட்டத்தை நடத்தியது.
- ❖ இது "மத்திய ஆசிய மற்றும் தெற்காசியப் பிராந்திய இணைப்பு, சவால்கள் மற்றும் வாய்ப்புகள் பற்றிய சர்வதேச மாநாடு" என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்டது.
- ❖ மத்திய ஆசியா மற்றும் தெற்காசியாவில் பொருளாதார மற்றும் சமூக-கலாச்சார ஒத்துழைப்பை ஆழப்படுத்தும் நோக்கில் இது அமைந்துள்ளது.
- ❖ சிறந்த இணைப்பிற்காக வேண்டி, உஸ்பெகிஸ்தான் ஏற்கனவே ஆப்கானிஸ்தானுக்கு ஒரு இரயில் பாதையை நிறுவியுள்ளது.




## MAKS 2021 வானியல் சாகசம்

- ❖ ரஷ்யாவின் மாஸ்கோ என்னுமிடத்தில் நடைபெற்ற MAKS 2021 எனும் வானியல் சாகச நிகழ்ச்சியில் இந்திய விமானப் படையின் சாரங் ஹெலிகாப்டர் அணி முதன்முறையாகப் பங்கேற்றது.
- ❖ ரஷ்யாவில் சாரங் அணி தனது நான்கு ஹெலிகாப்டர்களின் சாகசத்தை நிகழ்த்துவது இதுவே முதல் முறையாகும்.



- சாரங் அணியானது 'துருவ்' எனப்படும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட மேம்படுத்தப் பட்ட இலகுரக ஹெலிகாப்டருடன் இந்த சாகசத்தில் பங்கேற்றது.
- சாரங் அணியானது பெங்களூருவில் 2003 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- துருவ் எனும் ஹெலிகாப்டரானது இந்துஸ்தான் ஏரோ நாட்டிக்ஸ் லிமிடெட் என்ற ஒரு நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டது.

## யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளங்கள் - பட்டியலில் இருந்து நீக்கம்

- ஐக்கியப் பேரரசின் லிவர்பூல் நகரமானது யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளங்களின் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.
- அதன் கடல் சார்ந்த வரலாற்றை அங்கீகரிக்கும் வகையில் அதற்கு 2004 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளம் என்ற அந்தஸ்து கொடுக்கப்பட்டது.
- முன்னதாக, இரண்டு தளங்கள் மட்டுமே இந்த அந்தஸ்தை இழந்துள்ளன.
- அவை 2007 ஆம் ஆண்டில் ஓமனில் உள்ள அரேபிய ஓரிக்ஸ் சரணாலயம் மற்றும் 2009 ஆம் ஆண்டில் ஜெர்மனியின் டிரெஸ்டன் எல்பே பள்ளத்தாக்கு ஆகியனவாகும்.




## தாய்வான் எனும் பெயரைப் பயன்படுத்துதல்

- தாய்வான் அரசானது 'தாய்வான்' எனும் பெயரில் ஐரோப்பாவில் தனது முதல் அலுவலகத்தை பால்டிக் நாடான லித்துவேனியாவில் அமைக்க உள்ளது.
- இந்த முடிவிற்கு அமெரிக்கா பாராட்டு தெரிவித்திருக்கும் அதே சமயத்தில் சீனா தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.
- அந்தக் கண்டத்திலுள்ள தாய்வானின் இதர பிற அரசு முறைமை அலுவலங்கள் 'தைய்பே' என்றே பெயரிடப்பட்டுள்ளன.
- 'தாய்வான்' என்பது கிழக்கு ஆசியாவில் உள்ள ஒரு நாடாகும்.
- இதன் தலைநகர் 'தைய்பே' ஆகும்.
- மேலும் லித்துவேனியாவிற்கு தனது ஒற்றைச் சீனக் கொள்கையைப் பின்பற்றுமாறு சீனா வலியுறுத்தியுள்ளது.
- தாய்வான் நாட்டினை தனது ஒற்றைச் சீனக் கொள்கையின் கீழான ஒரு மாகாணமாக சீனா கோருகிறது.
- ஆனால் தைவான் சீனக் குடியரசு என்று அறியப்படுகிறது.

## மெகாங் – கங்கை ஒத்துழைப்பு அமைப்பு

- இதன் 11வது சந்திப்பானது சமீபத்தில் நடத்த பட்டது.
- இது மெகாங் – கங்கை ஒத்துழைப்பு அமைப்பின் 20வது நிறைவு ஆண்டாகும்.
- கம்போடியாவின் வெளியறவுத் துறை அமைச்சர், இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சரோடு இணைந்து இந்தச் சந்திப்பிற்கு தலைமை தாங்கினார்.
- சுற்றுலா, இணைப்பு மற்றும் கலாச்சாரம் மற்றும் இதர பிற பகுதிகளில் ஒத்துழைப்பினை அதிகரிக்கும் நோக்கோடு 2000 ஆம் ஆண்டில் இந்த அமைப்பானது தொடங்கப் பட்டது.
- இந்த முன்னெடுப்பில் ஆறு நாடுகள் அங்கம் வகிக்கின்றன.
- அவை இந்தியா, மியான்மர், கம்போடியா, லாவோஸ், தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகியவையாகும்.




## திபெத்திய பனிப்பாறைகளில் பண்டையகால வைரசுகள்

- திபெத்திய பனிப்பாறைகளில் கிட்டத்தட்ட 15,000 ஆண்டுகளாக உறைந்த நிலையில் இருக்கும் பண்டைய கால வைரசுகளை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- சீனாவிலுள்ள திபெத்தியப் பீடபூமியின் குலியா பனிப்படலத்திலிருந்து எடுக்கப்பட்ட இரண்டு பனிக்கட்டி மாதிரிகளில் இந்த வைரசுகள் கண்டறியப்பட்டுள்ளன.
- இவை ஆயிரக்கணக்கான வருடங்களாக உறைந்த நிலையில் இருப்பதால் தற்போது வகைப்படுத்தப்பட்டுள்ள வைரசுகளை இது ஒத்திருக்கவில்லை.

## கேடட் உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி 2021

- இது ஹங்கேரியின் புத்தபெஸ்டில் நடைபெற்றது.
- இந்தியாவின் இளம்வயது மல்யுத்த வீரர்கள் அமன் குலியா மற்றும் சாகர் ஜக்லன் ஆகியோர் புதிய உலக சாம்பியன்களாக உருவெடுத்துள்ளனர்.




## ஐக்கிய ராஜ்ஜியத்துடனான கடற்படைப் பயிற்சி

- ஐக்கிய ராஜ்ஜியத்தின் போர் விமானந் தாங்கிக் கப்பல் குழுமமானது (Carrier Strike Group 2021) வங்காள விரிகுடாவில் நடைபெற்ற கடற்படைப் பயிற்சியில் முதன்முறையாக இந்தியக் கடற்படையுடன் இணைந்து பங்கேற்றது.
- CSG குழுமமானது HMS குயின் எலிசபெத் எனும் கப்பலின் தலைமையின் கீழ் வழி நடத்தப் பட்டது.
- HMS குயின் எலிசபெத் என்ற கப்பலானது ஐக்கிய ராஜ்ஜியத்தில் கட்டமைக்கப்பட்ட கடல்பரப்பில் இயங்கும் மிகப்பெரிய கப்பல் ஆகும்.
- இது புகழ்பெற்ற நயாகரா நீர்வீழ்ச்சியை விட உயரமானது என கூறப்படுகிறது.

## தடுப்பு மருந்து உற்பத்தி

- இந்த ஆண்டின் உலகளாவிய கோவிட்-19 தடுப்பு மருந்தின் ஒட்டு மொத்த உற்பத்தியில், உலக வர்த்தக அமைப்பின் 5 உறுப்பினர் நாடுகள் மட்டும் மூன்றில் ஒரு பங்கு உற்பத்தியை மேற்கொண்டுள்ளன.
- அவை சீனா, இந்தியா, ஜெர்மனி, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகியனவாகும்.
- தடுப்பு மருந்துகளைப் பெறுவதில் உள்ள பாரபட்சமிக்க அணுகல் முறையே உலகப் பொருளாதாரத்தின் சமநிலையற்ற மீள்விற்கு ஒரு மூலக் காரணம் என உலக வர்த்தக அமைப்பு கூறுகிறது.

## மேக விதைப்பு – ஐக்கிய அரபு அமீரகம்

- மேக விதைப்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திய முதல் பாரசீக வளைகுடா நாடுகளில் ஒன்றாக ஐக்கிய அரபு அமீரகம் உருவெடுத்துள்ளது.
- மழைப் பொழிவை தூண்டக்கூடிய மின் அதிர்ச்சியை மேகங்களுக்கு வழங்கச் செய்வதற்காக வேண்டி மேங்களுக்குள் பறக்கக் கூடிய ஆளில்லா விமானங்களை பிரயோகிக்கும் ஒரு புதிய முறையை ஐக்கிய அரபு அமீரகம் தற்போது சோதித்து வருகிறது.
- மேக விதைப்பு என்பது செயற்கையான மழைப்பொழிவை ஏற்படுத்துவதற்கான ஒரு வகையான வானிலையை மாற்றும் தொழில்நுட்பமாகும்.
- வானிலை அறிவியலாளர் பெர்னார்டு வன்னேகட் இந்தத் தொழில்நுட்பத்தின் ஒரு முன்னோடி ஆவார்.
- வளிமண்டலத்தில் முன்கூட்டியே மேகங்கள் உருவாகி இருக்கும் போது மட்டுமே இந்த தொழில்நுட்பம் செயல்படும்.
- இந்த மழைக்கான விதைகள் ஆனது சில்வர் அல்லது பொட்டாசியம் அயோடைடுகள், உலர் பனி (திட கார்பன் டை ஆக்சைடு) அல்லது திரவ புரோப்பேன் ஆகியவையாக இருக்கலாம்.
- இவை விமானத்திலிருந்தோ அல்லது தரையிலிருந்தோ மேகத்தின் மீது தெளிக்கப் படும்.




## நீரில் மூழ்குதலைத் தடுத்தல் குறித்த அறிக்கை

- உலக சுகாதார அமைப்பானது தென்கிழக்கு ஆசியா மற்றும் மேற்கத்திய பசிபிக் பகுதிகளில் நீரில் மூழ்குதலைத் தடுத்தல் குறித்த தனது முதலாவது பிராந்திய நிலை அறிக்கையை உலக சுகாதார அமைப்பானது வெளியிட்டுள்ளது.
- உலகின் மூன்றில் இரண்டு பங்கு உயிரிழப்புகளானது ஆசிய பசிபிக் பகுதியில் கடலில் மூழ்குவதால் ஏற்படும் உயிரிழப்புகள் என இந்த அறிக்கை கூறுகிறது.

- உலகளவில் தற்செயலாக ஏற்படும் காயம் மற்றும் இறப்பு ஆகியவற்றிற்கு மூழ்குதல் மூன்றாவது முன்னணி காரணமாக உள்ளது.
- அனைத்து விதமான காயத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகளில் 7 சதவீதமானது மூழ்குதலால் நிகழ்ந்தவையாகும்.
- சராசரியாக பெண்களை விட ஆண்களே அதிகமாக கடலில் மூழ்கி உயிரிழக்கின்றனர்.




## உலகின் முதலாவது தூய்மையான அணு உலை

- சீன அரசின் அறிவியலாளர்கள், குளிரூட்டலுக்கு என்று நீரைப் பயன்படுத்தாத ஒரு சோதனை முறை அணு உலை பற்றியத் திட்டத்தை வெளியிட்டுள்ளனர்.
- இந்த உலையானது யுரேனியத்திற்கு பதிலாக திரவ தோரியத்தைக் கொண்டு இயங்கும்.
- இது பயன்பாட்டிலுள்ள அணு உலைகளை விட பாதுகாப்பானதாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்த வகை அணு உலைக்கு நீர் தேவைப்படுவதில்லை என்பதால் இதனைப் பாலைவனத்திலும் செயல்படச் செய்ய இயலும்.
- சாங்காய் செயல்முறைசார் இயற்பியல் நிறுவனத்தின் குழுவினர் இந்த முன்மாதிரியை உருவாக்கியுள்ளனர்.

## தங்க அரிசி

- மரபணு மாற்றப்பட்ட 'தங்க அரிசியினை' வணிக ரீதியில் உற்பத்தி செய்வதற்கு பிலிப்பைன்ஸ் நாடு அனுமதி அளித்துள்ளது.
- உலகின் வளர்ந்து வரும் நாடுகளில் நிலவும் குழந்தைப் பருவ காலத்தில் ஏற்படும் பார்வையின்மையைத் தடுக்கவும் உயிர்களைக் காப்பாற்றவும் வேண்டி இந்த முடிவானது உதவும் என சுகாதார நிபுணர்கள் நம்புகின்றனர்.
- பீட்டா-கரோட்டீன் நிறைந்த இந்த அரிசியை உற்பத்தி செய்ய வழிவகுக்கும் உயிரிப் பாதுகாப்பு அனுமதியையும் அரசு வழங்கியுள்ளது.

- இதன் பிரகாசமான மஞ்சள் நிறத்தின் காரணமாக தங்க அரிசி எனப் பெயரிடப்பட்ட இந்த அரிசியை உருவாக்குவதற்கு சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பிலிப்பைன்ஸ் அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தின் வேளாண் துறை ஆகியவை 20 வருடங்கள் செலவிட்டன.
- தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய பகுதியில் வணிகப் பயன்பாட்டிற்கு அனுமதி பெற்ற முதல் வகை மரபணு மாற்றப்பட்ட அரிசி இதுவே ஆகும்.



## 2008 GO20 குறுங்கோள்

- ஒரு மிகப்பெரிய அரங்கம் அளவிலான குறுங்கோள் ஒன்று புவியை நோக்கி நகர்ந்து வந்தது.
- 2021 ஆம் ஆண்டு ஜூலை 24 அன்று இது புவியைக் கடந்து செல்லும் என வெகுவாக எதிர்பார்க்கப் பட்டது.
- 2008 GO20 என அழைக்கப்படும் இந்த குறுங்கோள் ஆனது முன்னதாக 2008 ஆம் ஆண்டு ஜூன் 20 அன்று புவியைக் கடந்து சென்றது.

## 'அனைவருக்குமான பார்வைத் திறன்' - ஐக்கிய நாடுகள் அவை

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 'Vision for everyone' (அனைவருக்குமான பார்வைத் திறன்) எனப்படும் பார்வைத்திறன் தொடர்பான புதிய மற்றும் முதலாவது தீர்மானத்தை ஏற்றுக் கொண்டுள்ளது.
- 2030 ஆம் ஆண்டுக்குள் குறைந்தது 1.1 பில்லியன் அளவிலான பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு, குறிப்பாக கண் மருத்துவ நலச் சேவைகளைப் பெற இயலாதவர்களுக்கு கண் மருத்துவச் சேவைகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.
- 'அனைவருக்குமான பார்வைத் திறன் : நிலையான மேம்பாட்டு இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல்' எனும் ஒரு தீர்மானமானது, வங்காளதேசத்தின் ஐ.நா. தூதர் ரபாப் ஃபாதிமா (Rabab Fatima) என்பவரால் அறிமுகப் படுத்தப் பட்டு, ஐ.நா. பொதுச் சபையில் வங்காளதேசம், ஐயர்லாந்து, ஆன்டிகுவா மற்றும் பர்புடா ஆகிய நாடுகளால் முன்மொழியப்பட்டது.

## புதிய செயலிகள் – வங்காள தேசம்

- வங்காளதேச அரசானது ஜோகாஜாக்' எனப்படும் தனது சொந்த சமூக ஊடகத்தினை வெளியிட உள்ளது.
- இது உலகளவில் பிரபலமாகக் காணப்படும் முகநூல் எனும் சமூக ஊடகத்திற்கு மாற்றாக இருக்கும்.
- வாட்ஸ்அப் செயலிக்கு மாற்றாக 'அலபன்' எனும் செயலியும் வெளியிடப்பட உள்ளது.
- சூம் ஆன்லைன் செயலிக்கு மாற்றாக போய்தோக் என்ற செயலியும், தடுப்பூசிப் பதிவு செய்தவற்குப் பயன்படுத்தப்படும் சுரோக்கா எனும் மற்றொரு செயலியும் அறிமுகப் படுத்தப்பட உள்ளன.

## மாட்ரிட் நகரின் பேசியோ டெல் பிராடோ மற்றும் ரெட்டிரோ பூங்கா – உலகப் பாரம்பரியத் தள அந்தஸ்து

- ஸ்பெயின் நாட்டின் மாட்ரிட்டிலுள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பேசியோ டெல் பிராடோ பவுல்வர்டு (Paseo del Prado boulevard) மற்றும் ரெட்டிரோ பூங்காவிற்கு யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளம் எனும் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.
- ஸ்பெயின் நாட்டின் தலைநகரின் மையப்பகுதியில் அமைந்த பரந்து விரிந்த மரங்கள் நிரம்பிய பேசியோ டெல் பிராடோ பூங்காவானது பிராடோ அருங்காட்சியம் போன்ற பல கட்டிடங்களைக் கொண்டதாகும்.
- பேசியோ டெல் பிராடோவிற்கு அருகில் அமைந்த தனிச்சிறப்பு மிக்க ரெட்டிரோ பூங்காவானது 125 ஹெக்டேர் பரப்பளவிலான ஒரு பசுமை நிரம்பிய இடமாகும்.
- இது மாட்ரிட் நகரின் வரலாற்றிலேயே அதிக பார்வையாளர்கள் வருகை புரிந்த ஒரு இடமாகும்.




## இன்ட்ரின்சிக்

- கூகுள் நிறுவனத்தின் மூல நிறுவனமான ஆல்பாபெட், இன்ட்ரின்சிக் எனும் புதிய நிறுவனத்தைத் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- இது முழுவதுமாக ரோபோட்டுகளுக்கான மென்பொருளை உருவாக்குவதில் மட்டுமே கவனம் செலுத்துவதற்கான ஒரு நிறுவனமாகும்.

- வென்டி டான் ஒயிட் என்பவர் இன்ட்ரின்சிக் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஹெப்படைட்டிஸ் C நோய்க்கான மலிவுவிலை மருந்து –மலேசியா

- ஹெப்படைட்டிஸ் C (கல்லீரல் அழற்சி) நோய்க்கான உலகின் முதலாவது மலிவு விலையிலான மற்றும் செயல்திறன் மிக்க ஒரு புதிய மருந்தினை மலேசிய நாடு பதிவு செய்துள்ளது.
- ரவிதாஸ்விர் எனப் பெயரிடப்பட்ட இந்த மருந்தினை ஏற்கனவே பயன்பாட்டிலுள்ள சோஃபோஸ்புவிர் எனப்படும் ஒரு மருந்துடன் சேர்த்துப் பயன்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது.
- ஹெப்படைட்டிஸ் C வகை நோய்க்கு இதுவரையில் தடுப்பூசி கண்டறியப்படவில்லை.
- உலக சுகாதார அமைப்பானது 2030 ஆம் ஆண்டிற்குள் இந்நோயின் புதிய தொற்றுக்களை 90 சதவீதமாகவும் இந்நோயால் ஏற்படும் உயிரிழப்புகளை 65 சதவீதமாகவும் குறைத்து இந்நோயை முற்றிலுமாக ஒழிக்கத் திட்டமிட்டுள்ளது.

## INDRA 2021

- இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் இணைந்து ரஷ்யாவின் வோல்கோகிராட் என்னுமிடத்தில் 12வது கூட்டு இராணுவப் பயிற்சியை மேற்கொள்ள உள்ளன.
- இந்தப் பயிற்சிக்கு INDRA 2021 எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- இப்பயிற்சியானது இரு நாடுகளுக்கிடைப்பட்ட இருதரப்புப் பாதுகாப்பு ஒத்துழைப்பினை வலுப்படுத்தி மேம்படுத்தும்.
- இதில் இரு நாடுகளைச் சேர்ந்த 250 பணியாளர்கள் பங்கேற்க உள்ளனர்.



# பொருளாதாரச் செய்திகள்

## நிவாரண நடவடிக்கைகள் – நிதி அமைச்சகம்

- பொருளாதாரத்திற்காக சில புதிய நிவாரண நடவடிக்கைகளை அரசு அறிவித்து உள்ளது.
- இது கோவிட்-19 தொற்றின் இரண்டாம் அலை ஏற்பட்டதற்குப் பிறகு அறிவிக்கப்பட்ட முதல் நிவாரண நடவடிக்கை ஆகும்.
- கீழ்க்காணும் எட்டு நடவடிக்கைகளை நிதி அமைச்சகம் முன்மொழிந்துள்ளது.
- கோவிட்-19 பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட துறைகளுக்கு ரூ.1.10 லட்சம் கோடி கடன் உறுதித் திட்டம்.
  - இதில் சுகாதாரத் துறைக்கு ரூ.50,000 கோடியும் சுற்றுலா உள்ளிட்டப் பிற துறைகளுக்கு ரூ.60,000 கோடியும் வழங்கப்படும்.
- அவசர கால கடன் உறுதித் திட்டத்திற்கு கூடுதலாக ரூ.1.5 லட்சம் கோடி வழங்கப் படும்.
- சிறு நிதியியல் நிறுவனங்களுக்கான கடன் உறுதித் திட்டம் (புதியத் திட்டம்)
  - இதற்கான கடன்தொகை வரம்பானது MCLR வட்டி வீதத்தில் (ஒரு வங்கிக்கான குறைந்த பட்ச கடன் வட்டி வீதம்) இருந்து கூடுதலாக 2% சதவீதத்துடன் ரூ. 1.25 லட்சமாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- சுற்றுலா வழிகாட்டு நிறுவனம் மற்றும் பங்குதாரர்களுக்கான திட்டம்.
  - சுற்றுலாத் துறை பங்குதாரர்கள் ஒவ்வொன்றும் ரூ. 10 லட்சம் வரையிலும் சுற்றுலா வழிகாட்டு நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ரூ.1 லட்சம் வரையிலும் கடன் பெற இயலும்.
- 5 லட்சம் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு மாதத்திற்கான இலவச நுழைவு இசைவுச் சீட்டு.
  - இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ.100 கோடியாகும்.
  - இந்த வசதியானது 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 வரை அல்லது 5 லட்சம் நுழைவு இசைவுச் சீட்டுகள் வழங்கி முடிக்கப் படும் வரை நடப்பில் இருக்கும்.
- ஆத்ம நிர்பர் பாரத் ரோஸ்கர் யோஜனா திட்டம் – நீட்டிப்பு
  - இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கான தேதியானது 2021 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் தேதியிலிருந்து 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆக நீட்டிக்கப் பட்டுள்ளது.
- DAP மற்றும் P&K வகை உரங்களுக்குக் கூடுதல் மானியங்கள் வழங்கப்படும்.



- பிரதான் மந்திரி கரீப் கல்யாண் யோஜனா திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டு மே மாதம் முதல் நவம்பர் மாதம் வரை இலவச உணவு தானியங்கள் வழங்கப்பட உள்ளன.

## RBI அறிக்கை

- இந்தியாவின் நடப்புக் கணக்கு உபரித் தொகையானது 2021 ஆம் நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.9 சதவீதமாகக் கணக்கிடப்பட்டுள்ளது.
- இது இந்திய ரிசர்வ் வங்கியின் தரவுகளில் கூறப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் நடப்புக் கணக்குப் பற்றாக் குறையானது 0.9 சதவீதமாக கணக்கிடப் பட்டது.
- 2020 ஆம் ஆண்டில் 12 பில்லியன் டாலராக இருந்த நிகர அந்நிய நேரடி முதலீடானது 2021 ஆம் ஆண்டின் மார்ச் மாத காலண்டின் போது 2.7 பில்லியன் டாலராக இருந்தது.
- நிகர அந்நியத் தொகுப்பு முதலீடானது 7.3 பில்லியன் டாலர்களாக அதிகரித்துள்ளது.
- இந்தியாவின் நிகர வெளிநாட்டு வணிகக் கடனானது 6.1 பில்லியன் டாலர்களாக குறைந்துள்ளது.

## திரும்பப் பெறப்படாத காலவரம்பு முடிந்த வைப்புத் தொகை மீதான வட்டி – புதிய விதிமுறைகள்

- வங்கிகளில் காலவரம்பு முடிவடைந்த பின்பும் திரும்பப் பெறப் படாமல் இருக்கும் வைப்புத் தொகைகள் மீது வட்டி வருமானம் வழங்குவதற்கான புதிய விதிமுறைகளை இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.
- தற்போது காலவரம்புடைய ஒரு வைப்புத் தொகை முதிர்வடைந்த பின்பும் திரும்பப் பெறப்படா விட்டால் அதில் மீதம் உள்ள தொகைக்கு வட்டியானது சேமிப்புக் கணக்கிற்கு வழங்கப் படும் வட்டி விகிதத்தில் வழங்கப் படுகிறது.
- இந்தப் புதிய விதிமுறைகளானது அனைத்து வணிக வங்கிகள், சிறு நிதியியல் வங்கிகள், உள்ளூர் வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்கு பொருந்தும்.

## உலகப் பங்குச் சந்தை மூலதனத்தில் இந்தியாவின் பங்கு

- 2021 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் உலகப் பங்குச் சந்தை மூலதனத்தில் இந்தியாவின் பங்கு 2.60% என ப்ளூம்பெர்க் தரவுகளில் தெரிவிக்கப் பட்டுள்ளது.
- நீண்ட காலச் சராசரியான 2.45% என்ற ஒரு அளவுடன் ஒப்பிடுகையில் உலகப் பங்குச் சந்தை மூலதனத்தில் இந்தியாவின் பங்கு உயர்ந்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டில் இந்தியாவின் பங்குச் சந்தை மூலதனமானது ஒரு வருடத்தில் 66% உயர்ந்து 3.02 டிரில்லியன் டாலராக உள்ளது.
- இது உலகளாவிய அளவிலான பங்குச் சந்தை மூலதனத்தின் 44% வளர்ச்சியை விட அதிகமாக உள்ளது.
- இந்தியா கடந்த ஐந்தாண்டுகளாக பங்குச் சந்தை மூலனத்தின் உலகளாவிய வளர்ச்சியை விட ஆண்டுக்கு 14.7% என்ற வீதத்தில் 13.25 சதவீதத்திற்கும் மேலான விகிதத்தில் வளர்ந்து வருகிறது.
- கடந்த ஓர் ஆண்டில் இந்தியாவின் பங்குகளானது 49% வருமானத்தை அளித்துள்ளது.

## இந்தியன் ஓவர்சீஸ் வங்கி – இரண்டாவது மதிப்புமிக்க கடன் வழங்கும் நிறுவனம்

- இந்தியன் ஓவர்சீஸ் வங்கியானது இரண்டாவது மதிப்பு மிக்க பொதுத் துறை வங்கியாக உருவெடுத்துள்ளது.
- இது 50,000 கோடி ரூபாய்க்கும் மேலான சந்தை மூலதனத்தைப் பெற்றுள்ளது.
- இந்தியன் ஓவர்சீஸ் வங்கியானது பஞ்சாப் நேஷனல் வங்கி மற்றும் பாங்க் ஆஃப் பரோடா ஆகியவற்றை முறையே மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களுக்கு அவற்றைப் பின் தள்ளி உள்ளது.
- பாரத ஸ்டேட் வங்கியானது இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.




## அரசுப் பத்திரங்களின் ஏல முறையில் மாற்றம்

- 2 ஆண்டு, 3 ஆண்டு, 5 ஆண்டு, 10 ஆண்டு மற்றும் 14 ஆண்டு என்ற கால வரையறையினைக் கொண்டுள்ள முக்கிய குறியீட்டுப் பத்திரங்கள் மற்றும் வீத மாற்றுப் பத்திரங்கள் ஆகியவை ஒரு பொது விலை அடிப்படையிலான ஏல முறையில் வழங்கப்படும் என இந்திய ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது.
- இருப்பினும் 30 ஆண்டு மற்றும் 40 ஆண்டு காலவரையறையுள்ள முக்கிய குறியீட்டுப் பத்திரங்கள் பலவிலை அடிப்படையிலான ஏல முறையிலேயே வழங்கப்படும்.
- அரசுப் பத்திரங்களானவை வர்த்தகம் செய்வதற்கு ஒரு கருவியாக பயன்படுத்தப் படுகின்றன.
- அரசுப் பத்திரங்களானவை மத்திய (அ) மாநில அரசுகளால் வழங்கப் படுகின்றன.
- இது அரசின் கடன்களை அங்கீகரிக்கிறது.
- இரு வகையிலான பத்திரங்கள் உள்ளன.
- குறுகிய காலப் பத்திரங்கள் – இவை கருவூலப் பத்திரங்கள் என அழைக்கப் படுகின்றன.
- இதன் கால வரம்பு ஒரு வருடத்திற்கும் குறைவானதாகும்.
- இது 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் ஆகிய மூன்று காலவரம்புகளில் வழங்கப் படுகிறது.
- நீண்ட காலப் பத்திரங்கள் – இவை வழக்கமாக அரசுப் பத்திரங்கள் அல்லது தேதியிட்ட பத்திரங்கள் என அழைக்கப் படுகின்றன.
- இவற்றிற்கான காலவரம்பு ஒரு வருடத்திற்கும் மேலானது ஆகும்.

## நிதிநிலைத்தன்மை அறிக்கை




- இந்திய ரிசர்வ் வங்கியானது தனது 23வது நிதி நிலைத்தன்மை அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இது ஒரு ஆண்டிற்கு இருமுறை வெளியிடப் படுகிறது.
- இந்தியாவின் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளின் மொத்த வாராக் கடன் விகிதமானது 2021-22 ஆம் ஆண்டின் இறுதியில் 11.2% வரை உயரக் கூடும்.
- இது 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 7.48% ஆக இருந்தது.
- அடித்தள வரம்புகளை வைத்து பார்க்கும் போது 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பட்டியலிடப் பட்ட வணிக வங்கிகளின் மொத்த வாராக்கடன் விதிதமானது 9.8% ஆக உயரக்கூடும்.
- இந்த அறிக்கையானது நிதி நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சி மன்றத்தினால் (Financial Stability and Development Council) வெளியிடப் படுகிறது.
- இந்தச் சபையின் தலைவர் மத்திய நிதி அமைச்சராவார்.
- இந்தச் சபையினை உருவாக்குவது பற்றிய கருத்தானது 2008 ஆம் ஆண்டில் ரகுராம் ராஜன் குழுவினால் பரிந்துரைக்கப் பட்டது.

## பூடானில் BHIM UPI

- பூடான் நாடானது தனது விரைவு எதிர்வினைக் குறியீட்டு முறைக்காக (Quick Response – QR) இந்தியாவின் ஒருங்கிணைக்கப்பட்ட பண வழங்கீட்டு இடைமுக (Unified Payments Interface – UPI) தரநிலைகளை ஏற்றுக் கொண்ட முதல் நாடாக மாறியுள்ளது.
- சிங்கப்பூரை அடுத்து வணிக தளங்களில் BHIM UPI முறையை ஏற்றுக் கொண்ட இரண்டாவது நாடாக பூடான் உருவெடுத்துள்ளது.
- பூடானில் BHIM UPI QR அடிப்படையிலான கொடுப்பனவுகளை அமல்படுத்துவதற்காக அரசு நாணய ஆணையத்துடன் (Royal Monetary Authority) மேற்கொள்ளப்பட்டுள்ள கூட்டிணைவு பற்றி இந்திய தேசிய கொடுப்பனவுக் கழகத்தின் சர்வதேச பிரிவான NPCI சர்வதேச கொடுப்பனவு எனும் நிறுவனம் அறிவித்துள்ளது.
- மேலும் Rupay அட்டைகளை வழங்குவதையும், ஏற்பதையும், மற்றும் BHIM UPI முறையையும் ஏற்றுக் கொண்ட ஒரே நாடாகவும் பூடான் உருவெடுக்க உள்ளது.

***பாரத் பணவழங்கீட்டு இடைமுகச் செயலி (BHIM)***

- ❖ இது இந்திய தேசிய கொடுப்பனவுக் கழகத்தினால் உருவாக்கப்பட்ட இந்திய கைபேசி பணவழங்கீட்டுச் செயலி ஆகும்.
- ❖ B.R. அம்பேத்கரின் நினைவாக இதற்கு இப்பெயர் சூட்டப்பட்டது.
- ❖ இது 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 30 அன்று வெளியிடப்பட்டது.

## மாஸ்டர்கார்டு நிறுவனத்திற்குக் கட்டுப்பாடு – இந்திய ரிசர்வ் வங்கி

- ❖ இந்திய ரிசர்வ் வங்கியினால் 2021 ஆம் ஆண்டு ஜூலை 22 முதல் மாஸ்டர்கார்டு ஆசியா / பசிபிக் பிரைவேட் லிமிடெட் நிறுவனமானது புதிய உள்நாட்டு வாடிக்கையாளர்களை அதில் இணைப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
- ❖ மாஸ்டர்கார்டு நிறுவனத்திற்குப் பணம் பெறுதல், பண உள்ளீட்டு (அ) முன்கட்டண அட்டைகள் ஆகிய நடவடிக்கைகள் எதுவாகினும் அதற்கான புதிய வாடிக்கையாளர்களை தனது பிணையத்தில் இணைக்க அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது.
- ❖ பணவழங்கீட்டு முறையின் தகவல் சேமிப்பு குறித்த சில வழிகாட்டுதல்களைப் பின்பற்றத் தவறியதன் காரணமாக இந்த நிறுவனத்திற்குக் கட்டுப்பாடு விதிக்கப் பட்டு உள்ளது.

## இந்தியாவில் வாகன எரிபொருள் விற்பனை செய்யும் புதிய நிறுவனங்கள்

- ❖ இந்தியாவில் வாகன எரிபொருட்களை விற்பனை செய்வதற்காக ஏழு புதிய நிறுவனங்களுக்கு பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகமானது அங்கீகாரம் வழங்கியுள்ளது.



**MORE FUEL**

Oil ministry has granted marketing authorisation to the following entities under the relaxed rules

- RIL (its existing retail marketing authorisation transferred to its subsidiary RBML)
- IMC
- Assam Gas Company
- Onsite Energy
- MK Agrotech
- RBML Solutions India
- Manas Agro Industries & Infrastructure

- ❖ ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ், RBML சொல்யூசன்ஸ் இந்தியா, சென்னையிலுள்ள IMC நிறுவனம், அசாம் எரிவாயு நிறுவனம் (அசாம் அரசு நிறுவனம்), ஆன்சைட் எனர்ஜி, மனாஸ் அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் மற்றும் M.M. அக்ரோடெக் ஆகியவை அங்கீகாரம் பெற்ற அந்த ஏழு நிறுவனங்களாகும்.
- ❖ விற்பனை அங்கீகாரத்தைப் பெறுவதற்கு ஒரு நிறுவனமானது குறைந்தபட்சம் 100 விற்பனை நிலையங்களை அமைத்திருக்க வேண்டும் என 2019 ஆம் ஆண்டு விதிமுறைகளில் கூறப் பட்டுள்ளது.

## இந்திய ரிசர்வ் வங்கியின் நேரடி சில்லறை வியாபாரத் திட்டம்

- ❖ அரசுப் பத்திரங்களில் தனியார் முதலீட்டாளர்களின் முதலீடுகளை அதிகரிக்கச் செய்வதற்கு வேண்டி இந்திய ரிசர்வ் வங்கியின் நேரடி சில்லறை வியாபாரத் திட்டம் ஒரு தீர்வாகும்.
- ❖ சில்லறை வியாபார முதலீட்டாளர்களுக்கு அரசுப் பத்திரங்களை மேலாண்மை செய்வதற்கான 'கில்ட்' எனும் கணக்கை ஆரம்பித்து உபயோகிப்பதற்கான வசதிகள் செய்து தரப்படும்.
- ❖ அரசுப் பத்திரங்களில் சில்லறை வியாபாரத்தின் பங்கேற்பினை அதிகரிக்கும் தொடர் முயற்சியின் ஓர் அங்கமாக இந்த வசதியானது தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ இது சில்லறை வியாபார முதலீட்டாளர்களை முதன்மை மற்றும் இரண்டாம் நிலை அரசுப் பத்திரச் சந்தைகளை இணையம் வாயிலாக எளிதில் அணுகச் செய்யும் வசதியை மேம்படுத்துவதற்காகத் தொடங்கப்பட்டுள்ளது.




## தேசியச் சொத்து மறுசீரமைப்பு நிறுவனம்

- ❖ தேசியச் சொத்து மறுசீரமைப்பு நிறுவனமானது மும்பையின் நிறுவனப் பதிவேட்டில் பதிவு செய்த சட்டமுறையிலான ஒரு நிறுவனமாக மாறியுள்ளது.
- ❖ இது பொதுத்துறைப் பண்புகளைக் கொண்ட ஒரு வாராக் கடன் வங்கி எனவும் அழைக்கப் படுகிறது.
- ❖ இது வாராக் கடன் சொத்துப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு இருக்கும் வங்கி அமைப்புகளுக்கான ஒரே தீர்வாகக் கருதப்படுகிறது.

## மின்சார வாகனக் கொள்கை

- ❖ மகாராஷ்டிர மாநில அரசானது 2021 ஆம் ஆண்டு 'மகாராஷ்டிரா மின்சார வாகனக் கொள்கை" என்ற ஒன்றை வெளியிட்டுள்ளது.
- ❖ இதன் மூலம் இந்த மாநிலத்தில் விற்கப்படும் அனைத்து மின்சார வாகனங்களுக்கும் சாலை வரி மற்றும் பதிவுக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

- மேலும் இக்கொள்கையானது 2025 ஆம் ஆண்டுக்குள் குறைந்தபட்சம் 10% புதிய மின்சார வாகனப் பதிவுகள் என்பதையும் மற்றும் மும்பை, நாக்பூர், புனே, அமராவதி, ஔரங்காபாத் மற்றும் நாசிக் உள்ளிட்ட ஆறு நகர்ப்புறங்களின் பொதுப் போக்குவரத்தினை 20% வரை மின்மயமாக்குதல் என்பதையும் உறுதி செய்ய முனைகிறது.
- மேலும் நகர்ப்புறங்களிலும் விரைவுச் சாலைகளிலும் 2,500 என்ற அளவில் மின்னேற்ற நிலையங்களையும் அம்மாநில அரசு அமைக்க உள்ளது.




## வாகன எரிபொருள் மீதான கலால் வரி

- 2021 ஆம் நிதி ஆண்டில் மத்திய அரசின் பெட்ரோல் மற்றும் டீசல் மீதான வரி வசூலானது ரூ.3.35 லட்சம் கோடியை எட்டியுள்ளது.
- 2020 ஆம் நிதி ஆண்டில் இது ரூ.1.78 லட்சம் கோடியாக இருந்தது.

- இதில் பெட்ரோல் மற்றும் டீசல்  மீதான கலால் வரி மட்டுமின்றி, விமான எரிபொருள், இயற்கை எரிவாயு மற்றும் கச்சா எண்ணெய் ஆகியவை மீதான கலால் வரிகளும் அடங்கும்.
- வரி வசூலானது மேலும் அதிகமாக இருந்திருக்கும், ஆனால் கடந்த ஆண்டில் விதிக்கப் பட்ட ஊரடங்கினால் எரிபொருள் விற்பனை சரிந்துள்ளதால் அது குறைவாகவே உள்ளது.
- 2020 ஆம் ஆண்டின் மார்ச் மாத இறுதி மற்றும் மே மாதத்திற்கு இடைப்பட்ட காலத்தில் பெட்ரோலுக்கான கலால் வரியை லிட்டருக்கு 13 ரூபாயாகவும் டீசலுக்கான கலால் வரியை லிட்டருக்கு 16 ரூபாயாகவும் மத்திய அரசு உயர்த்தியுள்ளது.
- சில மாநிலங்களில் பெட்ரோல் விலை லிட்டருக்கு 100 ரூபாய்க்கு அதிகமாகவும் டீசல் விலை லிட்டருக்கு 90 ரூபாய்க்கு அதிகமாகவும் விற்கப் படுவதற்குக் காரணம் அதிக வரி விதிப்பே அன்றி கச்சா எண்ணெயின் விலை உயர்வு அல்ல.




## மத்திய வங்கியின் டிஜிட்டல் பணம்




- இந்திய ரிசர்வ் வங்கியானது வருங்காலத்தில் டிஜிட்டல் பணத்தினை அறிமுகம் செய்வது குறித்து ஆலோசித்து வருகிறது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் T. ராபிசங்கர் இது குறித்த தகவல்களைத் தெரிவித்தார்.
- புதுடெல்லியில் சட்டமுறை கொள்கைக்கான விதி மையத்தினால் (Vidhi Centre for Legal Policy) ஏற்பாடு செய்யப்பட்ட இணையவழிக் கருத்தரங்கின் போது இது பற்றிய ஒரு தகவல் பகிரப் பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சுரபி மின்னணுக் குறியீடு

- துவாரா இ-டெய்ரி சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனமானது IFFCO – டோக்கியோ ஜெனரல் இன்சூரன்ஸ் என்ற நிறுவனத்துடன் இணைந்து செயற்கை நுண்ணறிவினால் (AI) இயங்கும் டிஜிட்டல் அடையாளக் குறியீடு ஒன்றினை வெளியிட்டுள்ளது.
- இதற்கு சுரபி மின்னணுக் குறியீடு எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- இது முகவாய்ப் பகுதியின் அடையாளத்தைக் கொண்டு கால்நடைகளை அடையாளம் காண்கிறது.
- முகவாய்ப் பகுதி என்பது விலங்கினங்களின் முகத்தினுடைய முன்னோக்கி நீண்டுள்ள பகுதி (மூக்கு மற்றும் வாய் உட்பட) ஆகும்.

## சீ பிரேக்கர் – செயற்கை நுண்ணறிவு ஏவுகணை

- இஸ்ரேல் நாட்டின் பாதுகாப்பு மின்னணு நிறுவனமான ரஃபேல் மேம்பட்ட பாதுகாப்பு அமைப்புகள் என்ற நிறுவனமானது சீ பிரேக்கர் என்ற ஒரு செயற்கை நுண்ணறிவு ஏவுகணையினை உருவாக்கியுள்ளது.
- இது ஐந்தாம் கட்ட, நீண்டதூர வரம்புடைய, தன்னிச்சையாகச் செயல்படுகின்ற மற்றும் துல்லியமாக வழி நடத்தும் ஒரு ஏவுகணை அமைப்பாகும்.
- இது 3000 கி.மீ. வரையிலான கடல் மற்றும் நிலம்சார் இலக்குகளையும் துல்லியமாகத் தாக்கி அழிக்க வல்லது.
- இது மேம்பட்ட புகைப்படமிடுதலுக்கான அகச்சிவப்பு உலவி எனும் அம்சத்தைக் கொண்டது.
- இது நிலம் மற்றும் கடல்சார் சூழலின் பரவலான தொலைவுகளிலும் நிலையாக உள்ள அல்லது நகரும் இலக்குகளைத் தாக்க வல்லது.



## கொரோனாவைக் கண்டறியும் முகக் கவசம்

- ஹார்வர்டு பல்கலைக்கழகம் மற்றும் மாசாசூசெட்ஸ் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் புதிய முகக் கவசம் ஒன்றை உருவாக்கி உள்ளனர்.
- இந்த முகக் கவசத்தை அணிபவருக்கு கோவிட்-19 தொற்று இருந்தால் இது சுமார் 90 நிமிடங்களில் அதனைக் கண்டறிந்து விடும்.
- இந்த முகக் கவசமானது ஹார்வர்டு மற்றும் மாசாசூசெட்ஸ் பல்கலைக் கழகத்தில் உயிரியல் ரீதியில் உந்தப் பட்ட பொறியியலுக்கான வைஸ் என்ற நிறுவனத்தின் பொறியியல் வல்லுநர்களால் வடிவமைக்கப் பட்டது.



## ரியூகு குறுங்கோள்

- 2020 ஆம் ஆண்டு டிசம்பரில் ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் ஹயபூசா 2 விண்கலத்தினால் புவிக்குக் கொண்டு வரப்பட்ட ரியூகு குறுங்கோளினுடைய முதல் மாதிரிகளை நாசா பெற்றுள்ளது.
- ரியூகு குறுங்கோளின் மாதிரிகள் ஜப்பான் நாட்டிலிருந்து வேறொரு நாட்டிற்கு முதன்மைப் பரிசோதனைக்காக அனுப்பப் பட்ட முதல் மாதிரிகளுள் ஒன்றாகும்.
- அதன் அடிப்படை இயல்பைத் தீர்மானிப்பதற்காக இந்த மாதிரியைக் குறித்த ஒரு ஆய்வினை முதன்முதலில் மேற்கொண்ட அறிவியலாளர்களுள் மைக் சோலென்ஸ்கியும் (Mike Zolensky) ஒருவராவார்.

*குறிப்பு*

- ரியூகு குறுங்கோளானது 162173 ரியூகு எனவும் அழைக்கப்படுகிறது.
- இது தற்காலிகமாக 1999 JU3 என குறிப்பிடப்பட்டுள்ளது.
- இது புவிக்கு அருகிலுள்ள மற்றும் அப்போலோ குழுமத்தைச் சேர்ந்த மிகவும் அபாயகரமான ஒரு குறுங்கோள் ஆகும்.

## ஹரித் தாரா

- இது ஒரு மீத்தேன் உருவாக்க எதிர்ப்பு இணைத் தீவனமாகும்.
- இது பெங்களூருவிலுள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் தேசிய கால்நடை ஊட்டச்சத்து மற்றும் உடலியல் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.

- மாடுகளுக்கும் ஆடுகளுக்கும் இதனைத் தீவனமாக வழங்கும் போது அவற்றினால் உமிழப் படும் மீத்தேன் அளவினை 17% முதல் 20% வரை இது குறைக்கிறது.
- மேலும் இது அதிக பால் உற்பத்தி மற்றும் எடை அதிகரிப்பு போன்ற பயன்களையும் தருகிறது.
- மீத்தேனானது கால்நடைகளின் வயிற்றில் இருக்கும் நான்கு பாகங்களில் முதல் பாகமான ரூமெனைக் கொண்டுள்ள விலங்குகளினால் உற்பத்தி செய்யப்படுகிறது.
- ஹரித் தாரா தீவனமானது டேனின் அதிகம் உடைய (tannin-rich) செறிவூட்டப்பட்ட மற்றும் நீராற் பகுப்பிற்கு உட்படும் (hydrolysable) தாவரம் சார்ந்த மூலங்களை கொண்டு தயாரிக்கப்பட்டது.

## ஈர்ப்பு அலைகள்

- நியூட்ரான் ஸ்டார் மற்றும் கருந்துளை ஆகியவற்றின் மோதலால் உருவாக்கப்படும் ஈர்ப்பு அலைகளை அறிவியலாளர்கள் முதன்முறையாக கண்டறிந்துள்ளனர்.
- ஈர்ப்பு அலைகளின் சிற்றலைகள் விண்வெளி கால அளவில் கண்டறியப்பட்டுள்ளன.
- இந்த கண்டுபிடிப்பானது நியூட்ரான் ஸ்டார் – கருந்துளை அமைப்புகள் இருப்பதை உணர்த்துகின்றது.
- இந்த அமைப்பானது நட்சத்திர உருவாக்கம் முதல் பிரபஞ்சத்தின் விரிவாக்கம் வரையிலான அண்டம் தொடர்பான பல கேள்விகளுக்கு விடை அளிக்க உதவும்.

## பிரபஞ்சத்தின் உண்மை வடிவம்

- அண்டங்களின் வடிவில் ஏற்படும் சீரற்ற மாற்றங்களால் வானியல் தரவுகளில் உருவாகும் தேவையற்ற சப்தங்களை நீக்க உதவும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தினை ஜப்பானிய வானியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- இந்த புதிய தொழில்நுட்பத்தினை ஜப்பானின் சுபாரு தொலைநோக்கியின் (Subaru Telescope) மூலம் பெறப்பட்ட உண்மை தரவுகளில் பயன்படுத்தினர்.
- இந்த முறையின் மூலம் பெறப்பட்ட பெருமளவிலான பரவலானது தற்போது ஒப்புக் கொள்ளப் பட்டுள்ள பேரண்டத்தின் (பிரபஞ்சம்) மாதிரிகளுடன் ஒத்துப் போவதனை அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

## அதிவேக சூரியப் புயல்

- மணிக்கு 1.6 மில்லியன் கிலோமீட்டர் வேகத்தில் நகர்ந்து வரும் ஒரு சக்திவாய்ந்த அதிவேக சூரியப் புயலானது புவியைத் தாக்கக் கூடும் என நாசாவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.
- சூரியனின் வளிமண்டலத்தில் உருவான இந்த சூரியப் புயலானது புவியின் காந்தப் புலம் நிறைந்த விண்வெளிப் பகுதியில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும்.
- இது செயற்கைகோள் சமிஞ்கைகள் மற்றும் தகவல் தொடர்புப் பிணையங்கள் போன்றவற்றைச் சீர்குலைப்பதோடு புவி இடங்காட்டி கருவிகளின் செயல்பாடு, கைபேசி சமிஞ்கைகள் மற்றும் செயற்கைக் கோள் வழி இயங்கும் தொலைக் காட்சிகள் போன்றவற்றின் செயல்பாட்டிலும் இடையூறு ஏற்படுத்தக் கூடும்.

- மேலும் அது மின் பரிமாற்றத்திலும் தடை ஏற்படுத்தக் கூடும்.
- இது சூரியனின் வளிமண்டலத்திலிருந்து விண்வெளியினுள் வெளியேற்றப்படும் மின்னூட்டப்பட்ட துகள்களின் ஒரு பெருவெடிப்பு நிகழ்வாகும்.
- இதுவரை பதிவான மிக சக்தி வாய்ந்த புவிகாந்தப் புயலானது 1859 ஆண்டில் ஏற்பட்ட காரிங்டன் நிகழ்வின் போது ஏற்பட்டது.

## கோள்களின் இணைவு நிலை

- ஜூலை 12-13 ஆகிய தேதிகளின் போது செவ்வாய், வெள்ளி மற்றும் நிலவு ஆகியவை ஒன்றோடொன்று இணைவு நிலையில் வந்தடைந்தன.
- செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகியவை 2021 ஆம் ஆண்டு ஜூலை 13 அன்று ஒன்றோடொன்று நெருக்கமாக வந்தடைந்தன.
- இத்தகைய வானியல் நிகழ்வானது கோள்களின் இணைவு நிலை (planetary conjunction) எனப்படுகிறது.
- இதனை வெறும் கண்ணால் காண முடிந்தது.
- 2021 ஆம் ஆண்டு ஜூலை 12 அன்று இரு கோள்களிடமும் நிலவு நெருங்கி வந்தது.




## மீவுளிர் விண்முகில் – இந்திய ஆராய்ச்சியாளர்கள்

- மிகப் பிரகாசமான, ஹைட்ரஜன் குறைபாடுடைய, விரைவாக வளர்ந்து வரும் மீவுளிர் விண்முகில் ஒன்றினை இந்திய ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அரிதாகக் காணக் கூடிய இந்த மீவுளிர் விண்முகிலானது மிக சக்தி வாய்ந்த காந்தப் புலத்தை கொண்ட வேற்று வகை நியூட்ரான் நட்சத்திரத்திலிருந்துப் பெறப்பட்ட ஒரு ஆற்றலைக் கொண்டு ஒளிருகிறது.
- இது போன்ற பண்டைய விண்வெளி சார்ந்த பொருட்களை ஆய்வு செய்யும் ஆராய்ச்சிகள் பண்டையக் கால பிரபஞ்சம் தொடர்பான மர்மங்களை தீர்க்க உதவும்.
- இந்த மீவுளிர் விண்முகிலானது இந்தியாவின் தேவஸ்தால் ஒளியியல் தொலை நோக்கி (Devasthal Optical Telescope – 3.6மீ), சம்பூர்னானந்த் தொலைநோக்கி – 1.04மீ (Sampurnanand Telescope) மற்றும் இமாலயன் சந்திரா தொலைநோக்கி – 2.0மீ (Himalayan Chandra Telescope) ஆகிய விண்வெளிசார் சிறப்பு அமைப்புகளைக் கொண்டு காணப் பட்டது.

## VIPER திட்டம் – நாசா

- விரைவில் ஆவியாகும் பொருட்கள் குறித்து ஆராய்ச்சி செய்வதற்கான துருவ ஆய்வு உலாவி (Volatiles Investigating Polar Exploration Rover - VIPER) எனும் தனது விண்கலத்தினை 2023 ஆம் ஆண்டில் விண்வெளியில் செலுத்த உள்ளதாக நாசா அறிவித்துள்ளது.
- நிலவில் கிடைக்கப் பெறும் வளங்களைக் கொண்டு மனிதன் அங்கு இருக்க முடியுமா என்பதை அறிய இந்த திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.
- VIPER என்பது ஒரு நடமாடும் எந்திரமாகும்.
- இது வேறு எந்தவொரு வானியல் பொருளுக்கும் இதுவரை அனுப்பப்படாத வகையிலான வளங்களை வரைபடமிடும் முதல் திட்டமாகும்.
- நாசாவினுடைய வணிக ரீதியிலான சந்திரக் கிரகத்திற்கான விண்வெளிச் சேவை வழங்கும் நிறுவனமானது (Commercial Lunar Payload Services) இந்த நூறு நாள் அளவிலான திட்டத்தின் ஒரு விண்கலனை விண்ணில் செலுத்துவதற்கான விண்கலம் மற்றும் தரையிறங்கு கலனை வழங்க உள்ளது.

### *திட்டத்தின் நோக்கங்கள்*

- நிலவின் தென்துருவப் பகுதியை ஆய்வு செய்தல்.
- நிலவின் வளங்களைப் பற்றிய வரைபடத்தை உருவாக்க உதவுதல்.
- நிலவின் பரப்பிலுள்ள நீர் மற்றும் இதர வளங்களின் செறிவினை மதிப்பிடுதல்.



## லிங்லாங் ஒன் உலை

- ‘லிங்லாங்’ எனப்படும் உலகின் முதலாவது வணிக ரீதியிலான சிறிய உலையின் கட்டுமானப் பணிகளை சீனா தொடங்கியுள்ளது.
- இது சீனாவின் ஹைனான் மாகாணத்திலுள்ள சங்ஜியாங் அணுமின் நிலையத்தில் கட்டமைக்கப்பட உள்ளது.
- இது சீன தேசிய அணுமின் கழகத்தின் (லிங்லாங் ஒன்) ACP 100 தொழில்நுட்பத்தின் அடிப்படையிலானதாகும்.

## இந்தியாவின் முதல் 'பசுமை ஹைட்ரஜன்' ஆலை

- இந்தியாவின் மிகப்பெரிய எண்ணெய் நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனமானது உத்தரப் பிரதேசத்தின் மதுராவில் உள்ள தனது சுத்திகரிப்பு ஆலையில் நாட்டின் முதலாவது 'பசுமை ஹைட்ரஜன்' ஆலையை நிறுவ உள்ளது.
- ஹைட்ரஜன் ஒரு தூய்மையான மற்றும் ஆற்றல் மிகுந்த எரிபொருளாக திகழ்வதால் சமீபத்தில் இதன் பயன்பாடு குறித்து அதிகமாகப் பேசப்பட்டு வருகின்றது.
- ஆனால் இதன் உற்பத்தியானது கார்பன் உமிழ்வுப் பொருட்களை உற்பத்தி செய்யக் காரணமாக இருக்கும்.
- ஹைட்ரஜன் எரிபொருள் கலன்களால் இயங்கும் பேருந்துகள் அதிகம் தற்போது இயக்கப்பட்டு வருவதால், ஹைட்ரஜன் ஆற்றல் ஆலைகளை அமைப்பது தற்போது அவசியமான ஒன்றாகும்.

## திட்டம் 75 – இந்தியா

- இந்தத் திட்டத்தின் கீழ் 6 மரபு சார்ந்த டீசல்-மின்சார நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்டமைப்பதற்கு ரூ.50,000 கோடி மதிப்பிலான ஒரு ஒப்பந்தத்தை அரசு விடுத்துள்ளது.
- இந்த ஒப்பந்தமானது லார்சன் & டியூப்ரோ மற்றும் மசாகன் கப்பல் கட்டும் நிறுவனம் ஆகியவற்றிடம் விடுக்கப் பட்டுள்ளது.
- இந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் ஸ்கார்பியன் வகை நீர்மூழ்கிகளை விட பெரியதாக இருக்கும்.
- ஸ்கார்பியன் வகை நீர்மூழ்கிக் கப்பல்கள் மும்பையிலுள்ள மசாகன் கப்பல் கட்டும் நிறுவனத்தில் கட்டமைக்கப்பட்டு வருகிறது.
- Project – 75 (திட்டம் 75) என்ற திட்டமானது 'இந்தியாவில் தயாரித்தல்' திட்டங்களுள் உள்ள ஒரு மிகப்பெரியத் திட்டமாகும்.
- இது இந்தோ – பசிபிக் பகுதியைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## அதிசக்தி வாய்ந்த பீட்டா டைட்டானியம் உலோகக் கலவை – Ti-10V-2Fe-3Al

- இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது அதிக சக்தி வாய்ந்த (வலுவான) டைட்டானியம் என்ற ஒரு உலோகக் கலவையினை உருவாக்கி உள்ளது.
- விண்வெளிக் கட்டமைப்புப் பயன்பாட்டிற்காக வேண்டி இந்த உலோகக் கலவை உருவாக்கப் பட்டுள்ளது.
- டைட்டானியம் உலோகக் கலவையானது அவற்றின் நீர்த்தன்மை, அதிக வலிமை, உடையாத் தன்மை மற்றும் ஆற்றல் போன்ற பண்புகளுக்காக தனித்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது.
- மேலும் எஃகுகளுடன் ஒப்பிடுகையில் இது மேன்மையான துரு எதிர்ப்புத் திறனைக் கொண்டு இருப்பதால் இந்த உலோகக் கலவையானது ஒப்பீட்டளவில் குறைந்த ஆயுட்காலச் செலவினை கொண்டுள்ளது.
- இது இரும்பு, வனேடியம் மற்றும் அலுமினியம் ஆகியவற்றின் ஒரு கலவையாகும்.

## S-500 வான்வழிப் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பு

- ரஷ்ய நாடானது S-500 எனும் புதிய வான்வழிப் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பினை வெற்றிகரமாக சோதித்துப் பார்த்துள்ளது.
- இதற்கு டிரையம்ஃபேட்டர் – M மற்றும் ப்ரோமிதியஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது உலகிலேயே மிகவும் மேம்படுத்தப்பட்ட ஏவுகணை எதிர்ப்பு அமைப்பாகும்.
- இது 600 கி.மீ. தொலைவு வரையிலான இலக்குகளையும் தாக்கி அழிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- மேலும் இது விண்வெளியிலிருந்து வரும் தாக்குதல்களையும் எதிர்கொள்ளும் திறன் வாய்ந்ததாகும்.



## காந்தமிதவுந்து இரயில் – சீனா

- சீனாவானது 600 கி.மீ வேகத்தில் செல்லக் கூடிய காந்தமிதவுந்து இரயிலை (maglev train) அறிமுகப்படுத்தி உள்ளது.
- இதுவே உலகின் அதிவேக தரைவழி வாகனமாகும்.
- காந்தமிதவுந்து இரயிலானது மின் காந்த சக்தியைப் பயன்படுத்தும்.
- இதில் அந்த வண்டியானது அதற்கும் தண்டவாளத்திற்கும் இடையில் எந்த தொடர்பும் இல்லாமல் ரயில் பாதையின் மேலே செல்லும்.
- ஜெர்மனியிலிருந்து ஜப்பான் வரையிலான நாடுகளும் மேக்லேவ் அமைப்புகளை உருவாக்க முயன்று வருகின்றன.



## விண்வெளிப் பயணம்




- பில்லியனர் ஜெஃப் பெசோஸ் தனது நியூ ஷெப்பர்ட் ராக்கெட் என்ற ஏவு வாகனத்தின் மூலம் முதல் பயணக் குழுவோடு விண்வெளிக்குப் பறந்தார்.
- இந்தப் பயணம் வெறும் 10 நிமிடங்கள் என்ற அளவே நீடித்தது.
- இது தரையில் இருந்து 100 கி.மீ உயரத்தில் உள்ள கர்மன் கோடு வரை பயணக் குழுவினரை அழைத்துச் சென்றது.
- விண்கலத்தில் செல்ல பயிற்சி பெற்ற விண்வெளி வீரர்கள் யாரும் இதில் இல்லாத நிலையில், மக்கள் குழுவினருடன் உலகின் முதல் விமானி அல்லாத விமானத்தை இது பிரதிநிதித்துவப் படுத்தி உள்ளது.
- ஜெஃப் பெசோஸின் நிறுவனமான ப்ளூ ஆரிஜின் என்பதனால் கட்டப்பட்ட நியூ ஷெப்பர்ட் ராக்கெட் வாகனமானது, விண்வெளிச் சுற்றுலாவின் வளர்ந்து வரும் சந்தைக்குச் சேவை செய்யும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## விகாஸ் இயந்திரம் (எஞ்ஜின்)

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது திரவ எரிபொருளால் இயங்கும் விகாஸ் என்ற இயந்திரத்தின் மூன்றாவது நீண்ட நேர வெப்பச் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- இந்தச் சோதனையானது தமிழ்நாட்டின் மகேந்திர கிரியிலுள்ள இஸ்ரோவின் உந்து சக்தி வளாகத்தின் இயந்திரச் சோதனை மையத்தில் மேற்கொள்ளப்பட்டது.
- இதன் மூலம் ககன்யான் எனும் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்புவதற்கான தனது முதல் திட்டத்தில் இஸ்ரோ மேலும் ஒரு படி முன்னேறியுள்ளது.
- இது மனிதனால் மதிப்பிடப்பட்ட ஜிஎஸ்எல்வி MK III ராக்கெட்டினுடைய முதன்மை L110 திரவ நிலை (இயந்திரம்) என்ற ஒரு நிலைக்காக மேற்கொள்ளப்பட்டது.




## தானியங்கு செவித்திறன் மூளைத்தண்டு உணர்வு அமைப்பு




- ❖ புதிதாக பிறந்த மற்றும் சிறு வயது குழந்தைகளுக்கு ஏற்படும் கேட்கும் திறன் இழப்பை சரி செய்வதற்காக வேண்டி பஞ்சாப் அரசானது இந்த அமைப்பைத் தொடங்கி உள்ளது.
- ❖ நாட்டில் இதுபோன்ற அமைப்பைத் தொடங்கிய முதல் மாநிலம் இதுவே ஆகும்.

## AMLEX சாதனம்

- ❖ ரூபாரில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகமானது இந்தியாவிலேயே முதன் முறையாக ஆக்சிஜன் சீராக்க வழங்கீட்டுச் சாதனத்தை உருவாக்கியுள்ளது.
- ❖ இந்தச் சாதனமானது ஒரு நோயாளியால் பயன்படுத்தப் படும் ஆக்சிஜன் சிலிண்டரிலிருந்து (கலன்) ஆக்சிஜன் ஓட்டம் சீராக்கப் பட்டு ஆக்சிஜன் வீணாவதைத் தடுக்கிறது.

- இந்தச் சாதனமானது ஆக்சிஜன் சிலிண்டரின் உபயோகக் காலத்தை அதிகரிக்கச் செய்வதால் மருத்துவமனைகள் மற்றும் நோயாளிகள் ஆகியோரின் செலவும் இதனால் குறையும்.




## 4வது தேசிய செரோ சர்வே

- ஜூன் மற்றும் ஜூலை மாதங்களுக்கு இடையில் நாடு முழுவதும் 70 மாவட்டங்களில் தேசிய செரோ சர்வேயின் நான்காவது சுற்று நடத்தப்பட்டது.
- SARS-CoV2 வைரஸ் ஆன்டிபாடிகள் இருப்பைக் கண்டறிய இந்தக் கணக்கெடுப்பின் கீழ் மொத்தம் 28,975 பேர் பரிசோதிக்கப் பட்டனர்.
- இந்த செரோ சர்வே ஆனது 6-17 வயதுக்குட்பட்ட குழந்தைகளையும் முதல் முறையாக உள்ளடக்கி உள்ளது.
- ஆறு வயதிற்கு மேற்பட்ட வகையில் நாட்டின் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் ஏற்கனவே கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இதில் கண்டறியப் பட்டுள்ளது.
- இது இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் டாக்டர் பால்ராம் பார்கவா மூலம் தெரிவிக்கப் பட்டது.
- ஒட்டு மொத்த எண்ணிக்கையில் செரோபிரீவேலன்ஸ் (மக்கள் தொகையில் நோய்க் கிருமியின் நிலை) ஆனது 67.6 சதவிகிதம் என்று கண்டறியப்பட்டுள்ளது.
- மூன்றாவது அலையானது இரண்டாவது அலை போல கடுமையாக இருப்பதற்கான வாய்ப்பை இது வெகுவாகக் குறைத்துள்ளது.

- கோவிட்-19 தடுப்பூசியின் இரண்டு தவணைகளையும் செலுத்திக் கொண்டவர்களின் மீதான செரோபிரீவேலன்ஸ் ஆனது 89.8 சதவீதமாக இருந்தது.
- தடுப்பூசியின் ஒரு தவணையைச் செலுத்தியவர்களில் கூட இது 81 சதவீதமாக உள்ளது.
- ஒரு தவணை கூட செலுத்தாதவர்களில் இது 62.3 சதவீதமாக இருந்தது.




## MiG-29 போர் விமானங்கள்

- இந்திய விமானப் படையானது ரஷ்யாவிடமிருந்து 12 சுகாய் MK1 ரக போர் விமானங்கள் தவிர மேலும் 21 MiG-29 போர் விமானங்களை வாங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சகத்திடம் ஒப்புதலைப் பெற்றுள்ளது.
- ரஷ்ய நாடானது 21 MiG-29 ரக போர் விமானங்களை இந்தியாவிற்கு வழங்க உள்ளது.
- சோவியத் ஒன்றியத்தால் வடிவமைக்கப்பட்ட மைக்கோயான் MiG-29 ஆனது ஒரு இரட்டை இயந்திரம் (எஞ்சின்) கொண்ட ஜெட் போர் விமானமாகும்.
- இதில் வானிலிருந்துத் தரையை நோக்கி ஏவக்கூடிய ஏவுகணைகள் பொருத்தப்பட்டு உள்ளன.



## பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணை

- 'மனிதனால் சுமந்து செல்லக்கூடிய பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணை' என்று பெயரிடப் பட்ட ஒரு வழிகாட்டு ஏவுகணையானது ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் (DRDO) உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.
- இந்த ஏவுகணையானது 15 கிலோ எடைக்கும் கீழான ஏவு எடை வரம்புடன் 2.5 கி.மீ. அதிகபட்ச வரம்பாக நிர்ணயிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட ஒரு முக்காலி வடிவச் சட்டகத்திலிருந்து (tripod) ஏவப்பட்டது.
- இந்த ஏவுகணையில் அதிநவீன அகச்சிவப்புப் புகைப்பட தேடுபொருள் மற்றும் மேம்பட்ட வான்வழி மின்னணுவியல் ஆகியவை பொருத்தப்பட்டுள்ளன.




## புவிக்கு அருகில் உள்ள குறுங்கோள் சாரண விண்கலம்

- நாசா தனது புதிய விண்கலத்தைப் பற்றி அறிவித்துள்ளது.
- இது ஒரு காலணிப் பெட்டகத்தின் அளவை ஒத்த (அ) அதை விட சிறிய ஒரு விண்கலம் ஆகும்.
- இது கியூப்சாட் எனவும் அழைக்கப்படுகிறது.
- இது புவிக்கு அருகிலுள்ள ஒரு குறுங்கோள் பற்றிய தகவல்களை சேகரிப்பதற்கான ஒரு முதன்மைத் திட்டம் ஆகும்.
- இது ஆர்டிமிஸ் I என்பதன் மூலம் பயணிக்கும் பல விண்வெளிப் பொருட்களில் ஒன்றாகும்.
- இது சூரிய ஆற்றலின் சிறப்பு உந்து சக்தியைப் பயன்படுத்தி செயல்படச் செய்யும் அமெரிக்காவின் முதலாவது கோள்களுக்கிடையேயான திட்டமாகும்.

- இலக்காக நிர்ணயிக்கப்பட்ட குறுங்கோளை இந்த விண்கலம் சென்றடைய சுமார் 2 ஆண்டுகள் ஆகும்.
- இந்த விண்கலமானது அந்த குறுங்கோளைச் சென்றடைய வேண்டி பூமியிலிருந்து 93 மில்லியன் மைல்கள் வரை பயணிக்க உள்ளது.
- ஆர்டிமிஸ் I என்பது SLS ஏவுகணை மற்றும் ஓரியான் விண்கலத்திற்கான விண்வெளி வீரர்களற்ற ஒரு சோதனைக் கலமாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், 2024 ஆம் ஆண்டில் நிலவில் முதல்முறையாக ஒரு பெண்மணியைத் தரையிறங்கச் செய்வதற்கு நாசா விண்வெளி நிறுவனம் திட்டம் தீட்டியுள்ளது.



## உலகின் மிகப்பெரிய மிதக்கும் சூரியசக்தி நிலையம்

- சிங்கப்பூர் நாட்டின் சன்சீப் குழுமமானது பதாம் (Batam) எனும் இந்தோனேசிய நகரில் உலகின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையத்தினையும் ஆற்றல் சேமிப்பு அமைப்பினையும் நிறுவத் திட்டமிட்டுள்ளது.
- இந்த மிதக்கும் ஒளி மின்னழுத்த அமைப்பானது 2.2 ஜிகாவாட் (பீக்) திறனுடையதாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- பதாம் தீவின் தூரியாங்காங் அணையின் 1600 ஹெக்டேர் (4000 ஏக்கர்) பரப்பில் இது அமைக்கப் பட உள்ளது.

## உயிரி டீசல் உற்பத்தியில் கோழி இறைச்சிக் கழிவுகளின் பயன்பாடு

- உயிரி டீசல் உற்பத்தியில் கோழி இறைச்சிக் கழிவுகளைப் பயன்படுத்தும் முறைக்கு கேரளாவைச் சேர்ந்த ஜான் ஆப்ரஹாம் என்பவர் காப்புரிமையைப் பெற்றுள்ளார்.
- இந்த உயிரி டீசலானது லிட்டருக்கு 38 கி.மீ. அளவிலான மைலேஜினை வழங்குகிறது.
- தற்போதைய டீசல் விலையில் 40 சதவீதமே விலையுடைய இந்த உயிரி டீசல் ஆனது மாசுபாட்டினையும் பாதியாகக் குறைக்கிறது.
- இந்தக் கண்டுபிடிப்பானது தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழான நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் மேற்கொண்ட ஜான் ஆப்ரஹாம் அவர்களின் ஆராய்ச்சியின் ஒரு விளைவாகும்.



## நீராவி இருப்பு குறித்த முதல் ஆதாரம் – கனிமெடே

- வியாழனின் பனி நிறைந்த துணைக்கோளான கனிமெடேவின் வளிமண்டலத்தில் நீராவி இருப்பதற்கான முதல் ஆதாரத்தினை ஹப்பிள் விண்வெளித் தொலை நோக்கியின் உதவியைக் கொண்டு அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த ஆராய்ச்சி முடிவுகள் ஆனது நேச்சர் ஆஸ்ட்ரானமி எனும் இதழில் வெளியிடப் பட்டது.
- வியாழனின் துணைக் கோளான கனிமெடே என்பது நமது சூரியக் குடும்பத்திலுள்ள ஒரு மிகப் பெரிய துணைக் கோளும், 9வது பெரிய வானியல் அமைப்பும் ஆகும்.



### துணைக் கோளை உருவாக்கும் பகுதி



- புவியிலிருந்து 370 ஒளி ஆண்டுகள் தொலைவிலுள்ள ஆரஞ்சு வண்ணத்திலான PDS 70 எனப்படும் இளம் நட்சத்திரத்தைச் சுற்றி வரும் இரு புறக்கோள்களில் ஒன்றை (PDS 70c) சுற்றி ஒரு துணைக் கோளை உருவாக்கும் பகுதி இருப்பதை அறிவியலாளர்கள் முதன்முறையாகக் கண்டறிந்துள்ளனர்.
- புறக்கோள்கள் என்பவை நமது சூரியக் குடும்பத்திற்கு வெளியே அமைந்திருக்கும் கோள்களாகும்.
- சிலியிலுள்ள ALMA என்ற ஆய்வகமானது ஒரு நட்சத்திரத்தைச் சுற்றி வரும் இரு புறக்கோள்களுள் ஒன்றைச் சுற்றி, வான் பொருட்களை ஒன்றுச் சேர்க்கும் ஒரு சுழலும் வட்டினைக் கண்டறிந்துள்ளது.
- இது துணைக்கோள்கள் உருவாகின்ற ஒரு வட்டப்பகுதி வடிவிலான தட்டு என அழைக்கப் படுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

### LowCarbon.Earth

- ஐக்கிய நாடுகள் அவையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பானது மேசிவ் எர்த் என்ற அறக்கட்டளையுடன் இணைந்து LowCarbon.Earth எனும் தளத்தினைத் தொடங்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- புத்தாக்க நிறுவனச் சூழலினை உயர்த்துவதற்கும் ஆசிய பசிபிக் பகுதியில் குறைந்த அளவிலான கார்பன் வெளியீட்டு வாழ்க்கை முறைக்கு மாறுவதை ஊக்குவிக்கச் செய்வதற்காகவும் இது தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த தினமானது பெருநிறுவனங்கள், முன்னணித் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை ஆலோசக அமைப்புகள் ஆகியவற்றுடன் புத்தாக்க நிறுவனங்கள் தொடர்பு கொள்வதற்கான ஒரு தளத்தினை வழங்கும்.
- மேம்பட்ட மற்றும் நிலையான தொழில்நுட்பங்களின் முன்னணிப் பிரிவுகளில் தொழில்துறைக்கான கூட்டுத் திறனை உருவாக்குவதில் இது உறுதுணையாக இருக்கும்.

## கருப்பு நிற வயிறுடைய பவளப் பாம்பு – உத்தரகாண்ட்



- வரலாற்றில் முதல்முறையாக உத்தரகாண்ட்டின் வனப்பகுதிகளில் கருப்புநிற வயிறுடைய பவளப் பாம்புகள் இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்த பாம்பு வகையானது எலாப்பிடே குடும்பம் மற்றும் சினோ மிக்ரூரஸ் (Sinomicrurus) என்ற வகை இனத்தினைச் சேர்ந்ததாகும்.
- இதன் அறிவியல் பெயர் S. நிக்ரிவெண்டர் என்பதாகும்.
- இது முசௌரி வனப் பகுதியிலுள்ள பெனோக் வனவிலங்கு சரணாலயத்தின் பத்ராஜ் வனப்பிரிவில் கண்டறியப்பட்டது.

## Last Ice Area

- “Last Ice Area” என்ற பகுதியானது பருவநிலை மாற்றத்தினால் எதிர்பார்த்ததை விட அதிகளவு பாதிக்கப்படக் கூடியது என புதிய ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது.
- “Last Ice Area” என்பது 2000 கிலோ மீட்டர் பரப்பளவிற்கும் மேல் அடர்த்தியான பனியினால் மூடப்பட்ட ஆர்க்டிக் பகுதியாகும்.
- 2020 ஆம் ஆண்டு கோடை காலத்தின் போது “Last Ice Area” பகுதிக்கு கிழக்கே உள்ள வேண்டெல் கடலின் மேற்பரப்பை மூடிய 50% பனியானது உருகியது.
- பனிப்பாறைகள் உருகும் நிகழ்வானது எதிர்காலத்தில் பனிப்பாறைகளைச் சார்ந்து வாழும் உயிரினங்களுக்குப் பாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்தும்.

## மின்னணுக் கழிவுகளிலிருந்துப் பதக்கம் தயாரித்தல்

- அடுத்து டோக்கியோவில் நடைபெற உள்ள கோடைக் கால ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக்ஸ் போட்டிகளுக்கான அனைத்துப் பதக்கங்களும் மறுசுழற்சி செய்யப் பட்ட மின்னணு உபகரணங்களிலிருந்துத் தயாரிக்கப்படும் என அந்நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளது.
- தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களானது வழக்கொழிந்து போன உபகரணங்களிலிருந்துத் தயாரிக்கப் படும்.
- இதற்காகச் சேகரிக்கப்படும் கழிவுகளில் ஸ்மார்ட் போன்கள், கேமராக்கள் மற்றும் மடிக் கணினிகள் ஆகியவை அடங்கும்.

## உலகின் மிக அதிக வெப்பநிலை – ஜகோபாபாத்

- ❖ பாகிஸ்தான் சிந்து மாகாணத்திலுள்ள ஜகோபாபாத் நகரில் உலகிலேயே மிக அதிக வெப்பநிலையானது பதிவாகியுள்ளது.
- ❖ ஜகோபாபாத் நகரில் பதிவான அதிகபட்ச வெப்பநிலை 52.8°C (127.0°F) ஆகும்.
- ❖ இந்த நகரமானது கடகரேகையின் மேல் அமைந்துள்ளது.

## வால்மீகி புலிகள் காப்பகம் – பீகார்

- ❖ பீகாரின் வால்மீகி புலிகள் காப்பகத்தின் அதிகாரிகள் வல்லூறுகளைப் பாதுகாப்பதற்கான திட்டங்களை வகுக்கத் தொடங்கியுள்ளனர்.
- ❖ இந்த பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் சமீபத்தில் 150 கழுகுகள் தென்பட்டதை அடுத்து இது திட்டமிடப் பட்டுள்ளது.
- ❖ இந்தப் புலிகள் காப்பகமானது இந்தியாவிலுள்ள இமாலய தராய் வனப்பகுதிகளின் கிழக்கத்திய வரம்பினை உள்ளடக்கியுள்ளது.
- ❖ இது நமது நாட்டின் கங்கைச் சமவெளி சார்ந்த உயிரிப் புவியியல் மண்டலத்தில் அமைந்துள்ளது.
- ❖ இந்த வனப்பகுதியில் பாபர் மற்றும் தராய் வகை படுகைகளும் உள்ளன.
- ❖ இந்திய பிளையிங் ஃபாக்ஸ் எனப்படும் வௌவால்களும் இங்கு காணப் படுகின்றன.
- ❖ இந்தியாவில் ஒன்பது வகை வல்லூறு இனங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.




## புலிகள் வழித் தடம் – ராஜஸ்தான்

- ❖ தனது மாநிலத்திலுள்ள மூன்று புலிகள் காப்பகத்தையும் இணைக்கும் வகையில் ஒரு புலிகள் வழித் தடத்தினை உருவாக்குவதற்கு ராஜஸ்தான் அரசு திட்டமிட்டுள்ளது.
- ❖ அவை ரந்தம்பூர் புலிகள் காப்பகம், ராம்கர் விஸ்தாரி புலிகள் காப்பகம் மற்றும் முகுந்த்ரா புலிகள் காப்பகம் ஆகியனவாகும்.

- இந்த புலிகள் வழித் தடமானது எட்டு கிராமங்களை இடம் மாற்றம் செய்து உருவாக்கப் பட உள்ளது.
- ரந்தம்பூர் புலிகள் காப்பகத்தில் உள்ள அதிக புலிகள் எண்ணிக்கையினால் ஏற்படும் சிக்கல்களை கையாள்வதற்கான ஒரு தீர்வாக இந்த வழித்தடம் செயல்படும்.

## மனித – வனவிலங்கு சகவாழ்வு குறித்த அறிக்கை

- "அனைவருக்குமான வருங்காலம் – மனித வனவிலங்கு சகவாழ்விற்கான அவசியம்" என்று தலைப்பிடப்பட்ட ஒரு அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இது சர்வதேச இயற்கை நிதியம் மற்றும் ஐக்கிய நாடுகள் அவையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு ஆகியவற்றால் வெளியிடப்படுகிறது.
- உலகளவில், உலகின் 75 சதவீத காட்டுப்பூனை வகை உயிரினங்கள் இம்மாதிரியான மோதலால் பாதிக்கப் பட்டு இருக்கின்றன.
- 1970 ஆம் ஆண்டிற்குப் பிறகு உலகின் வனவிலங்கு எண்ணிக்கையானது சராசரியாக 68 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- 2014-15 மற்றும் 2018-19 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலக் கட்டங்களில் பெரும்பாலும் மனித-யானை மோதல் காரணமாக இந்தியாவில் 500க்கும் மேற்பட்ட யானைகள் கொல்லப் பட்டுள்ளன.
- அதே காலகட்டத்தில் யானைகளுடனான மோதல் காரணமாக 2,361 பேர் இறந்து உள்ளனர்.

## சீன பாண்டா கரடி



- சீன பாண்டா கரடியானது இனி அருகி வரும் இனம் அல்ல என்று சீன வளங்காப்பு அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.
- சீன பாண்டா கரடியானது எளிதில் பாதிக்கக்கூடிய இனங்கள் பிரிவில் சேர்க்கப் பட்டுள்ளது.
- தற்போது 1800 பாண்டா கரடிகள் சீனக் காடுகளில் வாழ்கின்றன.

## வாக்யூடா போர்போயிஸ்

- வாக்யூடா போர்போயிஸ் எனும் உலகின் அரிதான மற்றும் மிகச்சிறிய கடல்வாழ் பாலூட்டியானது அழிவின் விளிம்பில் உள்ளது.
- இதன் அதன் கண்களைச் சுற்றியுள்ள கருவளையங்களுக்காக 'கடலின் பாண்டா' எனவும் அழைக்கப் படுகிறது.
- இது 1958 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது.
- வெப்பமான நீரில் வாழக் கூடிய வகை விலங்கு குடும்பத்தைச் சேர்ந்த ஒரே இனமாக திகழ்வதால் இது மற்ற இனங்களை விட தனித்துவமிக்க ஒன்றாக உள்ளது.
- இது மெக்சிகோவின் கலிஃபோர்னியா வளைகுடாவின் (கார்டெஸ் கடல்) வடக்குப் பகுதியில் மட்டுமே காணப்படுகின்றது.
- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு அமைப்பானது இதனை மிகவும் அருகி வரும் உயிர் இனங்கள் என்ற பிரிவில் சேர்த்துள்ளது.



## கார்பன் சந்தை

- சீனா தனது தேசிய கார்பன் உமிழ்வு வர்த்தகச் சந்தையை அதிகாரப்பூர்வமாக அறிமுகப் படுத்தியுள்ளது.
- ஐரோப்பிய ஒன்றியத்தின் உமிழ்வு வர்த்தகத் திட்டத்திற்கு மாற்றாக சீனாவின் உமிழ்வு வர்த்தகத் திட்டமானது உலகின் மிகப்பெரிய உமிழ்வு வர்த்தக அமைப்பாக மாறியுள்ளது.
- ஒரு கார்பன் சந்தை என்பது பசுமைக்குடில் வாயுவினை உமிழ்பவர்கள் பசுமைக் குடில் வாயு உமிழ்வு அனுமதி அல்லது கொடுப்பனவுகளை அதில் வாங்கலாம் மற்றும் விற்கலாம்.
- முதல் கட்டத்தில், இந்த அமைப்பானது மின் துறையை மட்டுமே உள்ளடக்குகிறது.

- இரும்பு மற்றும் எஃகு மற்றும் கட்டுமானப் பொருட்கள் உட்பட மேலும் ஏழு அதிக ஆற்றல் கொண்ட துறைகள் எதிர்காலத்தில் கார்பன் சந்தைக்குள் வரும்.
- முதன்முறையாக, தேசிய அளவில் பசுமைக்குடில் வாயு உமிழ்வைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு நிறுவனங்களின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது.




## டிஜிட்டல் நிலப் பயன்பாடு

- ஆப்பிரிக்கா ஓபன் டீல் முன்முயற்சி (Africa Open DEAL initiative) என்பதின் கீழ் ஒரு துல்லியமான, விரிவான மற்றும் இணக்கமான டிஜிட்டல் நிலப் பயன்பாடு மற்றும் நிலப் பயன்பாட்டு மாற்றத் தரவுகளைச் சேகரிப்பதை நிறைவு செய்த உலகின் முதல் கண்டமாக ஆப்பிரிக்கா திகழ்கிறது.
- DEAL என்பது சுற்றுச்சூழல், வேளாண்மை மற்றும் நில முன்முயற்சிக்கான தரவை (Data for the Environment, Agriculture and Land Initiative) குறிக்கிறது.
- இந்த தரவுச் சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு முன்முயற்சியானது உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு மற்றும் ஆப்பிரிக்கக் கூட்டமைப்பு ஆணையம் ஆகியவற்றால் வழி நடத்தப் படுகிறது.

Food and Agriculture Organization of the United Nations
African Union



## உப்பு-சுரக்கும் சதுப்புநில இனங்கள் - அவிசென்னியா மரினா




- ❖ முதன்முறையாக அதிக உப்பு-சகிப்புத் தன்மை மற்றும் உப்பு-சுரக்கும் உண்மையான-சதுப்புநில இனங்களின் குறிப்பு-தர ஒரு முழு மரபணு வரிசையானது (reference-grade whole genome) கண்டறியப் பட்டுள்ளது.
- ❖ புவனேஸ்வரில் உள்ள டிபிடி-இன்ஸ்டிடியூட் ஆப் லைஃப் சயின்சஸ் நிறுவனம் மற்றும் தமிழ்நாட்டின் மேம்பட்ட லைஃப் சயின்சஸ் டெக்னாலஜிகளுக்கான எஸ்ஆர்எம்-டிபிடி பார்ட்னர்ஷிப் பிளாட்ஃபார்ம், எஸ்ஆர்எம் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி ஆகியவை இணைந்து இதைக் கண்டறிந்துள்ளன.
- ❖ அவிசென்னியா மரினா ஆனது இந்தியாவில் உள்ள அனைத்துச் சதுப்புநிலங்களிலும் காணப்படும் மிக முக்கியமான சதுப்புநிலத் தாவரங்களில் ஒன்றாகும்.
- ❖ வேர்களுக்குள் உப்பு நுழைவதைத் தடுத்து விலக்குவதற்கான தன்மையைத் தவிர இதனால் இலைகளில் உள்ள உப்புச் சுரப்பிகள் வழியாக 40% என்ற அளவில் உப்பை வெளியேற்ற முடியும்.

## பல்லுயிர் பற்றிய மூன்றாவது ஆசியான் மாநாடு

- ❖ இந்த மாநாட்டின் ஐந்தாவது மற்றும் இறுதி அமர்வு இதுவாகும்.
- ❖ இது '2050 ஆம் ஆண்டினை நோக்கி: இயற்கையுடன் இணக்கமாக வாழ்வது' என்ற ஒரு கருத்துருவோடு நடத்தப் பட்டது.
- ❖ இது மலேசிய அரசால் இணைந்து ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- ❖ ஐச்சி பல்லுயிர் இலக்குகளை (Aichi Biodiversity Targets) அடைவதில் ஆசியான் உறுப்பு நாடுகள் மேற்கொண்ட முன்னேற்றத்தை இது எடுத்துக் காட்டுகிறது.

- ஆசியான் அமைப்பானது உலகின் 17 மெகா- மாறுபட்ட உயிரிப் பன்முகத் தன்மை உடைய நாடுகளில் மூன்றைக் கொண்டுள்ளது (இந்தோனேசியா, மலேசியா மற்றும் பிலிப்பைன்ஸ்).

## 2020 ஆம் ஆண்டிற்குப் பிந்தைய உலகளாவியப் பல்லுயிர் கட்டமைப்பு




- உயிரியல் பன்முகத் தன்மைச் செயலகத்திற்கான ஐ.நா. மாநாடு இந்தப் புதியக் கட்டமைப்பின் முதல் அதிகாரப்பூர்வ வரைவை வெளியிட்டுள்ளது.
- இயற்கையையும் அதன் அத்தியாவசியச் சேவைகளையும் மக்களுக்காகப் பாதுகாக்கச் செய்வதற்கு 2030 ஆம் ஆண்டளவில் உலகளாவிய நடவடிக்கைகளை வழி நடத்த இந்தக் கட்டமைப்புப் பயன்படுத்தப்படும்.
- பல்லுயிர் தொடர்பான ஐக்கிய நாடுகளின் தசாப்தம் 2011-2020 முடிவடைந்துள்ள நிலையில் 2020 ஆம் ஆண்டிற்குப் பிந்தைய இந்த உலகளாவியப் பல்லுயிர்க் கட்டமைப்பானது மிகுந்த முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது.
- இது “இயற்கையோடு இணக்கமாக வாழ்வது” என்ற 2050 ஆம் ஆண்டின் தொலை நோக்குப் பார்வைக்கான ஒரு படியாகும்.

## சுவிஸ் ஆல்ப்ஸில் 1,000 ஏரிகள்



- சுவிஸ் நாட்டின் ஆல்ப்ஸில் பனிப்பாறைகள் உருகுவதால், அது ஆல்ப்ஸ் மலைப் பகுதி முழுவதும் 1,000க்கும் மேற்பட்ட புதிய ஏரிகளை உருவாக்கியுள்ளது.
- விரைவான காலநிலை மாற்றமே இதற்குக் காரணமாகும்.
- 1850 ஆம் ஆண்டில் சிறிய பனி யுகத்தின் முடிவில் இருந்து, இந்த ஏரிகள் உருவாக்கப் பட்டுள்ளன.
- சிறிய பனி யுகம் (லிட்டில் ஐஸ் ஏஜ்) என்பது 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஏற்பட்ட ஒரு காலநிலை இடைவெளியாகும்.

## கானமயில்

- குஜராத்திலுள்ள கட்ச் கானமயில் சரணாலயத்தில் கானமயில்கள் எதுவும் இல்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- கட்ச் மாவட்டத்தின் அப்தசா வட்டாரத்திலுள்ள கட்ச் கானமயில் சரணாலயமானது 1992 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட 2 சதுர கி.மீ. பரப்பளவே கொண்ட ஒரு சிறிய சரணாலயமாகும்.
- ஆனால் 220 ச.கி.மீ. வரை பரவியுள்ள இதனுடைய சுற்றுச்சூழல் தாங்கு மண்டலப் பகுதியானது கானமயில்களின் இன்றைய வாழ்விடங்களின் பெரும்பாலான பகுதியாக உள்ளது.
- கானமயிலானது இந்தியாவிலுள்ள கானமயில் என்ற நான்கு பெரிய பறவை இனங்களில் மிகவும் பெரிதானதாகும்.
- மேக்குயின்ஸ் கானமயில், வரகுக் கோழி மற்றும் வங்காள வரகுக்கோழி ஆகியவை மற்ற மூன்று இனங்களாகும்.
- உயர்நிலை மின் பரிமாற்றக் கம்பிகள் (Overhead power transmission lines) கான மயில்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்து வருகிறது.

*குறிப்பு*

- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், ராஜஸ்தான் மற்றும் குஜராத் ஆகிய இடங்களிலுள்ள கானமயில்களின் முக்கிய வாழ்விடங்களில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து உயர்நிலைப் மின்பரிமாற்றக் கம்பிகளும் நிலத்தடியில் அமைக்கப்பட வேண்டும் என உச்சநீதிமன்றம் ஆணையிட்டது.
- மேலும் இந்த ஆணையை அமல்படுத்துவதற்கு மின் நிலைய நிறுவனங்களுக்கு உதவுவதற்காக மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றையும் உச்ச நீதிமன்றம் அமைத்து உள்ளது.



### சைபீரிய நாட்டில் காட்டுத் தீ

- ❖ ரஷ்யாவின் குளிரான நகரான யாகுட்ஸ்க், ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகள் மற்றும் அமெரிக்காவின் பல பகுதிகளில் கட்டுக்கடங்காத காட்டுத்தீ பரவி அந்தந்த நாடுகளில் வெப்ப அலைகளை ஏற்படுத்தி வருகின்றன.
- ❖ யாகுஷியாவிலுள்ள 6.5 மில்லியன் ஏக்கருக்கும் மேலான வனப் பரப்பு நிலங்கள் தீயில் கருகி உள்ளன.
- ❖ காலநிலை மாற்றம் மற்றும் மோசமான நில மேலாண்மை ஆகியவை இதற்கான சாத்தியமான காரணிகளாக இருக்கலாம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

### பசுமை சோஹ்ரா – காடு வளர்ப்புப் பிரச்சாரம்

- ❖ உள்துறை அமைச்சர் அமித்சா சோஹ்ராவில் (சிரபுஞ்சி) பிரச்சாரம் ஒன்றினைத் தொடங்கி வைத்தார்.
- ❖ "பசுமைமாறா வடகிழக்குப் பகுதி" என்பது மரம் வளர்ப்பு மற்றும் காடு வளர்ப்பு போன்றவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் இந்தப் பிரச்சாரத்திற்கு வழங்கப்பட்ட முழக்கம் ஆகும்.
- ❖ இந்தப் பிரச்சாரத்தினை அசாம் ரைஃபிள்ஸ் மற்றும் மேகாலயா மாநிலம் ஆகியவை மேற்கொள்கின்றன.
- ❖ மேலும் சோஹ்ரா பெருநகர குடிநீர் வழங்கும் திட்டத்தினையும் அவர் தொடங்கி வைத்தார்.

## மாநிலச் செய்திகள்

### SALT திட்டம்

- ❖ ஆந்திர மாநில அரசானது 'ஆந்திராவின் கற்றல் மாற்றத்திற்கு ஆதரவு அளித்தல்' எனும் திட்டத்தினை (Supporting Andhra's Learning Transformation – SALT) தொடங்கியுள்ளது.
- ❖ உலக வங்கியினால் 250 மில்லியன் டாலர் கடன் பெறும் இது, அரசுப் பள்ளிகளில் அடித்தளக் கற்றல் முறையை மாற்றுவதற்கான திட்டத்தினைச் செயல்படுத்துவதன் நோக்கில் தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ ஆரம்பப் பள்ளிகளை வலுப்படுத்துதல் மற்றும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டினை வழங்குதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

### மேகக்கணிமை சார்ந்த சுகாதார திட்டம் – டெல்லி

- ❖ 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் மேகக் கணிமை அடிப்படையிலான சுகாதார நல தகவல் மேலாண்மை அமைப்பானது உருவாக்கப்படும் என டெல்லி அரசு தெரிவித்துள்ளது.
- ❖ இந்தியாவில் இந்த அமைப்பினைக் கொண்டுள்ள ஒரே இடமாக டெல்லி உருப் பெறும்.

- இதனோடு, ஒரு சுகாதார உதவி எண்ணும் வழங்கப்படும்.
- டெல்லியைச் சேர்ந்த மக்களுக்கு மின்னணு சுகாதார அட்டைகளை வழங்குவதற்காக சிறப்புக் கணக்கெடுப்புகளும் மேற்கொள்ளப்படும்.

## தகவல் தொழில்நுட்பக் கொள்கை – ஆந்திரப் பிரதேசம்

- ஆந்திரப் பிரதேச அரசானது தனது புதிய ஆந்திரப் பிரதேச தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2021-24 என்ற கொள்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்தக் கொள்கைக்கு முதலமைச்சர் Y.S. ஜெகன்மோகன் ரெட்டி தலைமையிலான மாநில அமைச்சரவையினால் ஒப்புதல் அளிக்கப் பட்டது.
- இந்தக் கொள்கையானது 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 வரை நடைமுறையில் இருக்கும்.

## உத்தரகாண்டின் புதிய முதல்வர்

- உத்தரகாண்டின் அடுத்த முதலமைச்சராக புஷ்கர் சிங் தாமி பொறுப்பேற்க உள்ளார்.
- இவர் உத்தரகாண்டின் இளம் வயது முதலமைச்சர் ஆவார்.
- 45 வயதான புஷ்கர் சிங் தாமி உதம்சிங்நகர் மாவட்டத்திலுள்ள கத்திமா தொகுதியின் ஒரு சட்டமன்ற உறுப்பினராவார்.
- திராத் சிங் ராவத்தை அடுத்து இவர் முதலமைச்சராக பொறுப்பேற்க உள்ளார்.

## நிதி உதவித் திட்டம் – டெல்லி அரசு

- டெல்லியின் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்கள் 'முக்கிய மந்த்ரி கோவிட்-19 பரிவார் சஹயத்தா யோஜனா' எனப்படும் சமூக நலப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றினைத் தொடங்கி வைத்தார்.
- மேலும் கோவிட்-19 பெருந்தொற்றினால் தங்களது அன்புக்குரியவர்களை இழந்த குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்காக ஓர் இணைய தளத்தினையும் அவர் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டத்தின் கீழ், கோவிட்-19 பெருந்தொற்றினால் தமது குடும்ப உறுப்பினரை இழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.50,000 உதவித் தொகையானது வழங்கப்படும்.
- மேலும் குடும்பத்திற்கான வருமானம் ஈட்டும் நபரை இழந்த குடும்பத்திற்கு ஒவ்வொரு மாதமும் கூடுதலாக ரூ.2500 தொகையானது வழங்கப்படும்.

## சட்டமன்ற மேலவை – மேற்கு வங்காளம்

- மேற்கு வங்க சட்டமன்ற கீழவையானது சட்டமன்ற மேலவையை அமைப்பதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.
- அரசியலமைப்பின் 169வது சட்டப் பிரிவின் கீழ் ஒரு சட்டத்தின் மூலம் ஒரு மாநிலத்தில் இரண்டாம் சட்டமன்ற அவையினை உருவாக்குவதற்கும் (அ) நீக்குவதற்கும் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

- இதற்காக அம்மாநிலத்தின் சட்டமன்ற கீழவையானது ஒரு தீர்மானத்தை சிறப்புப் பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும்.
- இந்திய அரசியலமைப்பின் 171வது சட்டப் பிரிவின் படி ஒரு மாநிலத்தின் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையானது அந்த மாநிலத்தின் சட்டமன்ற கீழவையின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையின் மூன்றில் ஒரு பங்கிற்கு மேல் இருக்கக் கூடாது.
- மேலும் அந்த மாநிலத்தின் சட்டமன்ற மேலவையினுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கையானது 40க்கு குறைவாகவும் இருக்கக் கூடாது.

**STATES WITH TWO HOUSES**

| State | MLA seats* | MLC seats |
|---|---|---|
| Andhra | 176 | 58 |
| Bihar | 243 | 58 |
| Karnataka | 225 | 75 |
| Maharashtra | 289 | 78 |
| Telangana | 119 | 40 |
| UP | 404 | 100 |

** Including nominated members*

## பசுமை இந்தியா சவால் – உலக சாதனை

- பசுமை இந்தியா சவாலின் (Green India Challenge) கீழ் தெலுங்கானாவின் அதிலாபாத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வானது ஏற்பாடு செய்யப்பட்டது.
- உள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோகு ராமண்ணாவின் பிறந்த நாளையொட்டி ஒரு மணி நேரத்தில் ஒரு மில்லியன் மரக்கன்றுகள் நடப்பட்டன.
- இதன் மூலம் 2019 ஆம் ஆண்டில் 3,03,000 மரக்கன்றுகள் நடச் செய்த துருக்கியின் சாதனையினை பசுமை இந்தியா சவால் முறியடித்துள்ளது.
- பசுமை இந்தியா சவாலை நிறுவியவர் ஜோகினப்பள்ளி சந்தோஷ் குமார் (மாநிலங்களவை உறுப்பினர்) என்பவராவார்.

## மிஸ்ரி செர்ரி பழ ஏற்றுமதி

- காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியின் மிஸ்ரி வகை செர்ரி பழங்கள் அடங்கிய முதலாவது சரக்குப் பெட்டகமானது ஸ்ரீநகரிலிருந்து துபாய்க்கு ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளது.
- ஜம்மு & காஷ்மீர் ஒன்றியப் பிரதேசமானது வணிக வகையிலான செர்ரி பழங்களின் உற்பத்தியில் 95%க்கும் மேல் உற்பத்தி செய்கிறது.
- இங்கு டபுல், மக்மலி, மிஸ்ரி மற்றும் இத்தாலி ஆகிய நான்கு வகை செர்ரி பழங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

## டெல்லியின் கலால் வரிக் கொள்கை 2021-22

- பொது மக்களுக்காக டெல்லியின் கலால் வரிக் கொள்கை 2021-22 சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- டெல்லி அரசானது இந்தக் கொள்கையின் கீழ், தங்கும் விடுதிகள், கிளப் மற்றும் உணவகங்களில் உள்ள மதுபானக் கடைகளுக்கான புதிய விதிமுறைகளை வகுத்து உள்ளது.
- கொள்கை ஆவணத்தின் படி, வெளிநாட்டவர்கள் அதிகம் வருகை தந்த 28 ஆவது நகரமாக டெல்லி உள்ளது.
- இந்தியாவில் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தரும் நகரங்களின் பட்டியலில் டெல்லி முதலிடத்தில் உள்ளது.
- கலால் வரியானது அரசின் வருவாய்க்கான முதன்மை ஆதாரமாகும்.
- டெல்லியில் வருவாயினை அதிகரிப்பதனை நோக்கமாகக் கொண்டு கலால் வரிக் கொள்கையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய வரிக்கொள்கையானது முன் வைக்கப்பட்டுள்ளது.
- இது மதுபான கடத்தல் கும்பலையும் ஒழிக்கும்.
- இப்புதிய கொள்கையின்படி, தங்கும் விடுதிகள், கிளப் மற்றும் உணவகங்களிலுள்ள மதுபானக் கடைகள் அதிகாலை 3 மணி வரை திறந்து இருக்கும்.
- மதுபான வர்த்தகத்தின் சில்லறை விற்பனையில் அரசு பெருமளவில் ஈடுபடாது.
- இதனால் டெல்லியில் அரசிற்குச் சொந்தமான மதுபானக் கடைகள் மூடப்பட்டு தனியார் துறையினருக்கு வாய்ப்புகள் வழங்கப்படும்.



## சிலந்திகள் – அசாம்

- அசாமின் மேற்குப் பகுதியின் சிராங் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியின் (Chirang Reserve Forest) ஜார்பாரி வனப் பிரிவில் (Jharbari range) இரண்டு புதிய சிலந்தி இனங்கள் கண்டறியப் பட்டுள்ளன.
- இரு சிலந்தி இனங்களும் ஒரே இடத்தில் வாழ்கின்றன.
- கிரேவெலியா போரோ என்பது புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட நிலத்தில் வலை அமைக்கும் சிலந்தி ஆகும்.
- டெக்சிபஸ் க்ளெய்னி என்பது ஓரியண்டல் குதிக்கும் சிலந்தி (oriental jumping spider) ஆகும்.
- இந்த இரு சிலந்தி இனங்களும் போடோலாண்ட் பிராந்தியப் பகுதியில் கண்டறியப் பட்டுள்ளன.
- கிரேவெலியா போரோ இனமானது நெமிசிடே (Nemesiidae) குடும்பத்தைச் சேர்ந்தது.
- டெக்சிபஸ் களெய்னி இனமானது சால்டிசிடே (Salticidae) குடும்பத்தைச் சேர்ந்தது.
- சால்டிசிடே குடும்பமானது புவியிலுள்ள அனைத்து சிலந்தி இனங்களின் மிகப்பெரிய குடும்பமாகும்.

## நகரும் வகையிலான சுரங்கப்பாதை நன்னீர் வாழ் உயிரின காட்சியகம்



- பெங்களூரு நகரின் இரயில் நிலையமானது இந்தியாவின் முதலாவது நகரும் வகையிலான சுரங்கப் பாதை நன்னீர் வாழ் உயிரினக் காட்சியகத்தை (movable freshwater tunnel aquarium) கொண்டுள்ளதாக மாறியுள்ளது.
- இந்த அதி நவீன நீர்வாழ் உயிரினக் காட்சியகமானது இந்திய இரயில்வே நிலைய மேம்பாட்டுக் கழக நிறுவனம் மற்றும் HNi அக்வாட்டிக் கிங்டம் எனும் அமைப்பு ஆகியவற்றால் இணைந்து உருவாக்கப்பட்டது.
- பெங்களூரு நகர இரயில் நிலையமானது கிராந்திவீர சங்கொலி ராயண்ணா ரயில்வே நிலையம் எனவும் அழைக்கப்படுகிறது.
- இது அமேசான் நதியின் வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.
- இதன் நீளம் 12 அடி ஆகும்.

## குஜராத் சர்வதேச கடல்சார் நடுவண் மையம்

- ❖ குஜராத் கடல்சார் பல்கலைக்கழகமானது GIFT நகரின் சர்வதேச நிதியியல் மைய ஆணையத்துடன் (IFSCA) புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.
- ❖ இது குஜராத் சர்வதேச கடல்சார் நடுவண் மையத்தினை நிறுவுவதற்கான ஒப்பந்தம் ஆகும்.
- ❖ இது கடல்சார் மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை தொடர்பான சிக்கல்களுக்கான வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்குதல் மற்றும் விசாரித்தல் ஆகியவற்றிற்கான இந்தியாவின் முதலாவது கடல்சார் நடுவண் மையம் ஆகும்.
- ❖ இது காந்திநகரிலுள்ள GIFT நகரில் அமைந்துள்ள குஜராத் கடல்சார் வாரியத்தினால் அமைக்கப்பட்டு வரும் கடல்சார் தொகுப்பு அமைப்பின் ஓர் அங்கமாக இருக்கும்.

## டிஜிட்டல் கேந்திரா

- ❖ அமேசான் நிறுவனமானது குஜராத்திலுள்ள சூரத்தில் இந்தியாவின் முதலாவது டிஜிட்டல் கேந்திரா மையத்தை அமைத்துள்ளது.
- ❖ அமேசான் டிஜிட்டல் கேந்திராவினை குஜராத் மாநில முதலமைச்சர் விஜய் ரூபானி திறந்து வைத்தார்.
- ❖ அமேசானின் டிஜிட்டல் கேந்திரா மையமானது சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு இணையவழி வர்த்தகத்தின் பயன்கள் பற்றி அறிந்து கொள்வதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குகிறது.

## பூமி பண்டுகா

- ❖ இது ஒவ்வோர் ஆண்டும் மேற்கொள்ளப்படும் விவசாயச் செயல்முறையின் தொடக்கத்தைக் குறிக்கும் ஒரு கொண்டாட்ட நிகழ்வாகும்.
- ❖ இது ஆந்திரப் பிரதேசத்தின் கோயா பழங்குடியினரால் கொண்டாடப்படுகிறது.
- ❖ இந்தத் திருவிழாவின் ஓர் அங்கமாக ஆண்களுக்கு வேட்டையாடுதல் பொறுப்பானது கட்டாயமாக வழங்கப்படும்.
- ❖ வேட்டையாடி கொண்டு வந்த பொருட்களானது ஒவ்வொரு நாளின் மாலையிலும் நடைபெறும் விருந்தில் அந்த கிராமத்தின் அனைத்துக் குடும்பத்தினருக்கும் பிரித்து வழங்கப் படும்.
- ❖ இது வழக்கமாக ஜுன் மாதத்தில் கொண்டாடப்படுகிறது.



## இந்திய இரயில்வே வரைபடத்தில் மணிப்பூர்

- அசாமின் சில்சார் இரயில் நிலையத்திலிருந்து சோதனை ஓட்டத்திற்காக புறப்பட்ட ராஜ்தானி விரைவு ரயில் என்ற பயணிகள் இரயிலானது மணிப்பூரில் உள்ள வைங்கைசுன்பாவ் இரயில் நிலையத்தை அடைந்தது.
- இதன் மூலம் இந்திய இரயில்வே வரைபடத்தில் மணிப்பூர் மாநிலம் இணைக்கப் பட்டது.
- வைங்கைசுன்பாவ் முதல் இம்பால் (மணிப்பூரின் தலைநகர்) (Vaingaichunpao-Imphal) வரையிலான இரயில் பாதையும் கட்டுமான நிலையில் உள்ளது.
- இது நிறைவடைந்து விட்டால் இம்பாலுக்கு அருகமைந்த ஒரு மிக நீளமான இரயில் ரயில்வே சுரங்கப்பாதையாக இது திகழும்.




## 2021-2030 காலகட்டத்திற்கான மக்கள்தொகை கொள்கை – உத்தரப் பிரதேசம்

- உத்தரப் பிரதேச அரசானது உத்தரப் பிரதேச மக்கள் தொகை (கட்டுப்பாடு, நிலைப்பாடு மற்றும் நலம்) மசோதா, 2021 என்று தலைப்பிடப்பட்ட மக்கள்தொகை கட்டுப்பாட்டு மசோதாவை முன்மொழிந்துள்ளது.
- 2021-2030 காலகட்டத்திற்கான புதிய மக்கள்தொகை கொள்கையினையும் உத்தரப் பிரதேச அரசு அறிவித்துள்ளது.
- இரு குழந்தைகளுக்கு மேல் கொண்டிருப்பவர்கள் உள்ளாட்சித் தேர்தலில் பங்கேற்க இந்த மசோதா தடை விதிக்கிறது.

- ❖ மேலும் அரசு வேலைகளுக்கு விண்ணப்பிக்கவும் அல்லது பதவி உயர்வு பெறுவதற்கு விண்ணப்பிக்கவும் இவர்களுக்குத் தடை விதிக்கப் படுகிறது.
- ❖ மேலும் அரசு மானியங்களைப் பெறுவதற்கும் இவர்களுக்கு அனுமதி கிடையாது.
- ❖ இந்தப் புதிய கொள்கையில் மக்கள்தொகை கட்டுப்பாட்டிற்கு உதவும் நபர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவதற்கான விதிமுறைகள் உள்ளன.
- ❖ இரு குழந்தை முறையைப் பின்பற்றும் அரசுப் பணி அதிகாரிகளுக்கு அவர்களின் முழு பணிக்காலத்தின் போது கூடுதலாக இரண்டு சம்பள உயர்வுகள் வழங்கப்படும்.
- ❖ முழு ஊதியம் மற்றும் கொடுப்பனவுகளுடன் கூடிய 12 மாதகால மகப்பேறு அல்லது தந்தைப் பேறு விடுப்பானது அவர்களுக்கு வழங்கப்படும்.
- ❖ மேலும் தேசிய ஓய்வூதியத் திட்டத்தின் (National Pension Scheme) கீழ், பணியமர்த்துபவர் பங்களிப்பு நிதியில் 3% அதிகரிக்கப்படும்.



**Future planning** | The Uttar Pradesh Population Policy 2021-2030 was launched to reduce maternal and infant deaths in a time-bound manner. The policy aims to:

- Decrease the **total fertility rate** (number of children per woman) from 2.7 to **2.1 by 2026** and **1.7 by 2030**
- Increase **modern contraceptive prevalence rate** from 31.7% to **45% by 2026** and **52% by 2030**
- Increase **male methods of contraception use** from 10.8% to **15.1% by 2026**
- Decrease **maternal mortality rate** (per 1,00,000 live births) from 197 to **150 by 2026** and **98 by 2030**
- Decrease **infant mortality rate** (per 1,000 live births) from 43 to **32 by 2026** and **22 by 2030**
- Decrease **under 5 mortality rate** (per 1,000 live births) from 47 to **35 by 2016** and **25 by 2030**

**Baby steps:** Yogi Adityanath encouraging a newly married couple to opt for family planning in Lucknow on Sunday. • PTI

Awareness and extensive programmes would be held among those communities, cadres and geographical areas that have a higher fertility rate
U.P. POPULATION POLICY

We should not forget that the increase in population contributes to poverty in society. Hence, until all sections are made comprehensively aware, there will be a delay in fulfilling various goals
YOGI ADITYANATH, UTTAR PRADESH CM

## இந்தியாவின் முதலாவது பூவாத தாவரச் செடித் தோட்டம்

- ❖ உத்தரகாண்டின் டேராடூனிலுள்ள தியோபன் பகுதியில் இந்தியாவின் முதலாவது பூவாத தாவரச் செடிகளின் தோட்டமானது திறக்கப் பட்டுள்ளது.
- ❖ சக்ரதா நகர் என்ற மாவட்டத்தில் அமைந்துள்ள இந்தத் தோட்டமானது சமூக ஆர்வலரான நவ்தியால் என்பவரால் திறக்கப்பட்டதாகும்.
- ❖ பூவாத தாவரங்கள் (கிரிப்டோகேமே) என்றால் “மறைவு நிலை இனப்பெருக்கம்” (hidden reproduction) என்று பொருளாகும்.
- ❖ இதில் எந்தவித விதைகளும் பூக்களும் உற்பத்தி செய்யப் படுவதில்லை என்பதை இந்த சொல் குறிக்கிறது.
- ❖ எனவே பூவாத தாவரங்கள் விதையற்ற தாவரங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.




## இந்தியாவின் முதலாவது தனியார் திரவ இயற்கை எரிவாயு உற்பத்தி மையம் – நாக்பூர்

- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி அவர்கள் நாக்பூரில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதலாவது தனியார் திரவ இயற்கை எரிவாயு உற்பத்தி மையத்தினைத் திறந்து வைத்தார்.
- இந்த உற்பத்தி மையமானது ஆயுர்வேத மருந்து உற்பத்தியாளரான பைத்யநாத் ஆயுர்வேதக் குழுமத்தினால் அமைக்கப்பட்டது.
- திரவ இயற்கை எரிவாயு என்பது பெருமளவில் மீத்தேனையும் ($CH_4$) சிறிதளவு ஈத்தேனையும் ($C_2 H_2$) கொண்ட ஒரு இயற்கை எரிவாயு ஆகும்.
- இது மணமற்ற, நிறமற்ற, விஷத்தன்மையற்ற மற்றும் கரிச்சிதைவிற்குட்படாத (non-corrosive) ஒரு வாயுவாகும்.

## கட்ச் புத்தாண்டு

- கட்ச் புத்தாண்டானது ஒவ்வோர் ஆண்டும் அசாதா மாதத்தில் நிலவின் தேய் பிறையின் போது அல்லது சுக்ல பக்சாவின் இரண்டாம் நாளன்று கடைபிடிக்கப் படுகிறது.
- 2021 ஆம் ஆண்டில் இது ஜூலை 12 அன்று அனுசரிக்கப்பட்டது.
- விக்ரம் சாம்வாட் 2078 ஆனது கட்ச் பகுதியில் 2021 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் தேதியிலிருந்துத் தொடங்கியது.
- விக்ரம் சாம்வாட் என்பது இந்திய துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளில் வாழும் இந்து மற்றும் சீக்கியச் சமுதாயத்தினரால் பயன்படுத்தப்படும் ஒரு நாள்காட்டி முறை ஆகும்.
- இந்தத் திருவிழாவானது குஜராத் மாநிலத்தின் கட்ச் பகுதியில் மழைப் பொழிவின் தொடக்கத்தைக் குறிக்கிறது.

## குன்வர் யாத்திரை

- உத்தரப் பிரதேச மாநிலத்தில் 'குன்வர் யாத்திரையை' நடத்துவதற்கு உச்சநீதிமன்றம் அனுமதி வழங்கிட வேண்டி ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- குன்வர் யாத்திரை என்பது சிவ பக்தர்களால் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படும் ஒரு புனித யாத்திரையாகும்.

- பெரும்பாலும் வடக்கு மாநிலங்களைச் சேர்ந்த பக்தர்கள், வெறும் கால்களில் நடந்து சென்று உத்தரகாண்டிலுள்ள ஹரித்துவாரில் கங்கை நதியிலிருந்து நீரைச் சேகரித்து தங்கள் பகுதியிலுள்ள சிவ ஆலயங்களில் சமர்ப்பிப்பர்.
- 2021 ஆம் ஆண்டு குன்வர் யாத்திரையானது ஜூலை 25 அன்று தொடங்க உள்ளது.
- கடந்த ஆண்டு கோவிட் – 19 பெருந்தொற்று மற்றும் ஊரடங்கு காரணமாக இந்த யாத்திரையானது ரத்து செய்யப்பட்டது.



## நீதிமன்ற வழக்காடுதல்களின் நேரடி ஒளிபரப்பு

- தமது விருப்பத்தினைத் தெரிவிக்கும் அனைத்து நீதிமன்ற அமர்வுகளின் வழக்காடுதல்களின் நேரடி ஒளிபரப்பினை ஜூலை 17 முதல் தொடங்க உள்ளதாக குஜராத் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.
- வழக்காடுதல்களை காணொலி வாயிலாக பொது மக்களைப் பார்வையிட அனுமதித்த நாட்டின் முதல் உயர்நீதிமன்றமாக இது உருவெடுத்துள்ளது.
- இதற்கு முன்பாக 2020 ஆண்டு அக்டோபர் மாதத்தில் இந்த உயர்நீதிமன்றமானது தலைமை நீதிபதி தலைமையிலான நீதிமன்ற வழக்காடுதல்களைப் பொதுமக்கள் பார்வைக்காக யூடியூப் தளத்தில் நேரடியாக ஒளிபரப்பு செய்யத் தொடங்கியது.

## மோங்க் பழம்

- இமாச்சலப் பிரதேசத்தின் குலு பகுதியில் சீனா நாட்டைச் சேர்ந்த 'மோங் பழத்தின்' (monk fruit) சாகுபடி தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தப் பழமானது இமாச்சலப் பிரதேசத்தில் களச் சோதனைக்காக அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது.



- இது அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்துறை தொழில் நுட்ப மன்றத்தின் இமாலய உயிரிவளத் தொழில்நுட்ப நிறுவனத்தினால் அறிமுகப் படுத்தப்பட்டது.
- மோங் பழமானது குறைவான கலோரிகள் உடைய இயற்கையான இனிப்பூட்டும் பண்புடையதாக அறியப் படுகிறது.

## போனலு திருவிழா

- 'போனலு' என்பது ஒவ்வோர் ஆண்டின் 'ஆசதம்' (ஜுன்/ஜூலை) எனும் தெலுங்கு மாதத்தில் கொண்டாடப் படும் ஒரு பாரம்பரிய நாட்டுப்புற திருவிழாவாகும்.
- இது ஹைதராபாத் மற்றும் செகந்திராபாத் ஆகிய இரட்டை நகரங்களிலும் தெலங்கானா மாநிலத்தின் இதர சில பகுதிகளிலும் கொண்டாடப்படுகிறது.
- 'போனலு' திருவிழாவானது தெலங்கானாவின் 'மாநிலத் திருவிழாவாக' அறிவிக்கப் பட்டுள்ளது.
- இது 2014 ஆம் ஆண்டில் அந்த மாநிலம் உருவாக்கப்பட்ட பிறகு, K. சந்திரசேகர் ராவ் தலைமையிலான அரசினால் அறிவிக்கப்பட்டது.



## 'ஒரே வட்டாரம், ஒரே உற்பத்திப் பொருள்' திட்டம்

- ஹரியானா மாநில அரசானது 'ஒரே வட்டாரம், ஒரே உற்பத்திப் பொருள்' என்ற ஒரு திட்டத்தை விரைவில் அறிமுகப்படுத்த உள்ளது.
- இது அம்மாநிலத்தின் கிராமப்புற பகுதிகளில் உள்ள சிறுதொழிற்சாலைகளுக்கு ஊக்கமளித்து அவற்றை மேம்படுத்துவதற்கான ஒரு திட்டமாகும்.
- இத்திட்டத்தின் கீழ் மாநிலத்தின் ஒவ்வொரு வட்டாரங்களையும் சில தொழில்துறை இலக்குடன் இணைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

## அகார் மரவளர்ப்பு

- திரிபுரா மாநில அரசானது அகார் வகை மரங்களை வணிக ரீதியாகப் பயிரிடுவதை ஊக்குவிப்பதற்கான ஒரு முன்னெடுப்பினை மேற்கொண்டுள்ளது.
- அகார் என்பது திரிபுரா மாநிலத்தில் அதிகம் வளரும் ஒரு பசுமை மாறா மர வகை ஆகும்.

## அசாம் விவகாரங்கள்

- அசாம் மாநிலத்தின் "பழங்குடியினர் மற்றும் பழங்குடி சமூகங்களின் நம்பிக்கை, கலாச்சாரம் மற்றும் மரபுகள்" ஆகியவற்றைப் பாதுகாக்க ஒரு சுயாதீனத் துறையை உருவாக்குவதாக அசாம் அமைச்சரவை அறிவித்துள்ளது.
- மேலும் குவஹாத்தியில் சோதனை அடிப்படையில் மதுபானங்களை ஆன்லைன் விற்பனைக்கும், வாங்குவோர் வீட்டிற்கு விநியோகம் செய்வதற்கும் இது ஒப்புதல் அளித்து உள்ளது.

## Scene of crime officers

- கர்நாடக மாநிலக் காவல்துறையானது 206 'Scene of crime' (குற்றங்களின் போதான சாட்சி) அதிகாரிகளைப் பணியில் சேர்க்க உள்ளது.
- இவர்கள் அந்த மாநிலத்தில் குற்றம் நடக்கும் இடங்களிலிருந்து முக்கியமான ஆதாரங்களை ஆய்வு செய்து சேகரிப்பார்கள்.
- இந்த அதிகாரிகளுக்கு காந்திநகரில் உள்ள தேசியத் தடய அறிவியல் பல்கலைக் கழகம் மற்றும் ஹைதராபாத்தில் உள்ள மத்தியத் தடய அறிவியல் ஆய்வகம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படும்.
- இந்த அதிகாரிகளுக்காக வேண்டி ஒரு பிரத்தியேக 'நடமாடும் தடயவியல் ஆய்வகத்தை' ஏற்படுத்தவும் காவல்துறை திட்டமிட்டுள்ளது.
- இது கர்நாடக வரலாற்றிலும், இந்திய வரலாற்றிலும் முதல் முறையாகக் கொண்டு வரப்பட்டுள்ளது.
- 1961 ஆம் ஆண்டில் லண்டனில், இது போன்ற பதவி முதன்முதலில் உருவாக்கப்பட்டது.

## செயற்கைக்கோளை உருவாக்கும் அரசுப் பள்ளி

- பெங்களூரில் உள்ள மல்லேஸ்வரம் அரசு சிறுவர் உயர்நிலைப் பள்ளியானது 2022 ஆம் ஆண்டில் செயற்கைக்கோள் ஏவுதல் திட்டத்தின் ஒரு பகுதியாக உருவெடுக்க உள்ளது.
- இது, செயற்கைக்கோளை உருவாக்க உள்ள நாட்டின் முதல் அரசுப் பள்ளியாக மாற உள்ளது.
- நாட்டின் 75வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் விதமாக 75 செயற்கைக் கோள்களை ஏவும் ஒரு கனவுத் திட்டத்தை இந்தியத் தொழில்நுட்ப காங்கிரஸ் சங்கம் உருவாக்கியுள்ளது.

## ஆதர்ஷ் ஸ்மரக் திட்டம்

- இந்தத் திட்டத்தின் கீழ் ஆந்திர மாநிலத்தில் மூன்று நினைவுச் சின்னங்கள் அடையாளம் காணப் பட்டுள்ளன.
- ஸ்ரீகாகுளத்தில் உள்ள சாலிஹண்டத்தில் உள்ள பௌத்த மிச்சங்கள், குண்டூரின் நாகார்ஜுனகொண்டாவில் உள்ள நினைவுச் சின்னங்கள் மற்றும் அனந்தப்பூரில் உள்ள வீரபத்ரா கோயில் ஆகியவை இந்தத் திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளன.
- இந்த நினைவுச் சின்னங்கள் கூடுதல் வசதிகளுடன் சுற்றுலாவை ஊக்குவிக்கும் தளங்களாக மாற்றப்படும்.

- ❖ இந்தத் திட்டத்தை கலாச்சார அமைச்சகமானது 2014 ஆம் ஆண்டில் தொடங்கியது.




## B.S. எடியூரப்பா பதவி விலகல்




- ❖ கர்நாடக முதலமைச்சர் B.S. எடியூரப்பா, தனது 2 ஆண்டுகால அரசின் ஒரு கொண்டாட்டத்தின் போது தான் பதவி விலகுவதாக அறிவித்தார்.
- ❖ கட்சியில் அவருக்குப் பதிலாக வேறொருவரைத் தேர்ந்தெடுக்கும் வரை இவர் தற்காலிக முதலமைச்சராகப் பணியாற்றுவார்.
- ❖ BS எடியூரப்பா முதன்முறையாக பா.ஜ.க.வின் சார்பாக தென்னிந்தியாவில் முதல்வர் ஆனார்.

- இவர் நான்கு முறை கர்நாடகாவின் முதலமைச்சராகப் பொறுப்பு வகித்தார்.
- கர்நாடக மாநில வரலாற்றிலேயே இவ்வளவு முறை பணியாற்றிய ஒரே முதலமைச்சர் இவரே ஆவார்.

## கவிதா மலோத்

- தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி கட்சியைச் சேர்ந்த மக்களவை உறுப்பினர் கவிதா மலோத் என்பவர் ஹைதராபாத்தின் ஒரு சிறப்பு நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப் பட்டுள்ளார்.
- இவர் 2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.
- தெலுங்கானாவின் மஹபூபாபாத் என்ற தொகுதியைச் சேர்ந்த இவர், பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் மீதான வழக்குகளின் சிறப்பு அமர்வு நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டார்.

## மொத்த சுற்றுச்சூழல் உற்பத்தி – உத்தரகாண்ட்

- உத்தரகாண்ட் அரசானது தனது மாநிலத்தின் இயற்கை வளங்களின் மதிப்பீட்டினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வரிசையில் மொத்த சுற்றுச்சூழல் உற்பத்தியாக மதிப்பிட உள்ளதை அறிவித்துள்ளது.
- மொத்த சுற்றுச்சூழல் உற்பத்தியானது ஒரு பகுதியின் சூழ்நிலை செயல்பாடுகளைக் கணக்கிடும் ஒரு மதிப்பீட்டு முறையாகும்.
- இது ஒரு குறிப்பிட்டப் பகுதியின் மக்களுக்கு சுற்றுச்சூழல் அமைப்பினால் (காடுகள், நீர்நிலைகள், பெருங்கடல்கள் போன்ற) வழங்கப்படும் சரக்கு மற்றும் சேவைகளின் ஒட்டு மொத்த வருடாந்திர மதிப்பினைக் குறிக்கிறது.
- இது சுற்றுச்சூழல் அமைப்பின் சேவைகளின் மீதான மதிப்பினை ஒரு ஒற்றை நாணயப் பதின்ம முறையில் தருகிறது.
- 'சுற்றுச்சூழல் அமைப்பின் சேவைகள்' எனும் சொற்கூறானது சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு கல்வி நிறுவனங்களை ஈர்க்கும் நோக்கில் 1981 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- சுற்றுச்சூழல் அமைப்பின் சேவைகள் என்பது சுற்றுச்சூழல் அமைப்பின் செயல்பாடுகளிலிருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மக்கள் பெறும் பயன்கள் ஆகும்.

## பசவராஜ் S. பொம்மை

- கர்நாடக பா.ஜ.க சட்டமன்றக் கட்சியானது லிங்காயத்து சமூகத்தின் ஒரு சட்டமன்ற உறுப்பினரான பசவராஜ் S. பொம்மை என்பவரை புதிய முதலமைச்சராக ஒரு மனதாக தேர்ந்தெடுத்துள்ளது.
- B.S. எடியூரப்பா அவர்களையடுத்து இவர் அந்தப் பொறுப்பின ஏற்க உள்ளார்.
- இவர் கர்நாடகாவின் 23வது முதலமைச்சராகப் பொறுப்பேற்க உள்ளார்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சிறந்த கட்டடப் பொறியியல் சாதனை விருது

- ஜப்பானின் கட்டடப் பொறியாளர் சமூக அமைப்பானது (Japan Society of Civil Engineers – JSCE) டெல்லி மெட்ரோ இரயிலுக்கான 'முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டத் திட்டப் பணிகளுக்கு 2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பு மிக்க சிறந்த கட்டடப் பொறியியல் சாதனை விருதினை' வழங்கியுள்ளது.
- டெல்லி மெட்ரோ இரயில் திட்டமானது ISCE அமைப்பினால் "உயர்தர உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்" என அழைக்கப் பட்டது.
- இந்த விருதானது உலகெங்கிலும் உள்ள கட்டடப் பொறியியல் தொழில்நுட்பத்தின் மேம்பாட்டினை எடுத்துக் காட்டும் மிகவும் குறிப்பிடத்தக்க திட்டங்களுக்கு வழங்கப் படுகிறது.

## ஃபுகுயோகா கிராண்ட் பரிசு – 2021

- பத்திரிக்கையாளர் பலகுமி சாய்நாத் (Palagummi Sainath) என்பவருக்கு 2021 ஆம் ஆண்டிற்கான ஃபுகுயோகா பெருமைமிகு பரிசானது (Fukuoka Grand Prize) வழங்கப் பட்டுள்ளது.
- இவர் இந்தியாவில் உள்ள வறுமைமிக்க விவசாய கிராமங்கள் குறித்து தொடர்ந்து ஆய்வு செய்து வரும் ஒரு உறுதி மிக்க பத்திரிக்கையாளராவார்.
- இந்த விருதானது ஜப்பானின் ஃபுகுயோகா நகரம் மற்றும் ஃபுகுயோகா நகர சர்வதேச அறக்கட்டளை ஆகியவற்றினால் நிறுவப் பட்டதாகும்.
- இந்த விருதானது ஆசிய கலாச்சாரத்தைப் பாதுகாப்பதில் ஆற்றும் சிறப்பான பணிகளுக்காக தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.
- இவர் 2001 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அவையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் போயர்மா என்ற பரிசினைப் பெற்றவராவார்.
- மேலும் 2007 ஆம் ஆண்டில் ஆசியப் பத்திரிக்கையியலுக்கு அவர் ஆற்றிய சிறந்தப் பங்களிப்பிற்காக ரமோன் மகசேசே விருதினையும் அவர் பெற்றுள்ளார்.



## "Decoding Shankar" – ஆவணப்படம்




- 2021 ஆம் ஆண்டு டொரோண்டோ சர்வதேச மகளிர் திரைப்பட விருது விழாவில் ஆவணப்படப் பிரிவில் (சிறந்த சுயசரிதை) "Decoding Shankar" எனும் ஆவணப் படத்திற்கு சிறந்த திரைப்படம் எனும் விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இது தீப்தி பிள்ளை சிவன் என்பவரால் இயற்றப்பட்ட ஒரு படைப்பாகும்.
- இது பிரபல இசைக்கலைஞர் சங்கர் மகாதேவனுடைய வாழ்க்கை மற்றும் தொழில் வாழ்வு முறை பற்றி கூறும் ஒரு படமாகும்.

## குவெம்பு ராஷ்ட்ரிய புரஷ்கர்

- புகழ்பெற்ற ஒடியா மொழிக் கவிஞரான டாக்டர் இராஜேந்திர கிஷோர் பாண்டா என்பவருக்கு 2020 ஆம் ஆண்டிற்கான குவெம்பு ராஷ்ட்ரிய புரஷ்கர் என்ற விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- இது மறைந்த கவிஞர் குவெம்பு அவர்களின் நினைவாக வழங்கப்படும் ஒரு தேசிய விருதாகும்.
- டாக்டர் இராஜேந்திர கிஷோர் பாண்டா அவர்களுக்கு 2010 ஆம் ஆண்டில் கங்காதர் தேசிய விருதும் 1985 ஆம் ஆண்டில் சாகித்திய அகாடெமி விருதும் வழங்கப் பட்டது.



## K.V. சம்பத்குமார் காலமானார்

- இவர் 'சுதர்மா' எனும் சமஸ்கிருத நாளிதழின் ஆசிரியர் (தொகுப்பாளர்) ஆவார்.
- இவரும் இவருடைய மனைவியும் இலக்கியம் மற்றும் கல்வித் துறையில் ஆற்றியப் பணிக்காக 2020 ஆம் ஆண்டில் இந்திய அரசின் பத்மஸ்ரீ விருதிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.
- மேலும் சித்தருதா விருது, சிவராத்திரி தேசிகேந்திரா ஊடக விருது, அப்துல் கலாம் விருது மற்றும் இதர பிற விருதுகளையும் இவர் பெற்றுள்ளார்.
- சம்பத் குமார் அவர்களின் தந்தை பண்டித வரதராஜ ஐயங்கார் 1970 ஆம் ஆண்டில் "சுதர்மா" என்ற இதழைத் தொடங்கினார்.
- மைசூரில் அச்சிடப்பட்டு வெளியாகும் "சுதர்மா" நாளிதழானது உலகின் ஒரே ஒரு சமஸ்கிருத நாளிதழாகும்.

## ஐசியஸ் துகாரமி

- மகாராஷ்டிராவின் தானே – கல்யாண் பகுதியில் குதிக்கும் திறனுடைய சிலந்திகளின் இரண்டு புதிய இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- இவற்றுள் ஒரு இனத்திற்கு துணிச்சல்மிக்க காவல் அதிகாரி துகாராம் ஓம்பிளே என்பவரின் நினைவாகப் பெயரிடப்பட்டுள்ளது.
- இவர் 26/11 மும்பை தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தார்.
- இந்தச் சிலந்தி இனமானது 'ஐசியஸ் துகாரமி' என அழைக்கப் படுகிறது.

## மூன்று புதிய குறுங்கோள்கள் கண்டுபிடிப்பு



- திருச்சியைச் சேர்ந்த ஆசிரியர் மற்றும் மாணவர் ஆகியோர் மூன்று புதிய குறுங்கோள்களைக் கண்டறிந்துள்ளனர்.
- இவற்றிற்குத் தற்காலிகமாக BBM2101, BBM2102 மற்றும் BBM2103 எனப் பெயரிட்டு உள்ளனர்.
- இந்த ஆராய்ச்சியானது நாசாவினால் மேற்கொள்ளப்படும் குடிமக்கள் அறிவியல் மீதான சர்வதேச விண்வெளி ஆராய்ச்சிக் கூட்டிணைவு என்ற திட்டத்தின் ஒரு அங்கம் ஆகும்.
- பால பாரதி என்கிற K. பாலகிருஷ்ணன் மற்றும் G. ஆழிமுகிலன் (இயற்பியல் மாணவர்) ஆகியோர் இந்த மூன்று குறுங்கோள்கள் கண்டறியப்பட்ட சர்வதேச குறுங்கோள் ஆராய்ச்சித் திட்டத்தில் பங்கேற்றனர்.

- இவர்கள் இருவரும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற திருச்சி விண்வெளிச் சங்கத்தின் உறுப்பினர்களாவர்.

## விண்வெளிக்குப் பயணிக்கும் இரண்டாவது இந்திய வம்சாவளிப் பெண்

- ஸ்ரீசா பந்த்லா ஜூலை 11 அன்று ரிச்சர்டு பிரான்சன் என்பவருடன் விண்வெளிக்குப் பயணிக்க உள்ளார்.
- ரிச்சர்டு பிரான்சன் விர்ஜின் கேலக்டிக் என்ற நிறுவனத்தின் நிறுவனராவார்.
- பந்த்லா 'யுனிட்டி22' என்ற திட்டத்தின் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வார்.
- இவர் விர்ஜின் கேலக்டிக் நிறுவனத்தின் 'VSS யுனிட்டி' என்ற கலத்தில் பயணிக்கும் ஆறு விண்வெளி வீரர்களுள் ஒருவராவார்.
- ஆந்திரப் பிரதேசத்தின் குண்டூர் மாவட்டத்தில் பிறந்த ஸ்ரீசா பந்த்லா ஹவுஸ்டனில் வளர்ந்தவராவார்.
- கல்பனா சாவ்லா அவர்களை அடுத்து விண்வெளிக்குப் பயணிக்கும் இந்தியாவில் பிறந்த இரண்டாவது பெண்மணி எனும் பெருமையை இவர் பெற உள்ளார்.
- பந்த்லாவிற்கு முன்பாக விண்வெளிக்குப் பயணித்த மற்ற இந்தியர்கள் ராகேஷ் சர்மா மற்றும் சுனிதா வில்லியம்ஸ் ஆகியோராவர்.



## டயானா விருதுகள் 2021 – D. கவின் வேந்தன்

- சென்னையைச் சேர்ந்த 17 வயது மாணவரான D. கவின் வேந்தன் 2021 ஆம் ஆண்டு டயானா விருதுகளுக்குத் தேர்வு செய்யப்பட்ட பலருள் ஒருவராவார்.
- அவரது சமூக சேவைகளுக்காக இந்த அங்கீகாரமானது வழங்கப் பட்டுள்ளது.
- "S.M.I.L.E.Y INDIA" எனும் தனது இலாபநோக்கமற்ற இளைஞர் அறக்கட்டளைக்காக வேண்டி கவின் ஒரு பாராட்டுப் பத்திரத்தை பெற்றார்.
- இந்த விருதானது சமூக சேவை (அ) மனிதாபிமானமிக்க நடவடிக்கைகளை மேற் கொண்டு வரும் 9 முதல் 25 வயதிற்குட்பட்ட 300 குழந்தைகள் மற்றும் இளம் வயது நபர்களுக்கு அங்கீகாரம் அளிக்கிறது.



## கவிதா ராவின் புத்தகம்

- "Lady doctors : The Untold Stories of India's First Women in Medicine" என்று தலைப்பிடப்பட்ட ஒரு புத்தகமானது கவிதா ராவ் என்பவரால் எழுதப்பட்டதாகும்.
- இந்தப் புத்தகமானது வரலாற்றில் அதிகமாக புறக்கணிக்கப்பட்ட இந்தியாவின் முதல் பெண் மருத்துவரின் கதைகளை மீளச் செய்து உரைக்கிறது.
- இந்த புத்தகத்தில் ருக்மாபாய் ராவத்தினுடைய கதையானது கூறப்பட்டுள்ளது.
- ருக்மாபாய் ஓர் இந்திய மருத்துவர் மற்றும் பெண்ணியவாதி ஆவார்.
- இவர் காலனித்துவ இந்தியாவின் முதல் பெண் மருத்துவராக அறியப்படுகிறார்.
- மேலும் இவர் 1884 மற்றும் 1888 ஆகிய ஆண்டுகளுக்கு இடையே நடைபெற்ற தனது குழந்தைத் திருமணம் தொடர்பான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வழக்கிலும் தொடர்புடையவராக இருந்தார்.



## நடிகர் திலீப்குமார் காலமானார்

- பிரபல பாலிவுட் நடிகர் முகமது யூசுஃப் கான் தனது 98வது வயதில் காலமானார்.
- திரையுலகில் இவர் திலீப் குமார் என அறியப்படுகிறார்.
- இவர் பாலிவுட்டின் டிராஜடி கிங் (tragedy king of Bollywood) எனவும் பிரபலமாக அறியப் படுகிறார்.
- இவரது கடைசி திரைப்படம் 1998 ஆம் ஆண்டில் வெளியான கிலா என்பதாகும்.
- சிறந்த நடிகருக்கான பிலிம் ஃபேர் விருதினைப் பெற்ற (1954) முதல் நடிகர் இவரே ஆவார்.
- இவர் எட்டு முறை இந்த விருதினைப் பெற்றுள்ளார்.
- திலீப் குமார் அதிகபட்ச விருதுகளை வென்ற இந்திய நடிகராக கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றவராவார்.
- இந்தியாவின் முதல் "method actor" எனவும் இவர் குறிப்பிடப் படுகிறார்.
- இவருக்கு 1994 ஆம் ஆண்டில் தாதாசாகேப் பால்கே விருதும் 2015 ஆம் ஆண்டில் பத்ம விபூசன் விருதும் வழங்கப்பட்டது.



## உலகில் வாழும் வயதான நபர்

- கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் பியூரிட்டோ ரிகோவைச் சேர்ந்த எமிலியோ ஃப்ளோரெஸ் மார்குவெஸ் என்பவர் உலகின் மிக வயதான நபர் என்று அதிகாரப் பூர்வமாக குறிப்பிடப் பட்டுள்ளார்.
- இவரின் வயது 112 வருடம் மற்றும் 326 நாட்கள் ஆகும்.
- 2012 ஆம் ஆண்டில் உயிரிழந்த 122 வயது பிரஞ்சு நாட்டுப் பெண்மணி ஜீன் கால்மெண்ட் என்பவரே இதுவரை உயிர் வாழ்ந்த உலகின் மிக மூத்த நபராவார்.

## பொருளாதாரத்திற்கான ஹம்போல்ட் ஆராய்ச்சி விருது

- இந்தியப் பொருளாதார வல்லுநர் கௌசிக் பாசுவிற்குப் பொருளாதாரத்திற்கான ஹம்போல்ட் ஆராய்ச்சி (Humboldt Research) என்ற விருது வழங்கப் பட்டுள்ளது.
- இந்த விருதானது உலகெங்கிலும் உள்ள அறிவியலாளர்கள் மற்றும் பொருளாதார வல்லுநர்களுக்கு அவர்களது சிறந்த பணிக்காக கௌரவம் அளிக்கிறது.

- உலக வங்கியின் முன்னாள் தலைமைப் பொருளாதார வல்லுநரான பாசு தற்போது மத்திய பல்கலைக்கழகத்தில் பொருளாதார பேராசிரியராக பணியாற்றி வருகிறார்.
- மேலும் 2009 முதல் 2012 ஆம் ஆண்டு வரை இந்திய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகராகவும் அவர் பணியாற்றினார்.
- மேலும் இவர் இந்தியாவின் மூன்றாவது உயரிய குடிமை விருதான பத்ம பூசண் விருதினையும் பெற்றவராவார்.

## கேப்டன் குர்ஜீந்தர்சிங் சூரி – போர் நினைவிடம்




- இந்திய இராணுவமானது குல்மார்க்கில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டிற்கு அருகே கேப்டன் குர்ஜீந்தர்சிங் சூரியின் நினைவாக ஒரு போர் நினைவிடத்தை அமைத்து உள்ளது.
- இது கேப்டன் குர்ஜீந்தர் சிங் சூரியின் பிறந்தநாளன்று திறக்கப்பட்டது.
- கேப்டன் குர்ஜீந்தர் சிங் சூரி 1999 ஆம் ஆண்டில் நடைபெற்ற “பிர்சா முண்டா” எனும் ஒரு நடவடிக்கையின் போது உயிரிழந்தார்.

## கஞ்சன் உகுர்சான்டி



- மலைப்பாதையில் இருசக்கர வாகனம் ஓட்டும் ஒரு வீராங்கனையான கஞ்சன் உகுர்சான்டி இமாலய மலைப்பகுதியின் வடக்குப் பகுதியில் அமைந்த 18 கணவாய்கள் வழியேயான உலகின் முதலாவது தனிநபர் மோட்டார் சைக்கிள் பயணத்தை டெல்லியில் நிறைவு செய்தார்.
- உகுர்சான்டி உம்லிங்லா கணவாயில் பயணித்த முதல் தனிநபர் பெண் வாகன ஓட்டியாகவும் ஆகியுள்ளார்.

- மேலும், அவர் 18 கணவாய்களிலும் தனியாகப் பயணித்த முதல் பெண்மணியாகவும் உருவெடுத்து உள்ளார்.
- மேலும் புதுடெல்லி – மணாலி – லே – உம்லிங்கா – டெல்லி வரையிலான 3,187 கி.மீ. தூரத்தினை ஒரே வீச்சில் பயணித்த முதல் பெண்மணியும் இவரே ஆவார்.

## மனு சானே

- சர்வதேச கிரிக்கெட் மன்றத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான மனு சானே உடனடியாக பதவி விலக உள்ளார்.
- ஜெஃப் அலார்டைஸ் என்பவர் இனிமேல் இந்த அமைப்பின் தற்காலிகத் தலைமை நிர்வாக அதிகாரியாகச் செயல்படுவார்.
- இந்திய நாட்டைச் சேர்ந்த மனு சானே 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 அன்று சர்வதேச கிரிக்கெட் மன்றத்தின் புதிய தலைமை நிர்வாகியாகப் பொறுப்பேற்றார்.

## ஸ்கிரிப்ஸ் தேசிய ஸ்பெல்லிங் பீ போட்டி

- சைலா அவந்த்-கார்டே என்பவர் 2021 ஆம் ஆண்டு ஸ்கிரிப்ஸ் தேசிய ஸ்பெல்லிங் பீ போட்டியில் வென்ற முதல் ஆப்பிரிக்க-அமெரிக்கப் பெண் எனும் பெருமையைப் பெற்றுள்ளார்.
- 14 வயதான இவர் அமெரிக்காவின் நியூ ஆர்லியைன்ஸ் மாகாணத்தைச் சேர்ந்தவர் ஆவார்.
- முரயா (Murraya) எனும் தாவர இனத்தின் பெயரைச் சரியாக எழுதியதன் மூலமாக இவர் சாம்பியன்சிப்பை வென்றார்.



## காமன்வெல்த் பாயின்ட்ஸ் ஆஃப் லைட் விருது

- சையத் ஒஸ்மான் அசார் மக்சூசி ‘காமன்வெல்த் பாயின்ட்ஸ் ஆஃப் லைட்’ என்ற ஒரு விருதினை வென்றுள்ளார்.
- அவர் “Hunger Has No Religion” (பசிக்கு மதம் இல்லை) என்ற தனது உணவு இயக்கத்தின் ஓர் அங்கமாக ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவளித்து வருகின்றார்.

- தங்கள் சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி வரும் சிறந்த நபர்களுக்கு இந்த விருதானது வழங்கப் படுகிறது.

## யஷ்பால் சர்மா

- இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் யஷ்பால் சர்மா காலமானார்.
- இவர் 1983 ஆம் ஆண்டு கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்ற இந்திய அணியின் ஓர் அங்கமாக இருந்தவர் ஆவார்.
- பஞ்சாபில் பிறந்த இவர் பஞ்சாப், ஹரியானா மற்றும் ரயில்வே உள்ளிட்ட மூன்று அணிகளின் சார்பாக ரஞ்சிக் கோப்பைப் போட்டியில் பங்கேற்றுள்ளார்.



## லியோனர்டோ டாவின்சியின் கரடி ஓவியம் ஏலம்

- லியோனர்டோ டாவின்சி வரைந்த ஒரு கரடி ஓவியமானது (தலைப்பகுதி) லண்டனில் நடைபெற்ற ஒரு ஏலத்தில் 8.8 மில்லியன் பவுண்டுக்கு (12.1 மில்லியன் டாலர்) ஏலம் போனது.
- 7 x 7 செ.மீ. அளவே உடைய இந்த ஓவியமானது 500 வருடத்திற்கும் மேல் பழமை மிக்கதாகும்.
- 2001 ஆம் ஆண்டில் 8.1 மில்லியன் பவுண்டுக்கு ஏலம் போன டாவின்சி வரைந்த குதிரை மற்றும் இயக்கியின் (குதிரை ஓட்டி) ஓவியத்தின் முந்தைய சாதனையை இது முறியடித்துள்ளது.



## The Great Big Lion

- “The Great Big Lion” என்று தலைப்பிடப்பட்ட ஒரு புத்தகமானது குழந்தை நல மேதாவியான கிரிசெய்ஸ் நைட் என்பவரால் வரையப்பட்டு எழுதப் பட்டது.
- இந்தப் புத்தகமானது ஒரு சிங்கம் மற்றும் இரண்டு குழந்தைகள் பற்றிய கதையாகும்.
- இது பெங்குயின் ரேண்டம் ஹவுஸ் பதிப்பகத்தினால் இந்தியாவின் பஃபின் பதிப்பகம் வாயிலாக வெளியிடப்படுகிறது.




## 2020 மில்லினியம் (ஆயிரமாண்டு) தொழில்நுட்பப் பரிசு

- மே மாதத்தில் அறிவிக்கப்பட்ட 2020 மில்லினியம் தொழில்நுட்பப் பரிசானது சங்கர் பால சுப்ரமணியன் மற்றும் டேவிட் க்ளெனர்மேன் ஆகியோருக்கு வழங்கப் பட்டு உள்ளது.
- புரட்சிமிக்க டி.என்.ஏ. படியெடுத்தல் தொழில்நுட்பத்தை உருவாக்கியதற்காக வேண்டி இவர்களுக்கு இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விருதானது பின்லாந்து நாட்டின் முன்னணி கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்துறை அமைப்புடன் இணைந்து பின்லாந்து நாட்டினால் வழங்கப்படுகிறது.
- சங்கர் பால சுப்ரமணியன் சென்னையில் பிறந்தவராவார்.

## டேனிஷ் சித்திக்

- இந்தியப் பத்திரிக்கை புகைப்படக் கலைஞர் டேனிஷ் சித்திக் காலமானார்.



- ஆப்கானிஸ்தானின் கந்தஹார் மாகாணத்தின் ஸ்பின் போல்தக் மாவட்டத்தில் ஆப்கன் படையினருக்கும் தாலிபான்களுக்கும் இடையே நடைபெற்ற மோதல் குறித்த தகவல் சேகரிப்பில் ஈடுபட்டிருந்த போது அந்த மோதலில் அவர் கொல்லப்பட்டார்.
- இவர் ரியூட்டர்ஸ் எனும் சர்வதேச செய்தி நிறுவனத்தில் பணி புரிந்து வந்தார்.
- இவர் மதிப்புமிக்க புலிட்சர் பரிசினை வென்றவராவார்.

## டாக்டர் கடம்பினி கங்குலி



- கூகுள் நிறுவனமானது 18-07-2021 அன்று டாக்டர் கடம்பினி கங்குலி அவர்களின் 160வது பிறந்த நாளையொட்டி ஒரு சிறப்பு டூடுளை வெளியிட்டு அவரைக் கௌரவித்தது.
- இவர் இந்தியாவில் மருத்துவராகப் பயிற்சி பெற்ற முதல் பெண் ஆவார்.
- கூகுளினுடைய டூடுளில், பெங்களூருவைச் சேர்ந்த தலைவர்களை ஓவியமாக வரையும் ஒட்ரிஜா எனும் ஒரு ஓவியக் கலைஞர் வரைந்த கடம்பினி கங்குலியின் ஓவியம் இடம் பெற்றது.
- டாக்டர் கடம்பினி கங்குலி அவர்கள் 1884 ஆம் ஆண்டில் கல்கத்தா மருத்துவக் கல்லூரியில் சேர்க்கைக்கு அனுமதி பெற்ற முதல் பெண் ஆவார்.
- இவர் மும்பையைச் சேர்ந்த ஆனந்திபாய் ஜோஷி போன்ற பிற பெண் மருத்துவர்களோடு இந்தியாவில் மருத்துவப் பயிற்சியினை வெற்றிகரமாக மேற்கொண்டார்.
- இவர் தற்போதைய வங்காள தேசத்திலுள்ள பாகல்பூரில் (பிரித்தானிய இந்தியா) பிறந்தார்.

## கேன்ஸ் திரைப்பட விருதுவிழா

- 74வது கேன்ஸ் திரைப்பட விருது விழாவில் பாயல் கபாடியாவின் (Payal Kapadia) "A Night of Knowing Nothing" எனும் திரைப்படத்திற்கு சிறந்த ஆவணப் படத்திற்கான Oeil d'or (கோல்டன் ஐ/ தங்கக் கண்) விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இப்படத்தின் இயக்குநர் பாயல் மும்பையைச் சேர்ந்தவர் ஆவார்.
- ஜுலியா டுகோர்னாவ் (Julia Ducournau) 'Titane' எனும் தனது திரைப்படத்திற்காக கேன்ஸின் உயரிய விருதான பால்மே டி ஓர் (Palme d'Or) விருதினைப் பெற்றார்.
- இதன் மூலம் இந்த விருதை வென்ற இரண்டாவது பெண்மணி எனும் பெருமையை இவர் பெற்றார்.

- ❖ இந்த விருதைப் பெற்ற முதல் விருதாளர் 1993 ஆம் ஆண்டில் "The Piano" படத்திற்காக விருது பெற்ற ஜேன் கேம்பியன் என்பவராவார்.
- ❖ சிறந்த இயக்குநர் விருதானது பாப்-ஒபெரா வகை இசையினை சார்ந்த 'Annette' என்ற திரைப்படத்திற்காக லியோஸ் காரக்ஸ் (Leos Carax) என்பவருக்கு வழங்கப்பட்டது.
- ❖ கேன்ஸ் திரைப்பட விருது விழாவானது பிரான்ஸ் நாட்டின் கேன்ஸ் என்னுமிடத்தில் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்ற விருது வழங்கும் ஒரு விழாவாகும்.

## ஈக்வேடர் பரிசு 2021 – இந்திய நிறுவனங்கள்




- ❖ ஆதிமலைப் பழங்குடியினர் உற்பத்தி நிறுவனம் மற்றும் சினேகாகுன்ஜா அறக் கட்டளை உள்ளிட்ட 10 நிறுவனங்கள் மதிப்புமிக்க 2021 ஆம் ஆண்டின் ஈக்வேடர் பரிசினை வென்றுள்ளன.
- ❖ வளங்காப்பு மற்றும் உயிரிப் பல்லுயிர்ப் பெருக்கம் போன்ற துறைகளில் அவை ஆற்றியப் பணிக்காக இந்த நிறுவனங்களுக்கு இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- ❖ உயிரிப் பல்லுயிர்ப் பெருக்கத்தின் வளங்காப்பு மற்றும் நிலையான பயன்பாடு மூலம் வறுமையைக் குறைப்பதற்கான சமுதாய முயற்சிகளுக்கு அங்கீகாரம் அளிக்கச் செய்வதற்காக வேண்டி ஐக்கிய நாடுகள் அவையின் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த விருதினை வழங்கி வருகிறது.
- ❖ ஆதிமலைப் பழங்குடியினர் உற்பத்தி நிறுவனமானது தமிழகத்தின் நீலகிரி உயிர்க் கோள காப்பகத்தினைச் சேர்ந்த பழங்குடியினரால் நடத்தப்படும் ஒரு நிறுவனம் ஆகும்.
- ❖ சினேகாகுன்ஜா அறக்கட்டளையானது மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் கர்நாடக கடற்கரையில் உள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் ஈரநிலங்கள் மற்றும் கடற்கரைச் சூழ்நிலைகளை 45 ஆண்டுகளாகப் பாதுகாத்து வருகிறது.

## ஒலிம்பிக் லாரல் - முஹமது யூனுஸ்

- ❖ அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவரான வங்கதேசத்தைச் சேர்ந்த முஹமது யூனுஸ் டோக்கியோ ஒலிம்பிக்கில் 'ஒலிம்பிக் லாரல்' கௌரவத்தைப் பெறும் இரண்டாவது நபராவார்.

- கென்ய ஒலிம்பிக் வீரரும் சமூக மாற்றத்திற்காக செயல்படும் கிப் கெய்னோ (Kip Keino) என்பவர் முதன்முறையாக 2016 ஆம் ஆண்டில் நடந்த ரியோ ஒலிம்பிக்கில் இந்த கௌரவத்தைப் பெற்றார்.
- யூனுஸ் "world's banker to the poor" (ஏழைகளுக்கான உலகத்தின் வங்கி) என்று குறிப்பிடப் படுகிறார்.
- யூனுஸ் 1983 ஆம் ஆண்டில் வங்கதேசத்தில் கிராமீன் வங்கியை நிறுவினார்.
- நுண் நிதியத்தின் (microfinance) ஆதரவாளராக இருந்த அவர் 2006 ஆம் ஆண்டில் அதற்காக நோபல் பரிசை வென்றார்.




## சிவ் நாடார்

- HCL டெக் என்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பதவியிலிருந்து சிவ் நாடார் விலகியுள்ளார்.
- இவர் Chairman Emiritus (கௌரவப் பட்டம்) எனும் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார்.
- HCL நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக இயக்குநரான C. விஜயகுமார் என்பவரை அந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாக இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பொறுப்பில் 5 ஆண்டு பதவிக் காலத்திற்கு HCL நிறுவனம் நியமித்துள்ளது.
- ரோசினி நாடார் மல்ஹோத்ரா HCL நிறுவனம் மற்றும் இயக்குநர் வாரியம் ஆகியவற்றின் தலைவராகவும் ஒரு நிர்வாகம் சாரா இயக்குநராகவும் நியமிக்கப் பட்டு உள்ளார்.
- இந்தியாவில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு IT நிறுவனத்திற்குத் தலைமை தாங்கும் முதல் பெண் இவரே ஆவார்.



## கீரா சாராபாய்

- தேசிய வடிவமைப்பு நிறுவனத்தின் (National Institute of Design) இணை நிறுவரான கீரா சாராபாய் சமீபத்தில் காலமானார்.
- சாராபாய் அவர்கள் தொழிலதிபர் அம்பாலால் சாராபாய் அவர்களின் புதல்வியும், டாக்டர் விக்ரம் சாராபாய் அவர்களின் சகோதரியும் ஆவார்.
- விக்ரம் சாராபாய் அவர்கள் சர்வதேச அளவில் இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை என கருதப் படுகிறார்.



## பாகீரதி அம்மா காலமானார்

- உலகின் வயதான மாணவி பாகீரதி அம்மா காலமானார்.
- இவரின் வயது 107 வருடங்களாகும்.
- கேரளாவின் கொல்லம் மாவட்டத்தைச் சேர்ந்த இவர் தனது 105வது வயதில் கல்வியைத் தொடர முடிவு செய்தார்.
- இவர் தனது 9வது வயதில் மூன்றாம் வகுப்பு படிக்கும்போது அவருடைய பள்ளிப் படிப்பை கைவிட்டார்.
- பெண்களின் அதிகாரமளிப்பிற்கு இவர் ஆற்றிய மகத்தான பங்களிப்பிற்காக வேண்டி இவருக்கு மதிப்பு மிக்க நாரிசக்தி புரஸ்கர் விருதானது வழங்கப் பட்டது.



## அலெக்சாண்டர் டால்ரிம்பிள் விருது

- துணைக் கடற்படைத் தலைவரும் இந்திய அரசின் தலைமை நீரியல் வரைபட நிபுணருமான வினய் பத்வார் பிரித்தானிய உயர் ஆணையரிடமிருந்து அலெக்சாண்டர் டால்ரிம்பிள் (Alexander Dalrymple) என்ற விருதினைப் பெற்றுள்ளார்.

- நீரியல் வரைபடம் மற்றும் கடல்சார் வரைபடம் ஆகிய துறைகளில் அவர் ஆற்றியத் தலைமைத்துவத்திற்கு அங்கீகாரமாக இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- 2006 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த விருதிற்கு கடற்படைத் தலைமையகத்தின் முதல் நீரியல் வரைபட நிபுணரின் நினைவாக இந்தப் பெயரிடப்பட்டுள்ளது.
- உலகெங்கிலுமான நீரியல் வரைபடத்துறை வரைபடவியல் மற்றும் போக்குவரத்து ஆகியவற்றின் தரநிலைகளை உயர்த்தும் முயற்சியில் ஒருவர் ஆற்றும் பங்கின் அடிப்படையில் அவர்களுக்கு இந்த விருதானது வழங்கப்படுகிறது.



## ICAR நார்மன் போர்லாக் விருது 2020

- காஜல் சக்கரபோர்த்தி (Kajal Chakraborty) என்பவருக்கு 2020 ஆம் ஆண்டின் ICAR நார்மன் போர்லாக் விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இது வேளாண் ஆராய்ச்சித் துறைக்கான ஒரு சிறப்பு தேசிய விருதாகும்.
- காஜல் சக்கரபோர்த்தி கொச்சியிலுள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் மத்தியக் கடல் சார் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் கடல்சார் உயிரித் தொழில்நுட்பப் பிரிவில் பணியாற்றும் ஒரு தலைமை அறிவியலாளர் ஆவார்.



# விளையாட்டுச் செய்திகள்

## இளம் வயது செஸ் கிராண்ட் மாஸ்டர்

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்கரான அபிமன்யு மிஸ்ரா, உலகின் இளம் வயது செஸ் கிராண்ட்மாஸ்டர் ஆகியுள்ளார்.
- இவர் தனது 12 வயது, 4 மாதங்கள் மற்றும் 25 நாட்களில் செர்கே கர்ஜாகின் என்பவர் செய்த சாதனையை முறியடித்தார்.
- செர்கே கர்ஜாகின் தனது 12 வயது மற்றும் 7 மாதங்களில் அந்த சாதனையைப் படைத்தார்.



## WAKO இந்தியா குத்துச்சண்டை கூட்டமைப்பு

- இந்தியாவில் குத்துச்சண்டை விளையாட்டை ஊக்குவித்து அதனை மேம்படுத்தும் முயற்சியாக WAKO இந்திய குத்துச்சண்டை கூட்டமைப்பினை தேசிய விளையாட்டுக் கூட்டமைப்பாக விளையாட்டுத் துறை அமைச்சகம் அங்கீகரித்துள்ளது.
- WAKO இந்திய குத்துச்சண்டை கூட்டமைப்பானது உலக குத்துச்சண்டை அமைப்புகள் சங்கத்துடன் இணைக்கப்பட்ட ஒரு அமைப்பாகும்.
- WAKO என்பது குத்துச்சண்டைப் போட்டிக்கான உலக அமைப்பாகும்.

*குறிப்பு*

- WAKO அமைப்பானது 2020 ஆம் ஆண்டு நவம்பர் 30 முதல் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் அங்கீகரிக்கப்பட்ட தற்காலிக உறுப்பினராக இருந்து வருகிறது.
- இதற்கான முழு அங்கீகாரமானது 2021 ஆம் ஆண்டு ஜூலை மாத டோக்கியோவில் நடைபெற உள்ள IOC கூட்டத்தில் வழங்கப் படும்.

## டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்குத் தேர்வான முதல் இந்திய பெண் நீச்சல் வீரர்

- மனா படேல் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தேர்வான முதல் இந்தியப் பெண் நீச்சல் வீரராவார்.
- டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளுக்கு தேர்வான முதல் பெண் விளையாட்டு வீரரும் இவரே ஆவார்.
- மனா படேல், ஸ்ரீஹரி நடராஜ் மற்றும் சஜன் பிரகாஷ் ஆகியோர் ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தேர்வானவர்களாவர்.

- 21 வயதான அகமதாபாத்தைச் சேர்ந்த இவர் பின் நோக்கி நீந்தும் ஒரு நீச்சல் வீராங்கனையாவார்.



## இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய கிரிக்கெட் மைதானம்

- இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியமானது ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கத்திற்கு 100 கோடி ரூபாய் நிதியினை வழங்கியுள்ளது.
- இது இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய கிரிக்கெட் மைதானத்தைக் கட்டமைக்க உபயோகப்படுத்தப் படும்.
- இது ஜெய்ப்பூரில் அமைக்கப்பட உள்ளது.

*குறிப்பு*

- இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில், இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான பிங்க்-பால் டெஸ்ட் போட்டிக்கு முன்பாக, குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் புதிதாக கட்டப்பட்ட மோத்தெரா மைதானத்தைத் திறந்து வைத்தார்.
- இது நரேந்திர மோடி மைதானம் எனப் பெயர் மாற்றப்பட்டது.
- 1,32,000 இருக்கைகள் உடைய இந்த மைதானமானது உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானமாகும்.

## மிதாலி ராஜ் – புதிய சாதனை

- இந்திய அணித் தலைவர் மிதாலி ராஜ், மகளிருக்கான கிரிக்கெட் விளையாட்டின் அனைத்து வகைகளிலும் அதிகளவு ரன்களைப் பெற்றவர் எனும் ஒரு பெருமையைப் பெற்று உள்ளார்.
- இவர் இங்கிலாந்தின் முன்னாள் கிரிக்கெட் வீரரான சார்லெட் எட்வர்ட்ஸ் என்பவரின் சாதனையை விஞ்சியுள்ளார்.
- இங்கிலாந்திற்கு எதிரான போட்டியில் இவர் இந்த சாதனையை நிகழ்த்தினார்.

## புதிய உலக சாதனை – 400 மீ தடை  தாண்டுதல் போட்டி

- பிஸ்லெட் வகை போட்டிகளில் (Bislett Games) 400 மீட்டர் தடை தாண்டுதல் போட்டியில் கார்ஸ்டன் வார்ஹோம் என்பவர் நீண்ட கால உலகச் சாதனையை முறியடித்துள்ளார்.

- இதற்கு முன்னதாக இந்தச் சாதனையானது 29 ஆண்டுகளாக அமெரிக்கத் தடை தாண்டும் வீரரான கெவின் யங் என்பவரின் வசம் இருந்தது.
- ஸ்பெயினின் பார்சிலோனாவில் நடைபெற்ற 1992 ஆம் ஆண்டின் ஒலிம்பிக் போட்டியில் 46.78 விநாடிகளில் நிறைவு செய்யப் பட்டு அவரது சாதனையானது படைக்கப் பட்டது.
- இந்த சாதனையானது இறுதியாக வார்ஹோமினால் (46.70 விநாடிகள்) தகர்க்கப் பட்டது.




## இந்தியத் தேசியக் கொடியினை ஏந்தி அணியை வழி நடத்தும் வீரர்கள்

- ஆறுமுறை உலக குத்துச்சண்டை சாம்பியன்சிப் பட்டம் வென்ற MC மேரி கோம் மற்றும் ஆடவர் ஹாக்கி அணித் தலைவர் மன்பிரீத் சிங் ஆகியோர் ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழாவில் இந்தியாவின் தேசியக் கொடியைச் சுமந்து அணியை வழி நடத்த உள்ளனர்.
- ஆகஸ்ட் 08 அன்று நடைபெறும் நிறைவு விழாவில், 2018 ஆம் ஆண்டு உலக மல்யுத்த சாம்பியன்சிப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற பஜ்ரங் பூனியா தேசியக் கொடியைச் சுமந்து அணியை வழி நடத்துவார்.
- “பாலினச் சமத்துவத்தை” உறுதி செய்வதற்காக முதன்முறையாக ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் உள்ளிட்ட இருவரை தேசியக் கொடியினைச் சுமந்து அணியினை வழி நடத்தச் செய்து, வரவிருக்கும் டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்திய அணி பங்கேற்க உள்ளது.



## ஜேம்ஸ் ஆன்டெர்சன் – 1000வது விக்கெட்



- இங்கிலாந்தின் மூத்த வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் ஆண்டெர்சன் முதல் வகை கிரிக்கெட் போட்டிகளில் தனது 1000வது விக்கெட்டினை வீழ்த்தியுள்ளார்.
- மான்செஸ்டரில் நடைபெற்ற கென்ட் அணிக்கு எதிரான லாங்கசைர்ஸ் கவுண்ட்டி சாம்பியன்சிப் போட்டியில் இந்தச் சாதனையானது நிகழ்த்தப் பட்டது.
- டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை எடுத்து வேகப்பந்து வீச்சாளர்களுள் ஆண்டெர்சன் முன்னிலை வகிக்கிறார்.
- ஆண்டெர்சன் இந்த நூற்றாண்டில் முதல் வகை கிரிக்கெட் போட்டியில் 1000வது விக்கெட்டினை நிகழ்த்திய 14வது விளையாட்டு வீரர் மற்றும் 5வது வேகப்பந்து வீச்சாளர் ஆவார்.

## ஹாக்கி ஜாம்பவான் கேசவ்

- ஹாக்கிப் போட்டியில் இரண்டு முறை ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற கேசவ் தத் காலமானார்.
- இவர் 1948 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் பிரிட்டன் அணியை 4–0 என்ற புள்ளிக் கணக்கில் வீழ்த்திய இந்திய அணியின் வரலாற்றுச் சாதனையின் ஒரு அங்கமாக இருந்தார்.
- இது லண்டனிலுள்ள வெம்ப்ளே அரங்கில் நடைபெற்றது.
- இது சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவிற்கு கிடைத்த முதல் தங்கப் பதக்கமாகும்.



## ஆசியக் கால்பந்து கூட்டமைப்பு – மகளிர் ஆசிய கோப்பைப் போட்டி

- ஆசியக் கால்பந்து கூட்டமைப்பின் மகளிர் ஆசிய கோப்பைப் போட்டியானது இந்தியாவில் மும்பை மற்றும் பூனே ஆகிய இடங்களில் நடைபெறும்.
- ஆசியக் கால்பந்து கூட்டமைப்பானது புவனேஷ்வர் மற்றும் அகமதாபாத் ஆகிய இடங்களைத் தேர்வு செய்ய மறுத்ததை அடுத்து இந்த முடிவானது மேற்கொள்ளப் பட்டது.
- போட்டியில் பங்கேற்பவர்களின் பயண நேரத்தைக் குறைப்பதற்காகவும் சுற்றுச் சூழலுக்கு ஏற்றவாறு ஒரு தக்க சூழ்நிலையை உறுதி செய்வதற்காகவும் வேண்டி இந்த முடிவானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- அந்தேரி விளையாட்டுப் போட்டிகள் வளாகத்திலுள்ள மும்பை கால்பந்து மைதானம் மற்றும் பூனேவின் பலேவாடியிலுள்ள சிவ் சத்ரபதி விளையாட்டு வளாகம் ஆகியவை புதிய அரங்கங்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

## 400மீ தடை தாண்டுதல் போட்டி – MP ஜபிர்



- MP ஜபிர் 400 மீ தடை தாண்டுதல் போட்டிப் பிரிவில் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்குத் தேர்வாகியுள்ளார்.
- 14 இடங்களைக் கொண்டுள்ள உலகத் தரவரிசை ஒதுக்கீட்டின் மூலமாக ஜபிர் தேர்வாகியுள்ளார்.
- ஒலிம்பிக் தரவரிசைக்கான உலகத் தடகள வீரர்கள் பட்டியலில் ஜபிர் தற்போது 34வது இடத்தில் உள்ளார்.
- ஒலிம்பிக் போட்டியின் 400 மீ தடை தாண்டுதல் போட்டியில் பங்கேற்க உள்ள முதல் இந்திய ஆண் தடகள வீரர் எனும் பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- கேரளாவைச் சேர்ந்த புகழ்பெற்ற தடகள வீரரான P.T. உஷா லாஸ் ஏஞ்செல்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் 400 மீ தடை தாண்டுதல் போட்டியில் பங்கேற்றார்.

## இந்தியக் குழிப்பந்தாட்ட வீரர்கள்

- இந்தியக் குழிப்பந்தாட்ட (golf) வீரரான உதயன் மானே 2020 ஆம் ஆண்டின் டோக்கியோ ஒலிம்பிப் போட்டிக்குத் தேர்வாகியுள்ளார்.
- இவர் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்குத் தேர்வான இரண்டாவது இந்தியக் குழிப் பந்தாட்ட வீரராவார்.

- இவர் ஆடவர் குழிப்பந்தாட்ட போட்டியின் 60 வீரர்கள் அடங்கிய குழுவிலுள்ள அனிர்பன் லஹிரியுடன் இணைந்து பங்கேற்கிறார்.
- லஹிரி தொடர்ந்து இரண்டாவது முறையாக ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க உள்ளார்.
- மேலும் இவர் SSP சாவ்ரசியாவுடன் (Chawrasia) இணைந்து 2016 ஆம் ஆண்டு ரியோ ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவின் சார்பாக பங்கேற்றுள்ளார்.

## செர்பிய ஓபன் சதுரங்க சாம்பியன்சிப் போட்டி

- இளம் வயது இந்திய கிராண்ட் மாஸ்டரான நிஹால் சரின் செர்பிய ஓபன் சதுரங்க சாம்பியன்சிப் போட்டியில் மாஸ்டர்ஸ் பிரிவில் சாம்பியன்சிப்பினை வென்றுள்ளார்.
- இது பெல்கிரேடில் நடைபெற்றது.
- இது சில்வர் லேக் ஓபன் போட்டியில் வெற்றியடைந்த பிறகு 16 வயது சரினுக்கு கிடைத்த இரண்டாவது தொடர் வெற்றியாகும்.
- இவர் கேரளாவிலுள்ள திருச்சூரைச் சேர்ந்தவர் ஆவார்.



## 20வது கிராண்ட்ஸ்லாம் பட்டம் - நோவாக் ஜோக்கோவிச்

- உலக நம்பர் 1 டென்னிஸ் வீரரான செர்பியாவின் நோவாக் ஜோக்கோவிச் அவர்கள், இத்தாலியின் மேட்டியோ பெரெட்டினியை வீழ்த்தி 2021 ஆம் ஆண்டின் ஆண்களுக்கான விம்பிள்டன் போட்டியில் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.
- ஜோக்கோவிச் தனது 20வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்று, ஒற்றையர் பிரிவில் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற பெரும்பாலான ஆண்களின் சாதனையைச் சமன் செய்துள்ளார்.
- இவர் டென்னிஸின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் அதிக பட்டங்களை (தலா 20) வென்ற வீரர்களான ஸ்பெயின் நாட்டின் ரஃபேல் நடால் மற்றும் சுவிஸ் நாட்டின் ரோஜர் ஃபெடரருடன் இணைகிறார்.
- இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஏற்கனவே ஆஸ்திரேலிய ஓபன் மற்றும் பிரெஞ்சு ஓபன் போட்டிகளை வென்ற ஜோக்கோவிச்சிற்கு இது மூன்றாவது கிராண்ட்ஸ்லாம் வெற்றி ஆகும்.




## கோபா அமெரிக்கா 2021

- கோபா அமெரிக்கா போட்டியில் லியோனெல் மெசி தலைமையிலான அர்ஜென்டினா அணியானது 1-0 என்ற கோல் கணக்கில் நெய்மர் தலைமையிலான பிரேசில் அணியை வீழ்த்தியது.
- அதன் இறுதி ஆட்டம் பிரேசிலில் உள்ள ரியோ டி ஜெனிரியோவிலுள்ள மரக்கானா அரங்கில் நடத்தப் பட்டது.
- இந்த வெற்றியின் மூலமாக லியோனெல் மெசி தனது முதலாவது சர்வதேசக் கோப்பையை வெற்றி கொண்டுள்ளார்.
- 2021 ஆம் ஆண்டு கோபா அமெரிக்கா போட்டியானது 47வது வருடாந்திர சர்வதேச ஆடவர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியாகும்.
- இது தென் அமெரிக்காவின் கால்பந்தாட்ட ஆளுகை அமைப்பான CONMEBOL என்ற அமைப்பால் ஏற்பாடு செய்யப் பட்டது.



## ஐரோப்பிய சாம்பியன்சிப் கோப்பைப் போட்டி

- இத்தாலி அணியானது இரண்டாவது ஐரோப்பிய சாம்பியன்சிப் கோப்பையை வென்றுள்ளது.
- லண்டனின் வெம்ப்லே அரங்கில் நடைபெற்ற யூரோஸ் 2020 கோப்பைப் போட்டியின் இறுதிப் போட்டியில் பெனால்டி மூலம் 3-2 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து அணியை இத்தாலி அணி வீழ்த்தியது.
- 2006 ஆம் ஆண்டு FIFA உலகக் கோப்பையை வென்ற பிறகு இத்தாலி வென்ற முதலாவது சர்வதேசக் கோப்பை இதுவாகும்.

## முதல் இந்திய நடுவர் – டோக்கியோ ஒலிம்பிக்ஸ்

- பவன் சிங் 2020 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டியின் துப்பாக்கிச் சுடுதல் போட்டிக்கான நடுவராக (juror) நியமிக்கப்பட்ட முதல் இந்தியர் எனும் பெருமையைப் பெற்றுள்ளார்.
- இவர் இந்திய தேசிய துப்பாக்கிச் சுடுதல் (ரைஃபில்) போட்டிக் கழகத்தின் இணைத் தலைமைச் செயலாளர் ஆவார்.
- இவர் சமீபத்தில் புதுடெல்லியில் நடைபெற்ற சர்வதேச துப்பாக்கிச் சுடுதல் போட்டி குழுவினுடைய உலகக் கோப்பைப் போட்டியின் மேலாளராக இருந்தார்.
- நடைபெறவிருக்கும் டோக்கியோ ஒலிம்பிக்ஸ் 2020 போட்டியில் 26 நடுவர்கள் அடங்கிய ஒரு குழுவானது இந்தப் போட்டிகளை மேற்பார்வையிடும்.
- இதில் 6 நபர்கள் ஜப்பானையும் மற்றவர்கள் இதர நாடுகளையும் சேர்ந்தவர்கள் ஆவர்.

## விம்பிள்டன் ஒற்றையர் பிரிவு – ஆஷ்லீ பர்டி



- ஆஷ்லீ பார்டி, கரோலினா பிலிஸ்கோவா என்பவரைத் தோற்கடித்து தனது முதலாவது விம்பிள்டன் ஒற்றையர் பிரிவு பட்டத்தை வென்றுள்ளார்.

- 1980 ஆம் ஆண்டிற்குப் பிறகு விம்பிள்டன் மகளிர் ஒற்றையர் பிரிவில் பட்டத்தினை வென்ற முதல் ஆஸ்திரேலியப் பெண்மணி எனும் பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- ஆஸ்திரேலிய வீராங்கனை எவானே கூலகாங் காவ்லே தனது விம்பிள்டன் பட்டத்தை வென்றதையடுத்த 50 ஆண்டுகளுக்குப் பிறகு இவர் இந்த வெற்றியைப் பெற்றுள்ளார்.
- ஆஷ்லீ பார்டி தற்போது மகளிர் டென்னிஸ் கூட்டமைப்பின் மகளிர் ஒற்றையர் பிரிவுப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.

## 14,000 T20 ரன்கள் – கிறிஸ் கெய்ல்




- T20 கிரிக்கெட் போட்டியில் அதிக ரன்களைப் பெற்ற வீரர் மேற்கிந்தியத் தீவுகளின் கிறிஸ் கெய்ல் ஆவார்.
- 14,000 T20 ரன்களை குவித்த முதல் (பேட்ஸ்மேன்) மட்டைப் பந்து வீரரும் இவரே ஆவார்.
- செயின்ட் லூசியாவில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக நடைபெற்ற 3வது T20I போட்டியில் இவர் 14,000 ரன்களைத் தாண்டினார்.

## குரோசியா கிராண்ட் செஸ் போட்டி



FINAL STANDINGS

| POS | | RAPID SCORE | BLITZ SCORE | CURRENT SCORE |
|---|---|---|---|---|
| 1 | MAXIME VACHIER-LAGRAVE | 10.0 | 13.0 | 23.0 |
| 2 | VISWANATHAN ANAND | 9.0 | 12.0 | 21.0 |
| 3 | ANISH GIRI | 10.0 | 10.5 | 20.5 |
| T-4 | IAN NEPOMNIACHTCHI | 11.0 | 9.0 | 20.0 |
| T-4 | JAN-KRZYSZTOF DUDA | 10.0 | 10.0 | 20.0 |
| 6 | SHAKHRIYAR MAMEDYAROV | 9.0 | 10.0 | 19.0 |
| 7 | ALEXANDER GRISCHUK | 8.0 | 10.0 | 18.0 |
| 8 | ANTON KOROBOV | 7.0 | 8.5 | 15.5 |
| 9 | KASPAROV/SARIC | 10.0 | 2.5 | 12.5 |
| 10 | JORDEN VAN FOREEST | 6.0 | 4.5 | 10.5 |

- முன்னாள் உலக சாம்பியனான விஸ்வநாதன் ஆனந்த் குரோசியா கிராண்ட் செஸ் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றார்.
- ஆனந்த் அற்புதமாக விளையாடி தனது போட்டியாளரான கேரி கஸ்பரோவை (Garry Kasparov) தோற்கடித்தார்.
- 2021 ஆம் ஆண்டிற்கான கிராண்ட் செஸ் போட்டியின் வெற்றியாளர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மேக்சிமே வச்செய்ர்-லக்ராவே (Maxime Vachier-Lagrave) என்பவர் ஆவார்.

## 2026 உலக பாட்மிண்டன் சாம்பியன்சிப் – இந்தியா

- உலக பாட்மிண்டன் கூட்டமைப்பானது 2026 ஆம் ஆண்டிற்கான BWF (Badminton World Federation) உலக சாம்பியன்சிப் போட்டியை நடத்தும் பொறுப்பை இந்தியாவிற்கு வழங்கியுள்ளது.
- ஒலிம்பிக் போட்டி நடைபெறும் ஆண்டினைத் தவிர்த்து ஒவ்வொரு வருடமும் நடத்தப் படும் இந்த போட்டியினை இந்தியா இரண்டாவது முறையாக நடத்த உள்ளது.
- 2009 ஆம் ஆண்டில் ஹைதராபாத்தில் BFW உலக சாம்பியன்சிப் போட்டியை இந்தியா நடத்தியது.

## 2032 கோடைகால ஒலிம்பிக் போட்டிகள்

- ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் என்னுமிடத்தில் 2032 ஆம் ஆண்டின் கோடைகால ஒலிம்பிக்ஸ் மற்றும் பாராலிம்பிக்ஸ் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.
- 2000 ஆம் ஆண்டில் சிட்னி மற்றும் 1956 ஆம் ஆண்டில் மெல்போர்ன் ஆகியவற்றை அடுத்து இப்போட்டிகளை நடத்தும் ஒரு மூன்றாவது ஆஸ்திரேலிய நகரம் பிரிஸ்பேன் ஆகும்.
- அமெரிக்காவையடுத்து மூன்று வெவ்வேறு நகரங்களில் கோடைகால ஒலிம்பிக் போட்டிகளை நடத்த உள்ள இரண்டாவது நாடாக ஆஸ்திரேலியா உருவெடுத்துள்ளது.
- பிரிஸ்பேன் நகரானது 2018 ஆம் ஆண்டு காமன்வெல்த் போட்டிகளையும் நடத்தியது.
- பிரான்சின் பாரிஸ் நகரானது 2024 ஆம் ஆண்டின் கோடைகால ஒலிம்பிக் போட்டிகளை நடத்த உள்ளது.
- 2028 ஆம் ஆண்டு கோடைகால ஒலிம்பிக் போட்டிகளை அமெரிக்காவின் லாஸ் ஏஞ்செல்ஸ் நகரம் நடத்த உள்ளது.

Brisbane 2032
Olympic and Paralympic Games Host
Queensland

## ருபினா பிரான்சிஸ்

- மத்தியப் பிரதேசத்தை சேர்ந்த ஒரு துப்பாக்கி சுடும் வீராங்கனையான ருபினா பிரான்சிஸ் பெருவில் நடைபெற்று வரும் பாரா விளையாட்டு கோப்பைப் போட்டியில் உலக சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.
- இவர் மகளிருக்கான பாரா விளையாட்டுப் போட்டியின் 10 மீ ஏர் பிஸ்டல் பிரிவில் தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- இந்த வெற்றியின் மூலம் 2020 ஆம் ஆண்டு டோக்கியோ கோடைகால ஒலிம்பிக் போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்பதற்கான வாய்ப்பினையும் இவர் பெற்று உள்ளார்.



## மீராபாய் சானு – வெள்ளிப் பதக்கத்தினை வென்றார்

- மீராபாய் சானு ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை வென்று 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டியின் மகளிருக்கான பளுதூக்குதல் போட்டியின் 49 கிலோ எடைப் பிரிவில் ஒலிம்பிக் பதக்கத்தை வென்ற முதல் இந்தியர் எனும் பெருமையைப் பெற்றுள்ளார்.
- மகளிருக்கான பளுதூக்குதல் போட்டியில் 49 கிலோ எடைப் பிரிவில் சீனாவில் சிஹூய் ஹூ (Zhihui Hou) என்பவர் தங்கப் பதக்கத்தினை வென்றார்.
- அவர் மொத்தம் 210 கிலோகிராம் எடையைத் தூக்கினார்.
- இந்தோனேசிய நாட்டின் வின்டி கேன்டிகா ஆய்சா என்பவர் வெண்கலப் பதக்கத்தினை வென்றார்.



- சானு இப்போட்டியில் மொத்தம் 202 கிலோகிராம் எடை வரை தூக்கி இந்தப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- கர்ணம் மல்லேஸ்வரியை அடுத்து ஒலிம்பிக் பதக்கத்தை வென்ற இரண்டாவது இந்தியப் பளு தூக்கும் வீராங்கனை எனும் பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- 115 கிலோகிராம் எடையை எந்தவொரு தடையுமின்றி வெற்றிகரமாக தூக்கி ஒரு புதிய ஒலிம்பிக் சாதனையை மீராபாய் சானு படைத்துள்ளார்.

## சுமித் நாகல் – ஒலிம்பிக்கின் டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் வெற்றி பெற்ற மூன்றாவது இந்தியர்

- ஒலிம்பிக் போட்டிகளின் ஆண்களுக்கான டென்னிஸ் ஒற்றையர் பிரிவு போட்டியில் வெற்றி வெற்ற மூன்றாவது இந்திய டென்னிஸ் வீரர் எனும் பெருமையை சுமித் நாகல் பெற்றுள்ளார்.
- 25 ஆண்டுகளில் இந்தியா சார்பாக விளையாடி வெற்றி பெற்ற முதல் வீரர் எனும் பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.
- இவர் இப்போட்டியில் டெனிஸ் இஸ்டோமின் என்பவரை முந்தியுள்ளார்.
- 1996 ஆம் ஆண்டில் நடைபெற்ற அட்லாண்டா போட்டிகளில் பிரேசில் நாட்டின் ஃபெர்னான்டோ மெலிகேனி என்பவரை வீழ்த்தி டென்னிஸ் ஒற்றையர் பிரிவினை வென்ற முதல் இந்தியர் எனும் பெருமையை சீஷான் அலி பெற்றார்.
- டென்னிஸ் போட்டியின் முதல் சுற்றினை கடந்த இரண்டாவது இந்தியர் எனும் பெருமையைப் பெற்றவர் லியான்டர் பயஸ் (Leander Paes) ஆவார்.




## உலக கேடட் மல்யுத்த சாம்பியன்சிப் போட்டி

- ஹங்கேரியின் புத்தாபெஸ்டில் நடைபெற்று வரும் உலக கேடட் மல்யுத்த சாம்பியன்சிப் போட்டியில் இந்திய மல்யுத்த வீராங்கனை பிரியா மாலிக் தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- மாலிக் பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த தனது போட்டியாளரான செனியா படாபோவிச் என்பவரை 5-0 என்ற எண்ணிக்கையில் வீழ்த்தி 73 கிலோ எடைப் பிரிவில் தங்கப் பதக்கத்தினை வென்றார்.
- உலக கேடட் மல்யுத்த சாம்பியன்சிப் போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்திய மல்யுத்த வீரர் எனும் பெருமையை பிரியா மாலிக் பெற்றுள்ளார்.



## டோக்கியோ கோடைகால ஒலிம்பிக் போட்டிகள்

- ஜூலை 23 அன்று ஜப்பானியப் பேரரசர் நருஹிட்டோ, டோக்கியோ கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் துவங்குவதை அறிவித்தார்.
- 32வது ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க விழாவானது பெருந்தொற்றின் காரணமாக எந்தவொரு பார்வையாளர்களும் இன்றி டோக்கியோவிலுள்ள தேசிய மைதானத்தில் நடைபெற்றது.
- ஜப்பான் நாடானது நான்காவது முறையாக ஒலிம்பிக் போட்டிகளை நடத்துகிறது.
- இதற்கு முன்பு இரு முறை குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளையும், (சப்போரோ – 1972 மற்றும் நாகானோ – 1998) டோக்கியோவில் 1964 ஆம் ஆண்டு கோடைகால ஒலிம்பிக் போட்டியையும் ஜப்பான் நாடு நடத்தியுள்ளது.




## ஜப்பானின் இளம் வயதில் தங்கப் பதக்கம் வென்றவர்

- ஜப்பானைச் சேர்ந்த 13 வயதே ஆன ஸ்கேட்போர்டு விளையாட்டு வீரர் மோம்ஜி நிசியா, டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கத்தினை வென்று உள்ளார்.

- ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்ற இளம் வயது விளையாட்டு வீரர்களில் ஒருவராக இவரும் இணைந்துள்ளார்.
- டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளில் முதன்முறையாக அறிமுகம் செய்யப்பட்ட மகளிருக்கான ஸ்கேட்போர்டு தெருப் போட்டியில் நிசியா தங்கம் வென்றார்.
- ஜப்பானின் யூட்டோ ஹோரிகோம் ஆடவருக்கான போட்டியில் வெற்றி பெற்றார்.
- இதன் மூலம் இரு பிரிவுகளிலும் தங்கம் வென்ற பெருமை ஜப்பான் நாட்டிற்கு கிடைத்துள்ளது.



*குறிப்பு*

- ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்ற இளம் வயது விளையாட்டு வீரர் மார்ஜோரீ கெஸ்டிரிங் என்பவராவார்.
- 1936 ஆம் ஆண்டில் நடைபெற்ற பெர்லின் போட்டிகளில் பெண்களுக்கான நீரில் மூழ்கும் (diving) போட்டியில் இவர் வெற்றி பெற்றார்.
- இப்போட்டியின் போது இவருடைய வயது 13 வருடங்கள் மற்றும் 268 நாட்களாகும்.

## 2019 ஆம் ஆண்டின் சிறந்த மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர் – பிரமோத் பகத்

- உலகின் (நம்பர் 1) முன்னணி பாரா பூப்பந்து விளையாட்டு வீரரான பிரமோத் பகத் என்பவர் 2019 ஆம் ஆண்டின் சிறந்த மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர் எனும் பெருமையைப் பெற்றுள்ளார்.
- இந்திய விளையாட்டுக் கௌரவப் பட்டங்களானது விராட் கோலி அறக்கட்டளையுடன் இணைந்து RPSG குழுமத்தினால் நாட்டின் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் விருதுகளாகும்.
- இந்த விருதுகளானது 2017 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.



## ஒலிம்பிக் ஸ்கேட்போர்டிங் போட்டியில் முதல் தங்கப் பதக்கம்

- ஜப்பான் நாட்டைச் சேர்ந்த யூட்டோ ஹோரிகோம் ஒலிம்பிக் போட்டிகளின் முதலாவது ஸ்கேட்போர்டிங் போட்டியில் வென்றுள்ளார்.
- டோக்கியோவிலுள்ள அரியேக் நகர்ப்புற விளையாட்டுப் போட்டியின் ஆடவர் தெருப் போட்டியில் இவர் தங்கம் வென்றுள்ளார்.
- பிரேசில் நாட்டின் கெல்வின் ஹோம்லெர் ஆடவருக்கான ஸ்கேட்போர்டிங் தெருப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- அமெரிக்கா நாட்டின் ஜாகர் ஈடன் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.



## ரஷ்ய ஒலிம்பிக் குழு (ROC)

- ROC என்பதன் விரிவாக்கம் Russian Olympic Committee (ரஷ்ய ஒலிம்பிக் குழு) என்பதாகும்.
- இது ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க ரஷ்யாவிற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதால் ரஷ்ய தடகள வீரர்கள் ஒலிம்பிக்கில் பங்கேற்க வழிவகுக்கும் ஒரு தீர்வாகும்.

*குறிப்பு*

- ஊக்க மருந்து ஊழல் தொடர்பாக ஒலிம்பிக் போட்டிகள் உள்ளிட்ட அனைத்து சர்வதேச விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கேற்பதற்கு ரஷ்யாவிற்கு நான்கு ஆண்டுகள் தடை விதித்து 2019 ஆம் ஆண்டில் உலக ஊக்கமருந்து தடுப்பு நிறுவனம் உத்தரவிட்டது.
- விளையாட்டுத் துறைக்கான நடுவண் நீதிமன்றம் இந்த தண்டனையைப் பாதியாக்கி இரண்டு வருடங்களாகக் குறைத்துள்ளதால், இந்த தடையானது 2022 ஆம் ஆண்டோடு முடிவடைகிறது.
- ஆனால் இந்த ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் ரஷ்யா ஒரு நாடு எனும் அந்தஸ்தில் பங்கேற்க இயலாது.
- எனவே ROC எனும் குழு ஒன்று உருவாக்கப்பட்டது.
- மேலும் அதனால் ஒலிம்பிக் போட்டியில் ரஷ்ய நாட்டுக் கொடியைக் காட்சிப் படுத்தவும் அந்நாட்டு தேசிய கீதத்தைப் பிரயோகிக்கவும் இயலாது.

# முக்கிய தினங்கள்

## தேசியப் பட்டயக் கணக்காளர் தினம் – ஜூலை 01

- 1949 ஆம் ஆண்டில் இந்திய நாடாளுமன்றத்தினால் இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனம் தொடங்கப்பட்டதை நினைவு கூறும் வகையில் இந்த தினமானது கடைபிடிக்கப் படுகிறது.
- பட்டயக் கணக்காளர்களைக் கௌரவிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் பட்டயக் கணக்காளர் தினமானது கடைபிடிக்கப்படுகிறது.
- இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனமானது இந்தியாவின் தேசிய தொழில்முறை கணக்கியல் அமைப்பாக இருப்பதோடு, உலகின் இரண்டாவது மிகப்பெரிய கணக்கியல் அமைப்பாகவும் உள்ளது.
- இதன் தலைமையகம் புதுடெல்லியில் அமைந்துள்ளது.




## தேசிய மருத்துவர்கள் தினம் – ஜூலை 01



- இந்தியாவில் இந்த தினமானது இந்திய மருத்துவச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப் படுகிறது.
- சிறப்பாக பணியாற்றும் மருத்துவர்களுக்கு கௌரவமளிக்கும் வகையிலும் நமது வாழ்வில் மருத்துவர்களின் முக்கியத்துவம் பற்றிப் புரிந்து கொள்ள உதவிடச் செய்வதற்காகவும் வேண்டி இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த தினமானது மேற்கு வங்கத்தின் இரண்டாம் முதலமைச்சர் டாக்டர் பிதன் சந்த்ர ராய் அவர்களின் பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் கடைபிடிக்கப் படுகிறது.

## தேசிய அஞ்சல் பணியாளர் தினம் – ஜூலை 01

- இந்த தினமானது ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 01 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப் படுகிறது.
- இது முதன்முதலில் சியாட்டில் பகுதியில் அஞ்சல் நிறுவனத்தால் அனுசரிக்கப்பட்டது.
- அயராது தடையற்ற சேவைகளை வழங்கி வரும் அஞ்சல் பணியாளர்களுக்கு நமது நன்றியைத் தெரிவிக்கும் வகையில் இந்த தினமானது அனுசரிக்கப் படுகிறது.

## பாரத ஸ்டேட் வங்கி தினம் – ஜூலை 01

- பாரத ஸ்டேட் வங்கியின் 66வது நிறுவன தினமானது சமீபத்தில் கொண்டாடப்பட்டது.
- 1921 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்ட இந்திய இம்பீரியல் வங்கியானது 1955 ஆம் ஆண்டின் ஜூலை 1 ஆம் தேதியில் பாரத ஸ்டேட் வங்கியாக உருவெடுத்தது.
- இது ஃபார்ச்சூன் 500 பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரு வங்கியாகும்.
- இது ஒரு இந்தியப் பன்னாட்டு வங்கி, பொதுத் துறை வங்கி மற்றும் நிதிச் சேவை வழங்கும் சட்டமுறையிலான ஒரு அமைப்பாகும்.
- இதன் தலைமையகம் மும்பையில் அமைந்துள்ளது.



## சரக்கு மற்றும் சேவை வரி தினம் – ஜூலை 01

- சரக்கு மற்றும் சேவை வரியானது இந்தியாவில் வழங்கப்படும் சரக்குகள் மற்றும் சேவைகள் மீது விதிக்கப்படும் மறைமுக, பலப்படித்தான மற்றும் விரிவான ஒரு வரியாகும்.
- இந்த தேதியானது மத்திய அரசினால் சரக்கு மற்றும் சேவை வரி தினமாக அறிவிக்கப் பட்டது.
- இந்த ஆண்டை இந்தியா சரக்கு மற்றும் சேவை வரி விதிக்கப்பட்ட நான்காம் நிறைவு ஆண்டாக அனுசரிக்கின்றது (2017).




## அடையாளம் காண முடியாத பறக்கும் பொருட்களுக்கான உலகளாவிய தினம் – ஜூலை 02

- இது உலக அடையாளம் காண முடியாத பறக்கும் பொருட்கள் அமைப்பினால் அனுசரிக்கப் படுகிறது.
- அடையாளம் காண முடியாத பறக்கும் பொருட்கள் குறித்த ஒரு விழிப்புணர்வை பரப்புவதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- மேலும் இந்த பிரபஞ்சத்தில் நாம் மட்டும் இல்லை என்பதைப் பற்றி சிந்திக்கவும் இந்நாள் மக்களை ஊக்குவிக்கிறது.

## உலக விளையாட்டுத் துறை பத்திரிக்கையாளர் தினம் – ஜூலை 02

- விளையாட்டுத் துறை பத்திரிக்கையாளர்களின் பணிகளுக்கு அங்கீகாரம் அளிப்பதையும் அவர்களது பணியில் சிறந்து செயலாற்ற அவர்களுக்கு ஊக்கமளிப்பதையும் இந்த தினமானது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகெங்கிலும் உள்ள பத்திரிக்கையாளர் சங்கங்களானது சர்வதேச விளையாட்டுத் துறை பத்திரிக்கையாளர் சங்கத்தினால் ஒன்று திரட்டப் பட்டு ஆரம்பிக்கப் பட்டது.

- உலக விளையாட்டுத் துறை பத்திரிக்கையாளர் தினமானது 1994 ஆம் ஆண்டில் சர்வதேச விளையாட்டுத் துறை பத்திரிக்கையாளர் சங்கத்தினால் நிறுவப்பட்டது.

## சர்வதேச கூட்டுறவு நிறுவனங்கள் தினம் – ஜூலை 03

- ஐக்கிய நாடுகள் அவையானது ஒவ்வோர் ஆண்டும் ஜூலை மாதத்தின் முதல் சனிக் கிழமையினை (2021 ஆம் ஆண்டில் ஜூலை 03) சர்வதேச கூட்டுறவு நிறுவனங்கள் தினமாகக் கடைபிடிக்கின்றது.
- கூட்டுறவு நிறுவனங்கள் பற்றிய ஒரு விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக இந்த தினமானது உருவாக்கப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டில், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் கூட்டுறவு நிறுவனங்களின் பங்களிப்பினை மையமாகக் கொண்டு சர்வதேச கூட்டுறவு நிறுவனங்கள் தினமானது அனுசரிக்கப்பட்டது.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, “Rebuild better together” என்பதாகும்.




## சர்வதேச நெகிழிப்பை இல்லா தினம் – ஜூலை 03

- இந்த தினமானது ஜீரோ வேஸ்ட் யுரோப் எனும் அமைப்பினால் தொடங்கப் பட்டதாகும்.
- சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி உயிரிச் சிதைவுக்கு உட்படாத நெகிழிப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கு எதிரான ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தச் செய்வதற்காக இந்த தினமானது கடைப்பிடிக்கப்படுகிறது.
- நமது அன்றாடப் பயன்பாட்டிலிருந்து ஒற்றைப் பயன்பாட்டு நெகிழிகளை அகற்றச் செய்வதையே இந்த அமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## அமெரிக்க சுதந்திர தினம் – ஜூலை 04

- ஜூலை 04 அன்று அமெரிக்கச் சுதந்திர தினமானது கொண்டாடப்பட்டது.
- இது “Fourth of July” எனவும் அழைக்கப்படுகிறது.
- இது அமெரிக்க நாடானது தேசம் எனும் ஒரு நிலையை அடைந்த நாளை நினைவு கூறுகிறது.
- இந்த ஆண்டானது பிரித்தானியக் காலனித்துவ ஆட்சியிலிருந்து 13 அமெரிக்க காலனித்துவ நாடுகள் விடுதலை பெற்றதன் 245வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.




## உலக விலங்கு வழி நோய்கள் தினம் – ஜூலை 06




- விலங்குகள் வழியே பரவக் கூடிய நோய்கள் பற்றிய ஒரு விழிப்புணர்வைப் பரப்பச் செய்வதற்காக ஒவ்வோர் ஆண்டும் இந்த தினமானது கடைபிடிக்கப்படுகிறது.
- விலங்குவழி நோய்களானது விலங்குகளிடமிருந்து மனிதனுக்கும், மனிதர்களிடமிருந்து விலங்குகளுக்கும் பரவக் கூடிய ஒரு தொற்றுநோய் (வைரஸ், பாக்டீரியா மற்றும் ஒட்டுண்ணிகள்) ஆகும்.
- லூயிஸ் பாஸ்டியர் அவர்கள் 1885 ஆம் ஆண்டு ஜூலை 06 அன்று ராபிஸ் வைரசுக்கு எதிரான முதல் தடுப்பூசியை வெற்றிகரமாக செலுத்தினார்.
- ராபிஸ் என்பது ஒரு விலங்கு வழி நோயாகும்.

## உலகளாவிய மன்னிப்பு தினம் – ஜூலை 07

- மன்னிக்கும் கலையை ஊக்குவிப்பதற்காக வேண்டி ஒவ்வோர் ஆண்டும் இந்த தினமானது கடைபிடிக்கப் படுகிறது.

- மன்னிப்பதின் மூலமான ஆசுவாசப்படுத்தும் திறன் மற்றும் அமைதியான வாழ்விற்கான அதன் முக்கியத்துவம் குறித்து ஒரு விழிப்புணர்வைப் பரப்புவதே இதன் நோக்கமாகும்.
- மன்னிப்பை வழங்க முற்படும் மக்கள் நலமானவர்கள் மற்றும் மகிழ்ச்சியானவர்கள் என்று ஆய்வுகளில் நிரூபிக்கப் பட்டுள்ளது.




**வன மகோத்சவ் 2021 – ஜூலை 01 முதல் ஜூலை 07**




- வன மகோத்சவ் 2021 என்பது இந்தியாவில் அனுசரிக்கப்படும் ஒரு வார கால அளவிலான ஒரு கொண்டாட்டமாகும்.
- ஒவ்வோர் ஆண்டும் ஜூலை மாதத்தின் முதல் வாரத்தில் வன மகோத்சவ் கொண்டாடப் படுகிறது.
- மரக்கன்றுகள் நடுதல் மற்றும் காடுகளின் வளங்காப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இது அனுசரிக்கப் படுகின்றது.
- வன மகோத்சவ் இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான மரக்கன்றுகளை நடும் ஒரு நிகழ்வாக கொண்டாடப் படுகிறது.

## சர்வதேச மாம்பழத் திருவிழா - ஜூலை 09 முதல் 10 வரை

- ❖ சர்வதேச மாம்பழத் திருவிழாவானது ஆண்டுதோறும் டெல்லியில் உள்ள டில்லி ஹாத்தில் நடைபெற்று வரும் ஒரு திருவிழாவாகும்.
- ❖ இது இந்தியாவின் வெவ்வேறு மாநிலங்களில் விளையும் மாம்பழ வகைகளின் சிறப்புகளைப் பறைசாற்றுகிறது.
- ❖ இந்த நிகழ்வானது டெல்லி மாநிலச் சுற்றுலா மற்றும் போக்குவரத்து மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து டெல்லி அரசினால் ஏற்பாடு செய்யப் படுகிறது.

## தேசிய மீன்வளர்ப்பு விவசாயிகள் தினம் – ஜூலை 10

- ❖ இந்த தினமானது ஒவ்வோர் ஆண்டும் தேசிய மீன்வளத்துறை மேம்பாட்டு வாரியத்துடன் இணைந்து மீன்வளத்துறை, கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகத்தினால் கடைபிடிக்கப் படுகிறது.
- ❖ நிலையான வள இருப்புகள் மற்றும் ஆரோக்கியமான சூழ்நிலைகள் போன்றவற்றை உறுதி செய்வதற்காக மீன்வளங்களை மேலாண்மை செய்யும் முறையை மாற்றுவதற்கான கவனத்தை ஈர்ப்பதையே இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்த தினமானது டாக்டர் K.H. அலிகுன்ஹி மற்றும் டாக்டர் H.L. சௌத்ரி ஆகிய அறிவியலாளர்களின் நினைவாக ஒவ்வொரு வருடமும் கடைபிடிக்கப்படுகிறது.
- ❖ இவர்கள் 1957 ஆம் ஆண்டு ஜூலை 10 அன்று இந்தியாவின் முதன்மை மீன் வகை இனங்களின் தூண்டப்பட்ட இனப்பெருக்கத் தொழில்நுட்பத்தை (induced breeding technology) கண்டுபிடித்தனர்.
- ❖ 2021 ஆம் ஆண்டானது 21வது தேசிய மீன் வளர்ப்பு விவசாயிகள் தினத்தைக் குறிக்கிறது.




## உலக மக்கள் தொகை தினம் – ஜூலை 11

- ❖ 2021 ஆம் ஆண்டானது 32வது உலக மக்கள்தொகை தினத்தைக் குறிக்கிறது.
- ❖ இது அதிக மக்கள்தொகையினால் ஏற்படும் சிக்கல்களை குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- ❖ மேலும் சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றில் அதிக மக்கள் தொகையினால் ஏற்படும் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் வேண்டி இந்த தினமானது கடைபிடிக்கப் படுகிறது.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "கருவுறு திறனில் கோவிட்-19 பெருந் தொற்று ஏற்படுத்திய தாக்கம்" என்பதாகும்.
- முதலாவது உலக மக்கள்தொகை தினமானது 1989 ஆம் ஆண்டு ஜூலை 11 அன்று கடைபிடிக்கப் பட்டது.
- இது ஐக்கிய நாடுகள் அவையின் மேம்பாட்டுத் திட்ட அமைப்பினுடைய ஆளுகை மன்றத்தினால் நிறுவப்பட்டது.
- இந்தத் தினமானது உலக மக்கள்தொகை 5 பில்லியனை எட்டிய போது டாக்டர் K.C. ஜக்காரியா அவர்களால் பரிந்துரைக்கப் பட்டது.

## உலக மலாலா தினம் – ஜூலை 12




- இளம் வயது ஆர்வலர் மலாலா யூசப்சாய் அவர்களைக் கௌரவிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் அவையானது இந்த தினத்தை அறிவித்தது.
- உலகெங்கிலும் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளை கௌரவிக்கும் விதமாக மலாலா யூசப்சாய் அவர்களின் பிறந்த நாளானது மலாலா தினமாக நினைவு கூறப் படுகிறது.

*குறிப்பு*

- 2012 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் அரசு இவருக்கு முதலாவது தேசிய இளைஞர் அமைதிப் பரிசினை வழங்கியது.
- 2014 ஆம் ஆண்டில் நோபல் பரிசினை வென்ற இளம் வயது நபர் (17 வயது) எனும் பெருமையை இவர் பெற்றார்.
- 2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஐக்கிய நாடுகள் வெளியிட்ட தனது மறுசீராய்வு அறிக்கையில் தசாப்தத்தின் உலகின் மிக பிரபலமான இளைஞர் என்று இவரைக் குறிப்பிட்டது.

## NABARD தினம் – ஜூலை 12

- தேசிய வேளாண் மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கியானது (National Bank for Agriculture and Rural Development – NABARD) 1982 ஆம் ஆண்டு ஜூலை 12 அன்று நடைமுறைக்கு வந்தது.
- இது B. சிவராமன் குழுவின் பரிந்துரையின் பேரில் அமைக்கப்பட்டது.
- இந்த ஆண்டு NABARD வங்கியின் 40வது நிறுவன தினமாகும்.

## பாஸ்டில் தினம் – ஜூலை 14

- பாஸ்டில் தினமானது பொதுவாக பிரான்ஸ் நாட்டின் தேசிய தினமாக அறியப் படுகிறது.
- பிரான்ஸ் நாட்டின் தேசிய தினமானது 1789 ஆம் ஆண்டு ஜூலை 14 அன்று பாஸ்டில் சிறையின் வீழ்ச்சியின் நினைவாக அனுசரிக்கப்படுகிறது.
- அன்று தான் ஒரு ஆக்ரோசமான மக்கள் கூட்டமானது இராணுவக் கோட்டையையும் அரசியல் கைதிகள் சிறை வைக்கப் பட்டிருந்த சிறைச்சாலையையும் (பாஸ்டில்) கைப்பற்றிய தினமாகும்.

## உலக இளைஞர்திறன் தினம் – ஜூலை 15




- இளைஞர்கள் மத்தியில் வேலைவாய்ப்பு, தரமான வேலை மற்றும் தொழில்முனைவு போன்றவற்றிற்கான திறன்களை வழங்கச் செய்வதன் ஒரு முக்கியத்துவத்தை உலகிற்குத் தெரியப்படுத்தும் நோக்கில் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் இந்த தினம் அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Reimagining Youth Skills Post – Pandemic” (பெருந் தொற்றுக்குப் பிந்தைய காலத்தில் திறன்களை மறுசீரமைத்தல்) என்பது ஆகும்.
- 2014 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஜூலை 15 ஆம் தேதியினை உலக இளைஞர் திறன் தினமாக அறிவித்தது.

## கல்வி வளர்ச்சி தினம் – ஜூலை 15

- தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் K. காமராஜர் அவர்களின் 119வது பிறந்த நாளானது 15-07-2021 அன்று கொண்டாடப்பட்டது.
- தமிழகத்தில் K. காமராஜர் அவர்களின் பிறந்தநாளானது (ஜூலை 15) ‘கல்வி தினம்’ அல்லது கல்வி வளர்ச்சி தினமாகக் கொண்டாடப்படுகிறது.
- 2006 ஆம் ஆண்டு முதல் இந்த தினமானது கல்வி வளர்ச்சி தினமாக கடைபிடிக்கப் படுகிறது.




## உலக ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை தினம் – ஜூலை 15

- இந்தியாவின் தேசிய ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை தினமானது (National Plastic Surgery Day) இனி உலக ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை தினமாக அனுசரிக்கப்படும்.
- இந்த அறிவிப்பானது இந்திய ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை நிபுணர்கள் கூட்டமைப்பினால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
- தேசிய ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை தினம் எனும் கருத்துருவானது முதன்முறையாக டாக்டர். S. ராஜசபாபதி என்பவரால் 2011 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## சர்வதேச நீதி தினம் – ஜூலை 17

- பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் பணிகளை அங்கீகரிக்கவும் அதற்கு ஆதரவு வழங்கவும் வேண்டி சர்வதேச நீதிக்கான உலக தினமானது உலகம் முழுவதும் அனுசரிக்கப் படுகிறது.
- இந்த தினமானது 1998 ஆம் ஆண்டு ஜூலை 17 அன்று ரோம் சட்டம் ஏற்றுக் கொள்ளப் பட்டதன் நினைவு நாளைக் குறிக்கிறது.
- ரோம் சட்டம் என்பது பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தை நிறுவிய ஒரு ஸ்தாபன ஒப்பந்தமாகும்.



## நெல்சன் மண்டேலா தினம் - ஜூலை 18

- ஐக்கிய நாடுகள் அமைப்பானது ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 18 ஆம் நாளினை சர்வதேச நெல்சன் மண்டேலா தினமாக அனுசரிக்கின்றது.
- இத்தினத்திற்கான இவ்வருடத்தின் கருத்துரு “ஒரு கை மற்றொருவருக்கு உதவ முடியும்”.
- 2009 ஆம் ஆண்டு ஜூலை 18 அன்று நியூயார்க்கில் சர்வதேச மண்டேலா தினமானது முதன்முதலில் அனுசரிக்கப்பட்டது.
- இவ்வருடம் நெல்சன் மண்டேலாவின் 103வது பிறந்த தினத்தைக் குறிக்கின்றது.
- இவர் சுதந்திர தென்னாப்பிரிக்காவில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப் பட்ட முதலாவது குடியரசுத் தலைவர் ஆவார்.




## வங்கி தேசியமயமாக்கல் நாள் - ஜூலை 19

- 1969 ஆம் ஆண்டின் இதே நாளில், 14 முதன்மை வங்கிகள் இந்தியாவின் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் தேசிய மயமாக்கப்பட்டது.
- இந்த வங்கிகள் நாட்டின் 85 சதவீத வங்கி வைப்புக்களை கொண்டிருந்தன.
- அப்போது தேசியமயமாக்கலுக்குக் கூறப்பட்ட ஒரு காரணம், 'கடன் வழங்கலில் இந்திய அரசாங்கத்திற்குக் கூடுதல் கட்டுப்பாட்டைக் கொடுப்பதற்காக' என்பதாகும்.
- 1980 ஆம் ஆண்டில் மேலும் ஆறு வங்கிகள் தேசியமயமாக்கப் பட்டன.



## சர்வதேச சதுரங்க விளையாட்டு தினம் - ஜூலை 20

- ❖ 1924 ஆம் ஆண்டின் இதே நாளில் தான் சர்வதேச சதுரங்க விளையாட்டு கூட்டமைப்பு என்பது நிறுவப்பட்டது.
- ❖ கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த விளையாட்டிற்கு முதலில் "சதுரங்கா" என்று பெயரிடப்பட்டது.

## அறிவியல் ஆய்வு நாள் - ஜூலை 20

- ❖ 1969 ஆம் ஆண்டின் இதே நாளில் தான் அமெரிக்காவைச் சேர்ந்த நீல் ஆம்ஸ்ட்ராங் மற்றும் எட்வின் 'பஸ்' ஆல்ட்ரின் ஆகிய இருவரும் சந்திரனின் மேற்பரப்பில் இறங்கிய முதல் மனிதர்களாக உருவெடுத்தார்கள்.
- ❖ நிலவின் மேற்பரப்பில் கால் வைத்த முதல் மனிதர் நீல் ஆம்ஸ்ட்ராங் ஆவார்.
- ❖ ஆம்ஸ்ட்ராங் - ஆல்ட்ரின் ஆகிய இருவரும் சந்திரனின் மேற்பரப்பில் 21.5 மணி நேரம் செலவிட்டனர்.
- ❖ அதில் விண்கலத்திற்கு வெளியே அவர்கள் 2.5 மணி நேரம் செலவிட்டனர்.
- ❖ 1984 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் அப்போதைய அதிபர் ரொனால்ட் ரீகன் இந்த நாளை விடுமுறை நாளாக அறிவித்தார்.

## பை (π) தினம் – ஜூலை 22

- ❖ இது π எனும் ஒரு கணித மாறிலியைக் கொண்டாடுவதற்கான ஒரு வருடாந்திரக் கொண்டாட்டமாகும்.
- ❖ பை (π) என்பது ஒரு வட்டத்தின் சுற்றளவு மற்றும் அதன் விட்டம் ஆகியவற்றிற்கு இடையேயான ஒரு விகிதமாகும்.
- ❖ 22/7 எனும் தேதி/மாத முறைமையானது  என்பதன் தோராய மதிப்பாகும்.




## தேசிய மாம்பழ தினம் – ஜூலை 22

- ❖ மாம்பழமானது இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் தேசிய பழமாகும்.
- ❖ இந்தியாவில் இவை பொதுவாக மார்ச் – மே மாதங்களின் போது அறுவடை செய்யப் படுகின்றன.
- ❖ இது பழத்தின் ராஜா என அழைக்கப் படுகிறது.
- ❖ 1987 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் சர்வதேச மாம்பழத் திருவிழாவானது டெல்லியில் கொண்டாடப் படுகிறது.

## தேசிய ஒளிபரப்பு தினம் – ஜூலை 23

- 1927 ஆம் ஆண்டின் இதே நாளில் தான் இந்திய ஒளிபரப்பு நிறுவனத்தின் பம்பாய் வானொலி நிலையத்திலிருந்து முதல் வானொலி ஒலிபரப்பானது ஒலிபரப்பப் பட்டது.
- இந்தியாவில் வானொலி ஒலிபரப்பானது 1923 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் ஆட்சியின் போது பம்பாய் வானொலிச் சங்கத்தினால் தொடங்கப்பட்டது.
- பின்பு அது 1936 ஆம் ஆண்டில் அனைத்திந்திய வானொலியாகவும் 1957 ஆம் ஆண்டில் ஆகாஷ்வானியாகவும் மாற்றப் பட்டது.
- இது இந்தியாவின் மிகப்பெரிய ஒளிபரப்பு நிறுவனமான பிரசார் பாரதி என்ற ஒரு நிறுவனத்திற்குச் சொந்தமானதாகும்.




## தேசிய வெப்பவியல் பொறியாளர் தினம் – ஜூலை 24

- தினசரி வாழ்வில் வெப்பவியல் பொறியாளர்கள் ஆற்றும் முக்கியப் பங்களிப்பினை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- இந்த தினம் ஆண்டின் வெப்பமான நாட்களுள் ஒன்று என்பதனால் வெப்பவியல் பொறியாளர்களின் பங்களிப்பினைக் கொண்டாட இந்த தினமானது தேர்ந்தெடுக்கப் பட்டது.
- இத்தினமானது 2014 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அமெரிக்காவின் அட்வான்சுடு தெர்மல் சொல்யூசன்ஸ் எனும் நிறுவனத்தினால் நிறுவப்பட்டது.

## வருமான வரி தினம் – ஜூலை 24

- 1860 ஆம் ஆண்டு ஜூலை 24 அன்று சர் ஜேம்ஸ் வில்சன் என்பவரால் இந்தியாவில் வருமான வரி அறிமுகப் படுத்தப்பட்டது.
- இது 1857 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் இந்திய சுதந்திரப் போரின் போது பிரித்தானிய அரசிற்கு ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்வதற்காக விதிக்கப்பட்டது.

- இந்தத் தினமே 2010 ஆம் ஆண்டு முதல் வருமான வரி தினமாக இந்தியாவில் அனுசரிக்கப் பட்டு வருகிறது.
- இந்த தினமானது மத்திய நேர்முக வரிகள் வாரியத்தினால் அனுசரிக்கப் படுகிறது.




## உலக மூளை தினம் – ஜூலை 22

- உலக நரம்பியல் கூட்டமைப்பானது 2014 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் உலக மூளை தினத்தைக் கடைபிடித்து வருகிறது.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "Stop Multiple Sclerosis" என்பதாகும்.




## நீர்நிலைகளில் மூழ்குவதைத் தடுப்பதற்கான உலக தினம் – ஜூலை 25

- இது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் இயற்றப் பட்ட "Global Drowning Prevention" எனும் ஒரு தீர்மானத்தின் மூலம் அறிவிக்கப் பட்டது.
- இந்த தீர்மானமானது அயர்லாந்து மற்றும் வங்காள தேசம் ஆகிய நாடுகளின் ஒரு முன்னெடுப்பாகும்.
- உலக சுகாதார அமைப்பின் மேற்கு பசிபிக் பகுதியில் நீர்நிலைகளில் மூழ்குவதால் ஏற்படும் உயிரிழப்பு அதிகமாக உள்ளது.
- உலகின் பெரும்பாலான பகுதிகளில், மூழ்குவதால் ஏற்படும் உயிரிழப்புகளில் பாதியளவுக்கும் மேற்பட்டவை தென்கிழக்கு ஆசியப் பகுதிகளிலே ஏற்படுகின்றன.




## தேசியப் பெற்றோர்கள் தினம் – ஜூலை 25

- இது ஜூலை மாதத்தின் நான்காவது ஞாயிறு அன்று கடைபிடிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டில் இந்த தினமானது ஜூலை 25 அன்று கொண்டாடப் படுகிறது.
- பெற்றோர்கள் மற்றும் நமது வாழ்வில் அவர்கள் ஆற்றும் பங்கு ஆகியவற்றிற்கு மரியாதை செலுத்தும் வகையில் இந்த தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- ஒவ்வோர் ஆண்டிலும் ஜூலை மாதத்தின் நான்காவது ஞாயிற்றுக் கிழமையைப் பெற்றோர்கள் தினமாக அனுசரிக்க வேண்டி அமெரிக்க காங்கிரஸ் இயற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் இயற்றப்பட்ட சட்டத்தில் அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் 1994 ஆம் ஆண்டில் கையெழுத்திட்டார்.

## சதுப்பு நிலக் காடுகளின் சூழல் வளங்காப்பிற்கான சர்வதேச தினம் – ஜூலை 26

- இந்த தினமானது 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற யுனெஸ்கோவின் பொது மாநாட்டினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- 'தனித்துவம் மிக்க, சிறப்புமிக்க மற்றும் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய சூழலமைப்பாக' திகழும் சதுப்புநிலக் காடுகளின் முக்கியத்துவம் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் அவற்றின் நிலையான மேலாண்மை, வளங்காப்பு மற்றும் பயன்பாடுகள் ஆகியவற்றிற்கான தீர்வுகளை மேம்படுத்தச் செய்வதையுமே நோக்கமாகக் கொண்டு இந்த தினமானது அனுசரிக்கப் படுகிறது.

## கார்கில் விஜய் திவாஸ் – ஜூலை 26

- இந்த ஆண்டு 22வது கார்கில் விஜய் திவாஸ் தினம் ஆகும்.
- இந்த நாளானது பாகிஸ்தான் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த மலைப் பகுதிகளை மீட்பதில் இந்திய வீரர்கள் பெற்ற வெற்றியைக் கொண்டாடும் ஒரு தினமாகும்.
- 1999 ஆம் ஆண்டு ஜூலை 26 அன்று கார்கில் போர் ஆனது முடிவுற்றதாக அறிவிக்கப் பட்டது.

- இந்தியா பெற்ற வெற்றியின் நினைவாக இந்த தினமானது 'கார்கில் விஜய் திவாஸ்' தினமாக கடைபிடிக்கப் படுகிறது.




## செயற்கைக் கருத்தரிப்பு முறை தினம் – ஜூலை 25




- ஜூலை 25 அன்று உலகம் முழுவதும் செயற்கைக் கருத்தரிப்பு முறை தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- மகப்பேறு மருத்துவத் துறையில் உருவாக்கப்பட்ட ஒரு மகத்தான கண்டுபிடிப்பினை நினைவு கூறும் வண்ணம் இந்த நாளானது கடைபிடிக்கப் படுகின்றது.
- இங்கிலாந்தில் 1978 ஆம் ஆண்டு ஜூலை 25 அன்று லூயிஸ் பிரவுன் என்பவர் இந்த செயற்கை கருத்தரிப்பு முறையால் பிறந்தார்.
- இந்தியாவில் டாக்டர் சுபாஷ் முகர்ஜி என்பவரும் செயற்கை கருத்தரிப்புப் பற்றிய ஆய்வுகளை செய்து வந்தார்.
- லூயிஸ் பிரவுன் பிறந்த அடுத்த மூன்று மாதங்களுக்குள்ளாகவே 1978 ஆம் ஆண்டு அக்டோபர் 03 அன்று கனுப்பிரியா அகர்வால் இந்த முறையின் மூலம் பிறந்தார்.

- இந்தியாவின் முதலாவது செயற்கை கருத்தரிப்பு முறையில் பிறந்த அந்தக் குழந்தைக்கு டாக்டர் சுபாஷ் முகர்ஜி முதலில் 'துர்கா' எனப் பெயரிட்டார், ஆனால் பின்னாளில் அவரது பெற்றோர்கள் அவருக்கு கனுப்பிரியா எனப் பெயரிட்டனர்.
- இவர் இந்தியாவின் முதலாவது மற்றும் உலகின் 2வது செயற்கை கருத்தரிப்பு முறை மூலம் பிறந்த குழந்தை ஆவார்.

## CRPF நிறுவன தினம் – ஜூலை 27

- மத்திய ரிசர்வ் காவல் படையானது 2021 ஆம் ஆண்டு ஜூலை 27 அன்று அதன் 83வது நிறுவன தினத்தைக் கொண்டாடியது.
- மத்திய ரிசர்வ் காவல் படையானது உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் இந்தியாவின் மிகப்பெரிய மத்திய ஆயுதக் காவல் படையாகும்.
- இதன் தலைமையகம் புதுடெல்லியில் அமைந்துள்ளது.
- இப்படையானது 1939 ஆம் ஆண்டு ஜூலை 27 அன்று அரசப் பிரதிநிதித்துவ காவல் படையாக நிறுவப்பட்டது.
- இந்திய விடுதலைக்குப் பிறகு 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 28 அன்று இயற்றப்பட்ட மத்திய ரிசர்வ் காவல்படை சட்டத்தின் மூலம் மத்திய ரிசர்வ் காவல் படையாக உருப்பெற்றது.




## உலக கல்லீரல் அழற்சி நோய் தினம் – ஜூலை 28

- வைரசால் ஏற்படும் கல்லீரல் அழற்சி நோய் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதன் நோக்கில் இந்த தினமானது அனுசரிக்கப்படுகின்றது.
- இது கல்லீரல் புற்றுநோய் போன்ற உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் வகையிலான கல்லீரலில் ஏற்படும் அழற்சி நோயாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Hepatitis Can't Wait" என்பதாகும்.



## உலக இயற்கை வளங்காப்பு தினம் – ஜூலை 28

- இயற்கையைப் பாதுகாத்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நமது இயற்கை வளங்களைக் காப்பதற்கான சிறந்த நடைமுறைகளை மேற்கொள்ளச் செய்வதற்குமான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் வேண்டி இந்த தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- நாம் தினமும் சார்ந்திருக்கின்ற நீர், காற்று, மண் மற்றும் மரங்கள் போன்ற குறிப்பிட்ட அளவிலான சில வளங்களை இந்தப் பூமி நமக்கு வழங்குகின்றது.
- இந்த வருடத்திற்கான இந்த தினத்தின் கருத்துரு "வனங்களும் வாழ்வாதாரமும்: மக்களையும் பூமியையும் பாதுகாப்பது" என்பதாகும்.




## சர்வதேச புலிகள் தினம் – ஜூலை 29




- காட்டுப் பூனைகளின் இனமான புலிகளின் எண்ணிக்கை குறைந்து வருவது பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அவற்றைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும் வேண்டி ஒவ்வொரு வருடமும் உலக புலிகள் தினம் அல்லது சர்வதேச புலிகள் தினமானது அனுசரிக்கப்படுகிறது.

- இந்த ஆண்டு அதன் 11வது சர்வதேச புலிகள் தினமாகும்.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "Their Survival is in our hands" (அவற்றின் பாதுகாப்பு நமது கைகளில்) என்பதாகும்.
- செயின்ட் பீட்டர்ஸ்பெர்க் என்ற உடன்படிக்கை கையெழுத்தானபோது உலக புலிகள் தினமானது நடைமுறைக்கு வந்தது.
- இந்த உடன்படிக்கையானது 2010 ஆம் ஆண்டில் ரஷ்யாவில் 13 புலிகள் வாழிட நாடுகளால் கையெழுத்திடப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டுக்குள் புலிகளின் வளங்காப்பு, அவற்றின் இயற்கை வாழிடங்களைப் பாதுகாத்தல் மற்றும் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குதல் போன்றவற்றை ஊக்குவிப்பதற்கு இந்தப் புலிகளின் வாழிட நாடுகள் தீர்மானித்து உள்ளன.

## ஆட்கடத்தலுக்கு எதிரான உலக தினம் – ஜூலை 30

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2013 ஆம் ஆண்டில் ஜூலை 30 ஆம் தேதியினை ஆட்கடத்தலுக்கு எதிரான உலக தினமாக அறிவித்தது.
- ஆட்கடத்தலால் பாதிக்கப் படுபவர்களின் நிலை குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அவர்களின் உரிமைகளை மேம்படுத்திப் பாதுகாக்கவும் வேண்டி இந்த தினமானது உருவாக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Victims Voices Lead the Way" என்பதாகும்.




## உலக வனப் பாதுகாவலர் தினம் – ஜூலை 31

- உலகம் முழுவதும் வனப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள வனப் பாதுகாவலர்களின் சீரியப் பணிகளைக் கௌரவிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 31 அன்று உலக வனப் பாதுகாவலர் தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- பூமியின் இயற்கையான பொக்கிசங்களையும், கலாச்சாரப் புராதானங்களையும் பாதுகாக்கும் பணியில் ஈடுபடும் போது கொல்லப்படும் அல்லது காயமுறும் வனப் பாதுகாவலர்களுக்கு கௌரவமளிப்பதே இந்த தினத்தின் நோக்கமாகும்.
- இந்த தினமானது சர்வதேச வனப் பாதுகாவலர் கூட்டமைப்பினால் (1992 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது) 2007 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

# இதரச் செய்திகள்

## Salute Doctors – ஐசிஐசிஐ வங்கி

- ஐசிஐசிஐ வங்கியானது மருத்துவர்களுக்கான இந்தியாவின் மிகவும் விரிவான வங்கி சார் தீர்வுகளை தொடங்கியுள்ளது.
- இதற்கு "Salute Doctors" எனத் தலைப்பிடப்பட்டுள்ளது.
- இது மருத்துவத் துறை மாணவர் முதல் மூத்த மருத்துவர் வரை ஒவ்வொரு மருத்துவருக்கும் தனிப் பயனாக்கப்பட்ட மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட சேவைகளை வழங்குகிறது.
- இது ஐசிஐசிஐ ஸ்டாக் என்ற மென்பொருள் மூலம் வழங்கப்படுகிறது.




## சலாம் தில்சே – HDFC வங்கி

- HDFC வங்கியானது சலாம் தில்சே எனும் முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இது மருத்துவர்களின் பங்களிப்பினைக் கொண்டாடவும் அதனை அங்கீகரிக்கவும் வேண்டி நேரத்தை ஒதுக்கக் கோரி அனைவரையும் ஊக்குவிக்கிறது.
- பொது மக்கள், மருத்துவர்களுக்குத் தெரிவிக்க எண்ணும் நன்றியை இதன் மூலம் பகிரலாம்.



## ஜேக்கப் ஜுமா - சிறைத் தண்டனை

- சமீபத்தில் ஊழல் விசாரணையில் ஆஜராகத் தவறியதால் முன்னாள் அதிபர் ஜேக்கப் ஜுமாவிற்கு 15 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்து தென் ஆப்பிரிக்காவின் உயரிய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- இதன் பிறகு, இந்த தண்டனையானது அதிகப்படியானது மற்றும் நியாயமற்றது என்றும் சிறையில் கோவிட்-19 தொற்று ஏற்பட்டால் தனது உயிரை அது பறித்து விடும் என்றும் கூறி தனது 15 மாத சிறைத் தண்டனையை ரத்து செய்யுமாறு ஜேக்கப் ஜுமா நீதிமன்றத்திடம் கோரிக்கை ஒன்றை வைத்தார்.
- இவருக்கு அளிக்கப்பட்ட அந்த 15 மாத சிறைத் தண்டனைக்கு எதிரான இவரது மனுவை விசாரிக்க அந்நாட்டின் மூத்த நீதிபதிகள் ஒத்துக் கொண்டுள்ளதால் அவர் தற்போது உடனடி சிறைத் தண்டனையிலிருந்து ஒரு தற்காலிக நிவாரணத்தைப் பெற்றுள்ளார்.



## பஞ்ச்முலி ஏரி மற்றும் முதலைகள்

- குஜராத்தின் நர்மதா மாவட்டத்திலுள்ள ஒற்றுமைக்கான சிலைக்கு அருகிலுள்ள பஞ்ச்முலி என்ற ஒரு ஏரியிலிருந்து 194 முதலைகள் இடம் மாற்றப் பட்டுள்ளன.
- பஞ்ச்முலி ஏரியில் படகு சவாரி செய்யும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு கருதி இவை இடம் மாற்றப் பட்டுள்ளன.
- இந்த ஏரியானது கேவடியாவில் அமைந்துள்ள சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் 182 மீட்டர் உயர உருவச் சிலைக்கு அருகில் அமைந்துள்ளது.
- இந்த ஏரியானது சர்தார் சரோவர் அணையின் மூன்றாவது நீர்வழியாகவும் (முகடு – 3) அறியப் படுகிறது.
- ஒற்றுமைக்கான சிலையைப் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகளுக்காக வேண்டி இந்த ஏரியானது மேம்படுத்தப் பட்டுள்ளது.

## சூரியச் சுடரொளி

- நாசாவின் அறிவியலாளர் குழு ஒன்று AR2838 எனப்படும் சூரியக் கரும்புள்ளிக் கூட்டத்திலிருந்து மிகப்பெரிய அளவிலான ஒரு சூரியச் சுடரொளியானது வெளிப் பட்டு உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

- இது 2017ஆம் ஆண்டிற்குப் பிறகு ஏற்பட்ட மிகப்பெரிய சூரியச் சுடரொளி ஆகும்.
- சூரியச் சுடரொளியானது சூரிய கரும்புள்ளிக் கூட்டத்துடன் தொடர்புடைய காந்த ஆற்றலின் வெளிப்பாட்டினால் வெளிவரும் தீவிரமான கதிர்வீச்சு வெடிப்பு நிகழ்வு ஆகும்.
- சூரியச் சுடரொளி நிகழ்வானது நமது சூரியக் குடும்பத்தினுடைய ஒரு மிகப்பெரிய வெடிப்பு நிகழ்வாகும்.



## நியூஸ் ஆன் ஏர் ரேடியோ நேரலை – உலகளாவிய தரவரிசை

- இந்தத் தரவரிசையானது நியூஸ் ஆன்ஏர் செயலியிலுள்ள அனைத்திந்திய வானொலி நேரடி ஒலிபரப்பு சேவைகள் எந்தெந்த நாடுகளில் பிரபலமாக உள்ளது என்பதை தரவரிசைப்படுத்துகிறது.
- அமெரிக்கா தனது முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- அனைத்திந்திய வானொலியின் தமிழ் மற்றும் தெலுங்கு நேரடி ஒலிபரப்பு சேவைகள் அமெரிக்காவில் பிரபலமாக உள்ளன.
- அனைத்திந்திய வானொலியின் (All India Radio – AIR) பஞ்சாபி ஒலிபரப்பு சேவையானது ஐக்கிய ராஜ்ஜியத்தில் பிரபலமாக உள்ளது.
- உலகளவில் (இந்தியா தவிர) AIR நியூஸ் 24 x 7 என்ற அலைவரிசையானது 7 ஆம் இடத்திலிருந்து 6 ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- அதே சமயம் AIR தமிழ் ஆனது 6 ஆம் இடத்திலிருந்து 10 ஆம் இடத்திற்குச் சரிந்துள்ளது.
- அனைத்திந்திய வானொலியானது (AIR) 1957 ஆம் ஆண்டு முதல் ஆகாஷ்வாணி என அழைக்கப் படுகிறது.

## பெகாசஸ் ஒற்றியறி மென்பொருள்

- இஸ்ரேலிய நிறுவனத்தினால் உலகம் முழுவதும் உள்ள நாடுகளுக்கு விற்கப்படும் பெகாசஸ் ஒற்றியறி மென்பொருள் (spyware) என்பதின் தொடர்ச்சியான பயன்பாட்டுச் செய்தி சில புதிய அறிக்கைகளின் மூலம் உறுதி செய்யப் பட்டுள்ளது.
- இது NSO குழுமம் எனும் ஒரு இஸ்ரேலிய நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட ஒற்றியறி மென்பொருள் சாதனமாகும்.

- இந்த மென்பொருளானது மக்களின் கைபேசி மூலமாக அவர்களின் தகவல்களை உளவு பார்க்கிறது.
- இது இந்தியாவின் அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், பத்திரிக்கையாளர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் அறிவியலாளர்கள் போன்றோரை உளவு பார்ப்பதற்காக பயன்படுத்தப் பட்டுள்ளது.
- அதிக எண்ணிக்கையுடன் கூடிய 10 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக திகழ்கிறது.
- இதில் மெக்சிகோ முதலிடத்தில் உள்ளது.




## முதலையின் மூதாதையர் மாதிரிகள் சிலியில் கண்டெடுப்பு

- அர்ஜென்டினா நாட்டின் இயற்கை அறிவியல் அருங்காட்சியகமானது தென் சிலி நாட்டில் உள்ள மலைப்பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட 150 மில்லியன் ஆண்டுகள் பழமையான புதைப்படிம எலும்புக் கூடானது நவீனகால முதலையின் ஒரு மூதாதையராக இருக்கலாம் என்று கணித்துள்ளதாக அறிவித்துள்ளது.

- இந்த இனத்திற்கு புர்கெசுசஸ் மல்லிங்க்ரான்டென்சிஸ் (Burkesuchus mallingrandensis) எனப் பெயரிடப் பட்டுள்ளது.
- இது 2014 ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்டது.
- இவை நன்னீரில் வாழத் தொடங்கிய முதல் இனம் எனக் கண்டறியப் பட்டுள்ளது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★